அறிவுச் சொத்துரிமை சம்மந்தமான உலக வர்த்தக அமைப்பின் சரத்துகளில் பல பாதகங்கள் உள்ளன. தொழில் நுட்பங்களுக்காக வெளிநாட்டு நிறுவனங்களை சார்ந்து இருக்க வேண்டியுள்ளது.

## அதிகரிக்கும் அன்னியச் செலாவாணி வெளியேற்றம்.

வர்த்தகம் முதலீட்டு முறைகள், சேவைகள், 'டிரிப்ஸ்'ஆகியவற்றின் மீதான பொருப்புகளால் அதிகரிக்கும் அன்னியச் செலாவாணி வெளியேற்றம். உள்நாட்டு இறையான்மையின் மேல் அதிகரிக்கும் ஊடுறுவல் என பல பாதகங்கள் உள்ளன. தயாரிப்பு காப்புரிமை, தயாரிப்பு முறை காப்புரிமை, சிறப்பு சந்தை உரிமைகள், அறிவுச் சொத்துரிமையை தனியார் சொத்துரிமையாக அங்கீகரிப்பது ஆகியவற்றிற்கான சரத்துக்கள் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளில் உள்ளன. இவைகளையெல்லாம் வைத்துப்பார்க்கும் போது 1994 பொதுச்சுங்கத் தீர்வை ஒப்பந்ததின் வெளிப்பாடாக தொழில் நுட்பம் சார்ந்த வர்த்தகங்களே முன் எப்போதும் இல்லாத வகையில் வெளிப்பட்டது என்ற நம்பிக்கை உறுதிப்படுகிறது. சமீப ஆண்டுகளில் உலக வர்த்தகம் அதன் தன்மை ரீதியிலேயே அடிப்படை மாற்றங்களை அடைந்துள்ளது என்பதை அதன் கீழ்வரும் நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

## தொழில் துறைக்கு உள்ளேயான வர்த்தகம்:

ஜவுளி தயாரிப்புகளுக்கான ஜவுளிகள், ரசாயணக் கலவைகளுக்கான ரசாயணங்கள் போன்ற ஒரே மாதிரியான பொருள்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள நாடுகள் தங்களுக்குள்ளேயே இவற்றை இறக்குமதியும் ஏற்றுமதியும் செய்து கொள்கின்றன. வர்த்தக பரிமாற்றத்தில் பரஸ்பரம் ஏற்படும் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கான அளவு விகிதத்தை பராமரிப்பதற்கு முயல்கின்றன. இதன் பெயரில் வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே மட்டும் இருக்கும் ரசாயணங்கள், ஜவுளிகள் மற்றும் மின்சாரம் சாராத எந்திரங்கள் விசயத்தில் இவ்வகை தொழில்துறைகளுக்கு உள்ளேயான ஏற்றுமதி இறக்குமதிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பாகத்தையும், பொருளையும் தனித்தனியாக உருவாக்கும் உற்பத்தி பிரிவில் பொருளின் முழுவடிவத்திற்கான உதிரிபாகங்கள் மற்றும் இடைப்பட்ட பாகங்கள் தயாரிப்பு என தயாரிப்பு முறையை ஆழமாக பிரித்து செயல்படுவது, வடிவங்கள், பெட்டியில் அடைப்பது, முத்திரைகள் ஆகியவற்றில் சிறுசிறு மாற்றங்கள் செய்து தயாரிப்புகளை வேறுபடுத்திக் காட்டுவது போன்றவை சந்தையில் நுழையும் தயாரிப்புகளது அடிப்படை இணங்களது முகத்தோற்றத்தையே மாற்றிவிட்டன.

உற்பத்தி செய்வது, வடிவமைப்புகள், பெட்டியில் அடைப்பது போன்றவற்றினை தனித்தறிவதற்கான ஏற்பாடுகள் பற்றி சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடையேயும், தொழில் துறைகளிடையேயும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதற்கான சாட்சி உள்ளது. இதனைக் கொண்டு பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் (MNCS) விரைவாக உலக முழுவதும் பரவ முடிந்துள்ளது. உற்பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் தேர்ச்சி பெற்ற நிறுவனங்களை எங்கெங்கே அமைக்கலாம் என்று நிறுவன முடிவுகள் எடுக்கப்படும் முன்னர் ஆலைகள் அமையளவுள்ள நாடுகளின் லாப விகித மற்றும் வரிக் கொள்கைகள், கடன் வட்டி விகிதம், வெளிநாட்டு மூலதனங்கள் மீதான கொள்கைகள், பணமாற்று விகிதம், பண மாற்றுத்தன்மை, தொழிலாளர் சட்டங்கள் போன்றவைகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட காரணிகளில் மானியங்களை அளிப்பதற்கான காரணி அவ்வளவு ஒன்றும் முக்கியமானது அல்ல.

## புதிதாக முன்னுக்கு வந்துள்ள உயிரியல் தொழில் நுட்பம்:

நுண் மின்னனுவியல் நுட்பம் போன்ற தொழில்நுட்பங்கள் உலக உற்பத்தி முறைகளிலும் வர்த்தக முறைகளில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியுள்ளது. இந்த வளர்ச்சிகள் ஒன்றை சாத்தியப்படச் செய்வதற்கான எல்லையற்ற சந்தர்ப்பங்களை வழங்கியிருக்கிற அதே நேரத்தில் அச்சுறுத்தலாகவும் முன் வந்துள்ளன.

வளர்ச்சியடைந்த நாடுகளானாலும் சரி வளரும் நாடுகளானாலும் சரி அவற்றின் அவ்வகையிலான தேசிய ஒட்டு மொத்த உற்பத்தியில் சேவைத்துறைகளின் பங்கு வெகுவாக அதிகரித்துக்கொண்டே உள்ளன. சரக்குகள் துறையில் ஒப்பிட்டளவில் தனக்கு இருந்த சாதகங்களை அமெரிக்க மிகவேகமாக இழந்துள்ளது. சந்தை வாய்ப்புகளில் அந்நாட்டின் சேவைத்துறைகளின் வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது.

சுற்றுச்சூழல், மனித உரிமைகள், குழந்தை தொழிலாளர்கள் போன்ற பல பிரச்சனைகள் வர்த்தக நடைமுறைகள் மீது தாக்கம் செலுத்தக்கூடியனவாக முன்வந்துள்ளன. வர்த்தகம் சம்மந்தமான பாரம்பரிய கொள்கைகளுக்கு எதிர்ச்சாவால் விடுவனவாக இவை உள்ளன. சூற்றுச்சூழலை மாசுபடுத்தும் தொழில்களை வளர்ச்சியடையும் நாடுகளுக்கு மாற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் நடவடிக்கைகளுக்கு கண்கூடான உள்ளன.

வளரும் நாடுகளில் முன்வந்துள்ள பெரிய கடன் சுமைகள் காரணமாக எதிர்பாராத சக்திகளை உருவாக்கிவிடப்பட்டுள்ளன. அவைகள் உலக நாடுகள் அனைத்தின் உற்பத்தி மற்றும் வர்த்தக நடைமுறைகள் மீது ஆதிக்கம் செலுத்தத் துவங்கியுள்ளன. அதேபோல பொருளாதாரம் ஆதிக்கமையங்கள் கூட இடம்பெயர்கின்றன. மேலும் மாற்றி அமைக்கப்படுகின்றன.

# அத்தியாயம் - 2

அறிவுச் சொத்துரிமைகளின் கீழ்கண்ட பிரிவுகளுக்கு அறிவுச் சொத்துரிமைகளின் வர்த்தகம் சார்ந்த பிரிவுகளின் மீதான ஒப்பந்தம் (டிரிப்ஸ்) ஆனது குறைந்த பட்ச வரையரைகள், அளவீடுகள் வழங்கியுள்ளது.

அ) பதிப்புரிமைகள் மற்றும் அது சார்ந்த உரிமைகள்

ஆ) வர்த்தக முத்திரைகள்

இ) புவியியல் குறியடையாளங்கள்

ஈ) தொழில்துறை வரைவடிவங்கள்

உ) காப்புரிமைகள்

ஊ) ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளின் வரைவடிவங்கள்

எ) வெளியிடப்படாத தகவல்களுக்கான பாதுகாப்பு (வர்த்தக ரகசியங்கள்)

சம்மந்தப்பட்டவர்களுக்கு பொறுந்தக்கூடியவகையில் குறைந்த பட்ச அளவீடுகளை நிர்ணயிப்பதற்கு ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது. 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளை அமுலாக்குவதற்கு வளர்முக நாடுகளுக்கு ஐந்து ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்து. இக்காலக்கட்டம் 1-1-2000இல் முடிவடைகிறது. தேசிய அந்தஸ்து மற்றும் மிகவும் வேண்டப்பட்ட நாட்டு அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளவை விசயத்தில் மாற்றீட்டிற்கான கால அவகாசம் கிடையாது. மேலும் 1-1-1995ஆம் தேதியில் குறிப்பிட்ட தொழில் நுட்பம் சார்ந்த தயாரிப்புகளுக்கு காப்புரிமை வழங்கப்படாமல் இருக்கும் நாடுகள் அந்த வகை தயாரிப்பு காப்புரிமைகள் வழங்குவதற்கு 1-1-2005 வரை மேலும் ஐந்து ஆண்டுகள் கால அவகாசம் எடுத்துக் கொள்ளலாம்.

மருந்துகள் மற்றும் வேளாண் ரசாயண தயாரிப்புகளுக்கான காப்புரிமைக்கு 1-1-1995 தேதியன்று ஏற்பாடுகள் செய்திராத நாடுகள் அப்படிப்பட்ட தயாரிப்புகளுக்கு காப்பு கோரும் விண்ணபங்களை ஏற்றுக் கொள்வதற்கான (தபால் பெட்டி) ஏற்பாடுகளை செய்ய வேண்டும். பொறுத்தமான முன்னுரிமை அடிப்படையில் அப்படிப்பட்ட தயாரிப்புகளுக்கு சிறப்பு சந்தை உரிமைகள் வழங்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை சில நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமே இச்சிறப்புரிமை வழங்கப்படுகிறது. சம்மந்தப்பட்ட தயாரிப்பிற்கு காப்புரிமைக்கான விண்ணப்பம் உலக வர்த்தக அமைப்பின் ஏதாவது ஒரு உறுப்பு நாட்டில் 1-1-1995க்குப் பிறகு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அந்த நாட்டில் அந்த தயாரிப்பிற்கு காப்புரிமை மற்றும் சந்தை ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். இவைகளின் அடிப்படையில் மட்டுமே சிறப்பு காப்புரிமை வழங்கப்படுகிறது. சிறப்பு காப்புரிமையானது ஐந்து ஆண்டுகளுக்கோ அல்லது சம்மந்தப்பட்ட தயாரிப்புக்கு காப்புரிமை வழங்கப்படும் அல்லது நிர்ணயிக்கும் நாள் வரையோ வழங்கப்படும். இதில் எந்த கால கட்டம் குறுகியதாக உள்ளதோ அந்த கால கட்டத்திற்கு சிறப்பு காப்புரிமை செல்லுபடியாகும். 1999 மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட காப்புரிமை (திருத்தம்) சட்டம் 1999இன் கீழ் தபால் பெட்டி மற்றும் சிறப்பு காப்புரிமை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவானது 1-1-2000 முதல் 'டிரிப்ஸ்'ஒப்பந்தச் சரத்துக்களின் அடிப்படையில் கீழ்வரும் ஏழுவகை அறிவுச் சொத்து உரிமைகளுக்கு காப்பு அளிக்க பொறுப்பாகிறது.

### அ) காப்புரிமைகள் மற்றும் அது சார்ந்த உரிமைகள்:

இலக்கியம், இசை, ஏனைய கலைப்படைப்புகள், திரைப்படங்கள் மற்றும் பதிவுகள் ஆகியவறிற்கு பதிப்புரிமை என்பது சட்டம் உருவாக்கிக் தந்துள்ள சிறப்பு உரிமையாகும். இலக்கியப் படைப்புகள் மற்றும் கலைப்படைப்புகள் போன்றவற்றின் படைப்பாளிகளான எழுத்தாளர்கள், கவிஞர்கள், இசையமைப்பாளர்கள் மற்றும் கலைஞர்கள் தங்கள் படைப்புகளுக்கு உடமையாளர் உரிமை பெறத்தக்கவர்கள். அப்படிப்பட்ட படைப்புகள் சட்டத்திற்கு புறம்பாக மறுகாப்பு உரிமை வழங்கப்படாம ருப்தற்கான சட்டக் காப்பை இந்த சிறப்பு உரிமைகள் வழங்குகின்றன. ஒரு அறிவுபூர்வமான கலைப்படைப்பை விற்றுமுடிப்பதற்கும், அதன் வளங்களை வியாபார ரீதியில் பயன்படுத்திக் கொள்வதற்குமான சிறப்பு உரிமையை பதிப்புரிமை வழங்குகிறது. அச்சு, படிவ அச்சு, ஓவியப்பதிவு, பாதுகாப்பு, பிரதியெடுத்தல், உறுக்கி அச்செடுத்தல், வார்த்து உருக்கொடுத்தல், புகைப் படமெடுத்தல், திரைப்பட சுருள், ஒ தட்டுப் பதிவு, அல்லது எந்திரக் கருவிகளுக்கான சுருள்கள் இசைச் சேவைகள், சொற்பொழிவுகள் அல்லது ஒப்புவித்தல் எழுத்துப்பிரதிகள், மொழி பெயர்ப்புகள், மாற்றியமைத்தல், நிகழ்ச்சிசேவைகள், ஒ பரப்புகள் அல்லது பரவச் செய்தல் போன்றவற்றி ருந்து பதிப்பாளருடைய உரிமைக்கு சிறப்பு காப்பு வழங்கப்படுகிறது. ஒரு படைப்பையும் மேலும் சில குறிப்பிட்ட படைப்புகளையும் மறு தயாரிப்பு செய்வதற்கான ஏகபோக உரிமை மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு வழங்குவதற்கான ஏகபோக உரிமை ஆகியன பதிப்பாளருடையதாகும். திறன்கள் போன்றவற்றின் படைப்பாளிகளுக்கும் சிறப்பு காப்பு உரிமைகள் உள்ளன. இலக்கியம், இசை நுண்கலைகள் வடிவிலான புகைப்படங்கள், திரைப்படங்கள் கலைஞர்களுடைய சம்மந்தப்பட்ட தயாரிப்புகளில் அவைகளின் ஆசிரியர்கள் ஈடுபடுத்திய திறன், உழைப்பு மற்றும் முதலீட்டை கணக்கில் கொண்டு சட்டம் அமுலாக்கப்படுகிறது.

சட்டத்திற்கு புறம்பாக படைப்புகளை மறு தயாரிப்பு செய்தல், உரிமையின்றி தனதாக்கிக் கொள்தல், திருட்டு மற்றும் போ தயாரிப்புகளில் ஈடுபடுதல் ஆகியவற்றி ருந்து எழுத்தாளர்களதும் கலைஞர்களதும் உரிமைகளைப் பாதுகாப்பது பதிப்புரிமைச்சட்டத்தின் நோக்கமாகும். சுதந்திரமான படைப்பாய்வின் மூலம் குறிப்பிடத்தக்க பொருள் தயாரிக்கப்படுவதற்கு தடை இல்லை. அவைகளின் விசயத்தில் சட்ட மீறல்கள் நடந்து விட்டதாக பொறுப்பேற்க வேண்டியதில்லை.

இலக்கியம் மற்றும் கலைப்படைப்புகளை பருப்பொருள் வடிவத்தில் பிரதி எடுப்பதற்கான உரிமையை காக்கும் விசயத்தில் சட்டத்தின் சாரமானது அவைகளின் பிரதி மூலப்படிவத் (சங்ஞ்ஹற்ண்ஸ்ங்)தை சார்ந்ததாக உள்ளது. படைப்பாளிகள் தங்கள் படைப்புகளுக்கு படைப்புரிமை கோர காப்புரிமை வழிவகுக்கிறது. ஒரு படைப்பினை சிதைப்பதன் மூலமும், மாற்றி அமைப்பதன் மூலமும் அல்லது வேறு வழிகள் மூலமும் படைப்பாளியின் மரியாதைக்கும் நன்மதிப்பிற்கும் கேடு விளைவிக்கிற செயல்களை தடுக்கவும் தக்க இழப்பீடு கோரவும் பதிப்புரிமை அனுமதியளிக்கிறது. அதே நேரத்தில் காப்புரிமைகள், வரைவடிவங்கள் மற்றும் வர்த்தக முத்திரைகள் விசயத்தில் அவைகளை பதிவு செய்வதன் மூலம் மட்டுமே காப்புரிமை கிடைக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் பதிப்புரிமை பதிவு அவசியம் இல்லாமலேயே தானாக அமுலுக்கு வந்து விடுகிறது.

அறிவுச் சொத்துரிமைகள் அனைத்தையும் போலவே பதிப்புரிமைகள் காப்பும் ஒரு நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தினடிப்படையில் அமைக்கப்படுகிறது. அதனடிப்படையில் இந்தியாவில் அமு ல் உள்ள அதன் பதிப்புரிமைச் சட்டம் 1957 பதிப்புரிமை சட்டம் 1999 ஆகியன 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் சரத்துகளால் கோரப்பட்டுள்ள குறைந்த பட்சக் காப்பை பூர்த்தி செய்வனவாக உள்ளனவா என்று ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பாகம் 2இன் பிரிவு 1 பதிப்புரிமை மற்றும் அது சம்மந்தப்பட்ட விசயங்களைக் கொண்டுள்ளது. 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் 9 – 14 வரையான பகுதிகளில் பதிப்புரிமை மற்றம் அது சம்மந்தப்பட்டவைகள் உள்ளன.

பதிப்புரிமை மற்றும் அது சம்மந்தப்பட்ட நடிகர்கள், பாடகர்கள், இசை தட்டு தயாரிப்பாளர்கள், ஒ பரப்பு அமைப்புகள் விசயத்தில் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பெர்னி

சிறப்பு மாநாட்டின் பெரும்பான்மையான சரத்துகளோடு பொறுந்திப்போவனவாக உள்ளன. கணினி செயல்திட்டங்கள் இலக்கிய படைப்புகளைப் போலவே பாதுகாக்கப்படுகின்றன. பதிப்புரிமைகள், நடிப்பு, பாடகர்கள் உரிமைகள், இசைத்தட்டு தயாரிப்பு உரிமைகள் ஆகியன குறைந்த பட்சம் 50 ஆண்டுகள் காப்புபெறத்தக்கவை. ஒ பரப்பு அமைப்புகள் விசயத்தில் குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் காப்பு வழங்கப்படத்தக்கது. இந்தியா ஏற்கனவே பெர்னி சிறப்பு மாநாட்டு முடிவுகளில் கையெழுத்திட்டு உள்ளது. நமது சட்டங்கள் அம்மாநாட்டு முடிவுகளின் சரத்துகளோடு பொறுந்தக்கூடியவை. இந்தியாவின் பதிப்புரிமைச் சட்டம் சில வழிகளில் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் தேவைகளை மீறி இருந்ததால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தியச் சட்டத்தில் பதிப்புரிமைக்கான காப்பு முன்பு 60 வருடங்களாக இருந்தது. இச்சட்டம் 1999 டிசம்பரில் திருத்தப்பட்டது. இதனால் காப்பு சார்ந்த உரிமைகளுக்கு 25 ஆண்டுகள் காப்பு வழங்க அனுமதிக்கப்பட்டது.

## ஆ) வர்த்தக முத்திரைகள்:

வர்த்தக முத்திரை என்பது அடையாளங்கணுவதற்காக உதவும் ஒரு குறியீடு. ஒரே மாதிரியான இரண்டு வெவ்வேறு தயாரிப்புகளை இரண்டு வெவ்வேறு நிறுவனங்கள் விற்கும் போது அவைகளை பிரித்தறிய வர்த்தக முத்திரை பயன்படுகிறது. 'முத்திரை' (குறியடையாளம்) என்ற வார்த்தையானது இந்த இடத்தில் திறம், தொழிற்சின்னம், தலைப்பு குறிச்சீட்டு, குறிப்புச் சீட்டு, பெயர், கையெழுத்து, வார்த்தை, எழுத்து அல்லது ஏதாவது ஒரு கூட்டுவடிவம் போன்றவற்றை குறிப்பிடுவதாக உள்ளது. உற்பத்தி செய்யப்பட்டதொரு பொருள் அல்லது சேவைக்கான பிரித்தறியத்தக்க வர்த்தக முத்திரையானது பெயராகவோ, மேற்கொள்வாசகமாகவோ, அடையாளமாகவோ, அல்லது சின்னமாகவோ இருக்கும். அவை தங்களை குறிப்பிட்ட ஒரு வர்த்தகரோடு ஒரு குறிப்பிட்ட வியாபாரத்தின் உடமையாளராக இருந்து தம்மை பின்பற்றி வருபவரோடு தொடர்பு படுத்திக் காட்டுகின்றன.

வர்த்தக முத்திரைகள் மூன்றுவிதமாக செயல்படுகின்றன. பொருளையும் அதன் மூலத்தையும் அடையாளங்காட்டுகின்றன. அதன் மாறாத தரத்திற்கு உத்தரவாதம் தருகின்றன. அந்த பொருளை விளம்பரப்படுத்துவதற்கு உதவுகின்றன.

பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் பொருள்களில் சம்மந்தப்பட்ட பொருளை எந்தவிதமான குழப்பமும் இன்றி கொள்முதலாளரான நுகர்வாளர் சம்மந்தப்பட்ட அதன் மூலத்தோடு சேர்த்து அறிந்து கொள்ள உத்தரவாதம் அளிக்கிறது. முத்திரையின் உரிமையாளர் அதை பதிவு செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட பொருள்களுக்கு தனிப்பட்ட முறையில் அது இப்போது பதிவு செய்யப்பட்டுள்ளது அல்லது உபயோகிக்கப்படுகிறது என்ற அடிப்படையில் அது அவ்வுபயோகத்திற்கான நீண்ட கால உரிமை பெறுகிறது.

வர்த்தகர்களால் வியாபார ரீதியில் உபயோகிக்கப்படுவதால் வர்த்தக முத்திரை வியாபாரச் சொத்தாக திகழ்கின்றது. ஒரு வகையான சொத்தாக இது கருதப்படுகிறது. அதன் மூலம் தனது பொருள்கள் மற்றும் சேவைகள் விசயத்தில் தனிப்பட்ட முறையில் உபயோகிப்பதற்கான தொடர்ச்சியான உரிமையை அந்த முத்திரையின் உரிமையாளர் பெறுகிறார்.

## வர்த்தக முத்திரைச்சட்டம்:

ஒரு வர்த்தகர் சட்டத்தின் கீழ் தனது வர்த்தக முத்திரை பதிவு செய்திருக்கும் பட்சத்தில் அந்த பதிவின் காரணமாக மதிப்புமிக்க உரிமைகளைப் பெறுகிறார். வர்த்தக முத்திரை செய்யப்படுவதன் மூலம் எந்த இடத்தில் அதை பதிவு செய்துள்ளாரோ அதற்கு உடன்பட்டு அந்த முத்திரைக்கு சம்மந்தப்பட்ட பொருளுக்கு உபயோகப்படுத்தும் சிறப்பு உரிமையை பெறுகிறார். தனது முத்திரையோ அதைப் போன்றதையோ அடுத்த ஒருவர் பயன்படுத்தும் போது அதை சட்டமீறல்களாக எடுத்துக் கொண்டு அதன் மீது தடை நட்டக்கணக்கு அல்லது அடுத்த நபர் ஈட்டியுள்ள லாபக்கணக்காக எடுத்துக் கொள்வதற்கான சிறப்பு உரிமையை பெறுகிறார்.

## உலக வர்த்தக அமைப்பின் 'டிரிப்ஸ்' ஒப்பந்தம்:

'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பாகம் 2இன் பிரிவு 2 வர்த்தக முத்திரைகள் பற்றியதாகும். பதிவு செய்யப்பட்ட வர்த்தக முத்திரைகள் விசயத்தில் உலக வர்த்தக அமைப்பு உறுப்பு நாடுகள் அம்முத்திரைகளுக்கு முழு பாதுகாப்பு வழங்க கடமைப்பட்டுள்ளன.

பொருள்கள் அல்லது சேவைகளின் மூலத்தை உணர்த்துவதே வர்த்தக முத்திரையின் நோக்கமாகும். பதிவுக்கு விண்ணப்பிக்க உள்ள முத்திரையின் விசயத்திலும் இது பொருந்தும். தற்போதைய புதிய வர்த்தக முத்திரைச் சட்டம் 1999இன் கீழ் சேவை முத்திரை பதிவுக்கும் இது பொருந்தும்.

ஒரு பொருளிற்கு உபயோகப்படுத்தப்படும் முத்திரையானது காலப்போக்கில் அதன் தரத்தை நுகர்வாளர்களுக்கு உணர்த்துவதாக மாறுகிறது. பொருள்களின் விற்பனையில் தற்போது வர்த்தக முத்திரைகள் பலமான காரணியாக உள்ளது. அதன் அடிப்படையில் கிடைத்த செல்வாக்கை கொண்டு குறிப்பிட்ட காலத்திற்கு மேலும் தொடர்ந்து வாடிக்கையாளர்கள் அந்த முகமதிப்பு பெற்ற பொருள்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நிலை உருவாகிறது. அந்த வகையில் பொருள்களை வழங்குபவர்களுக்கு வர்த்தக முத்திரை உதவுகிறது. இவ்வகை காரணங்கள் அனைத்தின் காரணமாக நன்கு நிலைநிறுத்தப்பட்ட பெயருள்ள வர்த்தக முத்திரையானது அதன் உரிமையாளருடைய மதிப்பு மிக்க சொத்தாக ஆகிறது. வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் உறுப்பு நாட்டு குடிமகனாகவோ அல்லது அடுத்த ஒரு உறுப்பு நாட்டு குடிமகனாகவே இருந்தாலும் வர்த்தக முத்திரைகள் சம்மந்தமான சிறப்பு மாநாட்டு முடிவுகள் மற்றும் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பிரிவுகள் 15 முதல் 21 முடிய உள்ளவற்றின் அடிப்படையில் தனது வர்த்தக முத்திரைக்கு அதிக பட்சகாப்பு பெறத்தக்கவராவார். 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் நோக்கமும் இதுவேயாகும்.

வர்த்தகம் மற்றும் வியாபாரச் சட்டம் 1958இன் முக்கியமான சரத்துகள் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்திற்கு மிகவும் பொருந்தியிறுக்கின்றன. ஆனால் அந்தச் சட்டத்தில் சேவைதுறை முத்திரைக்கு காப்பு வழங்கப்படவில்லை. அவற்றிற்கு உரிய வாய்ப்புகள் அப்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் வர்த்தக முத்திரைச் சட்டம் 1999இன் மூலம் இதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்போது 'டிரிப்ஸ்'இன் பொறுப்புகளை நிறைவேற்ற முழுமையாக நாம் தயார்படுத்திக் கொண்டவர்களாக உள்ளோம்.

## இ) புவியியல் குறியடையாளங்கள்:

வியாபாரச் சந்தையில் குறிப்பிட்ட புவியியல் இடப்பெயர்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் உள்ளன. குறிப்பாக அப்படிப்பட்ட இடப்பெயர்களுடன் தனிப்பட்ட முறையில் இணைந்துள்ள பொருள்களின் விசயத்தில் இது பொருந்துகிறது.

வேளாண் விளைபொருள்கள், இயற்கைப் பொருள்கள்; தயாரிப்புப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் போன்ற தொழிற்சாலை பொருள்கள் விசயத்தில் பொதுவாக புவியியல் குறியடையாளங்கள் நுகர்வாளர்களின் கவனத்தை கவர்கின்றன. குறிப்பாக சம்மந்தப்பட்ட பொருள்களின் மூல இடத்தை குறிப்பிடும் போது அந்த இடத்தின் வாய்ப்புகளை பொதுமக்கள் அங்கீகரிக்கும் வகையில் கணக்கிலெடுத்துக் கொள்ளத்தக்க அளவு மதிப்பை வியாபாரிகள் அந்த பொருளில் சேர்க்க வேண்டும். குறிப்பாக அந்த பொருளின் தனித்தரமானது அந்த பொருள் உற்பத்தியாகும் இடத்தின் மூலச்சிறப்பு காரணமாக ஏற்படும் போது கட்டாயம் நீண்ட நெடிய உபயோகத்திற்கு பிறகு அந்த இடத்தின் பெயரானது உண்மையிலேயே அர்த்தம் பெறுகிறது. உதாரணத்திற்கு டார்ஜ ங் தேயிலை, காஞ்சிபுரப் பட்டு போன்றவற்றை குறிப்பிடலாம். அப்படிப்பட்ட இடப்பெயர்களோடு சம்மந்தப்படாத சரக்குகள் அல்லது உற்பத்திப் பொருள்களுக்கு தவறாக பொருத்துவதற்கும்

புவியியல் இடப்பெயர்களை முறைகேடாக பயன்படுத்துவதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளன.

தங்களது தயாரிப்புகளின் விவரக்குறிப்புகளின் அடிப்படையில் அப்படிப்பட்ட பொருள்களை தயாரிக்கும் ஒருவர் நியதியின்படி, அப்படிப்பட்ட புவியியல் இடப் பெயர் அடையாளங்களைப் பயன்படுத்துவதற்கான தனி உரிமை கோரலாம். இதே போன்ற விவரக்குறிப்புகளைக் கொண்டு போ தயாரிப்பாளர்கள் வேறொரு இடத்தி ருந்து இதே போன்ற பொருள்களை கொண்டு வந்து வர்த்தகர்களிடம் கொடுத்து பொதுமக்களை தவறாக வழிநடத்துவதை தடுக்க மேற்குறிப்பிட்ட தனி உரிமை தேவைப்படுகிறது. புவியியல் குறியடையாளங்களை அங்கீகாரம் பெறாத ஒருவர் முறை தவறி பயன்படுத்துவதை தடுக்க காப்பு வழங்கப்பட வேண்டும். நுகர்வாளர்கள் வஞ்சிக்கப்படுவதி ருந்து பாதுகாக்க இது உதவுகிறது. அப்படிப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வோரின் பொருளாதார வளமைக்கும் இது உதவுகிறது. எனவே சர்வதேச சமூகமானது வாய்ப்புகளின் அடையாளங்களையும் மூலத்தின் பெயரையும் அதாவது புவியில் குறியடையாளத்திற்கு காப்பு வழங்கவேண்டியதன் அவசியத்தை கவத்தில் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட பகுதியில் தொழி ல் ஈடுபட்டுள்ள அனைவரது தயாரிப்புகளிலும் இடச்சிறப்புப்பண்புகள் இயற்கையில் அமைந்திருப்பதால் தனிநபர் எவரொருவரும் இவ்வுரிமையை கோர முடியாது. இவ்விசயத்தை மாற்றிவிடக்கூடாது. இது விசயத்தில் தற்போது இந்தியாவில் உள்ள சட்டம் 'பொருளின் புவியில் குறியடையாளச் சட்டம் (பதிவு மற்றும் காப்பு) 1999 ஆகும்.

'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தில் புவியில் குறியடையாளங்களுக்கு காப்பு வழங்கப்பட்டுள்ளது. 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பாகம் 2 பிரிவு 3 புவியில் குறியடையாளங்களை கையாள்கிறது.

ஒரு பொருளின் பெயர் அல்லது அறிமுகத்தின் எந்த ஒரு வடிவத்திலான உபயோகத்தை அடுத்தவர் பயன்படுத்துவதை தடுப்பதற்கான ஏற்பாட்டை விருப்பப்படுபவர்களுக்கு உறுப்பு நாடுகள் சட்டபூர்வமாக வழங்க வேண்டியதான பொதுவானதொரு பொறுப்பை ஒப்பந்தம் வ யுறுத்துகிறது.

பெயரையும் அறிமுகத்தையும் பயன்படுத்தும்போது பயிரானது கேள்விக்குறிய பொருளின் புவியில் மூல இடத்தை குறிப்பிடுகிறது அறிமுகமானது பொருளின் உண்மையான மூலஇடத்தையும் குறிப்பிடுகிறது. நாம் தற்போது நீதிமன்ற ஆணைகள் அல்லது சான்றுக் குறிப்புகள் முலம் புவியில் குறியடையாளங்களுக்கு காப்பு வழங்கியிருக்கிறோம். இந்நிலையில் தற்போது 'பொருள்களுக்கான புவியில் குறியடையாளம் (பதிவு மற்றும் காப்பு) சட்டம், 1999 உறுவாக்கப்பட்டுள்ள நிலையில் இப்புதிய சட்டத்தின் மூலம் மேலும் சிறந்த முறையில் புவியியல் குறியடையாள காப்பு வழங்க முடியும்.

## ஈ) தொழில்துறை வரைவடிவம்:

ஒரு பொருளை தேர்வு செய்வதில் அப்பொருளின் வடிவம் நுகர்வாளர் மீது ஆதிக்கம் செய்கிறது. கண்ணுக்கு கவர்ச்சியாக தோற்றமளிக்கும் வடிவத்திற்காக மட்டும் கண்மூடித்தனமாக பொருள்களை தேர்வு செய்யும் குருட்டாம்போக்கு பலரிடம் உள்ளது. ஒரு பொருளின் கலாமதிப்புக்காக அதன் வடிவத்தில் கவரப்பட்டு பொருள்களை மக்கள் வாங்குகின்றனர். சில பொருட்கள் விசயத்தில் அவைகளின் மொத்த இருப்பு விற்றுத்தீரும் வரையிலான குறுகிய காலகட்டத்திற்கு மட்டுமே அப்பொருளின் வடிவத்தால் மக்கள் கவரப்படுகின்றனர். இவ்வகையில் பொருளின் வடிவம் நுகர்வாளர்களை கவரச் செய்வதன் மூலம் லாபத்தைக் கூட்டுகிறது. கவர்ச்சிகரமான வடிவம் விற்பனையை கூட்டுவதால் அப்படிப்பட்ட வடிவங்களை உற்பத்தியாளர்கள் தேடி அலைகின்றனர். விற்பனையை அதிகரிக்கும் வகையிலான வட்டிக்கு வழங்கும் பணியில் மிகுந்த காலத்தையும் மிகுந்த சிந்தனையையும் சில அறிவாளிகள் ஈடுபடுத்துகின்றனர். நல்ல லாபம் தரும் வரைவடிவத்தை அதை உருவாக்கியவர் பதிவு செய்து கொள்வதன் நோக்கம், அவருக்கு கிடைக்க வேண்டிய வெகுமதியை தாங்கள் கவர்ந்து கொள்ளும் வகையில் பிறர் அந்த வடிவத்தை தங்கள் பொருள்களுக்கு அவ்வடிவத்தின் உரிமையாளரான அவரின் அனுமதி பெறாமல் பயன்படுத்துவதை தடுப்பதாகும்.

வர்த்தக நோக்கத்திற்காக ஒரு வரைவடிவத்தை உருவாக்கும்போது அந்த ஆய்விற்காக குறிப்பிடத்தக்க பணமும், நேரமும், படைப்புத் திறனும் பிடிக்கிறது. அறிவுச் சொத்துரிமை என்ற வகையிலான ஒரு வரைவடிவத்தின் மதிப்பானது அதன் சுயதன்மை, புதுமை, மற்றும் அதன் கண்கவரும் கவர்ச்சியால் வெளிப்படுகிறது. வரைவடிவச் சட்டம் 1911இன் கீழ் ஒரு வரைவடிவத்தை பதிவு செய்வதற்கு அது சுயதன்மை உடையதாகவும் புதியதாகவும் இருக்க வேண்டும். மேலும் பதிவுக்கு முன்னர் அது வெளியிடப்பட்டிருக்கக் கூடாது.

வரைவடிவம் என்பது அதன் தோற்றம், அமைப்பு வடிவம், முன்மாதிரி அல்லது அதன் அலங்காரச் சிறப்பு ஆகியவற்றை குறிப்பதாக மட்டுமே அர்த்தப்படுகிறது. இவ்வகைச் சிறப்புகள் எந்த ஒரு தொழில் துறை தயாரிப்பு நிலைக்கும் கருவிகளுக்கும் பொறுந்த வேண்டும். இத்தயாரிப்பு நிலைகள் கைவேலைப்பாடாவோ, எந்திர வேலைப்பாடாகவோ, ரசாயணக் கிரியையாகவோ இருக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட பொருளில் கூட்டாகவோ தனியாகவோ சேர்ந்து கவர்ந்திழுக்கக் கூடியதாகவும் கண்களால் மெதுவாக பார்த்து மற்றவற்றிடமிருந்து பிரிந்தறிந்து பார்க்கக்தக்கதாகவோ அந்த வரைவடிவம் திகழ வேண்டும்.

வரைவடிவம் என்பது ஒரு பொருளில் பொறுந்தத்தக்கது, அந்த பொருளினுள்ளேயே அது இருப்பதில்லை. அந்த வரைவடிவத்தை பொறுத்தக்கூடிய பொருளின் பூர்த்தி செய்யப்பட்ட வடிவத்தை வாங்கக் கூடியவருக்கு அது ஏதாவது ஒன்றை கட்டாயம் வெளிப்படுத்தவேண்டும். கட்டடங்களையும் கட்டு அமைப்புகளையும் வரைவடிவம் என்ற வரையறைக்குள் கொண்டுவர முடியாது. ஆனால் பூர்த்தி செய்யப்பட்ட வடிவத்தில் விற்கப்படுகிற தூக்கிச் செல்லத்தக்க பொருள்களை வரைவடிவ பதிவுக்கானவையாக எடுத்துக் கொள்ளலாம்.

வரைவடிவ உரிமையானது புதிய அறிவுச் சொத்துரிமையாகும். இவ்வுரிமை மூலவடிவங்களுக்கும், பொது இடங்களை ஒத்திராத தோற்றம் அல்லது அமைப்பு வடிவங்களுக்கு பொறுந்தும். இவ்வுரிமை ஏகபோக உரிமையல்ல. ஆனால் பிரதிஎடுப்பதையும் தடுக்கத்தக்கது. இதை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கலாம். அதற்கடுத்த ஐந்து ஆண்டுகள் நீடிக்க விண்ணப்பதாரர் கட்டணம் செலுத்த வேண்டும். வடிவ உரிமை ஒரு சொத்து ஆகும். வேறெந்த வியாபார பொருளைப்போலவே இதை வாங்கலாம், விற்கலாம், உரிமம் கொடுக்கலாம். வரைவடிவ மூலத்தை கட்டுப்பத்தி வைத்திருப்பவரை அதன் உரிமையாளராக்க கோருவதற்கே வரைவடிவ உரிமை பதிவுக்கான எல்லா விண்ணப்பங்களும் வருகின்றன.

தொழில்துறை அல்லது தயாரிப்பு வடிவத்திற்கு நான்கு பொறுத்தமான குணங்கள் உள்ளன. அவை தோற்றம், வடிவ அமைப்பு முன்மாதிரி மற்றும் அலங்காரச் சிறப்பு ஆகியனவாகும். தோற்றம் மற்றும் வடிவ அமைப்பு என்பன ஒரு பொருளின் உருவத்தை குறிக்கின்றன. வழக்கமாக இது முப்பரிமாண வடிவத்தில் இருக்கிறது. முன்மாதிரியான தோற்றம் மற்றும் அலங்காரச் சிறப்பு ஆகியன அலங்கார குணத்தை குறிக்கின்றன. சாதாரணமாக அந்தப் பொருளின் மேல்மட்டத்தை குறிப்பதா உள்ள இக்குணங்கள் பட்டைக்கிடையான தோற்றத்தையளிப்பவை.

வரைவடிவத்தின் தோற்றகுணம் கண்களால் அதன் வடிவத்தை மெல்ல மதிப்பிட்ட கண்களைக் கேட்டுக் கொள்வதாகும். சம்மந்தப்பட்ட பொருளின் செயல்தன்மைகளை வைத்து முடிவெடுக்கச் செய்வதில்லை. பதிவுக்கு வந்துள்ள வரைவடிவம் புதியதாக இருந்தாலும் அல்லது மூலத்தன்மை வாய்ந்ததாக இருந்தாலும் முன்கூட்டியே வெளியிடப்பட்டதாக இருக்கக் கூடாது. 'புதிய' அல்லது 'மூலத்தன்மை' என்ற வார்த்தைகள் முன்மாதிரித்தன்மையிலும், தோற்றத்திலும், அலங்காரச் சிறப்பிலும் நூதனமான எண்ணங்களை உள்ளடக்கியதாக உள்ளன. நூதனத்தன்மை அல்லது மூலத்தன்மை குறித்த ஆதாரங்களை வர்த்தக நிபுணர்களைக் கொண்டு முடிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பதிவுக்கான வரைவடிவம் முன்கூட்டியே வெளிவந்திருக்கக்க்கூடாது. இந்த வெளியீடு இருவகைப்படும்.

1) பழையபத்திர, வெளியீடுகள்; மற்றும்

2) வெளியிடப்பட்டு முன்னரே உபயோகிக்கப்பட்டது.

வெளியீட்டின் பிரதி பொது நூலகத்தில் கிடைக்கக்கூடியதாக இருந்தால் ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டதை நிரூபிக்க அதுவே போதுமான சாட்சியாக உள்ளது. 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பாகம் 2 பிரிவு-4 தொழில்துறை வரைவடிவங்களை உள்ளடக்கி இருக்கிறது.

தொழில்துறை வரைவடிவங்களுக்கு காட்சிப்படுத்த வேண்டிய பொறுப்பு இருப்பதன் காரணமாக அவைகள் சுதந்திரமாக உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட புதிய அல்லது மூலவடிவங்கள் பாதுகாப்பு பெறத்தக்கவை. தொழில்துறை வரைவடிவங்கள் விசயத்தில் அவைகளின் படைப்புக்கு தொழில்நுட்ப அல்லது இயங்கு முறை காரணிகள் தூண்டுகோள்களாக இருந்திருந்தால் அவ்வரைவடிவத்தில் உள்ள அங்கீகரிக்கத்தக்க அழகுச் சிறப்பை கணக்கிலெடுக்காமல் அதற்கு காப்பு அழிக்க இயலாது என நிராகரித்துவிடலாம். தொழில்துறை வரைவடிவச்சட்டத்திற்கான திருத்தங்கள் 2001 ஆம் ஆண்டு துவக்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

## உ) காப்புரிமைகள்:

பயன்படத்தக்க ஒரு புதுக்கண்டுபிடிப்பின் உரிமையாளருக்கு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படும் சட்டபூர்வ ஏகபோக உரிமைதான் காப்புரிமை. கண்டுபிடிப்பாளர் மற்றும் கண்டுபிடிப்பாளாரிடமிருந்து தங்களது உரிமைகளால் பெற்றுள்ளவர்களுக்கு அரசாங்கம் தரும் சட்டபூர்வ சலுகை இது. காப்புரிமை நடைமுறையின் கீழ் அறிவின் பயன்தரத்தக்க உடமைகள் பொருள் ரீதியில் தொடர்ந்து நாடுகளின் எல்லைகளைத்தாண்டி செல்லத்தக்கது. சிறப்பு உரிமை என்ற அடிப்படையில் கண்டுபிடிப்பாளர்கள் தகுதி மிக்க தனது கண்டுபிடிப்பின் சாரமாக உள்ள பொருளை உற்பத்தி செய்வதி ருந்தும் உபயோகிப்பதி ருந்து, விற்பதி ருந்தும் மற்றவர்களை விலக்கி வைக்கலாம். சிறப்பு உரிமை கால நிர்ணயிப்பை பொறுத்தவரை நிலையானதாகவோ, சரிகட்டப்பட்டதாகவோ, புதுப்பிக்கத்ததாகவோ அல்லது கெடு விதிக்கப்பட்டதாகவோ இருக்கலாம். சிலவற்றைப் பொறுத்தவரை காப்புரிமை காலமானது 17 முதல் 20 ஆண்டுகளாக இருக்கிறது.

காப்புரிமையானது தொழில்துறை சார்ந்த அல்லது அறிவுச் சொத்து வடிவத்தில் இருக்கும். இந்த வடிவிலுள்ள ஒன்றிற்கான காப்புரிமை என்பது அரசாங்கங்களின் எல்லைகள் வரை சம்மந்தப்பட்டது. ஒரு நாட்டில் காப்புரிமை பெற்றுள்ள ஒரு கண்டுபிடிப்பு அடுத்த ஒரு நாட்டில் பதிவு செய்யப்பட்டிராவிடில் அந்த நாட்டில் நிலத்தில் அக்கண்டுபிடிப்பிற்கு காப்பளிக்க நிர்பந்திக்க முடியாது.

குறிப்பாக காப்புரிமை என்ற கருத்து மற்றும் அதன் அவசியமான பகுதிகளான நூதனம், கண்டுபிடிப்பு முயற்சி, வெளிப்படைத்தன்மையின் தாழ்ந்த மட்டம், தேவையான செயல்விளக்கம் ஆகிவை மாறாமல் இருந்து வருகின்றன. கடந்த நானூறு ஆண்டுகாலமாக இந்நிலை நீடிப்பதாக ஒரு கருத்து உள்ளது.

கொள்கைகள் யோசனைகள் போன்றவற்றிற்கு காப்புரிமை வழங்கப்படுவதில்லை. ஆனால் சில கட்டுரைகள் அல்லது யோசனைகளை ஈடுபடுத்தி கட்டுரையை தயாரிப்பதற்கான நடைமுறைக்கு உரிமை வழங்கப்படுகிறது.

புதிய தொழில்நுட்பத்தையும் தொழில்துறையையும் ஊக்கப்படுத்தி வளர்ப்பதில் காப்புரிமைக்கு முக்கிய பங்கு உண்டு. கண்டுபிடிப்பாளர் தனது கண்டுபிடிப்பு நுட்பங்களை ரகசியமாக காப்பதற்கான சிறப்பு உரிமை பெற்றுள்ளார். ஒரு காப்புரிமைக்கு வழங்கப்பட்ட சட்டப்படியான ஏகபோத உரிமைக் காலகட்டம் முடிந்த பின்னர் மற்றவர்கள் அதை உபயோகிக்கவும் அபிவிருத்தி செய்யவும் முடியும்.

காப்புரிமைகளுக்கு சர்வதேச குணாம்சம் இருப்பதாக கருதப்படுகிறது. தொழில்துறை சொத்துக்கள் பாதுகாப்பிற்கான சர்வதேச சிறப்பு மாநாடு (பாரிஸ் சிறப்பு மாநாடு) மற்றும் உலக வர்த்தக அமைப்பின் 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் ஆகியன தொழில்துறை காப்புரிமை வழங்குகின்றன. இந்தியாவில் காப்புரிமைச் சட்டம் 1970இல் தெளிவாக உறுதிப்படுத்தித் தரப்பட்டுள்ளவைகளினதும் அவ்வப்போது திருத்தப்படுபவைகளினதும் அடிப்படையில் காப்புக் கோருவோருக்கு உரிமை வழங்கப்படுகிறது. இந்தியாவில் 1856ஆம் ஆண்டு முதலே காப்புரிமை இருந்து வருகிறது. காப்புரிமை மற்றும் 1911 ஆம் ஆண்டு வரைவடிவச் சட்டம் ஆகியன தற்போதைய 1970ஆம் ஆண்டு காப்புரிமை சட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. 1911ஆம் சட்டத்தில் மருந்துகள் நிவாரணிகள் மற்றும் குறிப்பிட்ட வகை ரசாயணங்கள் ஆகியனவற்றிற்கு காப்பு பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்ததை 1970ஆண்டுச் சட்டம் பெரிய அளவிற்கு மாற்றிவிட்டது. 1970ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு 5 மூலம் இவைகளுக்கு காப்புரிமை பெறுவதற்கான வாய்ப்பு அகற்றப்பட்டது. இச்சட்டத்திற்கு 1999ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்படும்வரை மூலப்பொருள்களுக்கான காப்பு பெறுவதற்கான விதிமுறைகள் கீழ்க்கண்டவாறு இருந்தன:

அ) உணவு அல்லது மருந்துகள் நிவாரணிகள் வடிவில் பயன்படுத்ததக்க அல்லது பயன்படுத்திட உத்தேசித்துள்ள மூலப்பொருள் கண்டுபிடிப்புக்கு கோரலாம்.

ஆ) ரசாயண கிரியை மூலம் ஒரு குறிப்பிட்ட வகை மூலப்பொருளை தயாரிப்பது அல்லது உற்பத்தி செய்வதன் மீது (காப்பு உலோகம், ஒளிக் கண்ணாடிகள், குறை மின் கடத்திகள், உலோகக் கலவைகளாவன பாகங்கள்) உரிமை கோரலாம்.

டிரிப்ஸ் ஒப்பந்தத்தின் பாகம் 2 பிரிவு 5 ஆனது காப்புரிமை சம்மந்தப்பட்டது.

தொழில் நுட்பத்தின் எந்த ஒரு துறையைச் சேர்ந்த கண்டுபிடிப்பிற்கு உரிமை கோரும் போது அது பெருள் வடிவத்தினை சம்மந்தப்படுத்துவதாக இருந்தாலும் சரி அல்லது செயல்முறைகளைப் பற்றியதாக இருந்தாலும் சரி அக்கண்டுபிடிப்பின் நூதனம், புதிய கண்டுபிடிப்பு முயற்சியில் செலுத்தப்பட்ட ஈடுபாடு மற்றும் தொழில்துறை உபயோகத்திற்கு பொறுந்திப்போகும் தன்மை ஆகியவற்றை சோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளது.

டிரிப்ஸ் ஒப்பந்தத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் பொறுந்தத்தக்க பாதுகாப்பு அடிப்படையிலான பொதுவான விலக்குகள் போக காப்பு பெறுவதற்கான வாய்ப்பை விலக்குவதற்கான குறிப்பிடத்தக்க காரணங்கள் அனுமதிக்கத்தக்கது. சுற்றுச்சூழலை மோசமாக பாதிக்கக்கூடியன, மனிதர்கள், விலக்குகள் மற்றும் பயிற்கள் (நுண் உடலுறுப்புகள் தவிர்த்து) ஆகியவற்றின் நோய் கண்டறிதல், நிவாராண நடைமுறைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் பற்றிய கண்டுபிடிப்புகளுக்கு காப்பு அளிப்பதி ருந்து விலக்களிக்கலாம். உயிரியல் சாராத மற்றும் நுண் உயிரியல் நடைமுறைகள் அல்லாத பயிற்கள் மற்றும் விலக்குகள் உற்பத்திக்கு அவசியமான உயிரியல் நடைமுறைக்கும் காப்புரிமையி ருந்து விலக்களிக்கலாம்.

டிரிப்ஸ் ஒப்பந்தப் பொறுப்புகளை 1-1-2000 ஆம் தேதி முதல் அமுல்படுத்துவதற்காக காப்புரிமைகள் (இரண்டாவது திருத்தம்) சட்டமுன்வரைவு 1999 ஆனது 1999ஆம் ஆண்டு டிசம்பரில் பாராளுமனற்த்தின் முன் வைக்கப்பட்டது. அது பாராளுமன்ற சபைகளின் கூட்டுக்குழுவின் முன் உள்ளது.

பயிர்ரகங்களைப் பொறுத்தவரை காப்புரிமை வடிவத்திலோ அல்லது சாத்தியமான சுய் ஜெனரிஸ் முறையின் கீழோ அல்லது அது போன்ற எந்த ஒரு வடிவத்திலுள்ள காப்புரிமை வழங்கவேண்டிய அவசியமில்லை. இதற்கான வரைமுறைகளை டிரிப்ஸ் ஒப்பந்தம் வகுக்கவில்லை. தக்க பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்றது என்று கருதிய வரையறைகளை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களே வகுத்துக் கொள்ளலாம் என்று விடப்பட்டுள்ளது. நமது நாட்டைப் பொறுத்தவரை சுய் ஜெனரிஸ் முறையைப் பற்றி நமது நாட்டில் அறிந்துள்ளதன் அடிப்படையில் காப்பு வழங்குவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டமுன்ரைவு பாராளுமன்ற சபைகளின் கூட்டுக் குழுவின் முன்பு உள்ளது.

## ஊ) ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளின் வரைபடங்கள்

நவீனயுகம் மின்னணுயுகம் நவீன கருவிகள் அனைத்திலும் மின்னணுமாற்றிகள் மற்றும் மின்சுற்று படிவங்கள் உள்ளன. அவை குறைமின் கடத்தி உலோகங்களின் மேல் பொறுத்தப்பட்டுள்ளன. இந்த குறை மின் கடத்திகளானவ மின்னணுக்கள் செயலாற்றக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வரைபடங்களை திருட்டுத்தனமாக பயன்படுத்துவது தண்டனைக்குரியது. ஒறுங்கிணைந்த மின் சுற்றுகளின் வரைபடங்களுக்கான காப்பு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இதற்கான 'ஒறுங்கிணைந்த மின் சுற்றுகள் அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தம்' 1989 மே 26ஆம் தேதி வாஷிங்டன் நகரில் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் உறுப்புநாடுகள் பலவற்றில் தேவையான சட்டங்கள் உறுவாக்கப்பட்டு ஒறுங்கிணைந்த மின்சுற்றுகள் மற்றும் அதன் அமைப்பு வரைபடங்களுக்கு காப்பு வழங்கப்படுகிறது. தேசிய அணுகுமுறையின் அடிப்படையில் இதற்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமையில் உள்ளவற்றிற்கு பொறுத்திவரக்கூடியவகையில் பாதுகாப்பு கோரும் விசயத்தின் இயல்பு குணம் இருக்க வேண்டும் ஒப்பந்த பிரிவு 2-(இ) இல் குறிப்பிட்டுள்ளபடி ஒரு வரைபடம் (பொதுவான தன்மையை குறிக்கும் படம், அடையாள வரைபடம், புவியியல் வரைபடம், செயல்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருத்தல்)' அல்லது 'கைவினைஞரின் கலைநயம்மிக்க படைப்பு' ஆகியனவற்றின் அடிப்படையில் ஒரு படைப்புச் செயல் இருந்தால் அதற்கு காப்பு கோரலாம்.

படைப்பின் இயல்பு எப்படியிருந்தாலும் அதன் உபயோகம் மற்றும அது தொடர்பான விசயங்களால் அப்படைப்பு ஈட்டும் மதிப்புகளைப் பொறுத்தவரை தனி அணுகுமுறையும் தனிப்பட்ட சட்டமும் தேவை. ஒறுங்கிணைந்த மின்சுற்று அமைப்பு வரைபடங்கள் சம்மந்தமாக டிரிப்ஸ் ஒப்பந்தத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு ஏற்ப முழுமையாக உறுதிப்படுத்துவதற்கன சிறப்பு சரத்துகளின் அடிப்படையில் உரிமையின் விளக்கம், உரிமையின் எல்லைகள், பதிவுக்கான நடைமுறைகள் மற்றும் அதுசம்மந்தமான நிபந்தனைகள், உரிமைக்கான காலக்கெடு சட்ட மீறல்கள் எவை என்பதற்கான விலக்கங்கள் ஆகியன இயற்றப்படும் சட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

உலக வ்த்தக அமைப்பின் டிரிப்ஸ் ஒப்பந்தமும் அமைப்பு வரைபடங்களுக்கு காப்பு அளித்துள்ளது. டிரிப்ஸ் ஒப்பந்தத்தின் பாகம் 2 பகுதி 6 (பிரிவு 25 முதல் 38) ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளின் அமைப்பு வரைபடத்தை உள்ளடக்கி உள்ளது.

உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் வாஷிங்டன் ஒப்பந்தம் என்றழைக்கப்படும் சர்தேச ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத்து இட்டுள்ளது. வாஷிங்டன் ஒப்பந்தத்தின் முக்கிய பொறுப்புகள் டிரிப்ஸ் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் சிலவற்றை கூடுதலாக சேர்த்துள்ளனர். மேலும் ஒரு கண்டுபிடிப்பாளர் அவரது செந்த அறிவுக் கூர்மையை கொண்டு உறுவாக்கிய அமைப்பு வரைபடம் அவரது முயற்சியின் உண்மையான பலனாக இருக்கும்பட்சத்தில் அந்த அமைப்பு வரைபடத்திற்கு காப்பளிக்க வேண்டியதை டிரிப்ஸ் வ யுறுத்துகிறது. தேசிய அணுகுமறையின் அடிப்படையில் இவ்வகை உரிமை வைத்துள்ள வெளிநாட்டவரது உரிமைக்கு 10 ஆண்டு கால காப்பு அளிக்கவேண்டும். இது சம்மந்தமான சட்ட முன்வரைவு 1999 டிசம்பரில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றத்திற்காக காத்துள்ளது.

## எ) வெளியிடப்படாத தகவல்கள் ( நம்பகமான தகவல்கள்):

வியாபாரம், வர்த்தகம் மற்றும் உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களது உற்பத்தியின் திறன் மற்றும் மதிப்புகூட்டலுக்கு அடிப்படையாக அமைந்த நூதனமான நிர்வாக நடைமுறைகள் அவர்களுடைய நிதி மேலாண்மை பற்றிய தகவல்கள் வெளியிடப்படாதவையாக பராமரிக்க விரும்புகின்றனர். அறிவுக் கூர்மைமிக்க அந்த தகவல்கள் வெளியிடப்படத்தக்கதாக இருந்தால் சம்மந்தப்பட்டவரது போட்டியாளர்களுக்கும் அந்த தகவல்களை கையாடல் செய்து பயன்படுத்துபவர்களுக்கும் சாதகமாக போய்விடும். சம்மந்தப்பட்ட தகவல்கள் மற்றும் உபயோகத்தின் மீது ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகள் மற்றும் ரகசியம் காத்தல் ஆகியன அந்த தகவல்கள் வெளியிடப்படாமல் பாதுகாக்கின்றன. வெளியிடப்படக்கூடாத தகவல்கள் ஏற்கனவே தெரியவந்திருந்தாலோ, பொது உபயோகத்திற்கு வந்திருந்தாலோ அல்லது வேறு ஏதாவது உபயோகத்தின் கீழ் வந்திருந்தாலோ அந்த தகவல் தனது நம்பகத்தன்மையையும் வெளியிடப்படாத தன்மையையும் இழந்து விடுகிறது.

வெளியிடப்படாத தகவல்களில் உள்ள உரிமை ஒரு சமூக உரிமையாகும். ஒருவர் தன்னுடைய வியாபாரம் வர்த்தகம் மற்றும் உற்பத்தி சம்மந்தப்பட்ட வெளியிடப்படாத தகவல்களை பாதுகாத்து வைத்திருப்பது அதன் உரிமையாளருக்கு உள்ள இயல்பான உரிமையாகும்.

உலக வர்த்தக அமைப்பின் டிரிப்ஸ் ஒப்பந்தம் வெளியிடப்படாத தகவல்களை உலகம் தழுவிய அளவில் பாதுகாக்கிறது. டிரிப்ஸ் ஒப்பந்தத்தின் பாகம் 2 பிரிவு 7 வெளியிடப்படாத தகவல்கள உள்ளடக்கியிருக்கிறது.

வெளியிடப்படாத தகவல்களின் இயல்பான மற்றும் சட்டபூர்வ உரிமையாளர்கள் அந்த தகவல் வெளியிடப்டாமலும் பிறரால் கைப்பற்றப்படாமலும் இவர்களது ஒப்புதல் இல்லாமல் நம்பகமான வர்த்தக நடைமுறைகளுக்கு விரேதமாக இத்தகவல்களை பிறர் பயன்படுத்துதல் ஆகியவற்றி ருந்து சட்டபூர்வமாக பாதுகாத்து தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்கான உரிமைகள் குறித்து ஒப்பந்தத்தின் இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. மருந்துகள் அல்லது வேளாண் துறைகளுக்கான ரசாயணப்பொருள்கள் சந்தைக்கான ஒப்புதல் பெறுவதற்கு அவைகள் சம்மதப்பட்ட வெளியிடப்படாத தகவல்கள் மற்றும் பிற விவரங்கள் வர்த்தக நெறி பிரழ்ந்த முறையில்பயன்படுத்தப்படாமல் பாதுகாக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்

இந்தியாவில் நம்மிடம் வர்த்தக ரகசியங்கள் சம்மந்தமாக தனிப்பட்ட சட்டம் இல்லை. இது சம்மந்தப்பட்ட பொதுசட்டம் படிப்படியாக பலப்பட்டு வருகிறது. மறைதவறி வெளியிடப்பட்டது விசயமாக புகார் எழுந்து அவ்விசியம் நிரூபிக்கப்படும்போது தக்க நிவாரணங்களை நீதிமன்றம் நிர்ணயிக்கிறது. இதன் காரணமாக இந்த விசயத்திற்கு தனி சட்டம் தேவை என்று கருத வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

## பயிர் உற்பத்தியாளர் மற்றும் உழவர்களது உரிமை:

பயிர் உற்பத்தியாளர் மற்றும் உழவர்களது உரிமைகளுக்கான பாதுகாப்பு பல நாடுகளில் பொதுவாக ஏற்கப்பட்டுள்ளது. தங்களது ராஜ்ஜிய எல்லையில் புதிய பயிர் வகைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக என்று மட்டுமல்லாமல் பயிர் உற்பத்தியாளர்களது நலன்களுக்கும் பாதுகாப்பு தரவேண்டியது அவசியம் என்பது நாடுகளுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. காப்புரிமையின் மூலம் பயிர் உற்பத்தியாளர்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் போது எழுகின்ற தனி பிரச்சனைகள் மீது அவர்கள் தனி கவனம் செலுத்துகின்றனர். இதன் மீதான வகைகளை பற்றி குறிப்பாக கவனம் செலுத்துகின்றனர். அதாவது பொது நலன் கருதி இலவச பயன்பாட்டு நிலை மீதான உரிமைகள் குறித்து தக்க கவனம் செலுத்தப்படும். இந்த விஷயங்களின் மீது உறுப்பு நாடுகள் ஆழ்ந்து கவனம் செலுத்தி ஒரே மாதிரியான தெளிவான கொள்கைகளை உருவாக்கி அதன் மூலம் தங்களுக்குள்ளான பிரச்சனைகளுக்கு தக்க தீர்வுகளும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பயிர் வகை பதிவுகளின் மீதான பாதுகாப்பு மற்றும் உழவர்களது உரிமைகள் பற்றிய மசோதா - 1999.

உலக வர்த்தக அமைப்பின் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தினது பகுதி 27.3 (ஆ) களை எதிர் கொள்வதற்காக அவ்மைப்பின் ஒரு உறுப்பினர் என்ற வகையில் இந்தியாவின் மத்திய அரசு இப்படி ஒரு சட்டத்தை உறுவாக்கிட முன் மயற்சி எடுத்துள்ளது. 'டிரிப்ஸ் 'ஒப்பந்தத்தின் இப்பகுதியானது உறுப்பு நாடுகள் காப்புரிமை வழங்குவதன் மூலம் அல்லது சுய் ஜெனிரிஸ் முறை அல்லது இவ்விரண்டும் ஒன்றிணைந்து ஒரு முறையில் பயிற்வகைகளுக்கு காப்புரிமை அளித்துபாதுகாப்பு வழங்க வேண்டும் என்று 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் இச்சரத்து உறுப்பு நாடுகளை கேட்டுக் கொண்டுள்ளது. இந்த விஷயத்தை கையாள்வதற்கு இந்தியா தனி சட்டத்தை தயார் செய்து அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த மசோதாவின் கீழ் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ள பயிற்வகையை உற்பத்தி செய்கிறவர்களான உரிமை உழவர்களது உரிமை பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இம்மசோதா அமைக்கப்பட்டுள்ளது. சந்தைப்படுத்துவதற்காக வியாபார நோக்கில் மறு உற்பத்தி செய்வதற்கு மட்டும் என்றில்லாமல் மேலும் சில சரத்துகளையும் அது தன்னுள் கொண்டுள்ளது. மேற்படி பயிர்களின் மரபு வளங்களை பயன்படுத்துவதில் மட்டும் இல்லாமல் அப்பயிற்களையும் விதைகள் என்ற வடிவத்தில் பயிரிடுவதற்கான மூலப்பொருள் என்ற நிலையில் உள்ள அந்த பாதுகாக்கப்பட்ட பயிற்வகைகளின் விற்று முதல் வருவாயையும் சரிசமமாக பகிர்ந்து கொள்வதற்கான சரத்துகள் இம்மசோதாவில் உள்ளன. புதிய பயிற்வகைகள் அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் பாரம்பரிய அல்லது உள்ளூர் பயிர் ரகங்களை பயன்படுத்தும் போது அவற்றின் உரிமையாளர்களான கிராமத்தவர்களுக்கும் உழவர் சமூகத்திற்கும் தக்க இழப்பீட்டுத் தொகை வழங்கவேண்டும். பிரோகிக்கப்பட்டுள்ள இச்சட்ட வடிவத்தினை எல்லாவகையான பயிர்வகைகளுக்கும் விரிவு படுத்திட வேண்டும். ஆனால் நுண் மூலக்கூற்றியலுக்கு அபிவிருத்தி செய்ய வேண்டியதில்லை.

உலக வர்த்தக அமைப்பின் 'டிரிப்ஸ்'ஒப்பந்தமும் பயிற்வகைகள் உற்பத்தியாளர்கள் மற்றும் உழவர்களது உரிமைகளும்.

'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பாகம் பிரிவு 5 பகுதி - 27 ன் பாரா 3 ன் துணை பாரா (ஆ) கீழ்கண்ட காரணங்களுக்காக பயிர் வகைகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியதை எடுத்துரைக்கிறது.

3) உறுப்பினர்கள் காப்பளிப்பதினின்று விலக்கு பெறலாம்

அ) ......................

ஆ) நுண் மூலக்கூறியல் மற்றும் அவசியமான உயிரியல் செயல்முறைகள் தவிர்த்த பயிர்கள் மற்றும் விலங்குகளுக்கு காப்பளிப்பதி ருந்து விலக்கு பெறலாம். அதே நேரத்தில் பயிற் வகைகளுக்கு காப்புரிமைகள் அல்லது சூய்ஜெனரிஸ் வடிவில் காப்பளிக்கலாம். இந்த பாராவிற்கான சரத்துகளை உலக வர்த்தக அமைப்பு உருவான நான்கு ஆண்டுகள் கழித்து பெற்றுக் கொள்ளலாம். எனவே புதிய பயிர் வகைகளை அபிவிருத்தி செய்வதற்காக உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகளானவை பயிற் உற்பத்தியாளர்கள் மற்றும் உழவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# டிரிப்ஸ்

# அத்தியாயம் 3

## அறிவுச் சொத்துரிமைகள் என்பன எவை?

ஒருவர் தனது மூளையின் அறிவைக் கொண்டு உருவாக்கிய கருத்து அல்லது வடிவம் போன்றவற்றை தனது சொந்த உடமையாக கருதுவதற்கான உரிமைய அவருக்கு வழங்குவதே அறிவுச் சொத்துரிமை எனப்படுகிறது.

இந்த உரிமையானது ஒருவருக்கு (ஆண்/பெண்) சிறப்பு உரிமையாக ஒரு குறிப்பிட்ட காலகட்ட அளவிற்கு வழங்கப்படுவது பொதுவான நடைமுறையாக இருந்து வருகிறது.

## I). பதிப்புரிமையும் அது தொடர்பான உரிமைகளும்

ஒரு ஆசிரியரின் இலக்கியம் அல்லது கலைப் படைப்புகள் ( புத்தகங்கள் மற்றும் பிற எழுத்துப் படைப்புகள், இசைக் கோர்வைகள், ஓவியங்கள், சிலைகள், கணினி செயல் திட்டங்கள் மற்றும் திரைப்படங்கள்) அவரது இறப்புக்கு பின்னால் 50 ஆண்டுகள் வரை கூட காப்புரிமையின் கீழ் பாதுகாக்கப்படுகிறது.

அதேபோல கதாபாத்திரங்களை நடித்துக் காட்டுபவர்கள், இசை கருவிகளை கையாளுபவர்கள், பாடகர்கள் போன்று செயல்படுத்திக் காட்டுபவர்கள் ஒளி பதிவு தயாரிப்பாளர்கள் மற்றும் ஒ  பரப்பு நிறுவனங்களது உரிமைகளும் காப்புரிமையின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. சம்மந்தப்பட்டவர்களது உருவாக்கத்திறனுக்கு வெகுமதி அளிக்கும் சமூக கடமையின் அடிப்படையில்தான் காப்புரிமை மற்றும் அது சார்ந்த உரிமைகள் வழங்கப்படுகின்றன.

## ii) தொழில்துறை சொத்துக்கள்

பொதுவாக தொழில்துறை சொத்துக்கள் இரண்டு பிரிவுகளாக பிரித்துக் காணப்படுகிறது. குறிப்பிட்ட அடையாளக் குறிகள், வர்த்தக குறிகள் (குறிப்பிட்ட ஒருவரின் பொருள்கள், சேவைகளை மற்றொருவரதி  நது உடனடியாக கண்டுகொள்ள பயன்படுத்தப்படும் அடையாளங்கள்) மற்றும் புவியில் குறியடையாளங்கள் (குறிப்பிட்ட இடத்தி  நது வரக்கூடிய பொருளுக்கு என்று உள்ள சிறப்பு பண்பு சார்ந்த அடையானம் அந்த இடத்தின் தன்மை காரணமாக சிறப்பித்துக் கூறப்படுகிறது).

இப்படிப்பட்ட சிறப்பு அடையாளங்களுக்கு காப்பு அளிப்பதன் மூலம் நேர்மையான போட்டிக்கு வழிவகுக்கப்படுகிறது. மேலும் பல்வேறு பொருள்கள் மற்றும் சேவை முறைகளுக்கு ஊடே தமக்கு தேவையானவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான பாதுகாப்பான ஏற்பாடாகவும் இது விளங்குகிறது.  இந்த காப்பு ஒரு வேலை உறுதிப்படாமல் போகலாம்.  அப்படிப்பட்ட நிலையில் பிரச்சனைக்குரிய அடையாளத்தின் சிறப்பு நிலை தொடர்ந்து இருக்கக் கூடியதாகும்.

தொழில் துறையில் வழங்கப்படும் பிற வகை சொத்துரிமை காப்புகள் புதிய கண்டுபிடிப்புகள், புதிய வடிவங்கள் தொழில் நுட்ப படைப்புகள் ஆகியனவற்றிற்கு வழங்கப்படுகின்றன.  புதிய கண்டுபிடிப்புகள், (வடிவக் காப்புகள் மூலம்) தொழில்துறை வடிவமைப்புகள், மற்றும் வர்த்தக ரகசியங்கள் ஆகியன அந்த வகையின் கீழ் வருகின்றன.

புதிய தொழிலகங்களை அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்படும் முதலீட்டின் பலன்களை முதலீட்டாளர்களுக்கு போய்ச்சேருவதன் மூலம் அவர்களுக்கான ஊக்கத்தொகை போய்ச் சேருவதை உத்தரவாதப்படுத்தப்படுகிறது.  ஆராய்ந்து மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தொடர்ந்து அவர்களை ஈடுபடுத்தச்செய்கிறது.  இப்படிப்பட்ட சமூக நோக்கமே இவ்வகை காப்பு வழங்க காரணமாக உள்ளது.

தொழில்துறை சார்ந்த அறிவுச் சொத்து உரிமை மீதான காப்பு பொதுவாக குறிப்பிட்ட காலக்கெடுவின் அடிப்படையில் வழங்கப்படுகிறது ( வடிவங்களைப் பொறுத்தவரை 20 ஆண்டுகள் காப்பு பெற உரிமை பெற்றுவருகின்றன.

# அறிவுச் சொத்துரிமை: காப்பும் காப்பு முறைகளும்

## அத்தியாயம் 4

தொழில் துறையின் நடவடிக்கைகளில் திட்டமிடல் மற்றும் அதற்கான அறிவுக்கூர்மையின் பங்களிப்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. புதிய மருந்துகள் மற்றும் பிற வகையான தொழில் நுணுக்கம் வாய்ந்த மருத்துவ தயாரிப்புகளின் மதிப்பானது அவைகள் சம்மந்தப்பட்ட கண்டு பிடிப்பு முன்முயற்சி, ஆய்வு வடிவமைப்பு மற்றும் அவற்றை பரிசோதித்து மேம்படுத்தும் நடிவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. திரைப்படங்கள், இசைபதிப்புகள், புத்தகங்கள் கணினி மென் பொருள்கள் மற்றும் சேவைகள் அவைகள் உணர்த்துகிற விஷயங்கள் அவைகளில் அடங்கியுள்ள படைப்புத்

தன்மைகள், அடிப்படையில் தான் சந்தைக்கு வந்து விற்பனையாகின்றன. இப்படிப்பட்ட படைப்புத் தன்மையை விலக்கிவைத்து விட்டு பார்த்தோம் எனில் அவைகள் பதிக்கப்பட்டுள்ளவை வெறுமனே பிளாஸ்டிக் தட்டுகளும், உலோகத் தகடுகளும் காகிதங்களும் என்ற மதிப்பை மட்டுமே பெறுகின்றன.

தற்போது சந்தையில் உள்ள பல பொருள்கள் நுகர்பொருள்கள் குறைந்த தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்டவை ஆக இருக்கலாம். ஆனால் அவைகளின் அந்த மதிப்பில் புதிய கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றின் மதிப்பே அதிகபட்சமாக இருக்கும். உதாரணத்திற்கு முகமதிப்பு பெற்ற ஆடை வகைகள் மற்றும் புதுவகை பயிர் ரகங்களைக் குறிப்பிடலாம்.

தங்களது கண்டுபிடிப்புகள் வடிவங்கள், உருவாக்கல்களை மற்றவர்கள் அபகரித்துக் கொள்வதி ருந்து தற்காத்துக் கொள்ளும் உரிமை படைப்பாளிகளுக்கு உள்ளது.

இவ்வகை உரிமைகள் 'அறிவுச் சொத்துரிமை' என்று அழைக்கப்படுகிறது. படைப்புகள்

பலவேறான வடிவங்களில் உள்ளன. உதாரணத்திற்கு அவைகள் புத்தகங்களாகவோ, ஓவியங்களாகவோ, ஒளிப்படங்களாகவோ உள்ளன. அந்தந்த வடிவத்தில் காப்புரிமை பெறுகின்றன. கண்டுபிடிப்புகள் அனைத்தும் வடிவ பதிப்பிரிமை பெறத்தக்கன. முக மதிப்புகளும், தயாரிப்பாளரின் தொழில் சின்னங்களும் (கர்ஞ்ர்) வர்த்தக முத்திரை காப்புரிமையின் கீழ் பதிவு பெறத்தகுதியடைந்தவை. இது போன்று இன்னும் பல வகைகளில் உரிமை பதிக்கப்படுகிறது.

### தோற்றம்: வரைமுறைக்குட்பட்ட வர்த்தக முறையை நோக்கி:

அறிவுச் சொத்துரிமை காப்பு நடவடிக்கைகள் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையில் கையாளப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ ல் வர்த்தக நடவடிக்கைகளில் அறிவுச் சொத்துரிமை என்பது முக்கிய இடத்திற்கு வந்துள்ளது. இதனால் உலக நாடுகளில் பலவகையாக அமுலாக்கப்பட்டுவரும் இவ்வகை உரிமை காப்பு நடவடிக்கைகள் சர்வதேச வர்த்தக உறவுகளில் பதட்டமான நிலைமைகளை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில் அறிவுச் சொத்துரிமை சம்மந்தமாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச சட்டங்கள் நிலைமை ஒழுங்குபடுத்தவும் முன்கூட்டியே அனுமானித்துச் செயல்படவும் சம்மந்தப்பட்டவர்களிடையே எழுகின்ற பிரச்சனைகளை நன்கு முறைப்படுத்தப்பட்ட ஒரு வழிகாட்டுத ன் கீழ் விரைந்து தீர்த்துக் கொள்ளவும் பாரை வகுத்துக் கொடுத்துள்ளன.

பொது வர்த்தக சங்கத் தீர்வை ஒப்பந்த நாடுகளிடையே 1986 முதல் 1994 ஆம் ஆண்டு முடிய உருகுவே நகரில் நடைபெற்றற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இதற்கான புதிய வடிவம் எட்டப்பட்டது. இதன் முடிவாக உலக வர்த்தக அமைப்பு ஏற்படுத்தியுள்ள வர்த்தகம் சார்ந்த நோக்கிலான அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தம் இவ்வகை உரிமைகளை உலக நாடுகள் அமுலாக்குவதில் காணப்பட்ட வேறுபாடுகளை வெகுவாக குறைத்துள்ளது. நாடுகளை பொதுவான சர்வதேச வரைமுறைகளின் கீழ் கொண்டுவந்துள்ளது. அறிவுச் சொத்துரிமை சம்மந்தமாக எங்காவது பிரச்சனைகள் எழுமானால் அவற்றைத் தீர்த்துவைக்க தற்போது உலக வர்த்தக அமைப்பின் தாவ தீர்வு முறைகள் உதவிக்கு தயாராக உள்ளன.

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தகம் சார்ந்த அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தம் ைந்து விரிவான பிரச்சனைகளை கையாளுகிறது. அவையாவன.

- வர்த்தகத்தின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் உள்ள சர்வதேச அளவிலான வேறுபல அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தங்களை எப்படி அமுலாக்குவது.
- அறிவுச் சொத்துரிமைக்கு தக்க பாதுகாப்பு வழங்குவது எப்படி?
- ஒவ்வொரு நாடும் தங்கள் அரசாட்சி எல்லைக்குள் இவ்வுரிமைகளுக்கு எப்படி தக்க பாதுகாப்பு முறைகளை அமுலாக்க கடமைப்பட்டுள்ளன.
- உலக வர்த்தக அமைப்பு உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் அறிவுச் சொத்துரிமை சம்மந்தமான பிரச்சனைகளை எப்படி தீர்த்து வைப்பது.
- புதிய முறைக்கு மாறுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்திற்கான சிறப்பு

### ஒப்பந்தங்கள்

**அடிப்படைக் கொள்கைகள்:** தேசிய அணுகுமுறை, மிகவும் வேண்டப்பட்ட நாடு மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றம்: பொதுச்சுங்கத் தீர்வை ஒப்பந்தம் மற்றும் பொது வர்த்தக சேவை ஒப்பந்தங்களைப் போலவே உலக வர்த்தக அமைப்பின்

அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தின் ஆரம்பமாக அதன் அடிப்படை கொள்கைகள் திகழ்கின்றன.

முன்பு குறிப்பிட்ட இரண்டு ஒப்பந்தங்கள் பாரபட்சமற்ற அணுகுமுறைகளை வெளிப்படையாக கொண்டிருந்தன. அதே போல தற்போதும் ஏற்பட்டுள்ளது. அவையாவன: தேசிய அணுகுமுறை. இம்முறையின் கீழ் ஒரு நாட்டின் சொந்த குடியுரிமை பெற்றவர் போலவே வெளிநாட்டவரும் சமமாக மதிக்கப்பட்டார்.

அதேபோல மிகவும் வேண்டப்பட்ட நாடு என்ற அடிப்படையில் அணுகுமுறை. இம்முறையின் கீழ் உலக வர்த்தக அமைப்பு நாட்டு தேசிய குடிமக்கள் அனைவரையும் சமமாக பாவிக்கப்படுகின்றனர். உலக வர்த்தக அமைப்பினைப் போல வேறுபல அறிவுச் சொத்துரிமை சார்ந்த ஒப்பந்தகளிலும் தேசிய அணுகுமுறை என்பது அடிப்படையான கொள்கையாக உள்ளது.

ஒரு படைப்பாளிக்கு வடிவ உரிமை வழங்கப்பட்டுவிட்டால் அல்லது படிவ உரிமை வழங்கப்பட்டுவிட்டால் அவரது படைப்புகளை பிறர் அதிகார பூர்வமற்ற முறையில் படிவம் எடுக்க முயற்சியை தடுக்கும் உரிமை அவருக்கு வந்து விடுகிறது. சமூகத்தைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட புதிய தொழில் நுட்பங்கள் அல்லது புதிய படைப்புகளை உருவாக்கியவர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் இத்தகு தற்கா க அறிவுச் சொத்துரிமை காப்பு இருக்கிறது என்று கருதுகிற அதே நேரத்தில். இத்தகு படைப்புகள் எல்லோருக்கும் ஏற்றத்தாழ்வின்றி கிடைக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறது. 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் இப்படிப்பட்ட சமன்நிலை ஏற்படுத்திட வேண்டியதை அங்கிகரிக்கிறது. தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு அறிவுச் சொத்துரிமை பாதுகாப்பு அளிக்கிறது. தொழில் நுட்பத்தை வர்த்தக அடிப்படையில் பரிமாரிக் கொள்ள காப்பு வழங்குகிறது. மேலும் உற்பத்தியாளர்களும் உபயோகிப்பாளர்களும் பயனடைகின்றனர். பொருளாதார மற்றும் சமூக நலம் உறுதிப்படுகிறது என்று இவ்வொப்பந்தம் கூறுகிறது.

அறிவுச் சொத்துரிமை எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது? பொதுவான அடிப்படை – சட்டங்கள்:

'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் இரண்டாம் பகுதியில் பல்வேறு வகையான அறிவுச் சொத்துரிமைகள் பற்றியும் அவற்றை எல்லாறு பாதுகாப்பது என்றும் விவரிக்கப்பட்டு உள்ளது. உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் வரைமுறைகளின் அடிப்படையில் போதுமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

உலக வர்த்தக அமைப்பிற்கு முன்பே உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பு சர்வதேச ஒப்பந்தத்தை உருவாக்கியிருந்தது.

இதன் காரணமாக அறிவுச் சொத்துரிமை சம்மந்தப்பட்ட பல பகுதிகள் சேர்க்கப்படவில்லை. இந்த குறைபாடுகளை நீக்கும் வகையில் வர்த்தகம் சார்ந்த

அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தில் கூடுதலான எண்ணிக்கையிலான புதிய அபிவிருத்தி செய்யப்பட்ட சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### பதிப்புரிமை;

'டிரிப்ஸ்' ஒப்பந்தம் கணினி திட்டங்களை இலக்கிய படைப்புகளைப் போல பாதுகாக்கத்தக்கது என்பதை உறுதிப்படுத்துகிறது. பெர்னி நகரில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டில் விவரத் தொகுப்புகளை பாதுகாப்பதற்கான வழிமுறை வகுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இலக்கிய படைப்புகள் பாதுகாக்கப்படுகின்றன.

சர்வதேச பதிப்புரிமைய வாடகைக்கு விடும் வகையில் சரத்துகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. கணினி திட்டத்தொகுப்புகள் எழுதுபவர்கள் மற்றும் இசை பதிவு தயாரிப்பாளர்கள் பொதுமக்களுக்கு தங்களது படைப்புகளை வாடகைக்கு விடும் உரிமை வழங்கப்படவேண்டியது அவசியம். திரைப்படப் பதிவுகளை வாடகைக்கு விடும்போது மிகப்பெரிய அளவிற்கு பிரதிகள் எடுத்துவிடக்கூடிய அபாயம் உள்ளது. அப்படிச் செய்யும் போது அந்த படங்களின் உரிமையாளர்களுக்கு போய்ச் சேர வேண்டிய வருமானங்கள் தடைபடுகின்றன. இப்படிப்பட்ட நிலையை தவிர்க்கவே பதிப்புரிமை காப்பு வழங்கப்படுகிறது.

சட்டத்திற்கு புரம்பாக பதிவு செய்தல், மறு உற்பத்தி செய்தல் மற்றும் அவர்களது நிகழ்ச்சிகளை நேரடியாக ஒ பரப்புதல் போன்றவற்றை தடுக்கும் உரிமை அவைகளை உருவாக்குபவர்களுக்கு இவ்வொப்பந்தம் வழங்கியுள்ளது. 50 வருடங்களுக்கு குறையாமல் இவ்வுரிமை வழங்கப்படுகிறது. இசைப்பதிவு தயாரிப்பாளர்களின் படைப்புகளுக்கு 50 வருட கால பாதுகாப்பு உரிமை வழங்கப்படுகிறது.

### வர்த்தக குறிகள்:

எந்த வகையான அடையாளக் குறிகள் வர்த்தக குறி அடையாள காப்புரிமை பெறத்தக்கவை என்பதை ஒப்பந்தம் வரையறைத்துள்ளது. அதனால் உரிமையாளர்களுக்கு குறைந்த பட்ச உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. பொருள்களுக்கு

தவிர்க்கும் வர்த்தக குறி காப்புரிமை போலவே சேவை நிறுவன குறிகளுக்கும் காப்புரிமை வழங்கப்பட வேண்டியதை உறுதிப்படுத்துகிறது. குறிப்பிட்ட நாட்டில் மிகவும் பிரபலமாகியுள்ள வர்த்தகக் குறிக்கு கூடுதல் பாதுகாப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

### புவியில் குறி அடையாளங்கள்:

ஒரு பொருளை அடையாளம் காண சில நேரங்களில் இடங்களின் பெயர்கள் உபயோகப்பபடுத்தப்படுவது உண்டு. 'சாம்போன்', 'ஸ்காட்ச்', 'டிகுலர்', 'ராக்போர்ட்' பாலாடை போன்ற பிரபல உதாரணங்களை சுட்டிக்காட்டலாம். குறிப்பாகஒய்ன் மற்றும் போதை பான உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை இடப்பெயர்களைக் கொண்டு அடையாளங்காட்டுகின்றனர். அப்படிப்பட்ட நிலையில் இடப்பெயர்களை அடையாளமாக கொண்டு வெளிவரும் தயாரிப்புகள் அந்த இடத்தின் சிறப்புத் தன்மைக்கேற்ற

தரத்துடன் வெளிவராவிட்டால் அது நுகர்வாளர்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்வது ஆகிவிடும். மேலும் இது நியமற்ற போட்டிக்கு வழிவகுத்துவிடும். எனவே இடப்பெயர்களை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கவேண்டும் என்று உறுப்பு நாடுகளுக்கு 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் குறிப்பிடுகிறது

குறிப்பாக ஒய்ன் மற்றும் போதை பானங்களுக்கு, ஒப்பந்தம் உயர் அளவிலான காப்பு வழங்குகிறது. இது விசயத்தில் பொதுமக்கள் தவறாக திசை காட்டப்பட்டுவிடக்கூடாது.

இது விசயத்தில் சில விலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு ஒரு இடப்பெயர் ஏற்கனவே வர்த்தக முத்திரையாக பதிக்கப்பட்டிருக்கலாம் அல்லது இடப்பெயர் பரம்பரையாக பயன்படுத்தப்பட்டு வருவதாக இருக்கலாம். அதாவது குறிப்பிட்ட வகை பாலடைக்கட்டி தயாரிப்பை குறிப்பிட ' செட்டார்' என்ற இடப்பெயர் பயன்படுத்தப்படுகிறது. இது விசயத்தில் செட்டார் என்ற இடத்தல் தற்போது மேற்படி பாலாடைகட்டி தயாரிக்கப்பட வேண்டும் என்பதில்லை. இதன் காரணமாக ஒரு நாடு இடக்குறியீட்டு அடையாளத்தி ருந்து விலக்கு கோரும்போது சம்மந்தப்பட்ட இடக்குறியீட்டிற்கு காப்புரிமை குறித்து கேள்வி எழுப்பும் நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண வேண்டும். ஒய்ன்க்கு புவியியல் தகுதி அடையாளங்கள் சம்மந்தமாக பன்முனை குறிப்பு பதிவு முறையை ஏற்படுத்துவதற்கு உலக வர்த்தக அமைப்பில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள ஒப்பந்தத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

## தொழில்துறை வரைவடிவங்கள்:

'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் கீழ் தொழில்துறை வரைவடிவங்களுக்கு குறைந்த பட்சம் 10 ஆண்டு காப்பு அளிக்க வேண்டும். ஒரு வரைபடத்தின் உரிமையாளரின் அனுமதி பெறாமல் அவரது வரைபடத்தை விற்பதையோ அதன் ஒரு பகுதியை எடுத்துக் கொள்வதையோ அல்லது அந்த வரைபடத்தை அப்படியே வடித்துக் கொள்வதையோ அவ்வுரிமையாளர் தடுக்க முடியும்.

## வடிவ காப்புரிமை:

வடிவ காப்புரிமை குறைந்த பட்சம் 20 ஆண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. வடிவத்தை உருவாக்கியவருக்கும் அதை வைத்து பொருளை தயாரிப்பவருக்கும் வழங்கப்பட வேண்டும். அனேகமாக தொழில் நுட்பத்துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் இது பொருந்தும், பொது ஒழுக்கநெறி, அல்லது ஒழுக்கமுறையின் அடிப்படையில் குறிப்பிட்ட கண்டுபிடிப்பிற்கு வடிவஉரிமை வழங்குவதற்கு மறுப்பு தெரிவிக்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. பயிர்கள் விலங்குகளின் நோய் கண்டறிதல், நோய்க்கான சிகிச்சை முறைகள், அறுவை சிகிச்சை முறைகள் காப்பு அளிக்க மறுக்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. ஆனால் பயிர்கள் மற்றும் விலங்குகளின் நுண் உயிர்மூலக்கூறுகள் விசயத்தில் காப்பளிக்க கடமைப்பட்டுள்ளது. ஆய்வாளர்களின் நிறுவனங்களின் விலங்குகள் மற்றும் பயிர்களின் உயிரியல் நடவடிக்கைகளுக்கு காப்பளிக்க மறுக்கலாம். ஆனால் நுண் உயிரியல் கண்டு பிடிப்புகளுக்கு காப்பளிக்க வேண்டும்.

புதிய வகை பயிர்கள் உற்பத்தி காப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் காப்பு மாநாடுகளில், புதிய பயிரினப் பெருக்கம் செய்பவரது உரிமைகள் பாதுகாக்க உரிமையாளிக்கப்பட்டுள்ளது. அதைப்போன்ற ஒரு சிறப்பு ஏற்பாட்டின் மூலம் பயிர்வகைகள் பதிவு உரிமை பெறத்தக்வை. வடிவ காப்பு உரிமையாளர்

அனுபவிக்கத்தக்க குறைந்த பட்ச உரிமைகளை ஒப்பந்தம் விவரிக்கிறது. ஆனால் இது சில விலக்குகளையும் அளிக்கிறது. உதாரணத்திற்கு ஒரு வடிவ காப்பு உரிமையாளர் தனக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி சந்தையில் அவ்வடிவ உரிமை சம்மந்தப்பட்ட பொருளுக்கு செயற்கையாக கிராக்கி ஏற்படுத்தும் விதத்தில் உற்பத்தியில் முட்டுக்கட்டை போட முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகளில் அரசாங்களானவை மேற்கண்ட வடிவ உரிமையை போட்டி உற்பத்தியாளர்க்கு வழங்கவோ அல்லது உரிம முறையின் கீழ் உற்பத்தி செய்யவோ ஒப்பந்தம் சம்மதம் தெரிவிக்கிறது. அதே நேரத்தில் வடிவ காப்பு உரிமையாளருக்கும் சட்டபூர்வமான பாதுகாப்பு அளிக்கும் அடிப்படையிலான சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே இதைச் செய்ய வேண்டும்.

உற்பத்தி நடவடிக்கைகளுக்கு வடிவ காப்புரிமை வழங்கப்படுமேயானால், அந்த உற்பத்தி நடவடிக்கையினால் நேரடியாக தயாராகும் பொருளுக்கும் சேர்ந்து காப்புரிமையை வழங்க வேண்டும். உரிமை மீறினால்

சம்மந்தப்பட்டவர்கள் காப்புரிமை பெற்றுள்ளதனின் காப்புரிமையை தாங்கள் மீறவில்லை என்று நிரூபிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட சூழ்நிலையில் நீதி மன்றம் ஆணையிடக்கூடும்.

## வேறுபாடு என்பது என்ன?

தெளிவான பதிப்புரிமைகள், வடிவகாப்புரிமைகள், வர்த்தக குறிகள் போன்றவைகள் பல்வேறு வகையான படைப்புகள் அல்லது கண்டுபிடிப்புகளுக்கு கோரப்படலாம். அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவையாக கருதப்படலாம். தொழில்துறை வரைவடிவங்கள், ஒறுங்கிணைந்த மின்சுற்று வரைவடிவங்கள், புவியியல் குறி அடையாளங்கள் மற்றும் வர்த்தக குறியீடுகள் போன்ற பல விசயங்களில் வடிவகாப்புரிமை பதிவின் மூலம் காப்பு பெறத்தக்கவை. அந்த பதிவில் என்ன ஒரு தன்மை அதாவது கண்டுபிடிப்பு, வரைபடம், முகமதிப்பு, தொழில் சின்ன அடையாளம் போன்ற எந்த நிலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை விவரித்திருக்க வேண்டும். இந்த விவரங்கள் பொது தகவலாக அறியத்தக்கவை. படிவ உரிமை மற்றும் வர்த்தக ரகசியங்கள் அவற்றின் சிறப்பு நிலைகளின் அடிப்படையில் இயல்பாகவே பாதுகாப்புக்கு உரியவை ஆகின்றன. அவைகள் பதிவு செய்யப்படவேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் இதுசம்மந்தமான வேறுபல கட்டுப்பாடுகள் மாறுபடக் கூடியவை. உதாரணத்திற்கு நடப்பிலுள்ள காப்புரிமைகளின் கால மீதமுள்ள கால நிர்ணயம் ஒன்றுக்கு ஒன்று மாறுபடக்கூடியவை.

## ஒறுங்கிணைந்து மின்சுற்று வரைவடிவங்கள்:

உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் வாஷிங்டன் ஒப்பந்தத்தில் உள்ளதின் அடிப்படையில் டோபோகிராபிக்ஸ் எனப்படும் ஒருங்கிணைந்த மின்சுற்று வரைபடங்களுக்கான காப்புரிமையை 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் வழங்குகிறது. 1989ஆம் ஆண்டிலேயே இதற்கான ஒப்பந்தம் எட்டப்பட்டும் இன்றுவரை அமுலுக்கு வரவில்லை. 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தில் கூடுதலான சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு இது சம்மந்தமான காப்புரிமை குறைந்த பட்சம் 10 வருடங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடலாம்.

## வெளிப்படுத்தக்கூடாத தகவல்கள் மற்றும் வர்த்தக ரகசியங்கள்:

வர்த்தக ரகசியங்கள் மற்றும் வெளிப்படுத்தக்கூடாத தகவல்களுக்கு வியாபார ரீதியான மதிப்பு உண்டு. நம்பிக்கையான வியாபார நடைமுறைகள் மற்றும் உறுதி மொழி ஏற்புக்கு மாறாக அம்மதிப்பை சீர்குலைப்பதில் இருந்து பாதுகாப்பு பெற அவைகள் தகுதியடைந்துள்ளன. அதே நேரத்தில் அப்படிப்பட்ட தகவல்களை ரகசியமாக பாதுகாக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மனிதர்களுக்கான புதிய மருந்துக்கோ அல்லது விவசாயத்திற்கான ரசாயணக் கலவைகளுக்கோ சந்தைக்கான ஒப்புதல் பெறும் நோக்கோடு அரசாங்கத்திற்கு தரப்படும் பரிசோதனைக்கான விவரங்கள் காப்புரிமை பெறத்தக்கவை. அப்படி காப்பு பெறுவதன் மூலம் நெறிமுறைக்கு புறம்பான வழிகளில் அவ்விவரங்களை வியாபார ரீதியில் பயன்படுத்தப்படுவது தடுக்கப்படுகிறது.

## போட்டிக்கு இடமளிக்காத ஏகபோக குத்தகை உரிமையின் மீதான கட்டுப்பாடுகள்:

பதிப்புரிமை, வடிவகாப்புரிமை அல்லது வேறுவடிவிலான அறிவுச் சொத்துரிமை பெற்றுள்ள ஒருவர் உரிம ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேறொருவருக்கு அவைகள் உற்பத்திக்கு வழங்கலாம் அல்லது பாதுகாக்கப்பட்ட வர்த்தக முத்திரையை பிரதியெடுத்து பயன்படுத்த அனுமதிக்கலாம். அவரது கண்டுபிடிப்புகள் வரைபடங்கள் போன்றவற்றையும் இந்நோக்கில் அனுமதிக்கலாம். இப்படி செய்து கொள்ளப்படும் உரிம அடிப்படையில் ஆன ஒப்பந்தத்தின் சரத்துக்கள் போட்டியை மட்டுப்படுத்தக் கூடியதாகவும் தொழில் நுட்ப பரிமாற்றங்களில் உள்ள தேவையற்ற தடைகளை கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருக்கலாம் என்று உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் அங்கீகரிக்கிறது. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் அறிவுச் சொத்துரிமையை தவறாக பயன்படுத்தும் வகையிலான போட்டிக்கு இடமளிக்காத ஏகபோக உரிமையை தடை செய்ய அரசாங்கங்கள் உரிமை பெற்றுள்ளன. இந்த தடை நடவடிக்கையை மேற்கொள்ளும் முன்னர் சம்மந்தப்பட்டவர்களுடன் அரசாங்கம் விரிவான ஆலோசனைகளை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

## கடுமையான அதே நேரத்தில் நேர்மையான அமுலாக்கம்:

தற்போதுள்ள அறிவுச் சொத்துரிமை சம்மந்தப்பட்டுள்ள சட்டங்கள் போதுமானவையாக இல்லை. அமுலாக்க கட்டாயப்படுத்தக் கூடியனவாக அவை இருக்க வேண்டும். 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி 3 ல் இதற்கான ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அரசாங்கங்கள் தங்கள் சட்டங்களுக்கு உட்பட்டு இவைகளை கட்டாயம் அமுல்படுத்தப் வேண்டியதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஒப்பந்தம் கூறுகிறது. மேலும் விதிமுறைகளை

மீறுபவர்கள் மீது அவர்கள் மீண்டும் அப்படிப்பட்ட தவறுகளை செய்யாமல் இருக்குமளவிற்கு கடுமையான தண்டனைத்தொகை விதிக்க ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது. விசாரணை நடவடிக்கைகள் நடுநிலையோடும் நேர்மையாகவும் தேவையற்ற வகையில் சிக்கலை அதிகப்படுத்தாததாகவும் இருக்க வேண்டும். விசாரணைக்கு நியாமற்ற காலக்கெடுவும் விதிக்கக் கூடாது. எதிர்பார்க்க முடியாத காலத்திற்கு இழுத்தடிக்கவும் கூடாது. விசாரணையில் சம்மந்தப்பட்டவர்கள் கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு கோரவோ நிர்வாக முடிவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு கோரவோ

நீதிமன்றத்திடம் கேட்டுக் கொள்ளலாம். மீறல்கள் மீது சட்டத்தை அமுலாக்குவது எப்படி என்று ஒப்பந்தம் சில விவரங்களை தருகிறது. சாட்சிகளை சேகரிப்பது, தற்கா க நடவடிக்கைகள், இழப்பீடுகள் (ஐய்த்ன்ய்ஞீற்ண்ர்), தண்டனைகள் ஆகியன குறித்த விவரங்கள் உள்ளன. அனுமதிபெறாத அல்லது போ தயாரிப்புகளை அழித்துவிடவோ கலைத்துவிடவோ குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் நீதிமன்றங்கள் அதிகாரம் படைத்தவையாக இருக்க வேண்டும் என்று ஒப்பந்தம் கூறுகிறது. வர்த்தக குறியீடுகளை தன்னிச்சையாக பயன்படுத்துதல், போ யான வர்த்தக குறியிடுகள் அல்லது வர்த்தக நோக்கில் அனுமதியின்றி பதிப்புரிமையை கையிலெடுத்துக் கொள்ளுதல் ஆகியவை குற்றவியல் அத்துமீறல்களாக கருதப்பட வேண்டும். அனுமதிபெறாத போ ச்சரக்குகள் இறக்குமதி செய்யப்படுவதை சுங்க இலாகா அதிகாரிகளின் உதவியுடன் தடுக்கும் உரிமையை அறிவுச் சொத்துரிமையாளருக்கு வழங்க அரசாங்கங்கள் கடமைப்பட்டுள்ளன.

## மாற்றங்களை மேற்கொள்ளும் காலகட்டத்திற்கான ஏற்பாடுகள்:

ஒன்று, ஐந்து அல்லது பதினோரு ஆண்டுகளுக்குள் முறைப்படுத்துதல்

உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் 1995 ஜுலை 1 முதல் அமுலுக்கு வந்துள்ளது. 'டிரிப்ஸ்'ஒப்பந்த சரத்துக்களை அந்த தேதியி ருந்து ஓராண்டுக்குள் அமுல்படுத்தும் வகையில் தங்கள் சட்டங்களை வளர்ச்சியடைந்த நாடுகள் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். மற்றும் சில குறிப்பிட்ட நிலமைகளின் அடிப்படையில் பொருளாதார நிலை மாற்றத்தில் இருந்து வருகிற நாடுகள் 5 ஆண்டுகளுக்குள்ளும், மிகவும் பின்தங்கிய நாடுகள் 11 ஆண்டுகளுக்குள்ளும் தங்கள் நாட்டுச் சட்டங்களை இதற்கேற்ப தயார் செய்து கொள்ள வேண்டும்.

‘டிரிப்ஸ்‘ஒப்பந்தம் அமுலுக்கு வந்துள்ள 1995 ஜுலை 1 ஆம் தேதியில் எந்தவொரு வளரும் நாட்டிலாவது தொழில்நுட்பத்தின் எந்தவொரு துறையின் வடிவக்காப்புரிமை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்திருக்காவிடில் அத்தேதியி ருந்து 10 ஆண்டுகளுக்கு அதற்கான காப்பு முறைகளை அமுலாக்கிட வேண்டும். அதே நேரத்தில் ஒப்பந்தம் அமுலுக்கு வந்துள்ள நாள்முதல் மருத்துவம் வேளாண்துறைகளுக்கான ரசாயணக் கலவைகள் சம்மந்தமாக பூர்த்தி செய்யப்பட்டுவரும் விண்ணப்பங்களை ஏற்று காப்பு வழங்க வேண்டும் மாற்றங்களை மேற்கொள்வதற்கான இறுதி நாள் வரை இழுத்தடிக்க வேண்டியதில்லை. ஒரு வேலை இப்படிப்பட்ட தயாரிப்புகளுக்கு இவ்விடைப்பட்ட காலத்தில் சில நாடுகள் அனுமதி வழங்குமெனில் (சில குறிப்பிட்ட கட்டுப்பாடுகளின் அடிப்படையில்) சந்தை உரிமைக்கான சிறப்பு அனுமதியானது 5 ஆண்டுகளுக்கோ அல்லது தயாரிப்பு காப்புரிமை வழங்கப்படும் வரையோ இதில் எது குறைவான கால அவகாசமுடையதோ அதற்கு வழங்கப்படலாம்.

மேலும் சில விதிவிலக்கான நிலமைகளின் கீழ் வர்த்தகம் சார்ந்த அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டுள்ள பொறுப்புகளின் அடிப்படையில், வளரும் நாடுகள் மாற்றங்களை மேற்கொள்வதற்கான காலகட்டத்திலோ அதேபோல புதிய சட்டங்கள் ஏற்படுத்தும் வரையிலோ அறிவுச் சொத்துரிமைகளை வழங்கிட வேண்டும்.

‘டிரிப்ஸ்‘கண்காணிப்புக்குழுவானது ஒப்பந்தத்தின் நடைமுறைகளையும் இதன் மீதான அரசாங்கங்களின் முறையீடுகளையும் கண்காணிக்கிறது.

# அறிவுச் சொத்துரிமையின் வர்த்தகம் சார்ந்த அம்சங்கள் (டிரிப்ஸ்) ஒப்பந்தம் சம்மந்தமாக ஒரு விரிவான விளக்கம்

## அத்தியாயம் 5

'டிரிப்ஸ்'ஒப்பந்தம் 1995 ஜனவரி 1 முதல் அமுலுக்கு வந்துள்ளது. அன்றி ருந்து அது அறிவுச் சொத்துரிமை சம்மந்தமான மிகவும் விரிவான பன்முனை ஒப்பந்தமாக இருந்து வருகிறது.

**அறிவுச் சொத்துரிமையின் கீழ்வரும் பகுதிகளாவன:**

பதிப்புரிமை மற்றும் அது தொடர்பான உரிமைகள் (அதாவது கலைஞர்கள்), தயாரிப்பாளர்கள், இசைப்பதிவாளர்கள், மற்றும் ஒ பரப்பு அமைப்புகள் ஆகியோர் தொடர்பான) சேவை நிறுவன குறியடையாளடங்கள் உள்ளிட்ட வர்த்தக குறி அடையாளங்கள் மூலமாக இருந்ததனால் கிடைத்த பெயர்கள் உள்ளிட்ட புவியியல் குறி அடையாளங்கள், தொழில்துறை வரைவடிவங்கள், புதுவகை பயிர்களை பாதுகாப்பது உள்ளிட்ட காப்புரிமைகள், ஒறுங்கிணைந்த மின் சுற்றுப் பலகைகளின் வடிவ வரைபடங்கள், வியாபார ரகசியங்கள் மற்றும் பரிசோதனை விவரங்கள் உள்ளிட்ட பகிரங்கப்படுத்தப்படக்கூடாத விவரங்கள் ஆகிய காப்புரிமையின் கீழ் வருகின்றன.

இவ்வொப்பந்தத்திற்கு மூன்று முக்கிய பண்புகள் உள்ளன

### வரையறைகள்:

இவ்வொப்பந்தத்தின் கீழ் வருகிற எல்லா முக்கியமான அறிவுச் சொத்துரிமை சார்ந்த பகுதிளையும் கருத்தில் கொள்ளும் வகையில் உறுப்பு நாடுகள் அனைத்தும் அவைகளுக்கு குறைந்த பட்ச வரையறைகளின் கீழ் பாதுகாக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு நடைமுறைகளின் அனைத்து முக்கிய பகுதிகளும் விவரிக்கப்பட்டுள்ளன. பதிப்புரிமை கோரும் விசயம் குறித்து கலந்து ஆலோசிக்கவும், அந்த உரிமைகளுக்கு அனுமதிக்கத்தக்க சில விலக்குகள் அளிக்கவும், குறைந்த கால அளவிற்கு காப்பு அளிக்கவும் வரையறைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வரையறைகள் கீழ்கண்டவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவதாக உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பு நிர்ணயித்துள்ள தனிப்பொறுப்புகள், தொழிற்துறை சொத்து காப்புக்கான பாரிஸ் சிறப்பு மாநாட்டு முடிவுகள், இலக்கியம் மற்றும் கலைப்படைப்பு உரிமைகள் பாதுகாப்பிற்கான பெர்னி சிறப்பு மாநாட்டு முடிவுகள் ஆகியவற்றின் மிகச்சிறிய குறிப்புகள் ஆகியவற்றினை கட்டாயம் இணைத்துப் பார்த்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பெர்னி சிறப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட நெறிசார்ந்த உரிமைகள் தவிர்த்த இம்மாநாடுகளின் அனைத்து தனிச்சிறப்பு வாய்ந்த பகுதிகளும் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தகம் சார்ந்த அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தின் குறிப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இம்மாநாட்டு முடிவுகள் இவ்வொப்பந்த நாடுகளின் பொறுப்புகளாக ஆகியுள்ளன. பாரிஸ் மற்றும் பெர்னி சிறப்பு மாநாடுகளின் ஒப்பந்த சரத்துக்களின் தகுந்த பிரிவு வர்த்தகம் சார்ந்த அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தில் பிரிவுகள் 2.1 மற்றும் 9.1இல் காணப்படுகின்றன. நாடுகளில் போதுமான அளவுக்கு அபிவிருத்தி செய்யப்படாமலும் கண்டு கொள்ளப்படாமலும் இருந்த பல பகுதிகள் தற்போதைய ஒப்பந்தத்தில் பெரிய அளவிற்கு இணைக்கப்பட்டுள்ளன. இக்காரணங்களால் இவ்வொப்பந்தம் சில நேரங்களில் பெர்னி, பாரிஸ் கூட்டு ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

### II. அமுலாக்கம்:

அறிவுச் சொத்துரிமை சம்மந்தப்பட்ட உள்நாட்டு நடைமுறைகள் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் குறித்து இரண்டாவது பகுதி விவரிக்கிறது. எல்லா வகையான அறிவுச் சொத்துரிமை சட்டங்கள் அமுலாக்குவதற்கான நடைமுறைகளுக்கும் பொருத்தமான குறிப்பிட்ட சில பொதுவான நெறிமுறைகளை இவ்வொப்பந்தம் வரைந்துள்ளது. மேலும் (பொது) மற்றும் நிர்வாக நடைமுறைகள் மற்றும் தீர்வு முறைகள், சோதனை விரிவான நடவடிக்கைகளுக்கு தேவையான சிறப்பு பிரிவுகள் மற்றும் குற்றவியல் மேல் நடவடிக்கைகள் ஆகியன விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையான உரிமையாளர்கள் தங்கள் உரிமைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மற்றும் தீர்வு முறைகள் குறித்து குறிப்பிடத்தக்க அளவு விரிவாக்கி கூறப்பட்டுள்ளது.

### III. பிரச்சனைகளுக்கு தீர்வு:

'டிரிப்ஸ்'பொறுப்புகள் சம்மந்தமாக உலக வர்த்தக அமைப்பு உறுப்பினர்களிடையே எழும் பிரச்சனைகள் மீதான குற்றச்சாட்டுகள் உலக வர்த்தக அமைப்பின் பிரச்சனைகளுக்கான தீர்வு நடைமுறை விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். மேலும் அறிவுச் சொத்துரிமையை கையிலெடுப்பதாலும் பாதுகாப்பதாலும் ஒப்பந்தத்தினால் கிடைக்கக்கூடிய சிறந்த பலன்கள் கைநழுவிப் போய்விடாம ருப்பதற்காக தேசிய அணுகுமுறை மற்றும் மிகவும் வேண்டப்பட்ட நாடு என்ற வகையிலான அணுகுமுறை போன்ற அடிப்படை கொள்கைகளை ஒப்பந்தம் உருவாக்கியிருக்கிறது. ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் எல்லா உறுப்பு நாடுகளாலும் சமமாக மதிக்கத்தக்கது. அதனால் வளரும் நாடுகளைப் பொறுத்தவரை அவற்றை அமுலாக்க நீண்ட கால அவகாசம் தரப்பட்டுள்ளது. மாற்றீடுக்கான காலகட்டத்திற்கான ஏற்பாடுகள் ஒரு நாட்டில் அமு ல் இருக்கும்போது அந்நடைமுறைகள் மருத்துவத்தை காப்புரிமைகளுக்கு பொறுந்ததாது.

'டிரிப்ஸ்'ஒப்பந்தம் குறைந்தபட்ச வரையறுப்புகளை கொண்ட ஒன்றாகும். எனவே உறுப்பு நாடுகள் விருப்பப்பட்டால் அறிவுச் சொத்து உரிமைக்கு கூடுதல் பாதுகாப்பு வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் தங்கள் சொந்த சட்டங்கள் நடைமுறைகளுக்கு உட்பட்டு பொறுத்தமான முறையில் அமுலாக்கிக் கொள்ள உறுப்பு நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

## குறிப்பிடத்தக்க பொதுவான சரத்துகள்:

அறிவுச் சொத்துரிமை சம்மந்தமான மாநாடுகளில் உருவாக்கப்பட்டது போன்றே உறுப்பு நாடுகள் பிறவற்றில் அந்நாடுகளது குடிமக்களுக்கு தரப்படும் அறிவுச் சொத்துரிமை போன்ற காப்பை எல்லா உறுப்பு நாடுகளும் ஒப்புக்கொண்டு அமுலாக்க வேண்டியது அடிப்படையான பொறுப்பாகும். இப்படிப்பட்ட உரிமை கோருவதற்கான நபர்கள் எவர் என்பதை பகுதி 1.3 தெளிவுபடுத்துகிறது. அடுத்த நாடுகளைச் சேர்ந்த இவர்களும் தனது தேசத்தவர்கள் என்று குறிப்பிடத்தக்கவர்கள். ஆனால் இவர்கள் இயற்கையாகவோ சட்டப்படியோ இணைத்துக்கொள்ளப்பட்ட நபர்கள் அடுத்த நபர்களுடன் நெறுங்கிய உறவுகொள்ள இவர்கள் அந்நபர்களது தேசத்தவராக இருக்க வேண்டும் என்பதில்லை. ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சரத்துக்கள் பயன்பெறத்தக்கவர்கள் இவர்கள் என திட்டவட்டமான முடிவெடுக்க ஒப்பந்தத்தில் வழிவகைகள் கூறப்பட்டுள்ளன. இதற்கு உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் சிறப்பு மாநாட்டு முடிவுகள் பொறுந்தத்தக்கன. தற்போது உலக வர்த்தக அமைப்பு உறுப்பினராக உள்ள நாடுகள் மேற்கூறிய சிறப்பு மாநாடுகளில் பங்கெடுக்காமல் இருந்திருக்கலாம். அவைகளுக்கும் அம்மாநாட்டு முடிவுகள் பொறுந்தும். (இம்மாநாடுகள் எவை என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது.).

ஒப்பந்தத்தின் 3, 4 மற்றும் 5 ஆவது பிரிவுகள் வெளிநாட்டு குடிமக்களுக்கு வழங்கப்படும் தேசிய மற்றும் மிகவும் மிகவும் வேண்டப்பட்ட நாட்டு அணுகுமுறைகள் குறித்த அடிப்படையான சட்டவிதிகளையும் உள்ளடக்கியிருக்கிறது. ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டுள்ள எல்லா வகையான அறிவுச் சொத்துரிமை பற்றிய விசயங்களுக்கும் மேற்கண்ட அணுகுமுறை பொறுந்தும். தனிச்சிறப்பு வாய்ந்த வரையறுப்புகளுக்கு மட்டும் இந்த பொறுப்புகள் என்று இல்லை. அறிவுச் சொத்துரிமை காப்பு நடவடிக்கைகள் அமுலாக்கம் பராமரிப்பு, நம்பகத்தன்மை ஈட்டுதல், கிடைப்புத்தன்மை ஆகிய நடவடிக்கைகள் பாதிக்காத வண்ணம் இந்த பொருப்புகள் பார்த்துக் கொள்கின்றன. ஒப்பந்தத்தில் குறிப்பாக எடுத்துறைக்கப்பட்டுள்ள அறிவுச் சொத்துரிமை சம்மந்தப்பட்ட நடைமுறைகளை பாதிக்கும் விசயங்களையும் கவனிக்க பொறுப்பாக்குகிறது. தேசிய அணுகுமுறைக்கான ஒப்பந்தம் சொந்த நாட்டவரையும், உறுப்பு நாட்டைச் சேர்ந்த ஒருவரையும் பாரபட்சமாக நடத்துவதை தடுக்கிறது. உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் மாநாட்டு முடிவுகளில் அறிவிக்கப்பட்ட சிறப்பு சலுகைகளை வர்த்தகம் சார்ந்த அறிவுச் சொத்துரிமை ஒப்பந்த நாடுகள் அமுலாக்க வேண்டியதை தேசிய அணுகுமுறை ஒப்பந்தம் வ யுறுத்துகிறது. இந்த விதிவிலக்குகள் சரக்குகளை பரிமாறிக்கொள்ள அனுமதிக்கிறது. மிகவும் வேண்டப்பட்ட நாட்டு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக இது அமைந்துள்ளது. (உதாரணத்திற்கு பதிப்புரிமைக்கான குறைந்தபட்ச காப்புரிமை கோருவதற்கான வர்த்தகம் சார்ந்த அறிவுச் சொத்துரிமையின் விதிமுறைகள் பெர்னி சிறப்பு மாநாட்டின் முடிவுகளின் பிரிவு 7(8)இன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சேர்க்கப்பட்டவையாகும். அதேபோல பல முக்கிய சரத்துக்களும் தரப்பட்டுள்ளன.

ஒப்பந்தத்தின் முக்கிய குறிக்கோள்கள் முகவுரையில் தொகுக்கப்பட்டுள்ளன. உருகுவே சுற்று பேச்சுவார்தைகளின் நோக்கங்கள் இவ்வொப்பந்தத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இதற்கு அடிப்படையாக இருந்தது 1986ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஃபுன்டாடெல் எஸ்டேட் அறிக்கை மற்றும் 1988/84இல் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனை முடிவுகள் ஆகியனவாகும். சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏற்படுகிற தடைகள் பாதிப்புகளை மட்டுப்படுத்தவும் அறிவுச் சொத்துரிமைக்கு போதுமான அளவு செயலூக்கமுள்ள காப்பு ஏற்படுத்தவும் மேலும் இதற்கான சட்டங்களை அமுலாக்கும் போது அவையே வர்த்தகத்திற்கு குந்தகம் விளைவிக்கும் காரணியாக ஆகிவிடாமல் பார்த்துக் கொள்வதும் இதனுடைய

நோக்கமாகும். ஒப்பந்தத்தின் பிரிவு 7இன் சேர்க்கையில் 'நோக்கங்கள்' என்ற தலைப்பின் கீழ் இந்த விவரங்கள் உள்ளன. அவைகளின் அடிப்படையில் பார்க்கும்போது அறிவுச் சொத்துரிமை காப்பு மற்றும் காப்பு ஏற்பாடுகள் அமுலாக்கம் ஆகியன தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளையும் தொழில் நுட்ப பரிமாற்றம் மற்றும் அவற்றை பரவலாக்க வேண்டும் என்ற நோக்கம் அதனுள் பொதிந்துள்ளதை அறிய முடிகிறது. தொழில் நுட்ப அறிவை உருவாக்கியவருக்கும் பயன்படுத்துபவர்களுக்கும் நலன் பயக்க வேண்டும். சமூக பொருளாதார நலனுக்கு உதவக்கூடியதாக திகழ வேண்டும். உரிமைகளையும் பொறுப்புகளையும் சரிசமமாக பாவிக்க வேண்டும். 'நெறிமுறைகள்' என்ற தலைப்பில் பகுதி 8-ல் பொது சுகாதாரம் மற்றும் பல பொது நலன் சார்ந்த காரணங்களுக்காக அறிவுச் சொத்துரிமை தவறாக பயன்படுத்துவதி ருந்து முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கவும் ஆன சரத்துகள் 1986 ஃபுண்டெல் எஸ்டேட் பிரேரணையில் இருந்தன. அவைகளைப் போன்றதேயான சரத்துகள் டிரிப்ஸ்'ஒப்பந்தத்தில் உள்ளன.

## தனிச் சிறப்புமிக்க காப்பு நடவடிக்கைகள்:

பதிப்புரிமைகளை பாதுகாப்பது சம்மந்தமாக பெர்னி சிறப்பு மாநாட்டில் வகுக்கப்பட்ட தக்க பிரிவுகள் உருகுவே சுற்று பேச்சுவார்த்தைகளின்போது அங்கீகரிப்பட்டன. அறிவுச் சொத்துரிமை சம்மந்தமான சமீபத்திய பாரிஸ் சட்டம் 1971இன் வழிகாட்டுத ன் கீழ் பெர்னி மாநாட்டில் முடிவுகள் எட்டப்பட்டிருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். இது குறித்து 9.1 இல் குறிப்பிட்டுள்ளது. அதனடிப்படையில் பெர்னி சிறப்பு மாநாட்டின் பாரிஸ் சட்டம் 1971இன் தனிச்சிறப்பு வாய்ந்த பகுதிகளை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்ள கடமைப்பட்டுள்ளன. பெர்னி சிறப்பு மாநாட்டின் (1971) முடிவுகளனது பகுதி 1 முதல் 21 முடிய உள் பகுதிகளிலும் இணைப்பு பகுதியிலும் இதற்கான விவரங்கள் உள்ளன. வேறு ஒரு படைப்பின் படைப்பு உரிமையை கோருவதன்மூலம் அல்லது ஆட்சேபனை தெரிவிப்பதன் மூலம் அந்த படைப்புப்பணியினை இழிவுபடுத்துவதும், அதன் மூலம் அதன் ஆசிரியரின் உயர்வுக்கும் நன்மதிப்பிற்கும் கேடு விளைவிக்கிற செயல்கள் கொள்கை பூர்வமான உரிமைகள் பயன்படுத்துவது குறித்தும் அதனடிப்படையில் இது குறித்து பெர்னி சிறப்பு மாநாட்டில் கலந்தாலோசித்து

எடுக்கப்பட்ட முடிவுகள் பிரிவு 6.1இல் உள்ளன. அதில் கொள்கை பூர்வமான (Morel) உரிமைகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுமில்லை பொறுப்பாக்கப்படவும் இல்லை. எனவே அந்த மாநாட்டு ஒப்பந்தத்தை அடியெற்றி 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தில் இதேபோன்ற சரத்துக்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. எனவே தான் 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் இவ்வுரிமை வழங்கவில்லை. பொறுப்பும் நிர்ணயிக்கப்படவில்லை. ஒரு படைப்பின் மூலப்பொருள் அதற்கான காப்பு கால அளவு நிர்ணயம் பேசி முடிவெடுக்கப்பட்ட உரிமைகள் அதற்கான அனுமதிக்கத்தக்க அளவு உரிமைகள் கையாள்வதற்கான முறைகள் பெர்னி சிறப்பு மாநாட்டின் சரத்துக்களில் உள்ளன. குறிப்பிட்ட கட்டுபாடுகளின் அடிப்படையில் வளரும் நாடுகள் மொழிபெயர்ப்பு செய்யவும் மறுவெளியீடு செய்யுமான சில கட்டுப்பாடுகள் குறித்த சரத்துகள் அம்மாநாட்டு முடிவுகளின் இணைப்பு பகுதியில் உள்ளன.

பெர்னி சிறப்பு மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட அடிப்படை நிர்ணயங்களில் மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தவைகள் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க

சில விசயங்கள் சேர்க்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டன. ஒப்பந்தத்தின் பகுதி 9.2 பதிப்புரிமை காப்பை வெளிப்படுத்தும் முறைகளுக்கு மட்டும் நீட்டித்துக் கொடுத்தது. யோசனைகள், செயல்முறைகள் அமுலாக்க முறைகள் அல்லது கணக்கியல் கருதுகோள்கள் போன்றவற்றிற்கு அதில் காப்பு வழங்கப்படவில்லை.

பகுதி 10.1இல் கணினி திட்ட வரைவுகள், அதன் தயாரிப்பு நிலையில் அல்லது இலக்கு சங்கேதமொழி ஆகியனவற்றிற்கு இலக்கிய படைப்புக்கு உள்ளது போல் காப்பு அளிக்கலாம். பெர்னி சிறப்பு மாநாடு (1971)இன் இது அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. பெர்னி சிறப்பு மாநாட்டில் இலக்கிய படைப்புகளுக்கு உரிமைக் காப்பு வழங்கப்படுவதற்கு எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளன. 'டிரிப்ஸ்'ஒப்பந்த சரத்துக்கள் கணினி திட்ட வரைவுகளுக்கு காப்பு வழங்கப்படவேண்டியதை உறுதிப்படுத்துகிறது. ஒரு வேலை அது இலக்கிற்கான சங்கேத மொழியாக இருந்தாலும் காப்பு பெறத்தக்கது என உறுதி செய்யப்பட்டுள்ளது. இலக்கியப் படைப்புகளுக்கு காப்பு வழங்குவதற்கான அளவீடுகள் கணினி திட்ட வரைவுகளுக்கும் பொருந்தத்தக்கதாக உள்ளது என்ற அடிப்படையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. 50 ஆண்டுகளுக்கான காப்பு என்ற பொது நெறி கணினி திட்டவரைவுகளுக்கு பொறுந்தும். புகைப்பட மற்றும் கலைப்படைப்புகளுக்கும் பொறுந்தும் சாத்தியமான குறைந்த பட்ச விதிமுறைகள் இதற்கு பொறுந்தாது.

## பகுதி 10.2:

பதிப்பு உரிமை பெறத்தாகாத தகவல்களை உள்ளடக்கிய தகவல் தொகுப்புகளுக்கும் பதிப்புரிமை வழங்கவேண்டும் என்று இந்த பகுதி தெரிவிக்கிறது. தகவல் தொகுப்புகளில் தகவ ன் அடிப்படையில் அவை தொகுப்பட்ட விதத்திலும் தகவல்கள் தேர்வு செய்யும் விதத்திலுமுள்ள அறிவுக்கூர்மை மிக்க படைப்புத் திறனுக்காக காப்பு பெறத்தக்கவை ஆகின்றன. தகவல் தொகுப்புகள் எந்த வடிவத்தி ருந்தாலும் காப்பு பெறத்தக்கவை. அதாவது அத்தகவல்கள் எந்திரங்களைக் கொண்டு படித்தரியத்தக்கதாகவோ அல்லது பிற வகையானதாகவோ இருந்தாலும் சரி. ஆனால் அத்தகு தகவல்கள் தங்களுக்குள் உட்பதிந்திருக்கும் விஷயங்களுக்கு காப்பு வழங்க வேண்டியதில்லை. அதே நேரத்தில் உட்பொதிந்து உள்ள விசயங்கள் தகவல்களின் ரகசியத்தை முன்அனுமானிக்க உதவாதவையாக இருக்க வேண்டும்.

## பகுதி-11 இல் கணினி திட்ட வரைவுகள்:

தயாரிப்புகள் அவற்றின் மூலம் அல்லது பிரதி வடிவில் பொது உபயோகத்திற்கு வர்த்தக ரீதியில் வாடகைக்கு விடுவதற்கும் தடைசெய்வதற்கும் படைப்பாளிக்கு உள்ள தொடர்பு உறுதிப்படுத்தப்படுகிறது. சினிமா தயாரிப்புகளைப் பொறுத்தவரை வாடகை உரிமை மீறல் என்பது அதனால் ஏற்படும் சேத அளவுகளின் பரிசோதனையின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒருவேளை வாடகைக்கு எடுத்தவர் ஆசிரியருக்கு இருந்த மறுபதிப்புக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் ஒப்பந்தத்திற்கு புறம்பாக பெரும் எண்ணிக்கையில் பிரதிகள் எடுக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உறுப்பு நாடுக்கு உள்ளது. கணினி திட்ட வரைவுகளைப் பொறுத்தவரை வாடகை நடவடிக்கைகளுக்கு அவற்றிற்கு முக்கியத்துவம் இல்லை என்பதால் இது விசயத்தில் அவற்றிற்கு உறுப்பு நாடுகள் பொறுப்பேர்க்க வேண்டியதில்லை.

பெர்னி சிறப்பு மாநாட்டின் முடிவுகளின் பகுதி 7(1)இல் உள்ள பொது சட்ட சரத்துக்களின் அடிப்படையில் காப்புக்கான கால நிர்ணயத்திற்கான விசயங்கள் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் படைப்பாளியின் ஆயுட்காலம் மற்றும் அவரது இறப்புக்கு பிந்தைய 50 ஆண்டுகள் முடிய காப்பு அளிக்க வழி செய்யப்பட்டுள்ளது. 5ல் குறிப்பிட்ட வகைகளுக்கு குறுகிய கால நிர்ணயிப்பு செய்வதை இப்பகுதியின் 7(1), 2, 3, 4 ஆகிய பத்திகளில் எடுத்துரைக்கின்றன. 'டிரிப்ஸ்'பகுதி 12இன் சரத்துகள் இதை உறுதிப்படுத்துகின்றன. புகைப்படங்கள், படைப்போவியங்கள் தவிர பிறவற்றிற்கான கால நிர்ணயிப்பு செய்வதற்கு முன்பு ஒரு நபரின் இயற்கையான வாழ்நாள் போக வெளியிடப்பட்ட நாளி ருந்து நாட்காட்டி வருடங்கள் 50க்கு குறையாமல் நிர்ணயிக்கப்பட வேண்டும் அல்லது புத்தகம் தயாரிக்கப்பட்டதி ருந்து நாட்காட்டி வருடங்கள் 50க்கு குறையாமல் காப்பு வழங்க வேண்டும்.

பகுதி - 13 :

குறிப்பிட்ட சில தனித்தன்மையானவைகளின் விசயத்தில் நிர்ணயிப்புகள் அல்லது விலக்குகள் அளிக்க கோருகிறது. ஆனால் இப்படிப்பட்ட தனித்தன்மை வாய்ந்தவைகள் அவைகளை சாதாரணமாக பயன்படுத்தும் முறையுடன் முரண்படக்கூடாது. மேலும் உரிமையாளர்களின் சட்டப்பூர்வநலன்களை முறையற்ற வகையில் பாதிப்பு ஏற்படுத்துவதில் இருந்து காப்பு அளிக்க உறுப்பு நாடுகளுக்கு உள்ள உரிமையை வ யுறுத்துகிறது. பெர்னி சிறப்பு மாநாட்டில் சரத்துகள் அனுமதிக்கப்பட்டு உள்ளவற்றிற்கு இணையானவை 'டிரிப்ஸ்'உடன்பாட்டில் இணைக்கப்பட்டிருந்தாலும் உரிமையாளரது சட்டபூர்வ நலன்கள் முன் அனுமானிப்பதை தடைசெய்வது குறித்து அதைவிட தெளிவாக விளங்குகிறது.

## சார்ப்பு உரிமைகள்:

பாடகர்கள், நடிகர்கள், ஒ ப்பதிவு, தயாரிப்பாளர்கள் மற்றும் ஒ பரப்பு அமைப்புகளின் உரிமைகளுக்கு பகுதி 14 காப்பு அளிக்கிறது. பாடகர்களின், இசையமைப்பாளர்களின் திறன்கள் அவர்களது ஒப்புதல் பெற்றே காப்பு செய்யப்படவேண்டியதை பகுதி 14 (1) வ யுறுத்துகிறது. உதாரணத்திற்கு இசையமைப்பாளரின் அனுமதியின்றி அவரது நேரடி நிகழ்ச்சியை பதிவு செய்யக்கூடாது. இவ்வகை நிர்ணயம் காதால் கேட்கப்படும் இசைக்கு மட்டுமே பொறுந்தும். ஒ , ஒளி படைப்புக்கு பொறுந்தாது. இசைப் படைப்புகள் போன்றவை அதை இசைத்தோ பாடியோ வெளிப்படுத்துபவர்கள் அமைதியின்றி அவர்களது உரிமையை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தி அவர்களுக்கு உரிமை அளிக்கிறது. தங்களது நேரடி இசை நிகழ்ச்சிகளை தங்கள் அனுமதியின்றி வான் ஒ பரப்பு வசதிகள் போன்றவற்றின் ஊடாக பொது ஒ பரப்பு செய்வதை கட்டுத்துவதற்கான உரிமையும் அளிக்கப்பட்டுள்ளது.

இசைப்பதிவு தயாரிப்பாளர்கள் மறு பதிப்புகள் வெளியிடுவதற்கான தனித்தன்மை வாய்ந்த உரிமைகளை பகுதி 14.2 வழங்குகிறது. இசைப்பதிவு தயாரிப்பாளர்களுக்கு தங்கள் தயாரிப்புகளை வாடகைக்காவது விடுவதற்கான தனித்தன்மை வாய்ந்த உரிமையை பகுதி 14.4 வழங்குகிறது. இசைப்பதிவு விசயத்தில் அதன் தயாரிப்பாளர்

போக அந்த இசைப்பதிவு சம்மந்தப்பட்ட மற்றொருவருக்கும் உரிமையளிக்கும் சரத்துக்கள் பல தேசங்களின் சட்டங்களில் உள்ளன. அதே போன்று இந்த ஒப்பந்தத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கணினி திட்ட வரைவுகள் சம்மந்தப்பட்ட வாடகை உரிமைகளைப்போன்றே இதிலும் நம்பிக்கையளிக்கும் அம்சங்கள் உள்ளன. ஆனால் சினிமா படைப்புகள் விசயத்தில் பாதிப்புகளை அளிவிட உள்ளதைப் போன்ற சோதனை முறையின் கீழ் இது வருவதில்லை. அதே நேரத்தில் அதற்கு முந்தைய பரம்பரை பரிவுகளின் படி கட்டுப்படுத்தப்படுகின்றன. அதன்படி உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தாங்கள் வாடகைக்கு பயன்படுத்தும் அடுத்த ஒருவரது படைப்புக்கு சமமான சன்மானங்கள் வழங்க வேண்டும். 1994 ஏப்ரல் 15 இல் மராக்கிஸ் நகரில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் இதற்கு வழி வகுக்கிறது. அப்படிப்பட்ட முறையை பின்பற்றுவதன் மூலம் மறு வெளியீட்டிற்க சிறப்பு உரிமை பெற்றுள்ளவர்களின் உரிமைகள் சிதைவுறக் கூடாது.

அதிகாரபூர்வமற்ற முறையில் பதிவு செய்யப்படுவதை தடுக்கும் உரிமையை ஒப்பந்தத்தின் பகுதி 14.3 ஒ பரப்பு அமைப்புகளுக்கு வழங்குகிறது. அப்பதிவுகளின் மூலம் மறு பதிவுகள் செய்வது, மறு ஒ பரப்பு செய்வது ஆகியவற்றை தடுக்கலாம். தங்களது தொலைக்காட்சி ஒ பரப்புகளை மறு ஒ பரப்பு செய்வதையும் தடுக்கிறது. பெர்னி காப்பு மாநாட்டின் முடிவுகளுக்கு ஏற்ப 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்திலும் இவ்வகை உரிமைகள் பதிப்புரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வுரிமைகளை மீண்டும் ஒ பரப்பு அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில்லை. இசை கலைஞர்களைப் பொறுத்தவரை குறைந்த பட்சம் 50 ஆண்டுகளுக்கும், இசைப்பதிவு உரிமையாளர்களுக்கு 50 ஆண்டுகளும் ஒ பரப்பு அமைப்புகளுக்கு 20 ஆண்டுகளுக்கும் உரிமை வழங்கப்படுகிறது. (பகுதி 14.5)

அதே நேரத்தில் இவர்களுக்கு இவ்வுரிமைகளை வழங்கும்போது ரோம் சிறப்பு மாநாட்டில் நிபந்தனைகள், கட்டுப்பாடுகள், விலக்குகள் மற்றும் ஒதுக்கீடுகளை பொறுத்துவதற்கு பகுதி 14.6 வகை செய்கிறது.

## வர்த்தக முத்திரைகள்:

ஒரு பொருளை அல்லது சேவையை மற்றொருவரதி ந்து வேறுபடுத்திக் காட்டுகிற அடையாளம் அல்லது அடையாளங்களின் தொகுப்பு வர்த்தக முத்திரையாக பதிவு பெற தகுதி படைத்தது. பகுதி 15 இல் இதற்கான அடிப்படை சட்ட வசதிகள் உள்ளன. பார்வைக்கு பிரித்தரியக்கூடியதாக இது இருக்க வேண்டும். தனிப் பெயர்கள், எழுத்துக்கள், எண்கள், உருவ அடையாளங்கள், வண்ண அடையாளங்கள் மற்றும் அது போன்ற பல தனி அடையாளங்களை இப்படிப்பட்ட அடையாளங்கள் உள்ளடக்கியிருந்தாலும் அதை வர்த்தக முத்திரை காப்புரிமைக்கு பதிவு பெறத்தக்கவையே. சம்மந்தப்பட்ட பொருள் அல்லது வேவையை மற்றவற்றி ருந்து பிரித்துக்காட்டக் கூடிய வகையில் அடையாளங்கள் காட்டப்படாதபோது அதன் தன்மையை உபயோகத்தில் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று பதிவின் போது உறுப்பு நாடுகள் போரலாம். பார்வைக்கு புலனாகாத அடையாளங்களை ( உதாரணமாக ஒ அல்லது நுகர்மணம்) பதிவு செய்ய அனுமதிப்பதா வேண்டாமென்பதை உறுப்பு நாடுகள் முடிவு செய்து கொள்ளலாம்.

உபயோகத்தினடிப்படையில் நாடுகள் பதிவு செய்கின்றன. அதே நேரத்தில் வர்த்தக முத்திரையின் உண்மையான உபயோகம் ஒரு நிபந்தனையாக பதிவுக்கான விண்ணப்பத்தின்போது இருக்க வேண்டியதில்லை. விண்ணப்பித்து மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர் அதனது உபயோகத்தின் நோக்கம் நிறைவேறாத போது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான களமாக மட்டுமே இது உபயோகப்படுகிறது. (பகுதி 14.3),

சேவை முத்திரைகளும் இதே போல பாதுகாக்கப்பட வேண்டும். ( 2ம் : 15.1/ 16.2 மற்றும் 62.3)

வர்த்தக முத்திரை உரிமைபெற்றுள்ளவர் தமது முத்திரையை அனுமதி பெறாமல் வேறொருவர் தமது பொருளைப்போன்றே தயாரிக்கிற அல்லது தமது சேவையைப் போன்றே சேவையில் ஈடுபட்டுள்ளபோது பயன்படுத்தி குழப்பம் விளைவிப்பதை தடுக்கும் உரிமை பெற்றுள்ளார். குழப்பத்திற்கு இடமளிக்கும் விதத்தில் ஒன்றை ஒத்த பிரித்தரியத்தக்க குறியீட்டை பிரித்தறியத்தக்க பொருள்கள் அல்லது சேவைக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதை உத்தேசமாக வருவது அறியப்பட்டிருக்க வேண்டும் (பகுதி-16.1) முன்னர் நன்கறியப்பட்ட முத்திரைகள் விசயத்தில் 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் குறிப்பிடத்தக்க சரத்துக்களை கொண்டுள்ளது. ( பாரிஸ் சிறப்பு மாநாட்டின் முடிவுகளின் பகுதி 6 க்ஷண்ள் இல் இதற்கான கூடுதல் சரத்துகள் உள்ளன. அது 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் குறிப்புகளாக சேர்க்கப்பட்டுள்ளன. இச்சரத்துகள் உறுப்பு நாடுகள் சம்மந்தப்பட்ட பதிவுகளை ரத்து செய்யவும் தள்ளுபடி செய்யவும் அனுமதியளிக்கின்றன. சேவைத் துறைக்கும் இப்பதியின் சரத்துகள் பொறுந்தும். மேலும் சம்மந்தப்பட்ட துறையில் பொதுமக்களுக்கு கிடைத்துள்ள அனுபவம் என்பது அனுமதிப்பட்ட வர்த்தக முத்திரை அடையாளத்தால் மட்டுமின்றி அதன் வளர்ச்சியையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் புகழ் பெற்ற வர்த்தக முத்திரைகள் அவைகள் எந்த பொருள் அல்லது சேவையை கணக்கிலெடுத்துக் கொண்டு பதிவு செய்யப்பட்டதோ அவைகள் அல்லாத பிற பொருள்கள் சேவைகளுக்கும் பதிவு செய்யத்தக்கதாகும். ஆனால் ஏற்கனவே பதிவு செய்துள்ளவற்றிற்கு ஒத்த வகைகளுக்கு நீட்டிக்கக் கூடாது. இப்படி நீட்டிக்கப்படும்போது சம்மந்தப்பட்ட பொருளுக்கும் சேவைக்கும் முத்திரையின் உரிமையாளருக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது. அவ்வகை உபயோகத்தின் போது உரிமையாளர்களின் நலன்கள் பாதிக்கப்படுகின்றன. ( பகுதி 16.2 மற்றும் 3 ).

வர்த்தக முத்திரை பதிவால் உறுதி செய்யப்பட்ட உரிமைகள் விசயத்தில் வரையறுக்கப்பட்ட விலக்குகளை உறுப்பு நாடுகள் அளிக்கலாம். வர்த்தக முத்திரையின் உரிமையாளர் மற்றும் மூன்றாம் நபர்களின் சட்டப்பூர்வ விருப்பங்களை கணக்கிலெடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட விதிவிலக்குகளை அளிக்கலாம். வர்ணனை வார்த்தைகளின் உபயோகத்தையும் இதனடிப்படையில் கணக்கிலெடுத்துக் கொள்ளலாம்.

வர்த்தக முத்திரைக்கான துவக்கப்பதிவும் ஒவ்வொரு மறுபதிவும் 7 ஆண்டுகளுக்கு குறையாமல் முத்திரை உரிமை அளிக்கிறது. நிர்ணயிக்கப்படாத கால அளவிற்கும் வர்த்தக முத்திரை காப்புரிமை மறுபதிவு செய்யலாம். ( பகுதி - 18 ),

உபயோகிக்கப்படாமல் இருக்கிற காரணத்திற்காக ஒரு முத்திரை காப்புரிமையை ரத்து செய்வதற்கு இடையிடையே உபயோகிக்கப்படாத மூன்று ஆண்டுகள் கழிந்து இருக்க வேண்டும் அல்லது அப்படிப்பட்ட உபயோகத்தால் ஏற்படுகிற சிரமங்கள் குறித்து முத்திரை உரிமையாளர் தரும் தகவல்களின் செல்லுபடியாக்கத்தக்க காரணங்களின் அடிப்படையில் ரத்து செய்யலாம். இறக்குமதி கட்டுப்பாடுகள் அல்லது பிற அரசுக் காட்டுப்பாடுகள் காரணமாக தன்னிச்சையாக உருவாகும் சூழ்நிலமைகளின் காரணமாக முத்திரை உரிமையாளரின் விருப்பத்தின்படி தெரிவிக்கப்படும் காரணங்களை செல்லுபடியாக்கத் தக்க காரணங்களாக ஏற்றுக் கொள்ளலாம். ஒரு வர்த்தக முத்திரை உரிமையாளரின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது அதை மற்றொருவர் உபயோகிக்கும் போது அதை வர்த்தக முத்திரை பதிவு பராமரிப்பிற்காக உபயோகிக்கப்படுவதாக அங்கீகரிக்கப்பட வேண்டும். ( பகுதி - 19 ),

வர்த்தக முத்திரையை மற்றொருவருக்கு வர்த்தகத்திற்கு தரும் போது வேறு ஒரு வர்த்தக முத்திரையை சேர்த்து உபயோகித்தல், தனித்தன்மை வடிவில் உபயோகித்தல், பொருள் அல்லது வேலையை பிரித்தரிக்கதக்க

விதத்தில் இல்லாமல் அதற்கு கேடு விளைவிக்கும் விதத்தில் உபயோகப்படுத்துதல் ஆகிய காரணங்களுக்காக ஆராயாமல் தடை செய்ய வேண்டியதில்லை. ( பகுதி - 20 )

## புவியியல் குறி அடையாளங்கள்:

ஒப்பந்த நோக்கத்திற்கான புவியியல் குறிஅடையாளங்கள் விவரித்து அறியத்தக்கன ஆகும். குறிப்பிடத்தக்க இயல்புகளான தரம், மதிப்பு, பிற நற்குணங்கள் ஆகியன புவியியல் மூலஇடத்தின் இயல்பு குணங்களோடு சேர்த்திரிய அவசியமானவை. (பகுதி 22.1). எனவே ஒரு பொருளின் தரம், நன்மதிப்பு, மற்றுமுள்ள நற்குணங்கள் புவியியல் குறியடையாளத்திற்கு தகுதி வாய்ந்தவை. ஏனெனில் அந்த குணங்கள் புவியில் மூல இடத்தின் பொருளின் இயல்பான குணங்களை உள்ளடக்கியிருக்கின்றன.

புவியில் குறியாடையாளங்கள் விசயத்தில் அவ்வடையாளங்களை பயன்படுத்த விருப்பமுள்ளவர்கள் சட்டபூர்வ காப்பு பெறுவது அவசியம். ஏனெனில் புவியியல் மூல இடத்தின் பொருளைப் போன்றது என்ற பெயரில் பொதுமக்களை தவறாக வழிகாட்டுவதை தடுக்க புவியியல் அடையாளங்களை அனுமதியில்லாமல் பயன்படுத்துவதை தடைசெய்ய வேண்டும். இவ்வகை உபயோகங்கள் காரணமாக பாரிஸ் சிறப்பு மாநாட்டில் முறையற்ற போட்டி குறித்த சட்டம் ( பகுதி 10 ஆண்ள் ) உருவாக்கப்பட்டது. ( 'டிரிப்ஸ்'22.2).

புவியில் குறியடையாளத்தை வர்த்தக முத்திரையாக பதிவு செய்து உபயோகிக்கும் போது பொது மக்களை தவறாக வழிகாட்டுமெனில் விருப்பமுள்ள ஒருவர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலோ, சட்டம் அனுமதிக்கும் பட்சத்திலோ, பதிவை நிராகரிக்க வேண்டும். ( பகுதி 22.3)

புவியில் இடப்பெயரால் அடையாளங்காட்டப்படும் ஒய்ன் அவ்விடத்தில் தயாரிக்கப்படாத பட்சத்தில் அதற்கு புவியில் குறியாடையாள பதிவு தரப்படுவதை விருப்பப்பட்டவர்கள் தடுப்பதற்கான உரிமையை பகுதி 23 வழங்குகிறது. இப்படி இடப்பெயரை பயன்படுத்துவதால் பொதுமக்கள் தவறாக வழி நடத்தித் செல்லாதிருக்கையில், நேர்மையற்ற போட்டி இல்லதிருந்தாலும், அந்த நபரின் உண்மையான உற்பத்தி இடம் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அல்லது புவியியல் குறி அடையாளமானது ' போன்றது ', 'அப்படிப்பட்டது', ' அடியெற்றியது', ' வகையானது'

என்று பல வகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மேற்கூறிய உரிமையினப்படையில் இவ்வகை உபயோகத்தின் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

பகுதி 24இல் புவியியல் குறியாடையாளங்கள் காப்பு சம்மந்தமாக பல்வேறு விதிவிலக்குகளை கொண்டிருக்கிறது. ஒய்ன் மற்றும் சாராயம் போன்றவை விசயத்தில் புவியியல் குறியடையாளங்கள் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கூடுதல் காப்பு நடவடிக்கைகளை இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகள் உறுதிப்படுத்துகின்றன.

உதாரணத்திற்கு ஒரு உறுப்பு நாடு ஒன்றில் புவியில் குறி அடையாளங்களுக்கு காப்பு அளிக்க வேண்டிய பொறுப்பேர்க்க வேண்டியில்லாமல் இருக்கலாம். அதனால் அங்கே பிரச்சனைக்குரிய தயாரிப்பு மரபுரீதியாகவே இடப்பெயரைக் கொண்டிருக்கலாம். ( பாரா - 6 ) இந்த சரத்துகளை அமுலாக்கும் நடவடிக்கைகள் நன்னம்பிக்கையை பெற்றுள்ள சரக்கின் வர்த்தக முத்திரை உரிமைக்கான காலக்கெடுவை பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். (பாரா - 5) குறிப்பிட்ட சூழ ல் ஒய்ன் மற்றும் சாராயத்திற்கு புவியில் குறியடையாளங்கள் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கும் போது அதற்கு முன்னர் இருந்த வடிவிலும், அளவிலும் இருப்பதை ஏற்றுக் கொள்ளலாம். (பாரா - 4). இத்தகு விதிவிலக்குகளை தாங்களாகவே கொண்டிருக்கும் உறுப்பு நாடுகள் தங்களது தனிப்பட்ட புவியில் குறியடையாளங்களை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்த முன்வருவது அவசியம் (பாரா-1). அதே நேரத்தில் இவ்விதிவிலக்குகளானவை 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் அமுலாக்க காலத்தில் கூடாது. (பாரா -3). புவியில் குறியடையாள காப்பிற்கான சரத்துகளின் அமுலாக்கம் குறித்து பரிசீலனை செய்யவேண்டிய பொறுப்பில் 'டிரிப்ஸ்'குழு உள்ளது. (பாரா -2).

## தொழில்துறை வரைவடிவங்கள்:

தனி நபர்கள் உருவாக்கியுள்ள புதிய அல்லது மூல தொழில்துறை வரைவடிவங்களுக்கு உறுப்பு நாடுகள் காப்பு வழங்கவேண்டியதை 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் பகுதி 25.1 நிர்ணயிக்கிறது. புதிய அல்லது மூலவரைபடத்திற்கு காப்பு வழங்குகிற அதே நேரத்தில் ஏற்கனவே உள்ள வரைவடிவத்திற்கோ அல்லது அதன் பலனாக உருவாகிற பகுதியிக்கோ பெரிய அளவிற்க மாறுபடாவிட்டாலும் காப்பு வழங்குகின்றன. ஆனால் தொழில் நுட்ப ரீதியிலும் செயல்முறை அடிப்படையிலும் அந்த வரைவடிவம் கட்டாயமாக ஆதிக்கம் செலுத்தக் கூடியனவாக இருந்தால் ஒப்புரிமை நீட்டிக்கப்பட மாட்டாது.

பகுதி 25.2 ஆனது குறைந்த ஆயுள் உடையதும் முழுமையான எண்ணிக்கையில் உள்ளதுமான ஜவுளித்துறை வரை வடிவங்களை கணக்கிலெடுக்க தனிச் சரத்துகளை கொண்டுள்ளது. அவ்வகை வரைவடிவங்களுக்கு காப்பு வழங்குவதற்கு குறிப்பாக அதன் மதிப்பு, சோதனைக்கா அல்லது வெளியீட்டிற்கா என்று பார்க்க வேண்டியதில்லை. அப்படிப் பார்ப்பதன் மூலம் அவற்றிற்கு கிடைக்க வேண்டிய காப்பிற்கான வாய்ப்பை

சேதப்படுத்திவிடக்கூடாது. தொழில்துறை வரைவடிவ சட்டம் அல்லது பதிப்புரிமைச் சட்ட விதிகளைக் கொண்டு உறுப்பு நாடுகள் இதற்கான காப்பு உரிமைகளை வழங்கலாம்.

பகுதி 26.1இல் வர்த்தக நோக்கிலான சட்டங்களை கையில் எடுத்துக் கொண்டு மூன்றாம் நபர் ஒருவர் தொழில்துறை வரைவடிவ உரிமையாளரின் அனுமதியின்றி அவரது வரைவடிவத்தைப் பயன்படுத்தி பொருள்களை தயாரிக்கவும் விற்கவும் அல்லது சம்மந்தப்பட்ட வரைவடிவத்திற்கு சம்மந்தப்பட்ட பகுதிகளை உள்ளடக்கிய அல்லது அதைக் கொண்டு வடிக்கப்பட்ட பொருள்களை தடுக்கவும் வரைபட உரிமையாளருக்கு உறுப்பு நாடுகள் அனுமதியாக்க வேண்டும்.

பகுதி: 26.2 ஆனது உறுப்பு நாடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட விதிவிலக்கான உரிமைகள், காப்பு பெற்றுள்ள தொழில்துறை வரைவடிவ உரிமையாளரின் சட்ட பூர்வ நலன்களை தேவையற்ற விதத்தில் முன்கூட்டியே பாதிக்கக் கூடியதாக ஆக்கவோ அந்த வரைவடிவத்தை சாதாரணமாக பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உரிமைக்கு மாறாக கூடுதலாக பயன்படுத்தி கொண்டிருப்பதையோ அனுமதிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. அவ்வரைவடிவத்தை பயன்படுத்தும் மூன்றாம் நபரின் சட்டபூர்வ விருப்பங்களை மட்டுமே கணக்கில் கொண்டு உறுப்பு நாடுகள் செயல்படக் கூடாது.

காப்பு பெறுவதற்கான கால அளவு 10 வருடங்களுக்காவது இருக்க வேண்டும் ( பகுதி 26.3) என்ற வார்தையானது குறித்த காலத்தை பிரித்து உணர்த்துவதாக, உதாரணத்திற்கு இரண்டு ஐந்து ஆண்டுகள் என்று அர்த்தப்படுத்தவும் அனுமதிக்க வேண்டும்.

## காப்புரிமைகள்:

எந்த ஒரு கண்டுபிடிப்புக்கும் அது பொருள்களாக இருந்தாலும் சரி தயாரிப்பு முறையாக இருந்தாலும் சரி அதற்கு உறுப்பு நாட்டு அரசாங்கங்கள் காப்புரிமை வழங்க வேண்டும் என்று 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கேட்டுக் கொள்கிறது. தொழில் நுட்ப துறையின் எந்த ஒரு பிரிவைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். அவற்றிற்கு காப்புரிமை வழங்கும்போது பாரபட்சம் காட்டக் கூடாது. அந்த கண்டுபிடிப்புகள் அவற்றினுடைய புதுமை, அவற்றில் பொதிந்துள்ள கண்டுபிடிப்புத்தன்மை மற்றும் அவற்றின் தொழிற்துறைக்குப் பொறுந்திப் போகும் தன்மை ஆகியனவற்றை அறிவதற்கான சாதாரண பரிசோதனைகளுக்கு உட்படுபவையாக இருந்தால் போதும் அவற்றிற்கு காப்புரிமை வழங்க வேண்டும்.

காப்புரிமை பெருமை பெறுவதற்கான அடிப்படைச் சட்டத்தில் அனுமதிக்கத்தக்க விதிவிலக்குகள் மூன்று உள்ளன. பொது ஆணைக்கோ ஒழுக்கமுறைக்கோ மாறாக இருப்பவற்றிற்கு பொறுந்தக் கூடியது முதலாவது ஆகும். மனிதர்கள் அல்லது விலங்குகளின் உயிரிக்கோ உடல் நலத்திற்கோ சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்கக் கூடியதாக இருந்தாலோ அவற்றிற்கு காப்புரிமை வழங்கப்படாம க்க உறுப்பு நாடுகளுக்கு உள்ள உரிமை விதிவிலக்கானது நிபந்தனைக்குட்பட்டது. சம்மந்தப்பட்ட

கண்டுபிடிப்பு வர்த்தக ரீதியாக பயன்படுத்துபவரையும் தடுக்கத்தக்கது. பொது ஆணை மற்றும் ஒழுக்க நெறியை பராமரிக்க இது மிகவும் அவசியம். மருத்துவ துறையில் உள்ள மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு நோயறியும் முறை, சிகிச்சை முறை மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் ஆகியவற்றிற்கு காப்புரிமை வழங்க வேண்டும் என்பதி ருந்து உறுப்பு நாடுகளுளக்கு விலக்களிக்கலாம் என்பது இரண்டாவதாகும்.

மூன்றாவதாக நுண்உட யல், உயிரியல் சாராத மற்றும் நுண் உயிரியல் நடைமுறைகள்

அல்லாத விலங்குகள் அல்லது பயிர்கள் உருவாக்குவதற்கு அவசியமான உயிரியல் நடைமுறைகளுக்கு உட்படாத பயிர்கள் மற்றும் விலங்குகளுக்கு காப்புரிமை வழங்க வேண்டியதி ருந்து உறுப்பு நாடுகளுக்கு விலக்களிக்கலாம். பயிர் வகைகள் காப்புரிமையி ருந்து விலளக்களிக்கப்பட்டுள்ள எந்த ஒரு நாடும் செயலாக்கமிக்க.

நன்ண் எங்ய்ங்ழ்ண்ள்ள் முறையின் கீழ் கட்டாயம் காப்பு வழங்கியாக வேண்டும். அதே நேரத்தில் இதற்கான சரத்தானது ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்து முழுமையாக பரிசீலனைக்கு உட்படுத்தக் தக்கதாகும் (பகுதி 27.3(க்ஷ))

தயாரிப்பதற்கு, உபயோகிப்பதற்கு, விற்பனைக்கு தருவதற்கு, விற்பனைக்கு மற்றும் இந்த நோக்கங்களுக்காக இறக்குமதி செய்வதற்கு என இவைகளில் ஒன்றிற்கு பொருள் காப்புரிமை சிறப்பு உரிமையாக உறுதிப்படுத்த வேண்டும்.

தயாரிப்பு காப்புரிமை பாதுகாப்பனது பொருள் தயாரிப்பு நிலையில் கூடுதல் உபயோகிப்பு இல்லாமல் காப்பு செய்வதற்கு மட்டுமின்றி இந்த தயாரிப்பு நிலையில் நேரடியாக பெறப்பட்ட கூடுதல் பொருள்களுக்கும் பொறுந்தும். காப்புரிமையின் உரிமையாளர் பங்கும் (ஹள்ள்ண்ஞ்ய்) பெறத்தக்கவர் அல்லது பங்கு மாற்றம் செய்வதன்

மூலம் உரிமைக்கு வரவும்தக்கவர். காப்புரிமை மற்றும் முடிவு செய்யப்பட்ட உரிமையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கும் இது பொறுந்தும். (பகுதி 28)

காப்புரிமை மூலம் அளிக்கப்படும் சிறப்புரிமை விசயத்தில் உறுப்பு நாடுகளுக்கு வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் அந்த உரிமையானது அந்த காப்புரிமையை சாதாரணமாக பயன்படுத்துவதுடன் தேவையில்லாமல் முரண்படக்கூடாது. மேலும் காப்புரிமை பெற்றுள்ளவரின் சட்ட பூர்வ உரிமைகளையும் தேவையில்லாமல் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் (பகுதி - 30)

விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்ட நாள் முதல் காலாவதிஆகத்தக்க காலமான 20 ஆண்டுகளுக்கு முன்னால் காப்பு கிடைப்பது முடிவுக்கு வந்து விடக் கூடாது. (பகுதி-33)

காப்புரிமை கோரும் விண்ணப்பதாரர் கண்டுபிடிப்பு சம்மந்தமாக போதுமான விவரங்களை தர வேண்டுமென உறுப்பு நாடுகள் கோரலாம். சம்மந்தப்பட்ட கண்டுபிடிப்பு விவரங்களை அது சம்மந்தப்பட்ட துறை நிபுணர் ஒருவர் அதை கண்டுபிடிப்பவருக்கு மிகவும் தெரிந்துள்ள வடிவத்தில் வெளிக்கொண்டு வருமாறு விண்ணப்பதாரரிடம் விண்ணப்பிக்கும் நாளிலேயே கோரலாம் அல்லது சலுகை கோரப்படும்போது விண்ணப்பித்தில் கோரப்பட்டுள்ள சலுகை தேதியில் மேற்குறிப்பிட்ட வகையில் வெளிக்கொணரக் கோரலாம்.

காப்புரிமை பெற்றுள்ள ஒன்றின் உள்ளடக்கம் ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கான செயல்முறையைக் கொண்டுள்ளது. அதே போன்ற பொருளை தயாரிக்கு பிரதிவாதி தன்னுடைய பொருளின் உற்பத்தி முறைக்கும் ஏற்கனவே பதிவு பெற்றுள்ள உற்பத்தி முறைக்கும் உள்ள வேறுபாட்டை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் முன்னே நிருபித்துக்காட்ட நீதித்துறை அதிகாரிக்க கோரலாம். காப்பு பெற்றுள்ள தயாரிப்பு முறையை ஒத்த முறையை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உணரும் போது மேற்கண்ட நடவடிக்கையை கோரலாம்.

காப்புரிமையாளரின் அனுமதி பெறாமலேயே சம்மந்தப்பட்ட விசயத்தை அரசாங்கம் கட்டாய உரிமையின்பேரில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் உரிமையாளரின் சட்டபூர்வ விருப்பங்கள் காப்பற்றப்படுவதும் நிபந்தனையின் அடிப்படையில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதற்கான நிபந்தனைகள் பகுதி 31இல் உள்ளன. நியாயமான கால அளவிற்கு, நியாயமான நிபந்தனைகள், விதிமுறைகளுக்கு உட்பட்டு அப்படிப்பட்ட உரிமையை தானாக பெறமுடியாத சூழ்நிலை ஏற்படும்போது பொது விதி என்பதன் அடிப்படையில் அப்படிப்பட்ட உரிமையை வழங்கவேண்டியதும் உறுப்புநாடுகளின் பொறுப்பாகும்.

அப்படி உரிமையை கையிலெடுக்கும் போது அந்தந்த உரிமத்திற்கான பொருளாதார மதிப்பை கணக்கிலெடுத்துக் கொண்டு அவைகளுக்கு போதுமான ஊதியம் கொடுக்க வேண்டும். இம்முடிவானது நீதித்துறை அல்லது தக்க தனி உயர் அதிகாரிகளைக் கொண்டு பரிசீலனை செய்யத்தக்கதாகும். இந்த நிபந்தனைகளின் உறுதித்தன்மை தளர்த்தத்தக்கது. சட்டபூர்வமாக எதிர்போட்டி நடவடிக்கைகளை உருவாக்குவது என்றவகையில் ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சிக்க இவ்வுரிமையை பயன்படுத்தும்போது இவ்வகை தளர்வு தரப்படுகிறது. இந்த நிபந்தனைகள் இவைகள் சம்மந்த பகுதி 27.1இல் கூறப்பட்டு உள்ளவற்றுடன் சேர்ந்து அறியத்தக்கது. தொழில் நுட்பத்துறை சம்மந்தப்பட்ட காப்புரிமைகள் பாரபட்சமற்ற முறையில் அனுபவிக்கத்தக்கவை என்பதற்காக மேற்கண்ட நடைமுறைகள் பின்பற்றத்தக்கவை.

## ஒறுங்கிணைந்த மின் சுற்றுக்களின் திட்ட வரைபடங்கள்:

உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் உதவியுடன் 1989ஆம் ஆண்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உறுவாக்கப்பட்ட ஒறுங்கிணைந்த மின்சுற்று வரைபடங்களுக்கான அறிவுச் சொத்துரிமைகள் ஒப்பந்த சரத்துகளுக்கு ஏற்ப ஒறுங்கிணைந்த மின் சுற்றுக்களின் திட்ட வரைபடங்களுக்கு உறுப்பு நாடுகள் காப்பு வழங்க வேண்டியது குறித்து 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி

35இல் குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த சரத்துக்களானவை 'ஒறுங்கிணைந்த மின் சுற்றுகள் ' மற்றும் ' திட்ட வரைபடங்கள் (பர்ல்ர்ஞ்ழ்ஹல்ட்ஷ்)' அவற்றிற்கு காப்புக்கு வேண்டியவைகள், தனி உரிமைகள், வரையறைகள் அதேபோல அவற்றை பயன்படுத்துவதற்கான அளவுகள் பதிவு மற்றும் செய்முறை ஆகியவற்றை உள்ளடக்கியவையாகும். ஒறுங்கிணைந்த மின் சுற்று ஒரு பொருளாகும். அதன் முழு வடிவத்தில் செயல்படுத்தக் கூடியதாக இருக்கலாம். ஏனையவை சிலவோ அனைத்துமோ ஒறுங்கிணைந்த மின்சுற்றின் தொடர்புகளாகவோ, உள்படிமானங்களாகவோ, மேல் படிமானங்களாகவோ இருந்து மின் அணுக்கள் ஒன்றி ருந்து மற்றவற்றிற்கு பயணம் செய்வதற்கான வழியாக மட்டுமே இருக்கலாம். திட்டவரைபடம் என்பது முப்பரிமான பண்பு கொண்டதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

அப்படி சொல்லும் போது அதன் ஒரு பகுதி செயல்படக்கூடியதாகவும் ஏனைய சிலரோ அனைத்துமோ ஒறுங்கிணைந்த மின்சுற்றின் இணைப்புகளாகவோ இருக்கலாம் அல்லது ஒறுங்கிணைந்த மின்சுற்றிற்காக அப்படி

ஒரு முப்பரிமாண வடிவம் உருவாக்கப்படுவது என்பது அந்த ஒறுங்கிணைந்த மின்சுற்றுப் பலகைகளை தயாரிப்பதற்காகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட ஒறுங்கிணைந்த மின்சுற்று வரைவடிவமென்பது அதன் படைப்பாளியினுடைய சொந்த அறிவுத்திறனை வெளிப்பட்டதாகவும், மூலத்தன்மையுடையதாகவும் அப்படைப்பு வெளிவருகிற நேரத்தில் உள்ள பிற படைப்பாளிகளினுடைய திட்ட வரைவுகள் மற்றும் உற்பத்தியாளர்களுடைய ஒருங்கிணைந்த மின்சுற்று பலகைகள் ஆகியவற்றி ருந்தும் வேறுபடுத்திப்பார்க்கத்தக்கதாக இருக்க வேண்டும். மறு உற்பத்திக்கான உரிமை, இறக்குமதிக்கான உரிமை, விற்பனை அல்லது விற்பனைக்கு வழங்குவதற்கான உரிமை ஆகியன சிறப்பு உரிமைகளின் கீழ் வருகின்றன. இவ்வுரிமைகளுக்கு குறிப்பிட்ட வரையறுப்புகளும் அளிக்கப்பட்டு உள்ளன.

ஒறுங்கிணைந்த மின்சுற்றுக்கான அறிவுச் சொத்துரிமை ஒப்பந்த சரத்துகளின்படி 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் வெளிபடுத்தியுள்ள நான்கு விசயங்களின் அடிப்படையில் ஒறுங்கிணைந்த மின்சுற்று திட்ட வரைபடங்களுக்கு உறுப்பு நாடுகளிடம் காப்பு கோரலாம். அதாவது காப்புக்கால கால அளவு (எட்டு ஆண்டுகளுக்கு பதிலாக பத்து ஆண்டு பகுதி 38) ஒறுங்கிணைந்த மின்சுற்றுப் பலகையில் அடங்கியுள்ள பிற பாகங்கள் உரிமை மிறிப்பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அப்பலகைக்கு காப்பு ( பாகம் 36இன் கடைசி இணைப்பு பிரிவு ) மற்றும் அறியாமல் உரிமை மீறியதாக கருதுவதற்கான ஏற்பாடுகள் ( பாகம் 37.1) ஆகியன மேற்கூறிய நான்கு விசயங்களில் அடங்கியுள்ளன. ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளுக்கான அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தம் கட்டாய உரிமை சரத்து (பகுதி 37.2)இன் படி கட்டாய அல்லது தானாக முன்வந்தது உரிமையளிக்காவிடினும் திட்டவரைபடம் அல்லது அதன் உபயோகத்தின் உரிமத்தை உண்மையான உரிமையாளின் அனுமதியின்றி அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி 31இன் நிபந்தனைகள் பொருந்தும்.

## வெளியிடப்படாத விவரங்களுக்கான பாதுகாப்பு:

வர்த்தக ரகசியம் அல்லது செய்முறை அறிவு போன்ற வெளியிடப்படாத விவரங்களுக்கு காப்பு அளிப்பதன் மூலம் பலன் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கோருகிறது. ஒரு விவரம் ரகசியமானது என்று கருதப்படும் போது அதற்கு காப்பு கட்டாயம் அளிக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் பகுதி 39.2 கோருகிறது. அவ்விவரங்களுக்கு வர்த்தக மதிப்பு உள்ளது. எனவே அது ரகசியமானது மேலும் அது ரகசியமாகவே இருக்க தேவையான ஏற்பாடுகளை செய்து தருமாறு கோர உரிமை படைத்துள்ளது. வெளிப்படாத விவரங்களை சொத்து என்ற வடிவத்தில் கையாள வேண்டும் என்று ஒப்பந்தம் கோரவில்லை. ஆனால் அப்படிப்பட்ட விவரங்களை சட்டபூர்வமாக கையாளுவதற்கான உரிமையுள்ளவர் அவ்விவரங்கள் வெளியாகாமல் பார்த்துக் கொள்ளத்தக்கவர். நேர்மையான வியாபார நெறிமுறைகளுக்கு உட்பட்டு அவரது (ஆண்/பெண்) ஒப்புதல் பெற்ற பின்னரே அடுத்தவர் அதைப் பெறவோ பயன்படுத்தவோ முடியும். ' நேர்மையான வியாபார நெறிமுறைகளுக்கு மாறான நடவடிக்கைகள்' என்பன கிழ்கண்டவாறு உள்ளன. ஒப்பந்த மீறல், நம்பிக்கையை தகர்த்தல், மற்றும் ஒப்பந்த மீறலுக்கு தூண்டுவது அதே போல வெளியிடப்படாத ரகசியங்கள் பற்றி அறிந்திருக்கிற மூன்றாவர் அவ்வவிரங்களை கைப்பற்றுவது, அல்லது மொத்தத்தில் கவனக்குறைவினால் அப்படி அறிந்து கொள்வது போன்ற கைப்பற்றும் நடிவடிக்கைகள் ஆகியன நெறிமுறைகளை மீறிய செயல்களாகும்.

புதிய ரசாயண கண்டுபிடிப்புகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிற மருந்துகள் அல்லது விவசாயத்துறைக்கான ரசாயண தயாரிப்புகளுக்கு விற்பனைக்கு அனுமதி வழங்குவதற்கு அவைகள் சம்மந்தப்பட்ட வெளியிடப்படாத பரிசோதனை விவரங்கள் மற்றும் பிற விவரங்களை அரசாங்கத்திடம் சமர்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்த சரத்துகள் ஒப்பந்தத்தில் உள்ளன. அப்படிப்பட்ட நேரத்தில் சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டு அரசாங்கங்கள் சம்மந்தப்பட்ட ரகசியங்கள் வியாபார நெறிமுறைகளுக்கு புறம்பாக வெளியாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பொது மக்கள் நலன் காக்கப்ட வேண்டிய அவசியமான நேரங்கள் தவிர்த்த மற்ற நேரங்களில் அப்படிப்பட்ட விவரங்கள் வெளியாகாமல் உறுப்பு நாடுகள் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானது அல்லது அப்படியில்லாவிட்டால் அவ்விவரங்கள் வியாபார நெறிமுறைகளுக்கு புறம்மபாக உபயோகிக்ப்படுவதி ருந்து தக்க பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

## உரிமைக் குத்தகைகளில் எதிர்-போட்டி நடைமுறைகளை கட்டுப்படுத்துதல்:

உரிம முறைகள் மற்றும் அறிவுச் சொத்துரிமை சார்ந்த சில நிபந்தனைகள் போட்டியை கட்டுப்படுத்துகின்றன என்பதை 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி அங்கீகரிக்கிறது. இப்படி தடைகள் வியாபாரத்தின் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தொழில் நுட்பத்தை பரிமாறிக் கொள்வதை ஒரு தலைசார்பானதாக ஆக்குகின்றன என்பதை அப்பகுதி (பாரா -1) குறிப்பிடுகிறது. எதிர் போட்டியை ஏற்படுத்துகிற வகையிலும், உரிமையை தவறாக பயன்படுத்தத்தக்க வகையிலும் உள்ள அறிவுச் சொத்துரிமைகளுக்கான உரிமம் வழங்கும் போது அவ்வகை நடவடிக்கைகளை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான

பொருத்தமான வழிமுறைகளை அமுலாக்க வேண்டும் (பாரா -2) அடுத்த ஒரு உறுப்பு நாட்டைச் சார்ந்த நிறுவனங்கள் இவ்வுரிமையை மீறுவதாக தெரிந்தால் அது குறித்து சம்மந்தப்பட்ட நாடு நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகள் ஒப்பந்தச்சரத்துக்களில் உள்ளன. ஆனால் அச்சூழ ல் அந்த நாட்டுடன் கலந்தாலோசிக்க வேண்டும். பாதிப்புக்கு உள்ளான விவரங்களையும் அவற்றை ஒத்ததாக கருதப்படும் அந்த நாடுகளில் வெளிப்படையாக கிடைக்கிற விவரங்களையும் வைத்து ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அதே போல அந்த உறுப்பு நாட்டிடம் கிடைக்கும் பிற விவரங்களுடன் ஒப்பிட்டு ஆராய வேண்டும். உள்நாட்டு சட்டங்களுக்கு உட்பட்டும் முடிவாக பாதுகாக்கப்பட வேண்டிய தமது விசயங்களுக்கு பாதுகாப்பு அளிக்கு விதத்திலான பரஸ்பரம் திருப்பியளிக்கும் ஒப்பந்தத்தை பாதுகாப்பு கோரும் நாடு எட்ட வேண்டும் ( பாரா -3). அதேபோல அப்படிப்பட்ட நடவடிக்கைக்கு உள்நாட்டு நிறுவனங்களைக் கொண்ட உறுப்பு நாடும், நடவடிக்கை மேற்கொள்ளும் உறுப்பு நாட்டுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

# ஒரு கண்டுபிடிப்பை காப்பு பதிவு செய்தல்

## அத்தியாயம் - 6

### 1) அறிமுகம்

மற்றெல்லா சொத்துக்களைப் போலவே அறிவுச் சொத்தும் ஒரு தனி நபருக்கு சொந்தமானது. பொறுப்பான அரசு அதிகாரிகளால் அறிவுச் சொத்து பதிவு செய்யப்பட்ட பின்னர் அவருக்கு அந்த சொத்தின் மேல் சிறப்பு உரிமை வருகிறது. அறிவுச் சொத்துரிமையின் மேல் அரசாங்க அலுவலகம் தரும் பத்திரமே காப்புரிமையாக ஆகிறது. விண்ணப்பத்தில் கண்டுபிடிப்பு என்று விவரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அரசாங்கம் அதற்கு காப்பு பதிவு வழங்குகிறது. இப்படி சட்டபூர்வ அனுமதி பெற்றுள்ள கண்டுபிடிப்பை பொதுவாக அதன் உரிமையாளரின் அனுமதி பெற்றே பயன்படுத்த வேண்டும்.

ஒரு கண்டுபிடிப்பாளர் அல்லது ஒன்றை வெளிக்கொணர்ந்துள்ள ஒருவரின் புதிய மற்றும் பயனுள்ள செயல்முறை அல்லது தயாரிப்பிற்கு அரசாங்கத்தால் உத்தரவாதம் கொடுக்கப்படும் போது அவர் அதன் மூலமான உற்பத்தி, உபயோகம், விற்பனை ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு சிறப்பு உரிமை பெறுகிறார்.

காப்புரிமை கோரும் ஒருவர் தனது கண்டுபிடிப்பு பற்றிய விவரங்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட அடிப்படையில் ஒருவருக்கு காப்புரிமை வழங்கப்படுகிறது. அந்த கண்டுபிடிப்பில் அடங்கியுள்ள விஞ்ஞான முன்னேற்றம் மற்றும் அதன் நுட்ப படைப்பு பயன்பாடு ஆகியவற்றிற்கு தக்க ஊக்கமளிக்கும் விதத்தில் அரசாங்கமானது அவர் அதை தனிப்பட்ட முறையில் உபயோகிக்கவும் லாபமீட்டவும் இந்த உரிமைகளை வழங்குகிறது.

காப்புரிமை என்பது ஏகபோக உரிமையாளர்களுடையது என்று தொடர்ந்து குறிப்பிடப்படுகிறது. ஆனால் எங்கேயும் அப்படியில்லை. பெரும்பாலான சட்டங்களில் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்பினை உருவாக்கியவர் அல்லது உரிமையாளர் நேரடியாக உற்பத்தி செய்யவும் உபயோகிக்கவும் அல்லது விற்பனை செய்யவும் உரிமை வழங்கப்பட்டு உள்ளது. காப்புரிமையாளரின் அனுமதிபெறாமல் அவரது காப்புரிமை பெற்ற

விசயத்தை நாட்டிலுள்ள வேறொருவரும் பயன்படுத்தாமல் இருப்பதற்கான காப்பை அக்கண்டுபிடிப்பிற்கான காப்பு வழங்குகிறது.

ஒரு கண்டுபிடிப்பினை அதன் உரிமையாளர் பயன்படுத்துவதற்கான சட்டபூர்வ உரிமை வழங்கப்படாத நிலையில் மற்றவர்கள் அவருடைய கண்டுபிடிப்பை பய்னபடுத்துவதை தடுப்பதற்கான சட்டபூர்வ உரிமை பெற்றவராகவும் அவர் உள்ளார். கண்டுபிடிப்பை பிறர் தயாரிக்கவோ. உபயோகிக்கவோ விற்பனை செய்யவோ இல்லாமல் தடுப்பதற்கான உரிமை என்று இதை வழக்கமாக கூறுவதுண்டு. காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்பை அதன் உரிமையாளரின் அனுமதி பெறாமல் நாட்டிலுள்ள மற்றொருவர் பயன்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கான உரிமை காப்புரிமை பெற்றவருக்கு உள்ள முக்கியமான உரிமையாகும். கண்டுபிடிப்பாளரது முயற்சிக்கான ஈடாகவும் ஆய்வு மற்றும் சோதனைகளுக்கும் அவர் செய்த செலவு ஆகியவற்றை ஈடுசெய்வதற்காக பொருள் ரீதியான பலன்கள் பெறுவதையும் இவ்வுரிமை வழங்குகிறது.

காப்புரிமையாளர் தனது கண்டுபிடிப்பில் ஈடுபடுத்தியுள்ளவற்றின் பலனை அடைவதற்காக அவர் அதை கொண்டு பொருளை தயாரிக்கவும், உபயோகிக்கவும் விற்கவும் ஆன ஏகபோக உரிமையை பெறுகிறார். அதன்மூலம் மற்றவர்கள் அதை பயன்படுத்துவதை தடுக்கும் உரிமை பெறுகிறார். மற்றொருவரது காப்புரிமையை அபிவிருத்தி செய்யும் விசயத்தில் அந்த காப்புரிமையை அடுத்தவரின் ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ விற்கவோ முடியாது. இது குறித்த விவரங்கள் வருமாறு:

#### அ). சரியான நேரத்தை தெரிந்துகொள்வதற்கான கருவியை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருந்த காலம்:

1327ஆம் ஆண்டு வாவிங்போர்டு நகரைச் சார்ந்த ரிச்சர்டு என்பவர் எந்திரக் கடிகாரம் கண்டுபிடித்தவுடன் பிரச்சனை முடிவுக்கு வந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக அதற்கான விளக்க குறிப்புகள் முற்றுப் பெறாமல் போய்விட்டது. இது ஃபிலோரன்ஸ் நகரைச் சார்ந்த படோவா பல்கலைக்கழக பேராசிரியர் கோவன் ோந்தி என்பவர்க்கு 1369ஆம் ஆண்டு எந்திரக் கடிகாரம் கண்டுபிடிக்கவும் உற்பத்தி செய்யவும் வாய்ப்பளித்தது. இந்த கடிகாரத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வின் காரணமாக மனித சக்திக்கு பதிலாக கடிகாரத்தின் இயக்கத்திற்கு மின் சக்தியை உபயோகிக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. எந்திரவியல் கடிகாரத்தின் அடிப்படை தத்துவத்தினை மூலமாகக் கொண்டே அது தயாரிக்கப்பட்டது. மின் சக்தியால் இயங்கும் இக்கடிகாரத்திற்காக காப்புரிமை வழங்கப்பட்டது. இக்காடிகாரத்திற்கான அலெக்சாண்ட் பெயன்க்கு வழங்கப்பட்ட காப்புரிமை தான் கண்டுபிடிப்பிற்காக முதன்முறையாக வழங்கப்பட்ட காப்புரிமையாகும்.

அடிப்படைக் கடிகாரத்தை கண்டுபிடித்தவர் காப்புரிமை பெற்றிருந்திருப்பார் எனில் பிந்தைய கண்டுபிடிப்பாளருடன் இணைந்து மற்றவர்கள் தங்களது கண்டுபிடிப்பைக் கொண்டு கடிகாரம் தயாரிப்பதையோ தயாரிப்புப் பணிகளுக்கு உபயோகப்படுத்துவதையோ அல்லது விற்பதையோ தடுக்க முடியும். உரிமம் பெறுவதன் அவசியத்தையும் தேவையையும் இது உருவாக்குகிறது. இந்த நிலையில் எந்திரவியல் காடிகாரத்தைக் கண்டுபிடித்தவர் தான் மின்னணு கடிகாரம் செய்வதற்கான உரிமத்தை அலெக்சான்டர் பெர்னியிடமும் மறுபுறம் மின்னணு கடிகார காப்புரிமை பெற்றவர் எந்திரவியல் கடிகாரத்தின் உண்மையான காப்புரிமையாளரிடம் உரிமை பெற்ற பின்னர் தான் அதை உபயோகப்படுத்தவோ விற்கவோ முடியும்.

ஆ) தொலைபேசிக்கான காப்புரிமையை அலெக்சாண்டர் கிரகாம்பெல் பெற்றிருக்கும்போது மற்றவர்கள் அவரது காப்புரிமையை கொண்டு அதனால் உற்பத்தி செய்யவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ செய்யாமல் தடுக்கும் உரிமையை கிரகாம்பெல் பெறுகிறார். அதற்குப்பிறகு எண்களை சுழற்றிப்பேசுவதற்கான தொலைபேசியை கண்டுபிடித்து அதற்கு ஒருவர் பெல் ன் தொலைபேசியில் அபிவிருத்தி செய்யப்பட்ட வடிவம் என்ற வைகையில் காப்புரிமை பெறுகிறார் என்று வைத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட நிலையில் இந்த இரண்டாம் நபரானவர் பெல் உள்பட வேறொருவரும் எண்களைச் சுழற்றும் தொலைபேசியை உற்பத்தி செய்யவோ. பயன்படுத்தவோ அல்லது விற்பனை செய்யாமலோ தடுக்கும் உரிமை பெற்று இருக்கிறார். உரிமம் பெற வேண்டியதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது. இச்சூழ்நிலையில் சுழற்று எண்கள் தொலைபேசி காப்புரிமையாளரிடம் பெல்லும், பெல் ன் அடிப்படை தொலைபேசி காப்புரிமையினை பயன்படுத்தி சுழற்று எண்கள் தொலைபேசி செய்யவும், உபயோகப்படுத்தவும், விற்கவுமான உரிமத்தை பெல் டம் சுழற்று எண்கள் தொலைபேசி காப்புரிமையாளரும் பெறவேண்டியது அவசியம்.

இந்நிலையில் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் காப்புரிமை வழங்கிட மட்டுமே செய்யும் அது தானாக அவ்வுரிமையை அமுலாக்காது. காப்புரிமை வைத்துள்ளவர் தமது காப்புரிமையை வேறொருவர் தவறாக பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கில் பொதுச் சட்டங்களின் அடிப்படையில் அதன் மீது நடவடிக்கை கோரும் போது மட்டுமே அரசு தலையிடுகிறது. எனவே காப்புரிமை உரிமையாளர் தமக்கு தாமே காவலராக செயல்பட வேண்டியது அவசியமானதாகும்.

## 2) காப்புரிமைக்கான நிபந்தனைகள்:

ஒரு கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை பாதுகாப்பு பெறுவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகள் எதிர்கொள்ள வேண்டும் என்பது அனேகமாக உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள நடைமுறையாகும்.

அ) காப்புரிமை பெறுவதற்கு சம்மந்தப்பட்ட தகுதிகளை புதிய கண்டுபிடிப்பு பெற்றிருக்க வேண்டும்.

ஆ) கண்டுபிடிப்பானது நிச்சயம் நூதனமான புதிய ஒன்றாக இருக்க வேண்டும்.

இ) கண்டுபிடிப்பின் கட்டங்களை போதுமான அளவு செய்து காட்டக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஈ) இக்கண்டுபிடிப்பானது தொழில்துறைக்கு பொறுந்தக்கூடியதாகவும் உபயோகப்படத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

2) காப்புரிமை கோருவதற்கான விண்ணப்பத்துடன் கண்டுபிடிப்பு விவரங்களை போதுமான அளவு இணைக்க வேண்டும். அவைகள் போதுமான அளவு நிர்ணயங்களுக்கு உட்படக்கூடியதாக இருக்க வேண்டும்.

மேற்கண்டவைகளின் சுறுக்கமான விரிவாக்கம்:

அ) ஒரு கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை வழங்குவதற்கான தகுதி வரவேண்டுமானால் அது காப்புரிமைக்கான அடிப்படை நிலைபாடுகளின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் பூர்த்திசெய்வதாக இருக்க வேண்டும். காப்புரிமைக்கான அடிப்படை நிலைபாடுகளினால் உருவாக்கப்பட்டது. காப்புரிமை பெறுவதற்கான விதிவிலக்குகள் என்ற அடிப்படையில் இது வழக்கமாக உணரப்படுகிறது. தொழில் துறையின் அனைத்து துறைகளைச் சார்ந்த கண்டுபிடிப்புகளுக்கும் காப்பு வழங்க வேண்டும்.

தொழில் நுட்ப துறையில் காப்புரிமை பெறுவதற்குள்ள வாய்ப்புக்கான அடிப்படை நிலைபாடுகளுக்கு அப்பாற்பட்ட தொழில் நுட்பத்துறைகளுக்கான உதாரணங்கள் கீழ்வருமாறு:

- இயற்கையில் உள்ள உலோகங்கள் அல்லது மூலப்பொருள்கள் சம்மந்தப்பட்ட கண்டுபிடிப்புகள்;
- அறிவியல் கொள்கைகள் அல்லது கணக்கீட்டு முறைகள்;

பயிற்கள், விலங்கு வகைகள், அப்படிப்பட்ட பயிற்கள், விலங்குகளை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உயிரியல் செயல்முறைகள்

- திட்டங்கள், விதிமுறைகள் அல்லது முறைகள். அதாவது வியாபாரம், அல்லது மணச்செயல்பாடுகளுக்கு மட்டுமேயான தயாரிப்புகள் அல்லது விளையாட்டு போட்டிகள்;
- மனிதர்கள் அல்லது விலக்குகளுக்கான சிகிச்சை முறைகள் அல்லது மனிதர்கள் அல்லது விலங்குகளின் நோய்கண்டறியும் முறைகளுக்கும் (ஆனால் இந்த நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் பொருள்களுக்கு இது பொறுந்தாது) காப்புரிமை வழங்கப்படுவதில்லை

இது போக பொது நலன்களைக் கவனத்தில் கொண்டு சிலவகைப் பொருள்களுக்கும் செயல்முறைகளுக்கும் தாற்கா கமாக காப்புரிமை பாதுகாப்பி ருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு மருந்துகள், வேளாண்தறைக்கான ரசாணங்கள் அல்லது அணுவியல் துறை கண்டுபிடிப்புகளுக்கு இவ்வகை விலக்களிக்கப்படுகிறது. தற்போதைய நிலமைகள் இவ்வகை தற்கா க விலக்குகளி ருந்து அப்பாற்பட்டுள்ளன.

## ஆ) புதுப்புனைவு

எந்த ஒரு பரிசோதனையிலும் புதுப்புனைவை நிரூபிக்க வேண்டியது அடிப்படையானதாகும். காப்புரிமை பெறுவதற்கான விவரத்திற்கு அப்பாற்பட்ட நிபந்தனையுமாகும். இதன் அர்த்தம் என்னவென்றால் புதுப்புனைவு என்பது ஒன்றை நிரூபிப்பது அல்லது நிர்மானிப்பது என்பதால் இது விசயத்தில் வேறொன்றின் பகுதிகள் இல்லாதிருந்தால் நிரூபிக்கப்படும்போது மட்டுமே இதன் புதுப்புனைவு உறுதிப்படுத்தப்படுகிறது.

ஒரு கண்டுபிடிப்பு புதியதாக இருக்கும் போது அது நிகழ்த்தப்பட்ட கலை (Prior art) யால் எதிர்பார்க்கப்படாததாக இருக்க வேண்டும். நிகழ்த்தப்பட்ட கலை என சாதாரணமாக குறிப்பிடுவது என்பது காப்புரிமை கோருவதற்கான விண்ணப்பத்தில் நிரப்பப்பட்டுள்ள அல்லது காலக்கெடுவுக்கு உட்பட்ட காலத்தின் ஒட்டு மொத்த அறிவு ஆகும். அது எழுத்து வடிவத்திலோ கேட்கக்கூடிய வடிவத்திலோ இருக்கலாம். கொடுக்கப்பட்ட காலகட்டத்தில் அதற்கு கொடுக்கப்பட்ட அர்த்தத்தில் நிகழ்த்தப்பட்ட கலை இல்லாவிட்டால் அதை நிரூபிக்கிற அடிப்படையில் முன்வருகிற கேள்வியே பிரச்சனையின் அடிப்படையாக கருதப்படுகிறது. காப்பளிக்கும் நாட்டில் என்ன அறியப்பட்டுள்ளதோ அந்த பின்னணிக்கு எதிராக மட்டுமே நிகழ்த்தப்பட்ட கலையானது நிரூபிக்கப்பட் வேண்டும். இது பிற நாடுகளி ருந்தான அறிவுத் திறனுக்கு அப்பாற்பட்டது. அப்படிப்பட்ட நிலையில் அது கண்டுபிடிப்பதற்கு முன்னால் அந்நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்பட்டு இருக்கக் கூடாது. சொல்லப்பட்ட நாளுக்கு முன்னரே அந்த அறிவுத் திறன் வெளிநாட்டில் கிடைக்கக்கூடியதாக இருந்தாலும் இது பொறுந்தும். மற்றொரு பார்வையானது அச்சடிக்கப்பட்ட விவரக்குறிப்புகள் வெளியீடுகளுக்கும் பேச்சு மற்றும் உபயோக விவரங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் அடிப்படையிலானதாகும்.

கண்டுபிடிப்பு பற்றிய விவரங்கள் இப்படி இருக்கையில் அது நிகழ்த்தப்பட்ட கலையின் பகுதியாக வரும்போது அதை கீழ்கண்ட மூன்று பெயர்களிலான வழிகளில் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

- எழுத்து வடிவத்திலான வெளியீடாகவோ, பத்திரத்திலோ, இதோடு தொடர்புடைய பிற வடிவத்திலோ கண்டுபிடிப்பின் விவரக்குறிப்புகள் இருப்பது;

- பொது மக்களிடையே பேச்சு வழக்கில் கண்டுபிடிப்பின் விவரக்குறிப்புகள் இருந்தால் அப்படிப்பட்ட விவரக்குறிப்புகள் வாய்மொழி விவரக் குறிப்புகளாக கருதப்படுகிறது

பொது மக்கள் எவரொருவரும் கையாளக் கூடிய வகையில் கண்டுபிடிப்பானது பொது உபயோகத்தி ருந்தாலோ அல்லது அப்படிப்பட்ட நிலையில் பொதுமக்களை கொண்டு போய் நிறுத்துவது. அப்படிப்பட்ட செயல்விவரக்குறிப்புகள் 'பொது உபயோகத்தில்' உள்ள விவரக் குறிப்புகள் என்றாகி விட்டது'

பத்திரம் என்பதன் அர்த்தத்திற்கு ஏற்றாற்போல அந்த விவரங்களின் வெளியீடானது ஏதாவது ஒரு பௌதீக வடிவில் இருக்க வேண்டும். அந்த பத்திரம் வெளியிடப்படத்தக்கதாக இருக்க வேண்டும். அதாவது அவ்விவரங்களை பொது மக்கள் விலை கொடுத்து வாங்கவோ அல்லது பொது நூலகத்தில் எடுத்துப் பார்க்கத்தக்கதாகவோ ஏற்பாடு செய்து தர வேண்டும். அந்த வெளியீடுகளில் காப்புரிமைகள், காப்புரிமைக்கான அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள், எழுத்துரைகள் (அவைகள் கையால் எழுதப்பட்டதாகவோ, தட்டச்சு வடிவத்திலோ அல்லது அச்சு வடிவத்திலோ இருக்க வேண்டும் ) புகைப்படங்கள், ஒவியங்கள் அல்லது வட்டுகள் அல்லது நாடக்களில் பதிவு செய்யப்பட்ட பேச்சு மொழியிலான அல்லது சங்கேத மொழியிலான ஒ ப்பதிவுகள் மற்றும் திரைப்படங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியிறுக்க வேண்டும்.

பேச்சு வழக்கிலான விவரக்குறிப்புகள் என்பது அதன் அர்த்தத்தில் வைத்துப்பார்க்கும் போது அந்த விவரக் குறிப்புகளின் வார்த்தைகள் அல்லது வடிவம் என்பது பதிவு செய்யப்படத்தக்கனவாக இருக்க வேண்டியதில்லை. அதே போல விரிவுரைகள் மற்றும் வானொ ஒ பரப்பாகவும் இருக்க வேண்டியதில்லை.

விவரக்குறிப்புகளை பொதுவாக உபயோகப்படுத்தியிருக்க வேண்டியது அவசியம். செயல்விளக்கம், விற்பனை, செய்து காட்டுதல், பதிவு செய்யப்படாத தொலைக்காட்சி ஒளிபரப்புகள் வடிவிலான காட்சிக்கு உரிய விவரக்குறிப்புகள் இயல்பான பொது வடிவிலான காட்சிக்கு உரிய விவரக்குறிப்புகள் என்று இயல்பான பொது உபயோகத்தில் இருக்க வேண்டும்.

பத்திரங்களின் மூலவிவரங்கள் ஒரு கண்டுபிடிப்பின் புதுப்புனைவை நாசப்படுத்தக்கூடியவகையில் இருப்பது தெளிவுபடுத்தக்கூடியதாக இருந்தால் மட்டுமே அதன்மேல் நடவடிக்கை கோர முடியும். ஆகவே, அப்படிப்பட்ட நடவடிக்கையின் பாலான விண்ணத்தினை ஒவ்வொரு வெளியீட்டின் அர்த்தத்துடனும் வைத்து ஒவ்வொரு பகுதியாக ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நடவடிக்கை கோரும் கண்டுபிடிப்பின் எல்லா தன்மைகளையும் வெளியீடு தன்னுள் கொண்டிருக்கும் பட்சத்தில் அதாவது அந்த வெளியீடானது நடவடிக்கை கோரும் கண்டுபிடிப்பின் மூலத்தன்மையை பாதிக்கத்தக்கதாக இருந்தாலும் அதன் வெளியிடப்பட்ட கண்டுபிடிப்பானது புதுப்புனைவுத் தன்மை குறைபாடுடையது என்று கண்டுபிடிக்கப்படுகிறது.

## இ) கண்டுபிடிப்பு முயற்சி:

கண்டுபிடிப்பு முயற்சியைப் (இதை 'தெளிவற்றது' என்றும் குறிப்பிடப்படுகிறது) பொறுத்தவரை கண்டுபிடிப்பானது அத்துறையில் சாதாரண திறன் கொண்டவரும் அதை தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறதா இல்லை ஒருவேலை அதன் சாரத்தை சோதனையிட்டு முடிவுசெய்வதற்கு கடினமாக இருக்கிறதா இல்லையா என்பதே கேள்வி.

காப்புரிமைச் சட்டத்தில் இப்படிப்பட்ட தேவை பற்றி இணைக்கப்பட்டுள்ளவை கீழ்வரும் ஆதாரத்தில் அடிப்படையிலானவை. 'நிகழ்ந்தப்பட்ட கலை' என்ற வகையில் ஏற்கனவே என்ன அறியப்பட்டு உள்ளதோ அதற்கு காப்பு வழங்கப்பட்டுவிடக்கூடாது. கண்டுபிடிப்பினை குறித்து சாதாரண திறன் கொண்டவர் கூட முடிவு செய்யும் வகையில் வெளிப்படையாக இருக்க வேண்டியது அவசியம்.

குறிப்பிட்ட இந்த கலையில் சாதாரண திறன் படைத்தவர் என்பவர் இத்துறைக்கான போதுமான தொழில்நுட்ப பயிற்சியும் செய்முறை அனுபவமும் பெற்றவர். இங்கே 'சாதாரண திறன்' என்ற சொல் இணைக்கப்பட்டுள்ளதன் நோக்கம் 'மிகுந்த திறன் கொண்ட நிபுணர்களை அகற்றிவைப்பதற்கும் ஆகும். சம்மந்தப்பட்ட நாட்டில் உள்ள சம்மந்தப்பட்ட துறையில் சராசரி அளவு

திறன் கொண்ட ஒருவர் மட்டுமே தகுதியானவர் என்று இச்சொல் அளவு நிர்ணயம் செய்கிறது.

நூதனமும் கண்டுபிடிப்பு முயற்சியும் வெவ்வேறானவை என்பது குறிப்பிடத்தக்கது. தெளிவான கலைக்கும் கண்டுபிடிப்பிற்கும் வேறுபாடு இருக்குமிடத்தில் நூதனம் வெளிப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில் முன்வரும் கேள்வி 'அங்கே கண்டுபிடிப்பு முயற்சி இருக்கிறதா' என்பதாகும். அங்கே நூதனம் இருக்கும் போது மட்டுமே இக்கேள்வி எழுகிறது. கண்டுபிடிப்பு புதியது என்று ஒருவர் கோரும் போது 'கண்டுபிடிப்பு முயற்சி' என்ற சொற்றொடரானது புதிய கண்டுபிடிப்பு எனப்படுவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள எண்ணம் போதுமானது அல்ல என்பதாகும். அதாவது ஏற்கனவே உள்ள வடிவத்தி ருந்து போதுமான அளவு மாறுபட்டிருக்கவில்லை என்பதாகும். அதனால் இந்த வித்தியாசங்கள் இரண்டு குணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

முதன்மையாக இது படைப்பு எண்ணத்தினால் வெளிவந்துள்ள கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும். வெளியிடத்தக்கதான நிலையாக இருக்க வேண்டும். ஏற்கனவே உள்ள வடிவத்திற்கு உரிமை கோரும் கண்டுபிடிப்பிற்குமிடையே தெளிவாக உணரத்தக்க வேறுபாடு இருக்க வேண்டும். ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட கண்டுபிடிப்பி ருந்து முன்னுக்குப் போதல் அல்லது முன்னேற்றம் காண வேண்டும் என்பதற்காக இது கோரப்படுகிறது.

இரண்டாவதாக, இந்த முன்னேற்றமானது அதற்குரிய முக்கியத்துவம் உடையதாக இருக்க வேண்டும். அந்த கண்டபிடிப்பிற்கு அவசியமானதாகவும் இருக்க வேண்டும். இயல்பான கண்டுபிடிப்பு முயற்சியின் மீது சார்ந்துள்ளதை நிருபனம் செய்வதற்கு அவைகளுக்கு இடையேயான இயற்கையான வேறுபாடுகளை அறிவதற்கு 'நிகழ்த்தப்பட்ட கலை'யை ஒட்டுமொத்தமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனவே புதுமைப்புனைவை கணக்கிட்டு வேறுபடுத்தி பார்ப்பதற்கு பரிசோதனையின் கீழ்ள்ள உரிமைகோரும் ஒன்றின் மூல விசயத்தை ஒவ்வொரு வெளியீட்டுடனோ அல்லது தனித்தனி விவரக்குறிப்புகளுடனோ ஒப்பிட்டுப்பார்க்க வேண்டியதில்லை.

ஆனால் அவற்றில் இணைந்துள்ளவற்றுடன் ஒப்பிட வேண்டும். இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகள் அந்த துறையில் சாதாரண திறன் கொண்ட ஒருவரால் தெளிவாக அறியத்தக்கதாகும். இந்த கலவை நிலையானது உலகு தழுவியதாக கூட இருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில் தனிப்பட்ட முறையில் அறியப்பட்டுள்ள மூலவிசயங்களின் தொகுப்பு மீது உரிமை கோரலாம். உதாரணத்திற்கு புதிய வடிவத்திலுள்ள சலவை எந்திரத்தின் குறிப்பிட்டவகையிலான மோட்டர் குறிப்பிட்ட வகையான இணைக்கப்பட்டிருக்கலாம். கண்டுபிடிப்பு முயற்சினை நிலை என்பதை தகற்பதற்கு கலவை மட்டும் முக்கியமல்ல. கலவை மூலங்களுக்கு உள்ள வாய்ப்பும் முக்கியமானதாகும். 'நிகழ்த்தப்பட்ட கலை'யினுடன் ஒப்பிட்டுக் காணத்தக்க அளவிற்கு அவற்றிற்கிடையே வேறுபாட்டை கண்டு உணர்ந்திருக்க வேண்டும். புதிய பகுதிகள் ஒவ்வொன்றிற்கு இடையே தொழில் நுட்ப தொடர்பு ஏதும் இல்லாநிலையில் அவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஒப்பிட்டு பார்க்க வேண்டியதில்லை.

கண்டுபிடிப்புகளின் முன்மாதிரிகளின் கீழ்வரும் மூன்று தன்மைகளை நிராகரித்துவிட்டு வேறுபாடுகளை மதிப்பிடமுடியாது.

அ) பிரச்சனை தீர்வுகாணப்படக் தக்கதாக இருக்க வேண்டும்.

ஆ) அந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு இருக்க வேண்டும்; மேலும்

இ) அந்த தீர்வின் மூலம் முடிவு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பிரச்சனை அறிந்திருக்கக் கூடியதாகவோ வெளிப்படையானதாகவோ இருக்கும்போது தீர்வு கோருவதன் தற்பண்பின் மேல் அமைந்ததாகவும் பரிசோதனை அமைந்திருக்க வேண்டும். இறுதி தீர்வில் கண்டுபிடிப்பு படிநிலை முயற்சி இல்லை என்று ஆகும் பட்சத்தில் முடிவு வெளிப்படையானதா அல்லாததா அல்லது அதன் இயல்புத்தன்மையினால் இது ஆச்சரியத்தையளிக்கிறதா அல்லது அதன் விரிவாக்கம் தான் காரணமா என்று கேள்வி எழுகிறது. சம்மந்தப்பட்ட கலையில் சாதாரண அறிவுள்ளவர்களே பிரச்சனையை வெளிக்கொணரத்தக்கவராக இருந்தலோ கோரப்படும் பாங்கில் அதை தீர்த்து வைக்க முடிந்தாலோ முடிவை முன் அனுமானிக்கக்தக்கதாகவோ இருநதால் கண்டுபிடிப்பு படிநிலை முயற்சி குறைபாடுடையதாகிறது.

வரைவடிவ காப்புரிமையும் கட்டாயம் தனது தற்பண்பை காட்ட வேண்டும் கண்டுபிடிப்புத் திறனை பரிசோதித்துக் காட்ட வேண்டும். காப்பளிக்கத்தக்க ஒன்று எனில் அதன் வரைவடிவமானது கலப்படமற்ற புதியதானதாக இருக்க வேண்டும். சாதாரணமானதை விட, சற்றே மேலானது என்பது போதுமானதல்ல மற்றும் நுகர்வாளர்களை மகிழ்வித்து வர்த்தகத்தை கவர்வதாக இருக்க வேண்டும். பொதுவாக கண்டுபிடிப்பை நடைமுறையில் ஈடுபடுத்துவது கடினமானதாக இருப்பதால் குறிப்பாக இங்கே தரமானது துள்ளியமற்றதாக இருப்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. உதாரணத்திற்கு பெண்களின் ஆடைகளுக்கான வரைவடிவ காப்புரிமையை எடுத்துக் கொள்வோம். அதற்கு காப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரை அலுவலகம் காப்பளித்துவிடும் பட்சத்தில் நல்ல தையல்காரர் ஒருவரின் திறமைக்கு மேல் அந்த உடைகளில் ஒன்றும் ஈடுபடுத்தப்படவில்லை என்ற ஆதாரத்தின் அடிப்படையில் நீதிமன்றங்கள் மூலம் அந்த காப்புரிமை மதிப்பற்றதாக ஆக்கப்படுகிறது.

## ஈ) தொழில் பயன்பாட்டு நிலை/பயன்பாடு:

காப்புரிமை பெறுவதற்கான கண்டுபிடிப்பானது நடைமுறையில் பயன்படக்கூடியவகையில் பொறுந்தத்தக்கதாக நிச்சயம் இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் அந்த கண்டுபிடிப்பு வெறும் தத்துவமாக இருந்துவிடக்கூடாது. இது நடைமுறைக்கு கொண்டுவரத்தக்கதாகவும் மனித குலத்திற்கு பயன்தரத்தக்கதாக திகழக்கூடியதாகவும் இருக்க வேண்டியது அவசியமானது. இந்த கண்டுபிடிப்பானது ஒரு பொருளை உற்பத்தி செய்வதிலோ அல்லது அந்தப்பொருளின் பகுதியாக திகழ்வதைதையோ நோக்கமாக கொண்டிருந்தாலும் அப்படி கருதப்படுகிற பொருள் உற்பத்தி செய்யத்தக்கதாக இருக்க வேண்டியது அவசியமானது.

ஒருவேளை இந்த கண்டுபிடிப்பானது தயாரிப்பு முறையைப் பற்றியதாகவோ அல்லது அதன் ஒரு பகுதி நடவடிக்கையை பற்றியதாகவோ இருக்கும் பட்சத்தில் அது சொல்லப்பட்டுள்ள வகையில் உபயோகிக்கத்தக்கதாக இருக்க வேண்டும்.

தயார் செய்வதற்கான சாத்தியம் அல்லது உற்பத்தியில் நடைமுறை வெளிக்கொணர்வதற்கான இந்த வாய்ப்புகள் அல்லது நடைமுறையில் உபயோகத்தில் இருப்பது என்பவை பயன்பாடு என்ற சொல் ல் பிரதிபளிக்கிறது. அதன் அடிப்படையில் தான் 'தொழில் பயன்பாடு' என்று அழைக்கப்படுகிறது. இந்த அர்த்தத்தில் தொழில் என்ற வார்த்தைக்கும் காப்புரிமைச் சட்டங்களின் குறிப்பிட்ட துறைசார்ந்த சொல்லகராதியில் மிகப்பிரத்யேகமான அர்த்தம் உண்டு பொது மொழியில் தொழில் நடவடிக்கை என்பதற்கு குறிப்பிட்ட அளவிலான தொழில் நுட்ப நடவடிக்கை என்று ஒரு அர்த்தம் உண்டு. அதே நேரத்தில் ஒரு கண்டுபிடிப்பின் தொழில் பயன்பாடு என்பதைப் பொறுத்தவரை அதன் குறிப்பிட்ட தொழில்நுட்ப அளவிலான அர்த்தத்தை குறிக்கும் வகையில் பயன்படுத்துதல் என்பதை குறிப்பிடுகிறது.

## 2) கண்டுபிடிப்பின் விளக்கக்குறிப்புகள்:

காப்புரிமை கோரும் போது விண்ணப்பத்துடன் கூடுதலாக ஒரு விவரம் சேர்க்கப்படவேண்டியுள்ளது. கண்டுபிடிப்பின் விவரங்கள் போதுமான அளவு சேர்க்கப்பட்டுள்ளனவா இல்லையா என்பதே அதுவாகும்.

ஒரு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள விளக்கக்குறிப்புகள் முழுமையானதாக இருக்க வேண்டும். அதில் இருக்கும் அப்படிப்பட்ட குறிப்புகள் மற்றும் விவரங்களைக் கொண்டு அந்த கண்டுபிடிப்பு சார்ந்த துறையில் திறமை படைத்த ஒருவர் அந்த விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்ட நாளில் பொருளை தயாரிக்கவோ செய ல் ஈடுபடவோ இயல்பனவையாகவோ இருக்க வேண்டும்.

நிகழ்த்தப்பட்ட கலையின் விவரங்கள் பொதுவான விதிகளின் அடிப்படையில் விளக்கக்குறிப்புகளில் கூறப்பட்டிருக்கும் பட்சத்தில் உரிமைகோரும் கண்டுபிடிப்பின் புதுப்புனைவு, கண்டுபிடிப்பின் சாரம் ஆகியன விரிவாக விளக்கப்பட்டிருக்க வேண்டும். கண்டுபிடிப்பினைச் சம்மந்தப்பட்ட துறையில் திறமை படைத்த ஒருவர் அக்கண்டுபிடிப்பைக் கொண்டு பொருளைத் தயாரிக்கவோ, கண்டுபிடிப்பை தயாரிக்கிற பணிகளில் ஈடுபடுத்தவோ கூடிய அளவிற்கு அவ்விளக்கக் குறிப்புகளின் துல் யமான

அளவு விகிதங்களும் தொழில் நுட்பங்களும் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். அக்கண்டுபிடிப்பைக் கொண்டு பொருளைத் தயாரிக்கவோ, கண்டுபிடிப்பை தயாரிப்பு பணிகளில் ஈடுபடுத்தவோ கூடிய அளவிற்கு அவ்விளக்ககு குறிப்புகளின் துல் யமான அளவு விகிதங்களும் தொழில்நுட்பங்களும் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

கண்டுபிடிப்புகளின் பார்த்துறைக்க பண்புருவ வடிவிலான செயல்விளக்கங்கள் அல்லது எடுத்துக்காட்டுகள் விளக்கக்குறிப்புகளில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டுகளும் விவரக்குறிப்புகளின் பாராக்களும் நோக்கங்களை போதுமான அளவு எடுத்துறைக்கத்தக்கதாகவும் உரிமை கோரப்படுவதன் நோக்கங்களோடு ஒப்பிடப்படத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

## 3). எதிர்ப்பு:

மூலக்கருத்துக்கு ஏற்ப பரிசோதனை இருந்ததா இல்லையா என்ற நிலையில் எதிர்ப்பு நடைமுறைக்கு குறிப்பிட்ட நீதிமன்ற நடவடிக்கை எல்லைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்மூலம் உரிமை வழங்கப்படுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ எதிர்ப்பை எழுப்பலாம். காப்புரிமை வழங்கப்படுவதற்கு மூன்றாம் நபர்கள் எதிர்ப்பை முன்வைப்பதற்கு தெளிவாக அனுமதிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போது, விண்ணப்பத்தின் உட்பொருள் பொது மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டியது அவசியம். காப்புரிமை அலுவலகமானது இதை தனது அலுவலக இதழிலோ அல்லது அரசு அறிக்கை வெளியீட்டிலோ வெளியிடவேண்டும். அது கீழ்க்கண்டவாறு நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டும்:

சம்மந்தப்பட்ட விண்ணப்பம் பொதுமக்கள் ஆய்வு செய்வதற்க்கு திறந்து வைக்க வேண்டும்.

- வரையறுக்கப்பட்ட காலத்தில் எதிர்ப்பு பதிவு செய்யப்படாதிருக்கும்போது காப்புரிமை அலுவலகமானது காப்புரிமையை வழங்கிவிடலாம்;

அந்த விண்ணப்பத்தின் மீது காப்புரிமை வழங்கியிருந்திருக்கலாம்;

எதிர்ப்புகளை பதிவு செய்யபடுவதற்கான ஆதாரங்களுக்கு தக்க சட்டங்கள் மூலம் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தனித்தன்மையை நிறுவுவதற்கான அடிப்படைகள் எவை ஒன்றின் உடன்படாதன்மையை அடிப்படையாகக் கொண்டு எதிர்ப்பு தெரிவிக்கலாம் என்று பொதுவாகப் பேசப்படுகிறது.

அதே நேரத்தில் சில நாட்டுச் சட்டங்கள் தனித்தன்மையை குறிப்பிட சில தேவைகளின் மீது மட்டுமே உடன்படதா தன்மையில் உள்ளது என்ற அடிப்படையில் எதிர்ப்பு அனுமதிக்கப்படுகிறது. குறிப்பாக, போதுமான புதுப்புனைவின்மை, கண்டுபிடிப்பு படி நிலை, தொழில்பயன்பாட்டு நிலை, கண்டுபிடிப்பை பற்றிய போதுமான அளவிற்கு விளக்கக் குறிப்புகள் இல்லாமை, ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள மூல விளக்கக்குறிப்புக்கு பதிலாக கொடுக்கப்பட்ட திருத்தங்கள் மூலத்திற்கு மாறாக உள்ளது என்பது உண்மை என்று உணரப்படும்போது மட்டுமே அந்நாடுகளில் எதிர்ப்பு பதிவு செய்ய முடியும்.

விண்ணப்பதாரர்க்கு காப்புரிமை கோர உரிமை இல்லை என்பதன் அடிப்படையில் ஒரு எதிர்ப்பை பதிவு செய்ய சில நாடுகள் வகை செய்து கொடுத்துள்ளன. குறிப்பிட்ட ஒரு காப்புரிமையின் செல்லத்தக்க தன்மையின் மீது ஒரு முரண்பாடு எழுந்ததற்கான உதாரணம் வருமாறு. காரின் ஓட்டுனர் இறுக்கைக்கு முன் உள்ள டாஸ்போர்டில் உள்ள சிகர்லைட்டுக்கு வழங்கப்பட்டிருந்த காப்புரிமையின் மீது ஒரு பிரச்சனை கிளம்பியது. மேலும் வழக்கி ந்த காப்புரிமையாளர் அமெரிக்காவின் உச்ச நீதிமன்றத்தில்

கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். வெப்பந்தாக்கதாத மின்சுற்றுச் தொடரின் உரைக்கு முத ல் விண்ணப்பித்தவர் என்றால் காருக்கு வெளியே சுருட்டு சிகரெட் மற்றும் பிறவற்றை பற்றவைப்பதற்கான தொழில் நுட்பத்தை கார் ஓட்டும் போது காருக்குள்ளேயே பற்றவைத்தற்கான வகையில் அவர் அபிவிருத்தி செய்திருந்தார். ஆனால் அது கண்டுபிடிப்பு என்று தகுதியுடையதாகாது என்று தெரிவிக்கப்பட்டது.

## 4) காப்புரிமைக்கான விண்ணப்ப நகல் தயாரித்தலும் பூர்த்தி செய்தலும்:

காப்புரிமை விண்ணப்பத்திற்கான மூல நகல் தயாரிப்பதற்கு முன்னர், கண்டுபிடிப்பின் அடையாளம் இருக்க வேண்டியது அவசியமானது. எனவே காப்புரிமைக்கான நகல் தயாரிப்புப்பணி இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது.

அ) கண்டுபிடிப்பின் அடையாளம்

ஆ) காப்புரிமை, விண்ணப்பத்தின் நகல் தயாரிப்பதற்கான நடைமுறைகள்

அ) கண்டுபிடிப்பின் அடையாளம்;

காப்புரிமை விண்ணப்பதின் நகல் தயாரிப்பதற்கான முதல் நடவடிக்கையாக அந்த கண்டுபிடிப்பை அடையாளங்காட்டுவது ஆகும். இதில் கீழ்கண்டவை உள்ளடங்கி இருக்கின்றன.

- குறிப்பிட்ட தொழில் நுட்ப பிரச்சனையை தீர்க்கக்கூடிய வகையில் புதிய கண்டுபிடிப்பில் உள்ளமைந்துள்ள தனித்சிறப்புகளை தொகுத்துத்தர வேண்டும்;
- காப்புரிமையும் குறிப்பாக கண்டுபிடிப்பு படிநிலையையும் குறித்த விவரங்களையும் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்வதற்கு ஒருவர் தனது சொந்த கருத்தின் அடிப்படையில் இவைகள் சம்மந்தமான உள்ளார்ந்த கேள்விகளுக்கு விடைகாணத்தக்க பரிசோதனை விவரங்கள் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

இந்த நடைமுறையின் மூலம், கண்டுபிடிப்பின் சாரம் முழுமையாக புரிந்துகொள்ளப்படுகிறது. அதேபோல கண்டுபிடிப்பைக் குறித்து விளக்கங்கள் தயாரிக்கவும் உரிமைகளை வகைப்படுத்தவும் முடிகிறது.

ஒரு கண்டுபிடிப்பாளர் தனது கண்டுபிடிப்பு பணியில் நேரடியாக ஈடுபட்டுள்ளதால் அவர் தனது சொந்த முடிவுகளில் மிகவும் ஈடுபாட்டோடு இருப்பார். அதனால் அம்முடிவுகள் முழுமையடையாதனவாக இருக்கும் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. இதனால் கீழ்க்கண்ட விளைவுகள் ஏற்படுகின்றன. அவர்க்கு அவரது கண்டுபிடிப்பு பற்றி குறிப்பிடத்தக்க அளவு மட்டுமே தெரிந்திருக்கிறது. குறிப்பாக அவர் தீர்வு கண்டிட வேண்டிய குறிப்பிடத்தக்க பிரச்சனை பற்றி அவருக்கு போதுமான அளவு தெரிந்திருக்கவில்லை. மேலும் கண்டுபிடிப்பின் சிறப்பம்சங்கள் குறித்தும் மிகவும் காரியசாத்தியமான தீர்வுகள் காண வேண்டிய நிலைக்கு அவரை தள்ளியது.

பல நேரங்களில் கண்டுபிடிப்புகளில் பல தனிச்சிறப்பான அம்சங்கள் அடங்கியிருப்பது உண்டு. இவைகளில் எந்த ஒரு அம்சம் அல்லது எந்த அம்சங்கள் நுணுக்கமானது. என்பதை அடையாளங் காணவேண்டியதும் பிரச்சனைகளுக்கு அவை காரியசாத்தியமான தீர்வுகளை எப்படி வழங்கப்போகின்றன என்று காண வேண்டியதும் அவசியம். இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக உரிமை கோரல்கள் சாத்தியமான அளவிற்கு விரிவாக இருக்க வேண்டும். குறைவான அளவு சிறப்பு அம்சங்கள் மட்டுமே இருப்பது விரிந்த அளவிலான உரிமை கோருவதை கட்டுப்படுத்துகிறது. இரண்டாவதாக, நுணுக்கமான சிறப்பம்சங்களையும் அதனுடைய தாக்கங்களையும் அறிந்து கொள்ள இயலும் போது அப்படிப்பட்ட சிறப்புதன்மை எப்படி எட்டப்பட்டது என்ற கேள்விக்கு விடை அறிந்து கொள்வது அவசியமானது. உரிமைகளை வகுப்பதற்கு மட்டும் அல்லது இப்படிப்பட்ட மாற்று ஏற்பாடுகளையும் துணை ஏற்பாடுகளையும் செய்வதற்கும் அவசயிமானதாக உள்ளது. ஆனால் கண்டுபிடிப்பின் விளக்கக் குறிப்புகளில் மாற்று ஏற்பாடுகள் மற்றும் துணை ஏற்பாடுகளைப் பற்றிய விவரங்கள் இருந்தால் மட்டுமே அதன் உதவியைக் கொண்டு விரிவான உரிமையை பெற இயலும்,

## ஆ) காப்புரிமை விண்ணப்ப நகல் தயாரிப்பின் நடைமுறை அம்சங்கள்:

நகல் தயாரிப்பு முறைகள் மற்றும் அதற்கு தேவைப்படும் அம்சங்கள் ஆகியன நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இந்நிலையில் காப்புரிமைக்கான விண்ணப்ப நகல் தயாரிப்பில் முன்மாதிரியனா மூன்று அடிப்படை தேவைகள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

சம்மந்தப்பட்ட விண்ணப்பமானது ஒரே ஒரு கண்டுபிடிப்பைப்பற்றியதாக மட்டுமே இருக்க வேண்டியது. முதலாவது தேவையாகும் அல்லது பொதுவான ஒரு கண்டுபிடிப்பு சம்மந்தப்பட்ட கண்டுபிடிப்புகளின் தொகுப்பாகவும் அது இருக்கலாம். இது 'ஒறுங்கிணைந்த கண்டுபிடிப்பு' என்று அழைக்கப்படுகிறது. இது குறிப்பாக உரிமைகளை வகுப்பதற்கான நகல் தயாரிப்பதற்கு மிகவும் அவசியமானது.

இரண்டாவதாக, விளக்கக்குறிப்புகளில் கண்டுபிடிப்பைப் பற்றிய விவரங்கள் போதுமான அளவு தெளிவாக குறிப்படிப்பட்டு இருக்க வேண்டும். கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டதற்கான நோக்கம் முழுமையாக தெரிவிக்கப்பட வேண்டும். சம்மந்தப்பட்ட துறையில் சாதாரண திறன் கொண்ட ஒருவர் அவ்விவரங்களை கையாளக் கூடியவகையில் அது அமைந்திருக்க வேண்டும். இது அடிப்படை முக்கியத்துவமானது கண்டுபிடிப்பபின் விளக்கக் குறிப்புகளில் உள்ள ஒரு விசயம் புதிய தொழில் நுட்பத்தை மூன்றாவது நபர் ஒருவருக்கு தெரிவிக்கக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் இது மேற்குறிப்பிட்டவாறு இருக்க வேண்டியது அடிப்படையில் அவசியமானதாக உள்ளது. 'இந்த கலையில் சாதாரண திறன் படைத்த ஒருவர்' என்ற சொற்றொடர் இது விசயத்தில் பயன்படுத்தப்படுவதற்கு ஒரு முக்கியத்துவம் உள்ளது. விளக்கக்குறிப்புகளை படிப்பவர் அதுசம்மந்தமான தகவல்கள்,

பின்னணி ஆகியனவற்றை சுலபமாக புரிந்துகொள்ளும் வகையில் நகல் தயாரிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த சொற்றொடர் குறிப்பிடப்படுகிறது. அப்படியில்லாவிட்டால் கண்டுபிடிப்பின் அடிப்படை விவரங்கள் ஒவ்வொன்றையும் தேவையில்லாமல் விரிவாக கூற வேண்டியிருக்கும்.

மூன்றாவதாக, பாதுகாப்பிற்கான வாய்ப்புகளை முடிவு செய்யத்தக்க வகையிலான உரிமைகளை விண்ணப்பம் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

உரிமைகள் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்ககுறிப்புகளின் மூலம் முழுமையாக அறிந்து கொள்ளத்தக்கனவாகவும் இருக்க வேண்டும். காப்புரிமை பாதுகாப்பிற்கும் உரிமை கோரலுக்குமிடையே ஆன விளக்கமாக இது திகழ்ந்து வருவதால் இந்த மூன்றாவது அடிப்படை தேவை முக்கியத்துவம் பெறுகிறது. மூன்றாம் நபர்கள் உரிமைகள் விசயத்தில் தாங்கள் என்ன செய்ய இயலும் அல்லது என்ன செய்ய இயலாது என்பதை அறிந்து கொள்வதற்கு இந்த ஏற்பாடு உதவுவதால் மேற்கண்ட வகையில் முக்கியத்துவம் உடையதாகிறது. கோரப்படும் உரிமைகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு விரிவாகவோ அல்லது ஏற்கனவே அது விவரிக்கப்பட்டிருப்பட்டிருப்பதற்கு மாறாகவோ இருக்கக் கூடாது.

விளக்கக்குறிப்பின் முதல் பகுதி முன்மாதிரியான இரண்டு விசயங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, கண்டுபிடிப்பின் தலைப்பு, மற்றொன்று கண்டுபிடிப்பு சார்ந்துள்ளது தொழில் நுட்ப துறையை பற்றிய விரிவான அறிக்கையாகும். வழக்கமாக இந்த அறிக்கையில் சுருக்கமான அறிமுக பத்தி இருக்கும் இந்த பத்தியானது 'இந்த கண்டுபிடிப்பு சம்மந்தப்பட்ட துறையான ,,,,,' என்று துவங்கும்.

இரண்டாவது பகுதியில் கண்டுபிடிப்பின் பின்னணி விவரிக்கப்பட்டிருக்கும். ஏற்கனவே உள்ள பிரச்சனைகள் அல்லது இடர்பாடுகள் இவற்றை புதிய கண்டுபிடிப்பானது எப்படி வென்று வந்துள்ளது என்பது பற்றி இந்த பகுதியில் குறிப்பிடுவது காப்புரிமை முகவர்களின் பழக்கமாகும். அந்த பிரச்சனைகள் அல்லது இடர்பாடுகளுக்கு ஏற்கனவே இருந்த தீர்வுகள் விவரிக்கப்பட்டிருக்கும். அதன் உதவியுடன் புதிய கண்டுபிடிப்பிற்கும் பழைய தீர்வுகளுக்குமிடையே இருந்த வேறுபாடுகளை தெளிவாக உணர முடிகிறது. இந்தப் பகுதியில் கண்டுபிடிப்பின் நோக்கம் குறிப்பிடப்படுகிறது. அதாவது எதை எட்டுவதற்கு கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கும். கண்டுபிடிப்பைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கு இரண்டாவது பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விசயங்கள் உதவுகின்றன. 'நிகழ்த்தப்பட்ட கலை'க்கு மாற்றான ஒன்றினுள்ளும் இவ்விவரங்கள் வைக்கப்படுகிறது.

கண்டுபிடிப்பினைப்பற்றிய விவரங்களின் உடனடியாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில் மூன்றாவது பகுதி அவைகளை தொகுத்துக் கூறுகிறது. கண்டுபிடிப்பைப் பற்றிய விவரங்களை காப்புரிமை முகவர் முத ல் பொதுவான வடிவத்தில் தான் தருவார். இப்பகுதியில் கூறப்பட்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் பிரதானமான உரிமை கோரல்கள் எழுகின்றன என்று எதிர்பார்ப்பதால்தான் அவர் இவ்வாறு தருகிறார். கண்டுபிடிப்பைப் பற்றி விளக்கப்படுவற்றிற்கும் உரிமைகோர ல் விவரிக்கப்பட்டுள்ளனவற்றிற்கும் இடையே பிரச்சனை எழாம ருப்பதற்கு அவர் இந்த யுக்தியை கையாள்கிறார். பொது வடிவத்திலான இந்த விவரங்கள் வரிசையான பாராக்கள் வடிவத்தில் வழங்குவதுதான் வழக்கம். கண்டுபிடிப்பின் சிறப்பம்சங்களின் வகைகளை பிரித்தரிய இது உதவுகிறது. இந்த பாராக்கள் சார்ந்திருப்பவரின் உரிமைகளின் அடிப்படையி ருப்பது வழக்கம். விரிவான உரிமையின் அடிப்படையில் இது வருகிறது.

விளக்கக்குறிப்புகளின் நான்காவது பகுதியில் இரண்டு விசயங்கள் உள்ளன. துள்ளியமான வரைபடங்களின் விரிவான விளக்கம், மற்றும் ஒன்றும் அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலுள்ள கண்டுரைத்தக்க வடிவங்களினைப் பற்றிய விளக்கம் ஆகியன ஆகும்.

கண்டுபிடிப்பினைப் பற்றி விவரிக்கும் விளக்கங்களை அறிய வரைபடம் பெரிய அளவிற்கு உதவுகிறது. ஒருவேளை கண்டுபிடிப்பானது எந்திர வடிவில் காணத்தக்கதாக இருக்குமெனில் உதாரணத்திற்கு வரைபடங்களானவை திட்டத்தை எடுத்துரைப்பதாகவும், முகப்புத் தோற்றம் பக்கத்தோற்றம் ஆகியவற்றை காட்டக்கூடியதாகவும் இருக்கும். வரைபடத்தின் விவரிக்கப்பட்ட பகுதிகள் எண்களால் வரைபடத்தில் குறியிடப்பட்டிருக்கும் இந்த எண்கள் கண்டுனரத்தக்க வடிவங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

கண்டுபிடிப்பானது மின்சார இணைப்புச் சுற்று பற்றியதாக இருக்கும்போது அந்த சுற்றின் பல்வேறு பாகங்கள் அல்லது பகுதிகளை சுட்டிக்காட்ட வரைபடங்கள் பயனுள்ள வகையில் உபயோகமாகின்றன. சுலபமாக குறிப்பதற்காக இந்த பாகங்கள் மற்றும் பகுதிகளுக்கு மீண்டும் எண் அடையாளம் இடப்படுகின்றன. சாரணமாக வரைபடங்களில் சொற்றொடர் விசயங்கள் இருப்பதில்லை. வரைபடத்தின் கோடுகளை மறைக்காத வகையிலான தனிச்சொல் விவரிப்பு வார்த்தைகள் உபயோகிப்பதற்கு விலக்கு உள்ளது. எனவே மின்இணைப்புச் சுற்றைப் பற்றியதான எந்த ஒரு வரைபடத்திலும் உதாரணத்திற்கு நிலையான பாகங்கள் பெட்டிகளாக வரையப்பட்டு அடையாளமாக காட்டப்படுகின்றன. அதேபோல தயாரிப்பு முறை சார்ந்த கண்டுபிடிப்புகளை அல்லது தொடர் நடவடிக்கைகளை குறிப்பிடுவதற்கான வரைபடத்தையோ எடுத்துக் காட்டுவதாக உள்ளது. மேலும் அதனுள் அமைந்த பகுதிகள் அல்லது பெட்டிகள் பொறுத்தமான கண்டுபிடிப்பானது ரசாயணத்துறை சார்ந்ததாக இருக்கும்போது சித்திரமான குத்துக்கோட்டு வரைபடமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக உலோகவியல் இயல்புனுடைய கண்டுபிடிப்பு எனில் படமானது வளர்ச்சி நிலைகளைக் குறிக்கிற வரிவடிமாக இருக்கலாம்.

கண்டுணரத்தக்க பண்புறுவடிவத்தின் விளக்கக்குறிப்புகளை கண்டுபிடிப்பின் உண்மையான இயங்குமுறைகளை விரிவாக விவரிக்கிற வரிகளுக்குள் இணைப்பது வழக்கமானதாகும். உதாரணத்திற்கு கண்டுபிடிக்கப்பட்ட பொருளானது எந்திரமாகவோ அல்லது ஒரு மின் இணைப்புச் சுற்றாகவோ இருக்கலாம், அது எந்த விதத்தில் இயங்குகிறது என்று காட்டுவது கண்டுபிடிப்பை

புரிந்து கொள்ள மிகவும் உதவிகரமாக உள்ளது. காப்புரிமை பெற்றுள்ள ஒன்றுக்கு உரிமை கோரல்கள் என்பன மையமான ஒன்று அல்லது இதயத்தைப்போன்றது. காப்புரிமையால் வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைக்குள்ள வாய்ப்பை காப்புரிமையின் பயன்பாடான பாதுகாப்பை வரையறுக்கிறது.

உரிமை கோரல் சம்மந்தப்பட்ட வார்த்தைகளை அமைக்கும்போது அது அந்த கண்டுபிடிப்பைப் பற்றிய தொழில்நுட்ப சிறப்பம்சங்கள் பற்றிய நிபந்தனைகள் விளக்கக்குறிப்பில் தெரிவிக்கப்படுவதோடு அதில் வர்த்தக ரீதியாக எந்தவிதமான சாதகத்தையும் தந்துவிடாத அளவிற்கு விண்ணப்பத்தை தயார் செய்ய வேண்டியது காப்புரிமை முகவருக்கு முன்னுள்ள வேலையாகும்.

காப்புரிமை முகவரால் தயாரிக்கப்படும் உரிமைகளின் தொடர்கள் பொதுவாக முக்கியமான பெரிய உரிமையோடு தொடங்கி சுறுக்கமான வடிவிலான ஏராளமான உரிமைகள் அடங்கியிருக்கும். விண்ணப்பம் தயாரிக்கப்படும் போது அறியப்பட்டிருந்த

நிகழ்த்தப்பட்ட கலையை தவிர்ப்பதற்காக பெரிய உரிமையானது இப்படி தயாரிக்கப்படுகிறது. காப்புரிமை முகவர் பெரிய உரிமையை தொடர்ந்து உரிமைகளை சுறுக்கமாகவும் நம்பிக்கை அளிக்கும் வகையிலும் தயாரிப்பதால் வலுவான உரிமையானது காப்புரிமை அலுவலகத்தில் விண்ணப்பத்தோடு சேர்த்து சமர்ப்பிக்கப்படும் எந்த ஒரு மிகவும் பொருத்தமான நிகழ்த்தப்பட்ட கலையினது எதிர்ப்பிற்கு இடையேயும் தாங்கி நிற்க்கிறது அல்லது மூன்றாவது நபர்களிடமிருந்து வரும் எதிர்ப்பு அல்லது மதிப்பிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை வெற்றி கொள்ளத்தக்கதாகவும் விளங்குகிறது.

கூடுதலான கண்டுபிடிப்பு பற்றிய சில விவரங்கள் தொடர் உரிமைகள் அனைத்திலும் அழுத்தமாக குறிப்பிட வேண்டியது அந்த தொடர் கண்டுபிடிப்பை பலப்படுத்தும்.

பிரதானமான பெரிய உரிமைகக்கு பின்னர் வரும் சுருக்கமான உரிமைகளானவை முன்னர் கூறப்பட்ட ஒன்று அல்லது பல உரிமைகளை மீண்டும் திருப்பிப் பார்க்கதக்கவையாக இருப்பது வழக்கம்.

ஆனால் இவை சார்பு உரிமைகள் என்று அழைக்கப்படுகிறது. சார்பு உரிமைகளில் அறிமுகப்படுத்தப்படும் சிறப்பம்சங்களைப்பற்றிய விவரங்கள் ஏதாவது ஒரு வடிவத்தில் அறிந்து கொள்ளத்தக்கதாக விளக்கக்குறிப்புகளில் காணப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இவை விரும்பத்தக்க சிறப்பம்சங்களாக கருதப்படுகிறது. கண்டுபிடிப்பின் மேம்பட்ட தொழில் நுட்ப வடிவத்தை இவை வழங்குகின்றன.

சுருக்கமான விளக்கமானது மேற்கண்டவகையில் இருக்க வேண்டும் என்பது வழிகாட்டுக் கொள்கையாகும். அப்படி தயாரிக்கப்பட்ட சுருக்கமான விளக்கமானது குறிப்பிட்ட கலையினூடே சென்று ஆராய்ச்சி செய்வதற்கான கருவியாக திகழவேண்டும். எனவே வெளியிடத்தக்க சுருக்கமான விளக்கமானது அனுமதிக்கப்பட்ட 50 முதல் 150 வார்த்தைகள் என்ற அளவிற்குள் அடங்கத்தக்கதாக இருக்க வேண்டும்.

## 5) புதிய விண்ணப்பம் தயாரித்தல்:

காப்புரிமை அலுவலகத்தில் விண்ணப்பம் சமர்பிக்கப்பட்ட உடனேயே விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்ட நாளிற்கு தேவையான எல்லா விவரங்களையும் அது உள்ளடக்கி இருக்கிறதா என்று சரிபார்க்கப்படுகிறது. அடிப்படை சோதனையின் போது விண்ணப்ப பூர்த்தி நாள் குறிப்பிடப்படவில்லை என்று நிறுவப்பட்டால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படவில்லை என்று கருதி அதன் பேரில் வேறு நடவடிக்கைகளை கைவிட்டு விடலாம். பொது திட்டத்தின் கீழ் வரும் பொருள்களுக்கு விண்ணப்ப பூர்த்தி தேதி அவசியமானதாகும். காப்புரிமையின் காலம், எங்கே அது பொறுந்துகிறது என்பன போன்ற குறிப்பிட்ட நடவடிக்கைகள் எந்த தேதியி ருந்து கணக்கிலெடுத்துக் கொள்ளப்படகிறது என்பதை நிறுவுகிறது. அறிவுச் சொத்துரிமை பாதுகாப்பு சம்மந்தமான பாரிஸ் சிறப்பு மாநாட்டு சரத்துகளின் அடிப்படையில் வேறொரு நாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இதே போன்ற விண்ணப்பங்களின் தேதிகளோடு ஒப்பிட்டு முன்னுரிமையை நிர்ணயிக்க இது உதவுகிறது.

பொதுத் திட்டத்தின் கீழ்வரும் பொருள்களின் விசயத்தில் முன்னுரிமை தேதி ஒன்பதும் முக்கியமானது. தேசம் அல்லது மண்டலம் அல்லது சர்வதேச அடிப்படையில் 12 மாதங்களுக்கு குறையாத அளவில் முன்கூட்டியே சமர்பிக்கப்பட்ட விண்ணபத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறத.

ஒரு நேரத்தில் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்ட தேதியானது முன்கூட்டியே ஒன்று என்பதற்கு இது உறுதுணையாக இருக்கிறது. கண்டுபிடிப்பின் புதுப்புனைவு மற்றும் கண்டுபிடிப்பு படிநிலையை நிகழ்த்தப்பட்ட கலையோடு ஒப்பிட்டு மதிப்பிட உதவுகிறது என்ற வகையில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகிறது.

பாரிஸ் சிறப்பு மாநாட்டு பிரதிநிதி நாடுகளைப் பொருத்தவரை சம்மந்தப்பட்ட உரிமை அல்லது முன்னுரிமையானது இந்நாடுகளுக்கு மட்டுமே கிடைக்கும் என்பதை குறிப்பிட வேண்டியது அவசியமானது. அதே நேரத்தில் பாரிஸ் சிறப்பு மாநாட்டு பிரதிநிதிகளல்லாத ஆனால் பரஸ்பரம் நல்லுறவு கொண்டுள்ள இரு நாடுகள் தங்கள் தேசிய சட்டங்கள் சிலவற்றின் அடிப்படையில் முன்னுரிமைக்கான உரிமைகளை வழங்கிக்கொள்ளலாம்.

ஒரே நேரத்தில் பல நாடுகளில் பாதுகாப்பை எதிர்நோக்கும் விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை கோருவதற்கு உள்ள உரிமை நடைமுறையில் மிகப்பெரிய சாதகமாக உள்ளது. தனது விண்ணப்பங்கள் அனைத்தையும் விண்ணப்பதாரர் தனது நாட்டில் மட்டும் சமர்ப்பிக்க வேண்டுமென்பதில்லை. அதே நேரத்தில் வெளிநாடுகிளலும் சமர்ப்பிக்கலாம். எந்த ஒரு நாட்டில் தனது கண்டுபிடிப்பிற்கு பாதுகாப்பு தேவையோ அங்கே அவருக்கு 12 மாத அவகாசமிருக்கும்போது விண்ணப்பிக்கலாம். இந்த காலகட்டத்தை கவனமாக

பயன்படுத்துவதன் மூலம் தனக்கு விருப்பமான பல்வேறு நாடுகளிலும் பாதுகாப்பை பெறுவதற்கான நடிவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியில் முன்னுரிமை தேதியும் முடிவானவுடன் காப்புரிமை அலுவலகமானது அதை பரிசீ க்கத் துவங்குகிறது. பின்வரும் விசயங்கள் குறித்து அவ்வலுவலகம் கூடுதல் கவனம் செலுத்துகிறது.

அ) விண்ணப்பத்தின் அமைப்பை ஆராய்தல்

ஆ) தேடுதல்

இ) விண்ணப்பத்தின் சாரத்தை ஆராய்தல்

இந்நடவடிக்கைகளின்போது,காப்புரிமைஅலுவலகத்திற்கும்விண்ணப்பதாரருக்குமிடையே சாதாரணமாக எழுத்து வடிவில் கருத்தப் பரிமாற்றம் நடைபெறுகிறது. இந்நிலையில் காப்புரிமை முகவரானவர் காப்புரிமை அலுவலகத்தில் தெரிவிக்கப்படும் கருத்துகளை பெற்றுக் கொண்டு விண்ணப்பதாரரை அ னுகி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார். விண்ணப்பதாரரின் வழிகாட்டுதல்களை பெற்றுக் கொண்டு அதை காப்புரிமை அலுவலகத்திற்கு ஏற்ற வடிவத்தில் அவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கிறார்.

## அ) விண்ணபத்தின் அமைப்பை ஆராய்தல்:

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளில் இருந்து எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக அதன் அமைப்பு ஆராயப்படுகிறது. இவ்வாய்வில் கீழ்க்கண்ட விசயங்கள் ஆராயப்படுகின்றன:

பிரதிநிதித்துவப்படுத்தும் துறை, வேண்டுகோளின் சுருக்கமான விளக்கம், கண்டுபிடிப்பாளரைச் சார்ந்த அறிக்கை, விளக்கக்குறிப்புகளை கட்டுப்படுத்தும் பருப்பொருள் ரீதியான தேவைகள், உரிமை கோரல்கள், வரைபடங்கள் மற்றும் விண்ணபத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாரம் ஆகியனவாகும். விண்ணபத்தின் அமைப்பு முறைக்கு ஏற்ப அமையாத குறைபாடுகள் ஆய்வின்போது தெரிய வந்தால் அதை சரிசெய்வதற்கு விண்ணபதாரருக்கு வாய்ப்பு வழங்கப்படும்., குறிப்பிட்ட காலத்தில் அக்குறைபாடு திர்க்கப்படாவிட்டால் அவ்விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுவிடும்.

## ஆ) தேடுதல்:

தக்க சட்டத்தில் தரப்பட்டுள்ள நடைமுறைகளின் கீழ் தேடுதல் நடைபெறவேண்டும். அது தனியாகவும் நடைபெறலாம் அல்லது முன்னுரிமையின் அடிப்படையிலும் நடைப்பெறலாம் அல்லது அதே நேரத்தில் விசயத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் நடைபெறலாம். மற்றொரு விசயத்தில் கண்டுபிடிப்பு சம்மந்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட துறையில் 'நிகழ்த்தப்பட்ட கலை' இருக்கிறதாஎன்பதை நிறுவ தேடுதல் நடத்தப்படுகிறது. தேடுதல் நடவடிக்கையின்போது சமர்ப்பிக்கப்ட்ட விண்ணபத்தில் விவரிக்கப்பட்டுள்ள தீர்வைப்போன்ற தீர்வுகள் காப்புரிமை அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள வேறுபல பத்திரங்களில் உள்ளனவா என்று தேடிப்பார்த்து உறுதிப்படுத்துக கொள்ளலாம்.

முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தனிப்பட்ட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளும்போது, தேடுதல் சம்மந்தப்பட்ட அறிக்கையையும் விண்ணபத்தோடு சேர்த்து திருப்பி அனுப்ப வேண்டும்.

- தேடுதல் நடவடிக்கையின் போது விண்ணப்பபிக்கப்பட்ட கண்டுபிடிப்பை மிகவும் ஒத்ததாகவோ அல்லது மூல விசயத்தை வெளிப்படுத்தக்கதாகவோ உள்ள பத்திரங்கள் தென்படக்கூடும்; மேலும்

- விண்ணபத்தில் கோரப்பட்ட உரிமைகளை ஏற்கனவே காப்புரிமை அலுவலகத்தில் உள்ள பத்திரங்களில் குறிப்பிட்டுள்ளவைகளோடு ஒப்பிட வேண்டும்.

என்னென்ன வாய்ப்புகளின் அடிப்படையில் தேடுதல்கள் நடத்தப்பட்டது என்பதையும் சம்மந்தப்பட்ட தொழில் நுட்பத்தின் எந்த குறிப்பிட்ட பகுதிகள், எக்காலகட்டத்திற்கு உட்பட்ட பகுதிகள், எவ்வகையான பத்திரங்கள் தேடுத ல் ஈடுபடுத்தப்பட்டன என்பதையும் அலுவலகம் அனுப்பிவைக்கும். அறிக்கையில் தெரிவிக்க வேண்டும்.

காப்புரிமை பத்திரங்களின் தொகுப்பில் தேடுதல் நடத்தப்படுவதால் இது பத்திரங்களினடிப்படையிலான தேடுதலாக உள்ளது. எனவே அவைகள் முத ல் தொழில் நுட்பத்தின் குறிப்பிட்ட பகுதிகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன

இந்த காப்புரிமை பத்திரங்களுக்கு உறுதுணையாக தொழில்நுட்ப பத்திரிக்கைகளின் கட்டுரைகள் மற்றும்
அதுபோன்ற விவரங்களைக் கொண்டுள்ள காப்புரிமை பெறாத பத்திரங்களையும் பயன்படுத்தப்படுகிறது. இந்த பத்திரங்களின் தொகுப்பு 'தேடுதலுக்கான கோர்வை' என்று அழைக்கப்படுகிறது.
தேடலுக்கான கோர்வையில் உள்ள பத்திரங்களில் மட்டுமே காப்புரிமை அலுவலகம் தேடுதல் நடத்த வேண்டும். வெளியிடப்பட்டவைகளில் வெளியீடுகளை (டன்க்ஷப்ண்ஸ்ரீஹற்ண்ர்ய்ள்)த் தவிர வேறெதற்கும் தேடுதல் நடவடிக்கைகளை நீடிக்கப்படுவதில்லை. இது விசயத்தில் வெளியிடப்பட்ட தகவல்கள் பொது உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டியதில்லை வெளியிடப்பட்ட இப்படிப்பட்ட தகவல்கள் எதுவானாலும் அவற்றின் தனித் தன்மையை கருத்தில் கொண்டு மட்டுமே ஆய்வு செய்யப்பட வேண்டும். அதுவும் நடவடிக்கை கோரும் மூன்றாம் நபர்கள் அதை காப்புரிமை அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டுவரும்போது மட்டும் அவ்வாறு ஆய்வு செய்யப்படுகிறது

தேடுதல் நடவடிக்கையானது கண்டுபிடிப்புடன் நேரடியாக சம்மந்தப்பட்ட தொழில் நுட்பத்துறையில் மட்டுமே முத ல்

முழுமையாக நடைபெறும். அதற்குப் பிறகு அதை ஒத்த துறைகளுக்கு நீட்டிக்கப்படும். ஆனால் அப்படிப்பட்ட ஒவ்வொரு விசயத்திலும் தேடுதல் நடத்த வேண்டுமா என்பதை ஆய்வாளர்தான் முடிவு செய்வார்.

அப்படிப்பட்ட தேடுத ல் கிடைத்த விவரங்களை நேரடியாக சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப துறையில் மேற்கொள்ளப்படும் தேடுதல் முடிவுகளுடன் இணைக்க வேண்டும். ஒருவேளை தேடுதல் முடிவில் நேரம் வீணானது தான் மிச்சம் என்ற நிலை ஏற்படும். இச்சூழ்நிலை ஏற்பட வேறு காரணங்களும் உள்ளன. விவரங்களை வகைபிரிக்கும் போதும், தகவல்களை சீர்செய்யும் முறையிலும் தவிர்க்க இயலாது ஏற்படும் குறைபாடுகளே இதற்கு காரணம். தேடுதல் நடிவடிக்கைகளுக்கான செலவுகளை குறிப்பிட்ட அளவிற்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று பொருளாதார ரீதியிலும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

- சாரத்தின் அடிப்படையில் ஆராய்தல்

சாரத்தின் அடிப்படையில் ஆராயும் நடைமுறையானது காப்புரிமைக்கான குறிப்பிட்ட நிலைகளை திருப்திபடுத்தக்கூடிய வகையில் விண்ணப்பம் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்காகும். சுருக்கமாக கூறுவதெனில் கீழ்கண்டவற்றின் அடிப்படையில் காப்புரிமை வழங்கப்படுவதை தடுக்கப்படுகிறது.

- சட்டத்தின் குறிப்பிட்ட சரத்துக்களின் மூலம் சம்மந்தப்பட்ட கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை வழங்கப்படுவதை தடுப்பது.

- கண்டுபிடிப்பு புதியதாக இல்லாதிருந்தல், கண்டுபிடிப்பு படிநிலைக்கு உட்பாதிருத்தல் என்ற நிலைகளில் காப்புரிமை வழங்கப்படக் கூடாது.

- விண்ணப்பத்திற்கு தேவையான இயற்பியல் ரீதியான ஏற்பாடுகள் செய்யப்படாதிருந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

விண்ணப்பத்தின் அமைப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆய்வின்போது எழும் ஆட்சேபனைகளை அகற்ற விண்ணப்பதாரருக்கு வாய்ப்பளிக்கப்படும். அந்த வாய்ப்பை பயன்படுத்தி கண்டுபிடிப்பின் சாரத்திற்கு ஏற்ப சரிபடுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு அவருக்கு கொடுக்கப்பட்ட காலத்திற்குள் சரி செய்யாவிட்டால் காப்புரிமை அலுவலகம் அவருக்கு காப்புரிமை மறுக்கலாம்.

விண்ணப்பதாரர் மற்றும் பொதுமக்களுக்கு நன்மையளிக்கும் நோக்கில் அந்த விண்ணப்பத்தை திருத்துவதற்கு வாய்ப்பு உள்ளது. குறைபாடுகளை அகற்றவதுடன் முன்னதிலும் மேலான காப்புரிமை வழங்கப்படுகிறது. விளக்கக்குறிப்புகளை தெளிவாக்குவதற்கான திருத்தங்கள் செய்வதன் மூலம் கண்டுபிடிப்பை பற்றிய நல்ல விளக்கங்களை தரமுடியும். காப்புரிமை பாதுகாப்பிற்கான துள்ளியமாக விளக்கமாகவும் அது திகழும்.

எல்லா திருத்தங்களும் அனுமதிக்கத் தக்கவையல்ல. காப்புரிமை கோருவதற்கான மூலவிண்ணப்பத்தின் விளக்கக் குறிப்புகளுக்கு அப்பாற்பட்ட பொருளில் உள்ள திருத்தங்களும் அனுமதிக்கத்தக்கவையல்ல என்பது பொது விதியாகும்.

காப்புரிமைச் சட்டத்தின் நோக்கம் கண்டுபிடிப்புகளை பாதுகாப்பதற்கானது என்பதை மனதில் கொண்டு செயல்படும்போது சம்மந்தப்பட்ட விண்ணப்பத்தின் மீதான ஆய்வின் முடிவுகள் தெளிவான பின்னரே அப்படிப்பட்ட குறைபாடுடைய விண்ணப்பங்களை காப்புரிமை அலுவலகம் தள்ளுபடி செய்யவேண்டும். தனக்கு சாதகமாக தீர்க்கப்படவேண்டியது குறித்து, விண்ணப்பதாரருக்கு வருமானால் அதன் மதிப்பு அல்லது காப்புரிமை ஆகியவற்றை நீதிமன்ற தீர்ப்புகள் வாயிலாக பெறுவது வழக்கம்.

## 6) அனுமதியும் வெளியீடும்:

விண்ணப்பதாரருக்கு சாதகமாக ஆய்வு நடைமுறைகள் முடிவுறும்போது அதாவது விண்ணப்பத்தின் அமைப்பு போதுமான விவரங்களை உள்ளடக்கியதாகவும், சாரம் முழுமையடைந்தாலும் இருக்கும் போது, எதிர்ப்புகள் ஏறும் பதிவு செய்யப்படாத நிலையில், அல்லது எழுப்பப்பட்ட எதிர்ப்புகள் தோல்வியடைந்த நிலையில், காப்புரிமை அலுவலகமானது விண்ணப்பத்தின் மேல் காப்புரிமை வழங்கலாம். காப்புரிமை அலுவலகத்தின் குறிப்பிடத்தக்க அளவு நடவடிக்கையும் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

முதலாவதாக, காப்புரிமை வழங்கப்பட்டவுடன் அந்த காப்புரிமையினைப் பற்றிய விவரங்கள் காப்புரிமை பதிவேட்டில் மதிக்கப்படுகிறது. காப்புரிமை எண், விண்ணப்பதாரர்/காப்புரிமையாளரின் பெயர் முகவரி, கண்டுபிடிப்பாளரின் பெயர், மூல விண்ணப்பத்தின் எண், விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதி, விண்ணப்பத்தின் குறிப்பிடத்தக்க முன்னுரிமை பற்றிய விவரங்கள், கண்டுபிடிப்பின் தலைப்பு ஆகிய விசயங்களை உள்ளடக்கிய முகப்புப்பட்டியல் பதிவேட்டில் இருப்பது வழக்கம்.

காப்புரிமையை நடைமுறைப்படுத்த உறுப்பு நாடுகளில் ஆண்டுக்கு கட்டணங்கள் செலுத்த வேண்டும். அந்த கட்டணங்களை எப்போது கட்டவேண்டும் என்ற விவரங்களம் உரிமங்களைப் பற்றிய விவரங்களும், ஒப்படைப்புகள் பற்றிய விவரங்களும் பதிவு செய்யப்படும்.

காப்புரிமையாளரின் போட்டியாளர்கள் உள்ளிட்ட மூன்றாம் நபர்களுக்கு பதிவேடு மிகவும் பயன்படும். ஏனெனில் இது காப்புரிமையின் உண்மையான நிலையாட்டை பிரதிபளிக்கிறது. சில நாடுகளில் நீதி மன்றங்களில் சம்மந்தப்பட்ட காப்புரிமையின் மீது வழக்குகள் நடைபெறும்போது சான்றழிக்கப்பட்ட பதிவேட்டுப் பிரதி விசாரணைக்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும்.

இரண்டாவதாக, அலுவலக அறிக்கையில் காப்புரிமை அலுவலகம் வெளியிடுவதன் மூலம் சம்மந்தப்பட்ட காப்புரிமையின்

பொருளடக்கத்தோடு கூடிய குறிப்புகள் கிடைப்பதற்கு ஏதுவாகிறது. இந்த அலுவலக அறிக்கையானது காப்புரிமையின் சுருக்கமான விளக்கம் அல்லது முக்கியமாக கோரப்படும் உரிமை மற்றும் வரைபடங்கள் இருந்தால் அவற்றையும், மிகவும் தெளிவளிக்கக்கூடிய வரைபடங்களையும் கொண்டிருக்கலாம். மூன்றாவதாக, விண்ணப்பதாரருக்கு காப்புரிமை அனுமதிச் சான்றிதழ் வழங்கப்படும் அது. அவருடைய சட்டப்பூர்வமான காப்புரிமையை நிறுவுவதாக திகழுகிறது. அனுமதிக்கப் காப்புரிமையின் நகலும் அவருக்கு வழங்கப்படுகிறது. முடிவாக, தன்னிடமுள்ள காப்புரிமை பத்திரத்தை அச்சிட்ட வடிவத்தில் காப்புரிமை அலுவலகம் வெளியிடுகிறது. இதன் பிரதிகள் காப்புரிமை நூலகங்களில் கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்கள் நபர்களைப் பொறுத்தவரை கட்டண அடிப்படையில் மூன்றாம் நபர்களுக்கு தகவல்களை பெறக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

மேற்சொன்ன வகையில் காப்புரிமையை தொடர்ந்து அமுல்படுத்த அனுமதிக்கப்பட்ட காலம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்தல் அல்லது பராமரித்தலுக்கான கட்டணத்தை பரிந்துறைக்கப்பட்ட அளவில் செலுத்த வேண்டும்.

ஒரு கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை பெறுவதற்கான பல்வேறு விசயங்கள் மேற்கண்டவாறு விவாதிக்கப்பட்டுள்ளன. காப்புரிமை பெறுவதற்கான திட்டவட்டமான மதிப்பீடுகளோடு கூடிய உதாரணங்களை பார்ப்பது மேலும் ஆர்வமூட்டக்கூடிய ஒன்றாகும். அப்படிப்பட்ட இரு உதாரணங்கள் இணைப்பு ஐ மற்றும் ஐஐ இல் தரப்பட்டுள்ளன.

## 7) காப்புரிமைப் பத்திரத்தின் முதல் பக்கம்

ஒவ்வொரு நாட்டில் உள்ள காப்புரிமை அலுவலகங்களும் தாங்கள் வழங்கியுள்ள காப்புரிமையின் விவரங்களை அதே வடிவத்தில் தகவல்களாக வெளியிடுகின்றன. ஒவ்வொரு நாடும் தங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களில் அதை வெளியிடுகின்றன. அதே போல உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பும் தங்களது ஆய்வின் முடிவில் இதேபோல வெளியிடுகின்றன. ஐரோப்பிய காப்புரிமை அலுவலகமும் இதைப் பின்பற்றுகிறது.

காப்புரிமைக்கான குறிப்பிட்ட விவர அடிப்படைகள் அதற்கென்ற முன்மாதிரியான வடிவங்களில் அமைத்துத் தரப்படுகின்றன. அப்படிப்பட்ட விவர அடிப்படைகளின் முகப்புப் பக்கம் மிகவும் மதிப்புமிக்க தகவல்களை தருகின்றது. அமெரிக்க காப்புரிமை அலுவலகம் ஐரோப்பிய காப்புரிமை அலுவலகம் பி.சி.டி. (டஇப) ஆகியனவற்றின் முன்மாதியான பக்கங்கள் தகவல்களுக்காக கீழே தரப்படுகின்றன.

### 7.1: அமெரிக்க காப்புரிமை:

முகப்புப் பக்கம் (பக்கம் -1) கீழ்கண்ட தகவல்களைக் கொண்டுள்ளது.

அ) அமெரிக் காப்புரிமை எண், கண்டுபிடிப்பாளர் பெயர் வழங்கப்பட்ட தேதி
ஆ) காப்புரிமையின் பெயர்
இ) கண்டுபிடிப்பைப் பற்றிய சுருக்கமான - மற்றும் விரிவான விளக்கங்கள்
ஈ) கண்டுபிடிப்பாளர் பெயர், உடன் பணியாற்றியவர், விண்ணப்ப எண், விண்ணப்பபிக்கப்பட்ட தேதி
உ) சம்மந்தப்பட்ட அமெரிக்க விண்ணப்ப விரங்கள்
ஊ) மேற்கொள் குறிப்புகள்
எ) அமெரிக்க தேசிய வகைப்படுத்துதல் அதே போல சர்வதேச காப்புரிமை வகைப்படுத்தல்

### 7.2: பி.சி.டி. (PCT)

முகப்பு பக்கம் கீழ்க்கண்ட விவரங்களை கொண்டுள்ளது.

அ) சர்வதேச காப்புரிமை வகைப்படுத்துதல், வெளியீட்டு எண், தேதி
ஆ) சர்வதேச விண்ணப்ப எண்
இ) சர்வதேச ரீதியில் விண்ணப்பிக்கப்பட்ட தேதி:
ஈ) முன்னுரிமைத் தேதி
உ) விண்ணப்பதாரர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் பெயர்கள்
ஊ) அதிகாரபூர்வ நாடு
எ) சர்வதேச தேடல் அறிக்கை - குறிப்பு 2 தவிக்காக மட்டும்
ஏ) காப்புரிமையின் பெயர்
ஐ) வரைபடத்துடன் சுருக்கமான விளக்கங்களும், வரைபடங்களுக்கான விரிவான விவரங்களும் கொடுக்கப்பட்டிருத்தல்

### 7.3: ஐரோப்பிய காப்புரிமை முகப்புப் பக்கம்:

அ) காப்புரிமையின் பெயர்
ஆ) காப்புரிமை எண்
இ) வெளியீட்டு தேதி
ஈ) கண்டுபிடிப்பாளர் பெயர்
உ) விண்ணப்பதாரர் பெயர்
ஊ) விண்ணப்பத்தின் எண்
எ) முன்னுரிமை எண், தேதி:
ஏ) சர்வதேச வெளியீட்டு வகைப்படுத்தல்
ஐ) பிரதிநிதித்துப்படுத்துபவர் பெயர்

ஒ) ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்ட நாடுகள்

ஓ) விரிவாகத்தில் நியமிக்கப்பட்ட நாடுகள்

ஔ) காப்புரிமை மற்றும் வரைபடத்தைப் பற்றிய விரிவான விளக்கங்கள்ள

### 7.4: ஜப்பான்:

ஜப்பான் காப்புரிமைக்கான சுருக்கப் பக்கமும் (பக்கம் -22) தரப்பட்டுள்ளது. கண்டுபிடிப்பு காப்புரிமைகளின் பிரச்சனைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் என்ற வகையில் இது தரப்பட்டுள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 7.5: இந்தியாவில் அரசு அறிக்கை வெளியீடு:

இந்திய அரசு அறிக்கை வெளியீட்டின் பகுதி ஐஐஐ பிரிவு 2இல் காப்புரிமை அலுவலகத்தின் காப்புரிமைகள் மற்றும் வரைவடிவங்கள் குறித்த தகவல்களும் அறிக்கைகளும் வெளியாகின்றன. அரசு அறிக்கை வெளியீட்டின் முதல் பக்கத்தின் பிரதி பக்கம் 23இல் தரப்பட்டுள்ளது. பொதுவாக அதில் கீழ்வரும் தகவல்கள் உள்ளன.

### அ) காப்புரிமை அலுவலகங்களின் அதிகார எல்லைகளும் முகவரிகளும்:

இதில் முக்கியமாக கல்கத்தாவில் தலைமை அலுவலகம் செயல்படுகிறது. சென்னை, மும்பை மற்றும் டெல் யில்கிளை அலுவலகங்கள் செயல்படுகின்றன.

### ஆ) காப்புரிமை அலுவலகத்தில் தாக்கல் செய்வதற்கான காப்புரிமை விண்ணப்பம்

தலைமை மற்றும் கிளை அலுவலகங்களில் விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கான விவரங்கள் இதில் உள்ளன. பி.சி.டி.யின் கீழ் தேசிய நிலையினடிப்படையில் விண்ணப்பிப்பதற்கான விவரங்களும் உள்ளன.

### இ) முழுமையாக்கப்பட்ட விளக்கக்குறிப்புகள் ஏற்கப்படுகிறது

ஒவ்வொரு விளக்கக் குறிப்பினதும் வகைப்படுத்துத ன் விவரங்களை இப்பிரிவு தருகிறது. இந்திய வகைப்படுத்தல் மற்றும் சர்வதேச வகைப்படுத்துத ன் முறைகளின் கீழ் மேற்கண்டவை இருக்க வேண்டும். காப்புரிமை வழங்கப்பட்டதன் மீது எதிர்ப்பு இருந்தால் சம்மந்தப்பட்டவர்கள் அரசு அறிக்கையில் காப்புரிமை வழங்கப்பட்ட விவரம் வெளியான நான்கு மாதங்களுக்குள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்துவிட வேண்டும் என்றும் இது குறிப்பிடுகிறது.

### ஈ) எதிர்ப்பு நடைமுறைகள்:

ஏற்கனவே காப்புரிமை வழங்கப்பட்டுள்ளதற்கு காப்புரிமை கோரி ஒருவர் விண்ணப்பித்தால் அதற்கு எதிர்ப்பு தாக்கல் செய்வதற்கான விவரங்கள் இதில் உள்ளன.

### உ) காப்புரிமைகள் நிறுத்தம்:

கட்டணம் செலுத்தாததால் காப்புரிமைகளை நிறுத்தி வைப்பது குறித்த விவரங்கள் இதில் உள்ளன.

### ஊ) நிலைநிறுத்துவதற்கான நடைமுறைகள்:

குறிப்பிட்ட காலத்தில் புதுப்பிக்க கட்டணம் செலுத்ததாதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காப்புரிமையை மீண்டும் நிலை நிறுத்துவதற்கான விவரங்கள் இதில் கூறப்பட்டுள்ளன. நிலை நிறுத்த நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான குறிப்புகளும் உள்ளன.

### எ) திருத்தத்திற்கான நடைமுறைகள்:

காப்புரிமை கோருபவரால் சமர்பிக்கப்படும் காப்புரிமை விண்ணப்பத்தின் மீது திருத்தங்கள் மேற்கொள்வதற்கான விவரங்கள் இதில் உள்ளன. அதே போல திருத்தங்களை ஆய்வு செய்து தனது எதிர்ப்பையே இன்ன பிற விவரங்களையோ தெரிவிக்க எவரொருவருக்கும் உரிமை உண்டு என்பது இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

**காப்புரிமையை முத்திரையிடுதல்/அனுமதித்தல்:**

ஏற்றுக் கொள்ளப்பட்டு முத்திரை இடப்பட்டுள்ள காப்புரிமைகளின் எண்ணிக்கையை இது தருகிறது.

### ஏ) வரைவடிவங்கள் பதிவு:

பதிவு செய்யப்பட்ட வரைவடிவங்களைப்பற்றிய விவரங்களை இது தருகிறது. குறிப்பிட்ட காலகட்டத்திற்கு இந்த வரைவடிவங்களை ஆய்வு செய்யக் கூடாது என்று இப்பகுதி குறிப்பிடுகிறது. அனுமதி வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு இது பொருந்தும் என்பது பொதுவானது. வரைவடிவச் சட்டம் சரத்துகளின் கீழ் சிறப்பு அனுமதி பெற்றுள்ளவற்றிற்கு இது பொருந்தாது.

### ஐ) நிராகரிப்பதற்கான நடைமுறைகள்:

காப்புரிமை அலுவலகத்தில் ஆய்வுகளை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணபபங்களை நிராகரிப்பதற்கான விவரங்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

7.6: முகப்புப் பக்கத்தின் முன்மாதிரியான எடுத்துக் காட்டுகள்:

## U-17:

அமெரிக்க காப்புரிமை எண் 6, 257,316, தேதி ஜுலை 10 2001 முகப்புப் பக்கத்தில் காப்புரிமையின் தலைப்பு: 'உருக்கி வார்ப்பதற்கான முதலீடும் உற்பத்தி முறையும்' என்று தரப்பட்டுள்ளது.

## U-18:

2000 ஆண்டு ஏப்ரல் 26 ஐரோப்பிய காப்புரிமை எண் (EP) 09955522 முதல் பக்கத்தில் காப்புரிமைமயின் தலைப்பு 'வார்ப்பு மூலப்பொருளை இருக்குவதற்கான முறையும் பயன்பாடும்' 2ம், வார்ப்பட மண்.

## U-19:

2000 ஆண்டு பிப்ரவரி 10 PCT வெளியீட்டு பொருளடக்கப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண் W0006313இன் தலைப்பு ' புதிய தயாரிப்பு முறையும் வார்ப்பட தூசியின் உபயோகமும்' என்பதாகும்.

## U-20:

2000ஆண்டு பிப்பரவரி 10 டஇப வெளியீட்டு எண்: WO 00/06313இன் தலைப்பு: '

புதிய தயாரிப்புகளும் வார்ப்பட தயாரிப்புகள் உபயோகப்படுத்தும் முறைகளும்'

## U-21:

PCT விண்ணப்ப எண் PCT/AU99/00617இன் மீது மேற்கொள்ளப்பட்ட சர்வ தேடல் அறிக்கையை தருகிறது. அறிக்கையின் பின் தொடர்ச்சியாக இது உள்ளது.

## U-22

2001 ஆண்டு மார்ச் 6 ஜப்பானியர்களது காப்புரிமைகள் எண்: 2001-058252இன் முதல் பக்கத்தில் காப்புரிமையின் தலைப்பு ' மெ ந்த மற்றும் தடித்த பாகங்களைக் கொண்டவற்றை தயாரிப்பதற்கான உருக்கு முறைகள்' என்பதாகும்

# 'டிரிப்ஸ்' பற்றிய கேள்வியும் - பதிலும்

## அத்தியாயம் - 7

### - அறிவுச் சொத்துரிமைகள் என்பன எவை?

தங்களது மூளையில் உருவாகும் படைப்புகளின் மீது மக்களுக்கு உள்ள உரிமைகளே அறிவுச் சொத்துரிமைகள் என்று கருதப்படுகிறது. ஒரு படைப்பாளி தனது (ஆண்/பெண்) படைப்புகளின் மீது குறிப்பிட்ட காலத்திற்கு இவ்வுரிமையை செலுத்த முடியும்.

- அறிவுச் சொத்துரிமையானது இரண்டு முக்கிய பிரிவுகளாக பிரிப்பது வழக்கமாகும்:

### பதிப்புரிமைகளும் அதோடு தொடர்புடைய உரிமைகளும்:

கலை இலக்கியப் படைப்புகளின் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் கலைஞர்களது உரிமைகள், இசைத்தட்டுகள் மற்றும் ஒ பரப்பு அமைப்புகளின் உரிமைகள் படைப்பு திறனுக்கு ஊக்கமளிக்கும் முக்கிய நோக்கத்திலேயே பதிப்புரிமை மற்றும் அதுபோன்ற உரிமைகள் வழங்கப்படுகின்றன.

### தொழில் துறை சொத்துக்கள்:

இதில் (1) வர்த்தக முத்திரைகள், புவியியல் குறியடையாளங்கள் போன்ற தனித்தன்மை வாய்ந்த குறியீடுகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது, மேலும் (2) புதுப்புனைவை தூண்டும் விதத்தில் தொழில் துறை சொத்துக்களான வரைவடிவங்கள் மற்றும் தொழில்நுட்ப உருவாக்கங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இந்த வகையின் கீழ் கண்டுபிடிப்புகள் (காப்புரிமைகளால் பாதுகாக்கப்படுவது) தொழில்துறை வரைவடிவங்கள் மற்றும் வர்த்தக ரகசியங்கள் வருகின்றன.

### 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தைப் பொருத்தவரை ' அறிவுச் சொத்துரிமை' என்பது:

..... ஒப்பந்தத்தின் (பகுதி 1:2) பாகம் 2 பிரிவு 1 முதல் 7 முடிய உள்ளவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அது சார்ந்த உரிமைகள், வர்த்தக முத்திரைகள், புவியியல் குறியடையாளங்கள், தொழில்துறை வரைவடிவங்கள், காப்புரிமைகள், ஒறுங்கிணந்த மின்சுற்று வரைபடங்கள் மற்றும் வெளியிடப்படாத தகவல்களுக்கான பாதுகாப்பு என்பன அடங்கும்.

- உலக வர்த்தக அமைப்பு உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் பொறுந்துமா? உலக வர்த்தக அமைப்பின் எல்லா ஒப்பந்தங்களும் ( ஒரு சில பன்முனை ஒப்பந்தங்கள் தவிர) அவ்வமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு பொறுந்தும் (பெரும்பாலானவை ஒன்றின் கீழ் வருகின்றன). ஆனால் இதன் சரத்துகளை நாடுகள் வெவ்வேறு காலகட்டத்தில் அமுல்படுத்த ஒப்பந்தம் அனுமதிக்கிறது. ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நாளான 1995 ஜூலை 5 1 முதல் உறுப்பு நாடுகள் அமுலாக்கவேண்டிய காலம் வரை இந்த கால தாமதம் கணக்கிடப்படுகிறது. முக்கியமான மாற்றீடுக் காலகட்டம் கீழ் வருமாறு:

உலக வர்த்தக அமைப்பு அமுலுக்குவரும் தேதியி ருந்து ஒரு ஆண்டுக்குள் அதாவது 1996 ஜூலை 1 வரை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மாற்றீட்டு காலம்

### முக்கியமான மாற்றீடுக் காலகட்டம் கீழ் வருமாறு:

உலக வர்த்தக அமைப்பு அமுலுக்குவரும் தேதியி ருந்து ஒரு ஆண்டுக்குள் அதாவது 1996 ஜூலை 1 வரை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மாற்றீட்டு காலம் அனுமதிக்கப்படுகிறது.

வளரும் நாடுகளைப் பொறுத்தவரை ஒப்பந்த சரத்துகளை அமுலாக்க மேலும் நான்கு ஆண்டுகள் (2000 ஜனவரி 1 வரை) அவகாசம் தரப்பட்டுள்ளது. அதற்குள் பாரபட்சமற்ற நடைமுறை போன்ற கொள்கைகளை உள்ளடக்கிய ஒப்பந்தத்தின் பகுதி 3, 4 மற்றும் 5ஐ அமுலாக்க வேண்டும்.

- பொருளாதார மாற்றுக் கட்டத்தில் உள்ள நாடுகள் அதாவது மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதார கொள்கைகளின் கீழ் செயல்பட்டு சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறிவரும் நாடுகளுக்கும் இதே போன்ற கால அவகாசம் தரப்பட்டுள்ளது. (2000 ஜனவரி 1 வரை). இக்காலகட்டத்தில் இந்நாடுகள் குறிப்பிடத்தக்க நிலமைகளை ஒருவேளை கூடுதலாக சந்தித்திருக்கலாம்.

- மிகவும் பின்தங்கிய பொருளாதார நாடுகளுக்கு நீண்ட மாற்றீட்டு கால கட்டம் பதினோறு ஆண்டுகள் (2006 ஜனவரி 1) தரப்பட்டுள்ளன. மேலும் கால நீட்டிப்பு செய்யவும் வாய்ப்புள்ளது.

- பொது மாற்றீட்டு கால கட்டங்களை எந்த நாடுகள் உபயோகப்படுகின்றன?

### 1) வளரும் நாடுகள்

உலக வர்த்தக அமைப்பின் குறிப்பறிவிப்பு இல்லாமலேயே பொது மாற்றீட்டு கால கட்டத்தை உறுப்பு நாடுகள் பின்பற்றிக் கொள்ளலாம். இக்கால கட்டம் முடிந்தவுடன் உறுப்பு நாடுகளின் சட்டங்களை 'டிரிப்ஸ்' குழு பரிசீ க்கிறது. 2000 மற்றும் 2001இல் கீழ்வரும் உறுப்பு நாடுகளின் சட்டங்கள் பரிசீ க்கப்படும் 2000ஆம் ஆண்டு 31ஆம் தேதி காலக் கெடு முடிவடைகிறது. ஆண்டுக்கு பார்புடா, அர்ஜண்டினா, பக்ரைன், பார்படோஸ், பிரேசில், பொ யா, போஸ்ட்வானா, பிரேசில், புனே, ஜெருசலாம், கேமரூன், சினி, கொலம்பியா, காங்கோ, கோஸ்டாரிகா, கோட்டிடி ஜவரி, கியூபா, சைபரஸ், டொமனிகா, மொனிக்க குடியரசு,

எகிப்து, எல்சல்வடார், எஸ்தோனியா, பிஜி, கபோன், கானா, கிரானடா, குவிதிமாலா, கயானா, ஹோண்டுராய், ஹாங்காங், சீனா, இந்தியா, இந்தோனேசியா, இஸ்ரேல்,. ஜமாஸ்கா, கென்யா, கொரியா, குவைத், மக்குவா, மலேசியா, மொரிசீயஸ், மெக்சிகோ, மொராக்கா, நம்பியா, நிகராகுவா, நைஜீரியா, பாகிஸ்தான், பாபுவா நியூகுனியா, பிராகுவே, பெரு, பி ப்பைன்ஸ், போலந்து (96'-98'இல் பரிசீ க்கப்படாத பகுதிகள், கட்டார், செயின் லூசியா, சிங்கப்பூர், இலங்கை, செயின் கிட்ஸ் டுவிஸ், செயின்ட் விண்செண்ட் மற்றும் கிரினாடைன்ஸ், சூரினாம், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, டிரினிடாட்டுபாகோ, டுனிசியா, ஐக்கிய அரபு பேரரசு, உருகுவே, வெனிசுவலா, ஜிம்பாப்பே.

மேற்கண்ட உறுப்பு நாடுகளில் ஒரு சிலவற்றைத் தவிர பெரும்பாலான நாடுகள் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்திற்கு ஏற்ற தேசிய சட்டங்களை 2000 ஜனவரி 1க்குள் உறுவாக்கியுள்ளன.

## 2) மிகவும் பின்தங்கிய நாடுகள்:

ஐக்கிய நாடுகள் சபையால் மிகவும் பின்தங்கிய நாடுகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள நாடுகள் உலக வர்த்தக அமைப்பின் மிகவும் பின்தங்கிய உறுப்பு நாடுகளாக கருதப்படுகின்றன. அப்படிப்பட்ட நாடுகளின் பட்டியல் இங்கே தரப்படுகிறது. இனைய பக்கத்தில் இது குறித்து தற்போது உள்ள பக்கம் வருமாறு:

ஐக்கிய நாடுகள் சபை 48 நாடுகளை மிகவும் பின்தங்கியவை என்று பட்டிய டப்பட்டுள்ளது. அவற்றில் 29 நாடுகள் மட்டுமே தற்போது உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளன.

அங்கோலா, பங்களாதேஸ், பினின், புர்னா, பாசோ, புருண்டி, மத்திய ஆப்ரிக்க குடியரசு, காங்கோ ஜனநாயக குடியரசு, டிஜிபோத்தி, காம்பியா, குனியா, குனியா பிசாவு, ஹெய்தி, விசாத்தோ, மடகாங்கர், மாலவி, மாலத்தீவுகள், மா , மவுரிதானியா, மொம்பிக், மியான்மர், நைஜர், ரவாண்டா, செனகல், சியரா வியோனி, சாலமன் தீவுகள், தான்சானியா, டாகோ, உகாண்டா, ஜாம்பியா.

மிகவும் பின்தங்கிய நாடுகள் பலவற்றின் பெயர்கள் உலக வர்த்தக அமைப்பில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவரங்கள் வருமாறு:

## 3) புது உறுப்பினர்கள்:

1995 ஜனவரி 1ஆம் தேதி உலக வர்த்தக அமைப்பில் உறுப்பு நாடுகளாக இருந்தவற்றின் அரசுகளுக்கு

பொதுவான மாற்றீட்டு காலகட்டங்கள் பொருந்தும். அந்த தேதியில் உலக வர்த்தக அமைப்பு உருவான பின்னால் மேலும் பல நாடுகள் உறுப்பினர்களாக இணைந்துள்ளன. அந்நாடுகள் உலக வர்த்தக அமைப்பின் அதிகாரபூர்வ உறுப்பினர்களாக அங்கீகரிக்கப்பட்ட நாள்முதல் 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தை அமுலாக்க பொதுவாக ஒப்புக் கொண்டு தங்கள் உறுப்பினர் தகுதி பெறுவதற்கான ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு மாற்றீட்டு கால பலன்கள் ஏதும் இருக்காது.

உலக வர்த்தக அமைப்பின் நாடுகள் உறுப்பினர்களாக சேர்ந்த தேதியின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள பட்டியலைக் கொண்டு புதிதாக சேர்ந்துள்ள நாடுகளின் பட்டியல் காணக்கிடுகிறது.

- மாற்றீட்டுக் கால கட்டத்தில் உறுப்பு நாடுகளுக்கு பொறுப்புகள் ஏதாவது நிர்ணயிக்கப் பட்டுள்ளனவா?

நீண்ட அவகாசத்துடன் கூடிய மாற்றீட்டுக் கால கட்டத்தை கொண்டுள்ள நாடுகள் உட்பட எல்லா உறுப்பு நாடுகளும் தேசிய அணுகுமுறை உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் தனிநபர்களை சமமாக நடத்துவதும் (பகுதி-3) மற்றும் மிகவும் வேண்டப்பட்ட நாட்டு அணுகுமுறை (வெளிநாட்டு நிறுவனங்கள் தனிநபர்களை பாரபட்சமின்றி நடத்துதல், பகுதி-4) ஆகியனவற்றை 1996 ஜனவரி 1 முதல் அமுலாக்கக் கடமைப்பட்டுள்ளன.

தொழில் நுட்பத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு தயாரிப்பு காப்புரிமை பாதுகாப்பு ஏற்படுத்திராத வளரும் நாடுகளில் தேவைப்படும்போது மாற்றீட்டு சிறப்பு சட்ட விதிகளை அமுலாக்கலாம்.

மிகவும் குறிப்பாக, வளரும் நாடு ஒன்றில் தயாரிப்பு காப்புரிமை பாதுகாப்பு ஏற்பாடுகளை தொழில்நுட்பத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு ஏற்படுத்தித்தராமல் இருக்கும் போது ( 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் அமுலுக்கு வருகிற 1995 ஜனவரி, 1) அந்நாடு பாதுகாப்பை அறிமுகப்படுத்திய 10 ஆண்டுகள் (2005 ஜனவரி 1 வரை) அவகாசம் தரப்பட்டுள்ளது.

ஆனால் மருந்துகள் மற்றும் வேளாண் ரசாயண தயாரிப்புகளைப் பொறுத்தவரை அந்த நாடானது மாற்றீட்டுக் கால கட்டத்தின் துவக்க நாளி ருந்து மேற்குறிப்பிட்டவற்றிற்கான காப்புரிமை கோரும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இக்காலகட்டம் முடிவிற்குள் எந்த ஒரு காப்புரிமைக்கும் பாதுகாப்பு வழங்கலாமா வேண்டியதில்லையா என்று முடிவெடுக்கப்படாம ருந்தாலும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் (70.8). இதை 'தபால் பெட்டி' சரத்து என்றும் கூறப்படுவதுண்டு மாற்றீடுகால கட்டத்தில் நம்பிக்கையான மருந்துகள் அல்லது வேளாண் ரசாயணப் பொருள்களை விற்பனை செய்ய அனுமதிக்கும்போது குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அந்த தயாரிப்பில் விண்ணப்பதாரருக்கு 5 ஆண்டுகள் விற்பனை சிறப்பு உரிமை வழங்க வேண்டும் அல்லது அத்தயாரிப்பிற்கு காப்புரிமை வழங்கும் நாள் வரை சிறப்புரிமை வழங்க வேண்டும். இதில் எது குறைவான கால கட்டமோ அதற்கு இது பொறுந்தும் (பகுதி 70.8)

மாற்றீட்டுக் கால கட்டத்தில் நம்பிக்கையான மருந்துகள் அல்லது வேளாண் ரசாயணப் பொருள்களை விற்பனை செய்ய அனுமதிக்கும் போது குறிப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அந்த தயாரிப்பிற்கு விண்ணப்தாரருக்கு 5 ஆண்டுகள் விற்பனை சிறப்பு உரிமை வழங்க வேண்டும் அல்லது அத்தயாரிப்பிற்கு காப்புரிமை வழங்கும் நாள்வரை சிறப்புரிமை வழங்க

வேண்டும். இதில் எது குறைவான கால கட்டமோ அதற்கு இது பொறுந்தும் (பகுதி 70.9). மாற்றீட்டுக் கால கட்டத்தை தலைகீழாக பயன்படுத்திவிடக்கூடாது என்பதை 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி 65.5 கூறுகிறது.

மாற்றிட்டுக் கால கட்டத்தை கொண்டுள்ள நாடுகள் (பகுதி 65இன் 1,2,3, அல்லது 4வது பாராக்களில்கூறப்பட்டுள்ளவற்றின்படி) தங்களது சட்டங்களிலும் நடைமுறைகளிலும் ,ஒழுங்கு முறைகளிலும் எதாவது மாற்றங்களை செய்யும் போது அது ஒப்பந்தத்தின் சரத்துகளை விட குறைவான அளவில் இருந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானது.

- 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் அமுலுக்கு வருமுன்னர் பொது சுங்கத்தீர்வை ஒப்பந்தம் (எஅபப 19(77)) தீர்வை ஒப்பந்தத்தின் பன்முனை வர்த்தக ஒப்பந்தத்தில் அறிவுச் சொத்துரிமைகளைப் பற்றி குறிப்பாக ஏதும் சொல்லப்பட்டிருக்கவில்லை

அதே நேரத்தில் பொதுச் சுங்கத் தீர்வை ஒப்பந்தத்தில் இருந்த சில கொள்கைகளின் அடிப்படையில் இறக்குமதிகள் ஏற்றுமதிகள் மீது அறிவுச் சொத்துரிமை அளவீடுகள் பிரயோகிக்கப்பட்டன.

பொதுச் சுங்கத்தீர்வை ஒப்ந்தம் 1947இன் பகுதி ஷ்ஷ்(க்) மற்றும் 1994இன் ஷ்ஷ்(ச்) ஆகியன அறிவுச் சொத்துரிமைகளைப் பற்றி குறிப்பிட்ட வகையில் எடுத்துரைக்கிறது. பொது ஒப்பந்ததிற்கு ஒத்துப்போகதவை

(குறிப்பிட்ட நிலமைகளுக்கு உட்பட்டது) அறிவுச் சொத்துரிமைகளின் சட்டங்கள் ஒழுங்குமுறைகள் ஏனைய விதிமுறைகளுக்கு ஏனைய விதிறைகளுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த சரத்து அனுமதிக்கிறது.

- பன்முனை வர்த்தக முறையில் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பங்கு என்ன?

உலக வர்த்தக அமைப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைப்போன்று பன்முனை வர்த்தக முறையின் ஒறுங்கிணைந்த பகுதியாக அறிவுச் சொத்துரிமைகளை நிலைநிறுத்துவது 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் அடிப்படை குணங்களில் ஒன்றாகும்.

உலக வர்த்தக அமைப்பின் மூன்று ஆதாரக் தூண்களின் ஒன்றாக 'டிரிப்ஸ்'ஒப்பந்தம்

வர்ணிக்கப்படுகிறது. மற்ற இரண்டு பொருள்களின் வர்த்தகம் ( பொதுச் சுங்கத் தீர்வை ஒப்பந்தத்தின் பாரம்பரிய அதிகார எல்லையில் இருந்தது போன்று) மற்றும் சேவைகளின் வர்த்தகம் ஆகியனவாகும்.2.

'டிரிப்ஸ்' என்பது உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் முடிவில் உறுவான ஒற்றை ஒப்பந்தம். அதன் காரணமாக உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் பொறுந்துகிறது. ஒப்பந்தத்தின் சரத்துகள் அனைத்தும் உலக வர்த்தக அமைப்பின் தாவா தீர்வு முறைகளுக்கு இயைந்தது என்பதையும் இது குறிப்பிடுகிறது. இந்த தாவா தீர்வு முறைகள் தாவா தீர்வு உடன்படிக்கையில் உள்ளன. (தவாக்கனை தீர்ப்பதற்கான விதிகளும் நடைமுறைகளும் பற்றிய உடன்படிக்கை)

-'டிரிப்ஸ்' ஒப்பந்தத்திற்கும் முன்கூட்டியே நடந்திருக்கிற சர்வதேச மாநாட்டு முடிவுகளுக்குமிடையே உள்ள உறவு என்ன?

உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் தொழில்துறை சொத்துக்கள் மீதான பாரிஸ்1 சிறப்பு மாநாடு பதிப்புரிமை (இவற்றின் மிகச் சமீபத்திய வடிவத்தில்) பற்றிய பெர்னி சிறப்பு மாநாட்டு முடிவுகளின் உறுதிப்படுத்தப்பட்ட பொறுப்புகளுக்கு உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகள் இணங்கி நடக்க வேண்டும் என்று டிரிப்ஸ் ஒப்பந்தம் வ யுறுத்துகிறது. ஏனைய உறுதி மிக்க கருத்துக்கள் அனைத்தையும் குறிப்புகளாக சேர்க்கப்பட்டுள்ளன. எனவே இக்காரணத்தால் 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் கீழ் உலக வர்த்தக அமைப்பு உறுப்பு நாடுகளின் பொறுப்புகளாகியுள்ளன. அந்நாடுகள் இந்த பிரதானமான சரத்துகளை சக உறுப்பு நாடுகளின் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பொறுத்த வேண்டும்.

இந்த சிறப்பு மாநாடுகளில் முன்மொரியப்படாத பகுதிகள் 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தில் கூடுதல் பொறுப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன. சிறப்பு மாநாட்டில் போதுமான அளவிற்கு எடுத்துரைக்கப்படாத விசயங்களும் 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

எனவே தான் 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் சில நேரங்களில் 'பெர்னி+பாரிஸ்' ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

அறிவுச் சொத்துரிமைகள் சம்மந்தப்பட்ட வேறு சில சர்வதேச ஒப்பந்தங்களின் சரத்துகளும் 'டிரிப்ஸ்' ஒப்பந்த விளக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

- ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளுக்கான அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தின் சரத்துகளோடு கூடிய குறிப்பிடத்தக்க கூடுதல் பொறுப்புகளை ஒறுங்கிணைந்த மின்சுற்றுகள் அமைப்பு வரைபடங்கள் பாதுகாப்பு விசயத்தில் அமுலாக்க வேண்டும் என்று தனது உறுப்பு நாடுகளை உலக வர்த்தக அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

- கலைஞர்கள், இசைத்தட்டு தயாரிப்பாளர்கள் மற்றும் ஒ பரப்பு அமைப்புகளின் உரிமைகள் பாதுகாப்பு சம்மந்தமான சர்வதேச சிறப்பு மாநாட்டு (ரோம் சிறப்பு மாநாடு) சரத்துக்கள் பலவற்றை 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் சுட்டிக்காட்டுகிறது. சிறப்பு மாநாட்டின் உறுதியான சரத்துகளுக்கு இணங்கவும் அவற்றிற்கான பொது தேவைகளை விலக்கிடாதவகையிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பாரிஸ், பெர்னி, ரோம் சிறப்பு மாநாடுகள், மற்றும் ஒறுங்கிணைந்த மின் சுற்றுகள் மீதான அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தம் ஆகியனவற்றின் தொடர்ந்து இருக்கும் பொறுப்புகள் உறுப்பு நாடுகள் தங்களிடையே பயன்படுத்திக் கொள்ளத்தக்கனவாக இருக்கையில் அந்த பொறுப்புகளின் மதிப்பைக் குறைக்கிற வகையில் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பாகம் ஐ முதல் ஐய உள்ள பகுதிகளில் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று அவ்வொப்பந்தத்தின் பகுதி 2இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பு என்றால் என்ன?

1967 ஜுலை 14 ஆம் தேதி நடைபெற்ற சிறப்பு மாநாடு ஒன்றில் உலக அறிவுச் உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் முடிவுகள் 1970 முதல் அமுலுக்கு வந்தது. 1974 முதல் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரிவாக செயல்படத்துவங்கியது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சர்வதேச அறிவுச் சொத்துரிமை அமைப்புகள் அல்லது ஒப்பந்தங்களை கண்காணிக்கிறது. பாரிஸ் மற்றும் பெர்னி சிறப்பு மாநாடுகள் இதில் அடங்கும். உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் நோக்கங்கள் உலகம் முழுவதும் அறிவுச் சொத்துரிமைகளுக்கு பாதுகாப்பு வழங்குவதாகும். ஏனைய சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து சம்மந்தப்பட்ட நாடுகளின் ஒத்துழைப்போடு பொருத்தமான முறையில் இவை அமுலாக்கப்படும்.

பாரிஸ் மற்றும் பெர்னி சிறப்பு மாநாடுகளால் உறுவாக்கப்பட்டுள்ள அறிவுச் சொத்துரிமை அமைப்புகள் பாரிஸ் அமைப்பின் உறுப்பினர்களால் உறுவாக்கப்பட்டுள்ளன துணை ஒப்பந்தங்களிடையே ஒன்றுபட்ட செயல்பாட்டை உறுதிப்படுத்துவதும் உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் நோக்கமாகும்.

பல்வேறு சிறப்பு மாநாடுகளின் கீழ் உறுவாக்கப்பட்ட நிர்வாகங்கள் மையப்படுத்தப்ட்டு உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் 'சர்வதேச செயலகத்தின்' கீழ் மையப்படுத்தப்பட்டுள்ளது. காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள், தொழில்துறை வரைவடிவங்கள் மற்றும் மூலத்திற்கான மேல் முறையீடு போன்ற சர்வதேச ரீதியிலான குறித்து பதிவுகளை இவ்வலுவலகம் மேற்கொள்கிறது. வளரும் நாடுகளுக்கு விண்ணப்பங்கள் ஆலோசனைகள் வழங்குவது, பயிர்ச்சியளிப்பது, தேவையான இணைப்புப் பத்திரங்கள் பற்றி எடுத்துரைப்பது போன்ற வளர்ச்சிக்கான ஒத்துழைப்பை உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பு செய்து வருகிறது.

உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியனவற்றிற்கு இடையே ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஏற்பட்டு 1996 ஜனவரி 1 முதல் அமு ல் இருந்து வருகிறது. மூன்று முக்கிய பகுதிகளுக்கான ஒத்துழைப்பபை ஒப்பந்தம் வ யுறுத்துகிறது.

- தேசிய சட்டங்கள் மற்றும் அவற்றின் நடைமுறைகள் குறித்த அறிவிப்பு, மொழி பெயர்புகள்
- தேசிய சின்னங்கள் பாதுகாப்பிற்கான நடவடிக்கை நெறிமுறைகள்
- தொழில் நுட்ப ஒத்துழைப்பு

உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் முகவரி

WIPO/ 34 Chemin des Colombetters, Geneva

தொலைபேசி எண்; (41 22) 3389111தொலை நகல் (Fax) எண்: (41 22) 7335428

**இணைய தளம் எண்:** (Web site): www. wipo.int.

சர்வசமமான அறிவுச் சொத்துரிமை சட்டத்தின் கீழ் செயல்படுமாறு உறுப்பு நாடுகளை

'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கேட்டுக் கொள்கிறதா?

இல்லை, அறிவுச் சொத்துரிமைகள் பாதுகாப்பிற்கான தனது சரத்துகளில் உள்ளவற்றின் கீழ் குறிப்பிடத்தக்க வரைமுறைகளுக்கு உடன்பட்டு செயல்படுமாற தான் 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் கேட்டுக் கொள்கிறது.

ஆனால் 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தில் கேட்டுக் கொண்டுள்ளதைவிட மிகவும் விரிவான அளவிற்கு பாதுகாப்பு அளிக்கத்தக்க சட்டங்களை உறுப்பு நாடுகள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அதே நேரத்தில் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளை மீறுவதாக கூடுதல் பாதுகாப்பு போய்விடக் கூடாது.

இதனால் தான் 'டிரிப்ஸ்'ஒப்பந்தமானது 'குறைந்த பட்ச அளவுகளை ' கொண்டது என்று சில நேரங்களில் வர்ணிக்கப்படுகிறது.

'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் சரத்துகளை தங்கள் தங்கள் சொந்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பொறுத்தமான முறையில் அமுலாக்குவதற்கான முடிவுகளை எடுக்கும் சுதந்திரத்தையும் உறுப்பு நாடுகளுக்கு 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கூடுதலாக வழங்கியுள்ளது. எனவே தான் உறுப்பு நாடுகளின் வேறுபட்ட சட்ட வடிவங்களை 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. (பொதுச் சட்டத்திற்கும் சமூக சட்ட பாரம்பரியத்திற்கும் இடைப்பட்ட நிலையை எடுத்துக்காட்டாக கூறலாம்)

- காப்புரிமைகளுக்கு கட்டாய உரிமம் வழங்குவதை 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் அனுமதிக்கிறதா? உரிமையாளரின் ஒப்புதல் இன்றி அவரது காப்புரிமையை அரசு உபயோகிக்கவும் கட்டாய உரிமம் வளங்கவும் பிரிவு 31 அனுமதிக்கிறது.

ஆனால் உரிமையாளரின் சட்ட பூர்வ விருப்பங்களை பாதுகாக்கும் நோக்கிலான பல கட்டுப்பாடுகளின் கீழ் தான் மேற்கூறிவற்றை செய்யமுடியும். உதாரணத்திற்கு: (அவசர நிலை இல்லாத போது) உரிமை கோரும் சம்மந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனம் கட்டயாம் முதல் முறையாக கோருபவராக இருக்க வேண்டும். உரிமையாளரின்

நியாயமான வர்த்தக நிபந்தனைகளை பூர்த்தி செய்து தானாக உரிமை பெற முடியாத நிலையில் உரிமையாளருக்கு போதுமான நிவாரணத் தொகையை வழங்கியாக வேண்டும்.

கட்டாய உரிம முறையின் கீழ் சான்றழித்து அனுமதிக்கப்படும் உரிமங்களும் குறிப்பிட்ட தேவைகளை எதிர்கொள்ள வேண்டும். குறிப்பாக இது தனி உரிமை பெற்றதாக இருக்கக்கூடாது. உள்நாட்டு சந்தைக்கு பொருட்களை வழங்குவற்கான தலையாய நோக்கத்தின் அடிப்படையில் பொதுச் சட்டத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டதாக இருக்க வேண்டியது அவசயிமானது.

- பயிர் வகைகளுக்கு காப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்று உறுப்பு நாடுகளை 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கேட்டுக் கொள்கிறது

சில வகை பயிர்கள் மற்றும் விலங்குகள் கண்டுபிடிப்பதற்கான காப்புரிமை வழங்குவதி ருந்து தங்கள் நாடுகளுக்கு விலக்களிக்கும் உரிமை உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மிகவும் குறிப்பாக பயிற்கள் மற்றும் விலங்குகள் தயாரிப்புக்கான கண்டுபிடிப்பதற்கு காப்புரிமை வழங்க வேண்டியதில்லை. நுண்உறுப்பு ஆய்வுகளுக்கு காப்புரிமை வழங்க வேண்டும். விலங்குகள் மற்றும் தாவரங்கள் உறுவாக்குவதற்கான உயிரியல் நடைமுறைகளுக்கு காப்புரிமை வழங்க வேண்டியதில்லை. உயிரியல் சாராத மற்றும் நுண்ணுயிரியல் நடைமுறைகளுக்கு காப்புரிமை வழங்க வேண்டும்.

அதே நேரத்தில், காப்புரிமைகள் அல்லது செயலூக்கம் மிக்க சுய்ஜெனரீஸ் முறை (இந்த காப்புரிமை நோக்கத்திற்காகவே இம்முறை உருவாக்கப்பட்டுள்ளது) அல்லது இவ்விரண்டும் சேர்ந்த நிலைக்கு உறுப்பு நாடுகள் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கூறுகிறது.

பகுதி 27.3 (ஆ)யின் சரத்துகளை ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நான்கு ஆண்டுகள் கழித்து (அதாவது 1998அம் ஆண்டில்) மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் கேட்டுக் கொண்டுள்ளது. ' டிரிப்ஸ்' குழு இந்த பரிசீலனையை மேற்கொள்ள வேண்டும்.

- 'டிரிப்ஸ்'குழுவன் பங்களிப்பு என்ன?

'டிரிப்ஸ்'குழுவில் உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகள் அனைத்தும் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் அமுலாக்கத்தை கண்காணிக்கும் பொறுப்பு இக்குழுவிற்கு உள்ளது. மேலும், குறிப்பாக, இவ்வொப்பந்தத்தின் கீழான பொறுப்புகளை உறுப்பினர்கள் எவ்வாறு கடைப்பிடிக்கின்றனர் எனப்தையும் கண்காணிக்கிறது.

## 1) கண்காணித்தல்:

உறுப்பினர்கள் ஒருவர் மற்றொருவருடைய சட்டங்களை பரிசீலனை செய்தல். ஒப்பந்தத்தின் கீழ் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது பற்றிய பரிசீலையை 'டிரிப்ஸ்'குழுவின் கண்காணிப்பு முறையை மையப்படுத்தி நடத்த வேண்டும்.

ஒவ்வொரு நாடும் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பொறுப்புகளுக்கு இசைவான உள்நாட்டில் சட்டத்தை வகுக்க வேண்டும். ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கால கட்டத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். பெரும்பாலான நாடுகள் இதற்கு ஏற்றாற் போன்ற சட்டங்களை கொண்டுள்ளன.

உறுப்பு நாடுகளின் சட்டங்கள் 'டிரிப்ஸ்'குழுவிற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். ஒருவர் மற்றொருவரது சட்டங்களை பரிசீலனை செய்ய அனுமதிக்கிறது. இதன் மூலம் அறிவுச் சொத்துக்கள் பாதுகாப்புக் கொள்கைகள் வெளிப்படையானதாக உயர்த்தப்படுகிறது.

உறுப்பு நாடுகளின் சட்ட ஏற்பாடுகளை அறிக்கை செய்ய வேண்டியதன் அவசியத்தை 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி 63.2 வ யுறுத்துகிறது. 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளை அமுலாக்கத்தக்க வகையிலான தங்கள் நாட்டு சட்டங்கள் வந்து அவற்றின் நடைமுறைகள் பற்றிய பத்திரங்களின் நகல்களை 'டிரிப்ஸ்'குழுவிடம் சமர்பிக்க வேண்டும்.

இப்படி சமர்பிக்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் உறுப்பு நாடுகளின் சட்டங்களை 'டிரிப்ஸ்'குழு பரிசீ க்கிறது.

பரிசீலனை கூட்டங்களுக்கு முன்பு உறுப்பு நாடுகள் ஒருவர் மற்றொருவர் சட்டத்தின் மீது எழுப்பும் கேள்விகளை எழுத்து வடிவத்தில் 'டிரிப்ஸ்' குழுவிடம் சமர்பிக்க வேண்டும். இதற்கான பதில்களும் எழுத்து வடிவத்தில் வழங்க வேண்டும். இவைகளின் மீதான தொடர் கேள்விகளை கூட்டத்தில் வாய்வழியாக எழுப்பி அதே போன்று பதிலும் பெறலாம். அதற்கு மேலும் தொடர் நடவடிக்கைகள் தேவை என்றால் அடுத்த கூட்டங்களில் பெறலாம்.

## 2) ஆலோசனைகள்:

'டிரிப்ஸ்' பிரச்சனைகளைப் பற்றி 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் அமுல்படுத்தும்போது எழுகின்ற பிரச்சனைகள் சம்மந்தமாக உறுப்பு நாடுகளுக்கிடையே ஆலோசனை நடுத்துவதற்கான அமைப்பாகவும் 'டிரிப்ஸ்'குழு திகழ்கிறது.

ஒப்பந்தத்தின் சரத்துகளை தெளிவுபடுத்த இக்குழு உதவுகிறது. அதே போல பிரசச்னைக்குரியர்வர்களிடையே கருத்துகளை பரிமாற உதவும் அமைப்பாகவும் உள்ளது.

## 3) தொழில் நுட்ப ஒத்துழைப்பு: ஒரு செய்ல திட்டம்:

தொழில் நுட்ப ஒத்துழைப்பு சம்மந்தமாக 'டிரிப்ஸ்'குழு ஒரு செயல்திட்டத்தை அமுலாக்கி வருகிறது. 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி 67இன் கீழான தங்கள் பொறுப்புகளை வளர்ச்சியடைந்த நாடுகள் எப்படி நிறைவேற்றி வருகின்றன என்று இத்திட்டத்தின் கீழ் கண்காணிக்கப்படுகிறது.

தொழில் நுட்ப ஒத்துழைப்பின் மிதான வளர்ச்சியடைந்த நாடுகளின் பொறுப்புகளை இப்பகுதி எடுத்துரைக்கிறது. வளரும் நாடுகள் கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கு தேவைப்படும் தகவல்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று செயல்திட்டம் வ யுறுத்துகிறது. வளரும் நாடுகளது தேவைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தால் அவற்றை கண்டுபிடித்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பையும் வ யுறுத்துகிறது.

4) குறிப்பிட்ட விசயங்களின் மேல் பரிசீலனையும் பேச்சு வார்த்தைகளும்:

அறிவுச் சொத்துரிமை பற்றிய பகுதியுடன் இணைந்துள்ள பொறுப்புகளைப் பற்றறி மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான அமைப்பாகவும் உலக வர்த்தக அமைப்பின் 'டிரிப்ஸ்'குழு உள்ளது.

உலக வர்த்தக அமைப்பின் ஏனைய பகுதிகளுக்கும் இவ்வசதி உள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் மேற்கொண்டும் அபிவிருத்திப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது என்று 'டிரிப்ஸ்' ஒப்பந்தம் கேட்டுக் கொண்டுள்ளது. அப்படிப்பட்ட பகுதிகள் சில வருமாறு;

– 'ஒய்ன்'க்கு புவியில் குறியடையாள உரிமை பதிவு மற்றும் அறிக்கை அளித்தல் சம்மந்தமான பன்முனை செயல்முறையைக் குறித்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் (பகுதி 23.4);

– புவியியல் குறியடையாள பாதுகாப்பு குறித்த சரத்துகளை அமுலாக்குவது மீதான பரிசீலனை (பகுதி 24.2);

– குறிப்பிட்ட பயிர் அல்லது விலங்குகள் பற்றிய கண்டுபிடிப்பிற்கு காப்பளிப்பத ருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதன் மீது நான்கு ஆண்டுகள் கழித்து பரிசீலனை ( பகுதி 27.3(ஆ));

தாவ தீர்வு நடவடிக்கையின் கீழ் வருகிற உரிமை மீறல் இல்லை என்ற புகார்களை 'டிரிப்ஸ்' ஒப்பந்த சரத்துகளுக்கு ஏற்ப ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்ய வேண்டியுள்ளது.

## 5) 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் மீதான பரிசீலனை:

ஒப்பந்தம் அமுலுக்கு வந்த ஐந்து ஆண்டுகள் கழித்து 'டிரிப்ஸ்'குழு அவ்வொப்பந்தத்தின் மீது பொதுவான பரிசீலனை நடத்த வேண்டும் தவிர்க்க இயலாத புதிய சூழ்நிலைகள் ஏற்படும்போது அதனடிப்படையில் ஒப்பந்தத்தை மாற்றியமைப்பது குறித்தும் திருத்தங்கள் செய்வது குறித்தும் உடனடியாக பரிசீ க்கவும் இக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது (பகுதி–71)

– 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் கீழ் உறுப்பினர்கள் அறிக்கை அளிக்க வேண்டிய முக்கிய பொறுப்புகள் எவை?

'டிரிப்ஸ்'குழுவிற்கு குறிப்பிட்ட அறிக்கைகளை அளிக்க வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் பொறுப்புகள்

நிர்ணயித்துள்ளது. உறுப்பினர்கள் ஒருவர் மற்றவரது சட்டத்தை பரிசீலனை செய்வதற்கு இவ்வறிக்கை அனுமதியளிக்கிறது. அந்த வகையில் இது குழுவின் முக்கிய பணியாக திகழ்கிறது. மேலும் உறுப்பினர்களது அறிவுச் சொத்துரிமை பாதுகாப்பு கொள்கைகளை வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாக ஆக்குகிறது.

ஒப்பந்தம் அனுமதித்துள்ளதின் கீழ் உறுப்பு நாடுகள் குறிப்பிட்ட வாய்ப்புகளை தாங்களாகவே அறிவிக்கும் பட்சத்தில் அது குறித்து 'டிரிப்ஸ்'குழுவிற்கு அறிக்கை சமர்ப்பீக்க வேண்டும்.

அறிக்கையளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலான பொறுப்புகளை அமுலாக்குவதற்கான வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் 'டிரிப்ஸ்'குழு வடிவமைத்துத் தருகிறது.

'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் மூல விசயத்தின் மீதான சட்டங்கள் நடைமுறைகள் சம்மந்தமாக உறுப்பு நாடுகள் அறிக்கை செய்ய வேண்டும் என்று 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பகுதி 63.2 தெரிவிக்கிறது. (சட்டங்கள் நடைமுறைகள் கிடைக்கச் செய்வதற்கான நிலமைகள், வாய்ப்புகள், ஈட்டத்தக்க விசயங்கள், அமுலாக்கம் அறிவுச் சொத்துரிமைகளை தவறாது பயன்படுத்துவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் விசயத்தில் இதைப்பின்பற்ற வேண்டும்).

ஒப்பந்தப் பகுதி 63.2 இன் கீழான தேசிய சட்டங்கள் நடைமுறைகள் பற்றி அறிக்கை செய்வதற்கான நடைமுறைகள் பத்திரம் எண் IP/C/2இல் கூறபட்டுள்ளன.

'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் 1.3 மற்றும் 3.1 பகுதிகளானவை தேசிய அணுகுமுறைகள் மற்றும் பயன் பெறுபவர்கள் சம்மந்தமான வரையறைகளை தாங்களாகவே நிர்ணயித்துக் கொள்வதற்கு அனுமதியிக்கின்றன. அப்படி வழங்கப்படும் வரையறைகள் குறித்து 'டிரிப்ஸ்' குழுவிற்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

பகுதி 1.3 மற்றும் 3.1இன் கீழ் தயாரிக்கப்படுகிற அறிக்கைகள் IP/N/2 பத்திரங்களின் தொடராக வினியோகிக்கப்பட வேண்டும். இதில் மேற்கொண்டும் இருக்கிற பின்னனித்தகவல்கள் IP/C/W/5 பத்திரத்தில் காணக் கிடைக்க வேண்டும்.

'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பகுதி 4(ஈ)க்கு ஏற்ப ஒரு உறுப்பு நாடு மிகவும் வேண்டப்பட்ட நாட்டு பொறுப்பி ருந்து விலக்கு பெற நேரும் போது அறிவுச்சொத்துரிமை பாதுகாப்பு சம்மந்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்கள் மூலம் ஏதாவது அனுகூலம், சாதகம், சலுகை, அல்லது தற்காப்பு போன்றவற்றை பெற்று அதை உலக வர்த்தக அமைப்பினுள் நுழைக்க முனையுமானால் அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்து 'டிரிப்ஸ்' குழுவிற்கு அறிக்கை செய்ய வேண்டும். மற்ற உறுப்பு நாடுகளின் குடிமக்களுக்கு அநியாயம் இழைக்கக் கூடாது, நீதிக்கு புறம்பான பாரபட்சம் காட்டக் கூடாது.

போ தயாரிப்புகளை அகற்றுவதற்காக உறுப்பு நாடுகள் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வதற்கு ஏதுவாக உறுப்பு நாடுகள் தொடர்பு மையங்களை நிறுவி அவற்றைப் பற்றிய விவரங்களை 'டிரிப்ஸ்'குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை பகுதி – 69 வ யுறுத்துகிறது.

அந்த தொடர்பு மையங்கள் குறித்து தகவல்கள் பத்திரம் IP/N/3 மூலம் வினியோகிக்க வேண்டும். இவைகள் குறித்த பற்சேர்க்கை, திருத்தங்கள், தொடர்ச்சியான பரிசீலனை ஆகியனவற்றை மேற்கொள்ள வேண்டும்.

ஒப்பந்தத்தில் தனிப்பட்ட முறையில் தரப்பட்டுள்ள அறிக்கை அளிக்க வேண்டிய பொறுப்புகள் பல பெர்னி மற்றும் ரோம் சிறப்பு மாநாட்டு சரத்துகளில் இருந்து பெறப்பட்டு 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தில் குறிப்புகளாக சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் மூலத்தில் உள்ள அளவிற்கு 'டிரிப்ஸ்'குறிப்புகளில் அவை அமைக்கப்பட வில்லை.

'டிரிப்ஸ்' முதல் கூட்டம் 1996 பிப்ரவரியில் கூடிய போது இப்படிப்பட்ட அறிக்கைகளை வழங்குமாறு உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் வேண்டுகோள் விடுத்தது. உறுப்பு நாடுகள் ஏற்கனவே பெர்னி, ரோம் சிறப்பு மாநாடுகளின் அடிப்படையில் அறிக்கைகள் கொடுத்திருந்தாலும் 'டிரிப்ஸ்'குழுவிடம் மீண்டும் தர கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இவ்வறிக்கை மீதான பின்னனி தகவல்கள் IP/C/W/15 பத்திரங்களில் கிடைக்க வேண்டும். இவ்வகை அறிக்கைகள் IP/N/5 பத்திரத் தொடர்கள் மூலம் வினியோகிக்கப்படுகின்றன.

அறிக்கை செய்வதற்கான முறைகள் குறித்த தொழில்நுட்ப கைப்பிரதி (பத்திரம் WT/TC/NOTIF/TRIPS/1)யில் அறிக்கை செய்வது குறித்த விரிவான தகவல்கள் உள்ளன.

தொழில் நுட்ப ஒத்துழைப்பு சம்மந்தமான விவரங்களை வளர்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து நாம் எப்படி பெறுவது?

வளரும் நாடுகள் மற்றும் பின்தங்கிய நாடுகள் கேட்டுக் கொள்ளும் போது பரஸ்பரம் ஒப்புக் கொள்ளும் சட்டதிட்டங்களின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த நாடுகள் தொழில் நுட்பம் மற்றும் நிதி ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பகுதி 67 கூறுகிறது.

இது விசயமாக தகுந்த தகவல்கள் பெறுவதற்கான வழிவகைகளை உறுதிப்படுத்த அறிவுச் சொத்துரிமை சம்மந்தப்பட்ட துறைகளில் தங்களது தொழில் நுட்ப ஒத்துழைப்பு குறித்த விசயங்களை வளர்ச்சியடைந்த நாடுகள் ஆண்டுக்கு ஒரு முறை 'டிரிப்ஸ்' குழுவிடம் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளன. இத்தகவல்கள் ஐட/இ/ர பத்திரத் தொடரில் வழங்கப்படுகிறது. (இணைய தளத்தின் இப்பகுதியில் கூடுதல் விவரங்கள் கிடைக்கின்றன)

எவ்வகை தொழில் நுட்ப ஒத்துழைப்பு சம்மந்தப்பட்ட தகவல்களை எவ்வெந்த முகவரிகளில் பெறலாம் என்ற நிர்வாக மையங்களைப் பற்றிய விவரங்களை அறிக்கை செய்ய வேண்டும்.

இந்த தொடர்பு மையங்களைக் குறித்த விவரங்கள் பத்திரம் IP/N/4 இல் இணைக்க வேண்டம். இவைகள் மீதான பிற்சேர்க்கை, திருத்தங்கள் தொடர்ச்சியான பரிசீலனை ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

# பாகம் -1: பொதுச் சரத்துகளும் அடிப்படை கொள்கைகளும்

## அத்தியாயம் - 8

### பகுதி - 1: பொறுப்புகளின் இயல்பும் வாய்ப்புகளும்

1. ஒப்பந்தத்தின் சரத்துகளுக்கு உறுப்பு நாடுகள் உயிரளிக்க வேண்டும். ஒப்பந்தத்தில் கேட்டுக் கொண்டுள்ளதைவிட கூடுதல் பாதுகாப்பு தரத்தக்கவகையில் உறுப்பினர்கள் தங்கள் சட்டங்களை நடைமுறை படுத்தலாம். ஆனால் அப்படிவிரிவான முறையில் தான் அமுலாக்க வேண்டும் என்று கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டியதில்லை. உறுப்பு நாடுகள் தங்கள் விருப்பப்படி கூடுதலாக வழங்கும் பாதுகாப்பு முறைகள் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளுக்கு முரணாகப் போய்விடக் கூடாது. இந்த ஒப்பந்தத்தின் சரத்துகளை தங்கள் சொந்த சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு பொறுத்தமான முறையில் அமுலாக்குவது குறித்து முடிவு எடுக்க உறுப்பு நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

2. இந்த ஒப்பந்தத்திற்காக பயன்படுத்தும் ' அறிவுச் சொத்து ' என்ற வாக்கியமானது 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பாகம் ஐஐஇன் 1 முதல் 7 முதல் உள்ள பிரிவுகளுக்கு சம்மந்தப்பட்ட எல்லாவகையான அறிவுச் சொத்துரிமைகளையும் குறிக்கும்.

3. 'டிரிப்ஸ்' - ஒப்பந்தத்தில் உறுப்பு நாடுகள் பிறவற்றின் குடிமக்கள் விசயத்தில் பின்பற்ற வேண்டிய அனுகுமுறைகள் பற்றி கூறியுள்ளனவற்றிற்கு உறுப்பு நாடுகள் இசைந்து நடக்க வேண்டும். (1) அதே நேரத்தில் பாரிஸ் சிறப்பு மாநாடு (1967) பெர்னி சிறப்பு மாநாடு (1971) ரோம் சிறப்பு மாநாடு மற்றும் ஒறுங்கிணைந்த மின் சுற்றுகள் மீதான அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தம் இவற்றில் பங்கேற்றுள்ள உலக வர்த்தக அமைப்பு உறுப்பு நாடுகளுக்கு காப்பு பெறுவதற்கு அளிக்கப்பட்டுள்ள தகுதிகளை பிற உறுப்பு நாட்டு நபர்கள், பெற்றிருந்தாலே அறிவுச் சொத்துரிமை பெற முடியும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். (2), நேரம் சிறப்பு மாநாட்டின் பகுதி - 5இன் 3வது பாரா அல்லது பகுதி 6இன் 2வது பாராவில் வழங்கப்பட்டுள்ள சாத்தியக்கூறுகள் உறுப்பு நாடு எது ஒன்றும் பெற்றிருக்குமானால் அவற்றில் உள்ளபடியான சரத்துகளை 'டிரிப்ஸ்'குழுவிற்கு அறிக்கை செய்ய வேண்டும்.

### பகுதி:2:

### அறிவுச் சொத்துரிமை சிறப்பு மாநாடுகள்

(1). 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்தின் பாகங்கள் ஐஐ, ஐஐஐ, மற்றும் ஐயக்கு மதிப்பளிக்கும் வகையில் பாரிஸ் சிறப்பு மாநாட்டின் (1967) 1 முதல் 12 முடியவும் மற்றும் 19வது பகுதிகளும் இணைந்து செயல்படலாம்.

(2). பாரிஸ் சிறப்பு மாநாடு, பெர்னி சிறப்பு மாநாடு, ரோம் சிறப்பு மாநாடு மற்றும் ஒறுங்கிணைந்த மின் சுற்றுகள் மீதான அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தங்களில் உறுப்பு நாடுகளுக்கு பொறுப்புகள் எதுவும் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பாகங்கள் 1 முதல் ஐய முடிய உள்ளனவற்றிற்கு இழுக்கு ஏற்படுத்திவிடக்கூடாது.

### பகுதி: 3: தேசிய அணுகுமுறை:

(1). அறிவுச் சொத்துரிமைக்கு காப்பளிக்கும் விசயத்தில் தனது சொந்த குடிமக்களுக்கு வழங்கக்கூடியதற்கு எந்த வகையிலும் குறையாத காப்பை உறுப்பு நாடுகள் பிறவற்றின்

குடிமக்களுக்கும் வழங்கவேண்டும். இதில் விதிவிலக்கான நிலமைகள் குறித்து பாரிஸ் சிறப்பு மாநாடு (1967) பெர்னி சிறப்பு மாநாடு (1971), ரோம் சிறப்பு மாநாடு அல்லது ஒறுங்கிணைந்த மின்சுற்றுகள் சார்ந்த அறிவுச் சொத்துரிமைகள் ஒப்பந்தம் ஆகியனவற்றில் கூறப்பட்டுள்ளன. கலைஞர்கள் இசைத்தட்டு தயாரிப்பாளர்கள், ஒ பரப்பு அமைப்புகள் விசயத்தில் இந்தப் பொறுப்புகளானவை இவ்வொப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளின் அடிப்படையில் மட்டுமே பொறுந்ததக்கவை. பெர்னி சிறப்பு மாநாடு (1971)இன் பகுதி-6 அல்லது

ரோம் சிறப்பு மாநாட்டின் பகுதி 16; 1(க்ஷ)இன் அடிப்படையில் இப்படிப்பட்ட சாத்தியக்கூறுகளை உறுப்புநாடுகள் ஏதாகிலும் கொண்டு இருக்குமானால் அவ்விபரங்களை அவைகளில் உள்ளபடியே 'டிரிப்ஸ்' குழுவிற்கு அறிக்கையாக அளிக்க வேண்டும்.

(2). நீதித்துறை மற்றும் நிர்வாகத்துறை நடவடிக்கைகள் சம்மந்தமான உறுப்பு நாடுகள் தங்களுக்கு தாங்களே விதிவிலக்குகள் அனுமதித்துக் கொள்ளத்தக்கவற்றை பாரா-1 வ யுறுத்துகிறது. சேவைக்கான தொடர்பு முகவரியை தெளிவாக குறிப்பிடுவது அல்லது உறுப்பினரின் சட்ட எல்லைகளுக்கு உட்பட்ட 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளுக்கு பொறுந்தத்தக்கதாகவும் அதனுடைய சட்ட திட்டங்களுக்கு உடன்படக்கூடியனவாகவும் இருந்தால் மட்டுமே அப்படிப்பட்ட விலக்குகளை அளிக்க முடியும். அதே நேரத்தில் இவ்வேற்பாடுகளானவை மாறுவேடத்தில் வந்து வர்த்தகத்தை தடைப்படுத்துவதாக இருக்கக் கூடாது.

### பகுதி:4: மிகவும் வேண்டப்பட்ட நாட்டு அணுகுமுறை:

அறிவுச் சொத்துரிமை பாதுகாப்பு விசயத்தில் எந்த ஒரு சாதகமும், ஆதரவும், சிறப்புரிமையும் விதிவிலக்கும் உறுப்பு நாடு ஏதாவது ஒன்று தனது குடிமக்களுக்கு வழங்குமேயானால் அவ்வுரிமைகள் உடனடியாக எந்தவிதாமான நிபந்தனையுமின்றி பிற உறுப்பு நாடுகளின் குடிமக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இந்த பொறுப்பி ருந்து விலக்கு பெறுவதன் மூலம் ஏதாவது அனுகூலம், ஆதரவு, சிறப்புரிமை அல்லது விதி விலக்கு ஆகியனவற்றை உறுப்பு நாடு ஒன்று அனுமதிக்கலாம்.

அ). பொதுவான இயல்பினடிப்படையிலான சட்ட அமுலாக்கம் அல்லது நீதித்துறை உதவிக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் மூலத்தி ருந்து பெற்றுவருவதாக இவ்வணுகு முறை இருக்க வேண்டும்.

ஆ) பெர்னி சிறப்பு மாநாடு (1971) அல்லது ரோம் சிறப்பு மாநட்டின் சரத்துகளின் கீழ் சம்மதம் பெற்று அனுமதிக்கப்படும் போது அந்த அனுகுமுறையானது தேசிய அணுகுமுறையில் செயல்பட ஒப்புக்கொள்ளப்பட்டதாக இருக்காமல் சம்மந்தப்பட்ட மற்றொரு நாட்டின் அணுகுமுறைக்கு ஒப்புக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

இ) கலைஞர்கள், இசைதட்டு தயாரிப்பாளர்கள் மற்றும் ஒ பரப்பு அமைப்புகள் ஆகியனவற்றிற்கு இவ்வொப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

ஈ) உலக வர்த்தக ஒப்பந்தத்தின் செயல்பாடுகளுக்கு முன்னரே செயலுக்கு வந்துவிட்ட அறிவுச் சொத்துரிமை பாதுகாப்பு சார்ந்த சர்வதேச ஒப்பந்தங்களின் மூலத்தி ருந்து பெறப்பட்டதாக இருந்தாலும் அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்து 'டிரிப்ஸ்' ஒப்பந்தத்திற்கு அறிக்கை செய்ய வேண்டும். மேலும் மற்றொரு உறுப்பு நாட்டின் குடிமக்களுக்கு எதிராக நிச்சயமற்ற சூழ்நிலையையோ எதிர்பாராத நிலைமையையோ நிறுவக் கூடாது.

## பகுதி - 5: காப்பு பெறுதல் காப்பை பராமரித்தல் சம்மந்தமான பன்முனை ஒப்பந்தங்கள்:

அறிவுச் சொத்துரிமை பராமரிப்பு அல்லது காப்பு பெறுதல் சம்மந்தமான விசயத்தில் உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் வெளிச்சத்தின் கீழ் உறுவாக்கப்பட்ட பன்முனை ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளின் பால் பகுதி 3 மற்றும் 4இன் கீழான பொறுப்புகளை உபயோகிக்கக் கூடாது.

## பகுதி - 6: பலஹனீம்

பகுதி 3 மற்றும் 4இன் சரத்துகளின் கீழ் வரக்கூடிய தாவாக்களை இவ்வொப்பந்தத்தின் சரத்துகளின் கீழ் தீர்த்துவைக்கும்

நோக்கத்திற்காக பயன்படுத்தும்போது அறிவுச் சொத்துரிமைகளை பலஹனீப்படுத்தும் பிரச்சனையை எடுத்துறைக்க இவ்வொப்பந்தத்தில் உள்ள எது ஒன்றையும் பயன்படுத்தக்கூடாது.

## பகுதி:7: நோக்கங்கள்:

அறிவுச் சொத்துரிமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதன் மூலமும் அதை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் தொழில்நுட்ப புதுப்புனைவுகளை வளர்த்தெடுப்பதை ஊக்கப்படுத்த முடிகிறது. தொழில்நுட்பத்தை மற்றொரு இடத்திற்கு மாற்றவும் பரவவும் செய்ய முடிகிறது. இதன் மூலம் தொழில் நுட்ப அறிவை உற்பத்தியாளர்களும் உபயோகிப்பாளர்களும் பரஸ்பரம் நன்மை பெறக கூடிய வகையில் பயன்படுத்த முடிகிறது. மேலும் உரிமைகளுக்கும் பொறுப்புகளுக்கு இடையே சமநிலை ஏற்படுத்தும் கருவியாகவும் பயன்படுத்த முடிகிறது.

## பகுதி - 8: கொள்கைகள்:

1) உறுப்பு நாடுகள் தங்கள் சட்டதிட்டங்களை அமைப்பதற்கும் திருத்துவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது பொது சுகாதாரத்தையும் ஊட்டச்சத்தும் கிடைக்கச் செய்வதன் மீதான விசயங்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது. தங்கள் சமூக பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சிக்கான அதிமுக்கியத்துவம் உள்ள துறைகள் மீது பொது மக்களுக்கு உள்ள அக்கரையை கூட்டுவதும், முக்கிய நோக்கமாகும். இதற்காக மேற்கொள்ளப்படும் திருத்தங்களும் சட்ட உறுவாக்கங்களும் இவ்வொப்பந்தத்தின் சரத்துகளுக்கு பொறுந்தியிருக்க வேண்டும்.

2) ஒப்பந்தத்தின் சரத்துகளுடன் இப்படி பொறுந்திவரக்கூடியவை அறிவுச் சொத்துரிமைகளை அதன் உரிமையாளர்களால் தவறாக பயன்படுத்துவதை தடுத்து நிறுத்துவதாகவும், சர்வதேச தொழில்நுட்ப பரிமாற்றங்களை கடுமையாக பாதிக்கக்கூடியதும், வர்த்தகத்தை தேவையில்லாமல் கட்டுப்படுத்தக்கூடியதும் ஆன செயல்களுக்கு அடைக்கலம் அளிப்பதை தடுத்து நிறுத்தக்கூடியதாகவும் இருப்பதற்கான தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# பாகம் - 2: அறிவுச் சொத்துரிமைகளின் நோக்கம், கிடைப்பு நிலை மற்றும் பயன்சார்ந்த தர நிர்ணயிப்புகள்.

## அத்தியாயம் - 9

### பிரிவு -1 காப்புரிமையும் அது சார்ந்த உரிமைகளும்:

### பகுதி - 9 பெர்னி சிறப்பு மாநாட்டுடனான உறவு நிலை:

1). உறுப்பு நாடுகளானவை பெர்னி சிறப்பு மாநாட்டின் (1971) 1 முதல் 21 முடிய உள்ள பகுதிகளுக்கும் பிற்சேர்க்கைக்கும் பொறுந்தி கொள்ளத்தக்கவை. அதே நேரத்தில் இந்த சிறப்பு மாநாட்டின் பகுதி : 6 க்ஷண்ள்இன் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது அதை மூலமாகக் கொண்டு பெறப்பட்ட உரிமைகள் ஆகியவனவற்றின் அடிப்படையில் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் கீழ் உரிமைகளையோ, பொறுப்புகளையோ பெற்றிருக்க முடியாது.

2). பதிப்புரிமைகளைப் பொறுத்தவரை, சம்மந்தப்பட்ட விசயத்தை வெளிப்படுத்தும் திறனுக்குத்தான் பாதுகாப்பு வழங்க வேண்டும். எண்ணங்கள், செயல்முறைகள் இயக்குவதற்கான ஒழுங்குமுறைகள் அல்லது கணிதவியல் சூத்திரங்கள் போன்றவற்றிற்கு பாதுகாப்பு வழங்க வேண்டியதில்லை.

### பகுதி - 10: கணினி திட்ட வரைவுகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரத்தொகுப்புகள்:

1). பெர்னி சிறப்பு மாநாடு (1971) கீழ் இலக்கிய படைப்புகளுக்கு வழங்கப்படுகிறது போன்ற பாதுகாப்பை கணினி திட்ட வரைவுகளுக்கு அவைகள் மூலவடிவி ருந்தாலும் நோக்கத்தின் குறிவடிவி ந்தாலும் வழங்க வேண்டும்.

2) தேர்ந்தெடுக்கப்பட்ட விவரத் தொகுப்புகள் அல்லது பிற விவரங்கள் அவைகள் எந்திரங்களால் படித்தறியத்தக்க வடிவிலோ அல்லது வேறு வடிவிலோ இருந்தாலும் அவற்றின் தேர்வுச்சிறப்பு நிலை காரணமாக அல்லது அவற்றின் சாரம் அமைக்கப்பட்டுள்ள விதம் காரணமாக அறிவுபூர்வமான படைப்பாகக் கருதப்பட்டு பாதுகாப்பு பெறத்தக்கதாகிறது. அதே நேரத்தில் அத்தொகுப்பினுள் உள்ள தனித்தனி விவரங்கள் மற்றும் பகுதிகளுக்கு பாதுகாப்பை விரிவுபடுத்த முடியாது. அந்த விவரங்கள் அல்லது பொருள்களுக்கு இருக்கிற பதிப்புரிமையை பாதிக்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### பகுதி: II: வாடகை உரிமை:

உறுப்பு நாடுகளானவை குறைந்தபட்சம் கணினி திட்ட வரைவுகள் மற்றும் சினிமா கிராபிக்ஸ் பணிகளுக்கு அவற்றின் படைப்பாளிகள் மற்றும் அவர்களது தொடர் உரிமையாளர்களுக்கு தங்களது படைப்புகளை வர்த்தக ரீதியில் பொது மக்களுக்கு மூலவடிவிலோ பிரதியெடுப்பதற்கான பதிப்புரிமை வடிவிலோ வாடகைக்கு விடுவதற்கும் அல்லது அனுமதியின்றி மற்றவர்கள் தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சினிமாகிராபிக் பணிகளுக்கு வாடகை காப்பளிக்க வேண்டிய பொறுப்பி ருந்து ஒரு உறுப்பு நாடு விலக்கு பெறலாம். சம்மந்தப்பட்ட

படைப்பின் ஆசிரியர் மற்றும் தலைப்பின் கிழ் வருகிற தொடர் உரிமையாளர் ஆகியோரின் தனிச்சிறப்பான உரிமையை சேதப்படுத்துகிற வகையில் அவர்களுக்கு மறு தயாரிப்பு நடப்பதை தடுப்பதற்கு உறுப்புநாடு அவர்களுக்கு உறுதிப்படுத்திக் கொடுத்துள்ளதற்கு மாறாக பெரிய அளவிற்கு பிரதியெடுக்கும் செயல் நடைபெறாம ருந்தால் மட்டுமே இந்த விலக்கு பெறமுடியும். கணினி திட்ட வரைவுகளைப் பொறுத்தவரை வாடகை விசயத்தில் கணினியின் திட்ட வரைவின் உள்ளே இருக்கும் விசயங்கள் வாடகைக்கு விடுவதற்கான அவசியமான விசயங்களை உள்ளடக்காததாக இருக்கையில் இத்தகு பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை.

### பகுதி:12: பாதுகாப்பின் காலம்:

ஒரு படைப்பின் பாதுகாப்பு காலத்தை எப்போது கணக்கிட வேண்டிவருகிறதோ, அப்போது அதன் படைப்பாளியின் இயற்கையான உயிர்வாழும் காலம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். காப்பு சம்மந்தமான அதிகாரபூர்வ வெளியீடு வந்த நாட்காட்டி ஆண்டின் முடிவி ருந்து 50 ஆண்டுகளுக்கு குறையாமல் அந்த கால கட்டம் இருக்கக்கூடும் அல்லது அப்படிப்பட்ட படைப்பு உறுவானதி ருந்து 50 ஆண்டுகளுக்குள் அதிகாரபூர்வ வெளியீடு வராவிட்டால், அந்த படைப்பு உருவான நாட்காட்டி ஆண்டின் முடிவி ருந்து 50 ஆண்டுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

### பகுதி: 13: இலகுபடுத்துவதும் விலக்களிப்பதும்:

உரிமை வைத்துள்ளவரின் சட்டபூர்வ விருப்பங்களை தேவையில்லாத வகையில் பாதிக்காத மற்றும் சாதாரணமான பயன்பாட்டுடன் முரண்படாத, குறிப்பிடத்தக்க தனி வகை செயல்பாடுகளுக்கு தனி உரிமைகள் வழங்குவதற்கான பொறுப்புகளி ருந்து உறுப்பு நாடுகள் விலக்கு பெறலாம் அல்லது வரையறை நிர்ணயித்து செயல்படலாம்.

### பகுதி:14: கலைஞர்கள், இசைத்தட்டு தயாரிப்பாளர்கள் (ஒ ப்பதிவுகள்) மற்றும் ஒ பரப்பு அமைப்புகளுக்கான பாதுகாப்பு:

1). இசைக்கலைஞர்களின் அங்கீகாரத்தைப் பெறாமல் அவர்களது இசை மீட்டல்களையோ குரல் ஒ களையோ

இசைத்தட்டில் பதிப்பதை தடுத்து நிறுத்துவதற்கான உரிமைகளை உறுப்பு நாடுகள் வழங்க வேண்டும். இவ்வகையில் கீழ்கண்ட உரிமை மீரல்கள் நடைபெற வாய்ப்புள்ளது. கலைஞர்களின் பதிவு செய்யப்படாத கலைவடிவங்களை அதிகாரபூர்வமற்ற முறையில் பதிவு செய்வதும் மறு உற்பத்தி செய்வதும் உரிமைமீரல்களாகும். தங்களது அனுமதியின்றி நடைபெறும் கீழ்கண்ட வகையிலான செயல்களை தடுத்து நிறுத்துவதறகான உரிமை கலைஞர்களுக்கு உள்ளது: கலைஞர்களது நிகழ்ச்சிகளை வானொ தொழில் நுட்பத்தின் மூலம் ஒ பரப்புவதையும் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்வதையும் தடுக்கும் உரிமை கலைஞர்களுக்கு உள்ளது.

2). இசைத்தட்டு தயாரிப்பாளர்கள் தங்களது இசைத்தட்டுகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ மற்றவர்கள் மறு உற்பத்தி செய்வதை தடுக்கவும் உரிமைபடைத்தவர்கள். அதிகார பூர்வமாக அனுமதிக்கவும் உரிமை படைத்தவர்கள்.

3. தங்களது அனுமதியில்லாமல் மேற்கொள்ளப்படும் கீழ்கண்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் உரிமை படைத்தவை ஒ பரப்பு அமைப்புகள்: பதிவு செய்தல், பதிவு செய்ததை மறுபடியும் வெளியிடுதல், வானொ தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலம் அவற்றை மறுஒ பரப்பு செய்ய முயற்சித்தல் ஆகியனவற்றை தடுக்க உரிமை உள்ளது. தொலைக்காட்சி ஒளிபரப்புகளையும் இதே போல நடைமுறைப்படுத்த உரிமை உள்ளது. அப்படிப்பட்ட உரிமைகளை ஒ பரப்பு அமைப்புகளுக்கு உறுப்புநாடுகள் வழங்காத நிலையில் பெர்னி சிறப்பு மாநாடு (1971)இன் சரத்துகளுக்கு உட்பட்டு பதிப்புரிமை சரத்துகளின் அடிப்படையில் அப்படிப்பட்ட ஒ பரப்புகளை தடுத்து நிறுவத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யலாம்.

4. பகுதி -11 இன் கணினி திட்டவரைவுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சரத்துகளை இசைத்தட்டு தயாரிப்பாளர்களுக்கும் அவசியமான திருத்தங்கள் செய்து பொறுத்தலாம். உறுப்பு நாடுகளின் சட்டத்தின் கீழ் இசைத்தட்டு உரிமை வைத்திருப்பவர்களுக்கும் பொறுத்தலாம். 1994 ஏப்ரல் 15ஆம் தேதியன்று எந்த ஒரு உறுப்புநாடாவது இசைத்தட்டு வாடகை சம்மந்தமாக அதன் மீது உரிமை வைத்திருப்பவர்களுக்கு சமமான வெகுமதி கிடைப்பதற்கான முறையை அமுல்படுத்தியிருக்குமேயெனில் இசைத்தட்டுகளை வர்த்தக ரீதியில் வாடகைக்கு விடும் அப்படிப்பட்ட முறையை அதே போல தொடரலாம். அந்த ஏற்பாட்டில் மறு உற்பத்திக்கு ஆன தனி உரிமையை வைத்திருக்கும் உரிமையாளர்களுக்கு பொருள் ரீதியில் சேதம் ஏற்படுத்துவதற்கும் வழியேற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

5. கலைஞர்கள் மற்றும் இசைத்தட்டு தயாரிப்பாளர்களுக்கு குறைந்த பட்சம் அந்த படைப்பு உறுதிப்படுத்தப்பட்ட அல்லது படைப்பு நிகழ்த்தப்பட்ட நாட்காட்டி ஆண்டில் இருந்து 50 ஆண்டுகளுக்காவது கணக்கிட்டு இவ்வொப்பந்தத்தின் கீழ் பாதுகாப்பிற்கான கால நிர்ணயம் செய்யப்பட வேண்டும். பாரா 3இன் தொடர்ச்சியாக வழங்கப்படும் பாதுகாப்பானது குறைந்த பட்சம் 20 ஆண்டுகளுக்கு இருக்கத்தக்கது. அதாவது ஒ பரப்பு மேற்கொள்ளப்பட்ட நாட்காட்டி வருடத்தின் கடைசியி ருந்து 20 ஆண்டுகள்.

6. பாராக்கள் 1, 2, மற்றும் 3இன் கீழ் பதிவு செய்யப்பட்ட உரிமைகள் விசயத்தில் எந்த ஒரு உறுப்பு நாடும் நிபந்தனைகள், அளவுகள், விலக்குகள் மற்றும் ஒதுக்கீடுகளை நிர்ணயிக்கும்போது ரோம் சிறப்பு மாநாடு அனுமதித்துள்ள அளவிற்குள் இருக்க வேண்டும். அதே நேரத்தில் இசைத்தட்டுகளில் கலைஞர்களுக்கும் இசைத்துட்டு தயாரிப்பாளர்களுக்கு உரிமைகள் வழங்கும் விசயத்தில் பெர்னி சறிப்பு மாநாட்டின் (1971) பகுதி 18 இன் சரத்துகளையும் பொறுத்திடலாம்.

## பிரிவு - 2: வர்த்தக முத்திரைகள்

## பகுதி - 15: பாதுகாக்கத்தக்க மூல விசயங்கள்

ஒரு நிறுவனத்தின் பொருள் அல்லது சேவையை இன்னொரு நிறுவத்தினுடையதி ருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடியதாக இருக்கிற எந்த ஒரு குறி அல்லது குறிகளின் கலவையானது அதன் தன்மை ஒரு வர்த்தக முத்திரையாக நிலைநிறுத்தின் கொள்ளும் திறன்படைத்ததாகும். அப்படிப்பட்ட குறிகள், சொந்தப் பெயர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட வார்த்தைகளாகவும், எழுத்துகளாகவும், எண்களாகவும், உருவங்களாகவும், வண்ணக் கலவைகளாகவும் இருக்கலாம். குறிகளின் கலவைகளைப் பொறுத்தவரையிலும் மேற்கண்டவகையில் உணர்த்தத்தக்க தகுதி எந்த குறியீடுகளுக்கு இயல்பாகவே இல்லாதிருக்கிறதோ அப்போது அவற்றினை உபயோகத்தில் விட்ட பின்னால் அவை பிரித்துறைத்தக்க திறனை எந்த அளவிற்கு வெளிப்படுத்துகிறது என்பதன் அடிப்படையில்

உறுப்பு நாடுகள் பதிவு செய்யலாம். குறிகளானவை காட்சி வடிவத்தில் பிரித்துப்பார்த்தறியத்தக்கதாக இருக்க வேண்டும் என்பதை பதிவுக்கான நிபந்தனையாக உறுப்பு நாடுகள் கோரலாம்.

2). ஒரு உறுப்பு நாடு வர்த்தக முத்திரை பதிவை வேறு அடித்தளங்களி ருந்து மறுப்பதை தடுப்பதற்கு பாரா - 1 உள்ளது என்று தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. அதில் கூறப்பட்டுள்ளவை பாரிஸ் சிறப்பு மாநாட்டின் சரத்துகளுக்கு இழுக்கு ஏற்படுத்திவிடக் கூடாது.

3). உறுப்பு நாடுகள் பயன்பாட்டினடிப்படையில் பதிலை வழங்கலாம். அதே நேரத்தில் பதிவுக்கான விண்ணப்பம் பூர்த்தி செய்வதற்கு வர்த்தக முத்திரையின் நடைமுறை உபயோகம் என்பதை ஒரு நிபந்தனையாக முன்வைக்க வேண்டியதில்லை. விண்ணபிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கழிந்து காலாவதியான பின்னாலும் உபயோக வடிவிலான செயல் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக மட்டுமே ஒரு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு விடலாகது.

4). ஒரு வர்த்தக முத்திரை உபயோகிக்கப்படுகிற பொருள்கள் அல்லது சேவைகள் பெட்டிக்குள் அடைக்கப்பட்டிருக்கிற இயல்போடு இருப்பதன் மூலம் அதுவே வர்த்தக முத்திரை பதிவு பெறுவதற்கு தடையாகப் போய்விடக்கூடாது.

5). சம்மந்தப்பட்ட வர்த்தக முத்திரை பதிவு செய்வதற்கு முன்னரோ அல்லது உரியகாலத்தில் பதிவு ஆகியிருந்த பின்னரோ அவற்றை உறுப்பு நாடுகள் வெளியிட வேண்டும். அதன் மூலம் மேற்படி பதிவை ரத்து செய்யக்கோரும் விண்ணப்பங்கள் செய்வதற்கு நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும்.

**பகுதி:16:** 1) உரிமையாளரின் அனுமதிபெறாமல் மூன்றாவது நபர் ஒருவர் அந்த உரிமையாளரின் வர்த்தக குறி அடையாளத்தை அதனுடைய வடிவத்திலோ அல்லது அந்த வர்த்தக முத்திரை பதிவு செய்யப்பட்டுள்ளவற்றிற்கு ஒத்த அல்லது முழுவது ஒத்த பொருள்கள் அல்லது சேவைகளுக்கு பயன்படுத்துவது ஒரே மாதிரியாக இருக்கின்றன என்ற குழப்பத்தை ஏற்படுத்தும். எனவே அனுமதி பெறாத அப்படிப்பட்ட உபயோத்தை தடுத்து நிறுத்துவதற்கான தனிச்சிறப்பு உரிமையை பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக முத்திரை உரிமையாளர் பெறலாம். மேற்கண்டவகையில் விவரிக்கப்பட்டுள்ள உரிமைகளானவை முன்னுரிமை பெற்றிருக்கும் உரிமைகள் எவற்றையும் பாதித்துவிடக்கூடாது. உபயோகத்தின் அடிப்படையில் உறுப்பு நாடுகள் உரிமைகள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் பாதித்துவிடக்கூடாது.

2) பாரிஸ் சிறப்பு மாநாட்டின் (1967) பகுதி 6bis சேவைகளுக்கு பொறுந்தத்தக்கது (அவசயிமான திருத்தங்கள் செய்து) ஒரு வர்த்தக முத்திரை மிகவும் பிரபலாமாகியுள்ளது என்பதை குறித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு பொதுமக்களின் பொறுத்தமான பகுதியில் சம்மந்தப்பட் வர்த்தக முத்திரைக்கு உள்ள பரிச்சியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே போல சம்பந்தப்பட்ட உறுப்பு நாட்டில் மேற்படி வர்த்தக முத்திரையை விருத்தி செய்யும் நடவடிக்கையில் அது ஈட்டியுள்ள பரிச்சயத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

3) எந்த பொருள்கள் அல்லது சேவைகளுக்கு வர்த்தக முத்திரை பதிவு செய்யப்பட்டுள்ளதோ அவைகளைப் போலல்லாதனவற்றிற்கு பாரிஸ் சிறப்பு மாநாட்டின் (1967) பகுதி 6 க்ஷண்ள் இனை அவசியமான திருத்தங்கள் செய்து பயன்படுத்த முடியும். வர்த்தக முத்திரையை அப்படி செய்யும் போது பதிவு செய்யப்பட்ட வர்த்தக முத்திரையின் உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நலன்கள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனவே அப்படி உபயோகப்படுத்துவதற்கு அனுமதிப்பானது உரிமையாளரால் அந்த வர்த்தக முத்திரை எந்த பொருள்கள் அல்லது சேவைகளுக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதோ அதற்கும் அந்த வர்த்தக முத்திரையை பயன்படுத்தி அனுமதிக்கபட்டுள்ள பொருள்கள் அல்லது சேவைகளுக்கும் இடையே உள்ள தொடர்பை எடுத்துரைப்பதாக இருக்க வேண்டும்.

## பகுதி:17: விதிவிலக்குகள்:

வர்த்தக முத்திரை பதிவின் மூலம் உறுதிப்பட்டுள்ள உரிமைகளுக்கு வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளை உறுப்பு நாடுகள் வழங்கலாம். வர்ணனை வாக்கியங்களை முறையாகப் பயன்படுத்துவது விசயத்தில் விதிவிலக்குகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யும் போது வர்த்தக முத்திரையின் உரிமையாளர் மற்றும் சம்மந்தப்பட்ட மூன்றாவது நபர் ஆகியோரின் சட்டபூர்வ நலன்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

## பகுதி:18: பாதுகாப்பிற்கான காலம்:

துவக்க பதிவின் போதும் ஒவ்வொரு புதுப்பிப்பு பதிவின் போதும் வர்த்தக முத்திரைக்கு குறைந்த பட்சம் ஏழு ஆண்டு காப்பு வழங்கலாம். வர்த்தக முத்திரை பதிவானது காலவரையற்ற வகையில் புதுப்பிக்கத்தக்கது.

## பகுதி:19: பயன்பாட்டின் தேவை:

1). பதிவை பராமரிப்பதற்காக மட்டுமே பயன்பாட்டில் இருக்கிறது எனில், அப்படிப்பட்ட உபயோகத்திற்கு உள்ள சிரமங்களைப் பற்றிய சரியான காரணங்களை சம்மந்தப்பட்ட வர்த்தக முத்திரை உரிமையாளர் காட்ட வேண்டும். அப்படியே இல்லாவிட்டாலும் எந்தவிதமான தடைகளும் இல்லாமல் மூன்று ஆண்டு காலம் பயன்படுத்தப்படாம க்கும்போது மட்டுமே அதற்கு அளிக்கப்பட்ட பதிவை ரத்து செய்ய முடியும். வர்த்தக முத்திரையின் உரிமையாளரின் விருப்பதிற்கு ஏற்ப தன்னிச்சையான சூழ்நிலை உருவாக்கி அதாவது இறக்குமதி கட்டுப்பாடுகள் அந்த முத்திரைகள் உபயோகிக்கப்படும் பொருள்கள் சேவைகள் மேல் விதிக்கப்படலாம் அல்லது அரசுதேவைகளுக்காக அவைகள் மீது கட்டுப்பாடு விதிக்கப்படலாம். அப்படிப்பட்ட நிலையில் அதை உபயோகத்தில் இல்லாம ருப்பதற்கான ஏற்கத்தக்க காரணமாக கொள்ளலாம்.

2). உரிமையாளரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட வகையில் அவரது வர்த்தக முத்திரையை வேறொருவர் பயன்படுத்துவதை வர்த்தக முத்திரை தொடர்ந்து நடைமுறைப்படுகிறது என்று கருதத்தக்கதாகக் கொள்ளலாம்.

## பகுதி - 20 : பிற தேவைகள்

சிறப்பு காரணங்களின் பெயரில் வர்த்தகத்தில் உபயோகத்திலுள்ள வர்த்தக முத்திரையை ஆராயமல் தடை செய்யக்கூடாது. வர்த்தக முத்திரைகள் பிறவற்றுடன் சேர்ந்து பயன்படுத்துவது, பிரத்யேகமான வடிவில் பயன்படுத்துவது மற்றும் ஒரு நிறுவனத்தின் பொருள்கள் அல்லது சேவைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வர்த்தக முத்திரை மற்றொரு நிறுவனத்தின் பொருள்கள் சேவைகளை வேறுபடுத்திக் காட்டக் கூடிய வ மைக்கு கேடு விளைவிக்கக் கூடிய வகையிலான நடவடிக்கைகள் ஆகியன மேற்கண்டவகையில் தடைசெய்ய கூடாது. வர்த்தக முத்திரையை எடுத்துள்ள நிறுவனம் பொருள்களையும் சேவைகளையும் பிரித்து அடையாளம் காட்டுகிற வர்த்தக முத்திரையின் மேல் கேள்வி எழுந்துள்ள நிலையில் அதனோடு தொடர்பு இல்லாவிட்டாலும் அந்நிறுவனம் உற்பத்தி செய்கிற பொருள்கள் சேவைகளுக்கு பயன்படுத்தும்போது அத்தகைய வர்த்தக முத்திரையை பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள வழிவகைகளை விலக்கி விடுவதற்கில்லை.

### பகுதி - 2: உரிமைக்கு இசைவும் ஒப்படைப்பும்:

வர்த்தக முத்திரைகள் மீதான உரிமைகள் மற்றும் ஒப்படைப்புகள் சம்மந்தமான நிபந்தனைகளை உறுப்பு நாடுகள் உருவாக்கலாம். வர்த்தக முத்திரைக்கு கட்டாய உரிமம் வழங்குவது அனுமதிக்கப்படமாட்டது என்பதை உறுப்பு நாடு புரிந்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில் வர்த்தக முத்திரையின் உரிமையாளர் அந்த வர்த்தக முத்திரையை ஒருவருக்கு அந்த வர்த்தக முத்திரையுடன் சம்மந்தப்பட்டுள்ளவை அனைத்துடனோ அல்லது தனியாகவோ ஒப்படைக்க உரிமை பெறத்தக்கவராவார்.

### பிரிவு:3: புவியில் குறியடையாளங்கள்:

### பகுதி:22: புவியியல் குறியடையாளங்களுக்கு பாதுகாப்பு

1) இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கான புவியில் குறியடையாளங்கள் உறுப்பு நாடு ஒன்றின் தேசிய எல்லைக்குட்பட்ட மூல இடமாக இருப்பதை எடுத்துக்காட்டும் குறியடையாளமாக இருக்கின்றன. அந்த நாட்டின் குறிப்பிட்ட மண்டலம் அல்லது பகுதியை அடையாளம் உணர்த்துவதாக இருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில் அந்த பொருளின் தரம், நன்மதிப்பு அல்லது பிற குணங்கள் புவியியல் மூல இடத்தின் சிறப்பை வெளிப்படுத்தக்கூடிய வகையில் தன்னுள் கொண்டிருக்க வேண்டியது அவசியமானது.

2). புவியில் குறியடையாளத்தின் விசயத்தில் அதற்கான காப்பை எதிர்நோக்கும் நபர்களின் சட்டபூர்வ விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான வழிவகைகளை உறுப்பு நாடுகள் வகுக்கலாம்:

அ) சம்மந்தப்பட்ட ஒரு பொருளின் அறிமுகம் அல்லது நியமத்தை எந்த ஒரு வடிவத்திலாவது பயன்படுத்துவது சிக்கலை ஏற்படுத்தும். கேள்விக்குறிய பொருள் குறிப்பிடுகிற அல்லது முன்வைக்கிற புவியியல் பகுதி ஒருவேளை உண்மையான மூலப்பகுதிக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். அப்போது பொதுமக்களை உண்மையான பொருளின் புவியியல் மூலத்தனத்தைப் போன்று கருதம் படி தவறாக அது வழிகாட்டும் வகையில் அமைந்து விடும்;

ஆ) பாரிஸ் சிறப்பு மாநாட்டின் பகுதி 10க்ஷண்ள்இன் அர்த்தத்திற்கு உட்பட்டு பார்க்கும்போது எந்த ஒரு புவியில் குறியடையாளமாவது முறையற்ற போட்டியை உறுவாக்கும் வகையில் பயன்படுத்தப்படுவது நிரூபிக்கப்படும் போது சம்மந்தப்பட்டவர்களது சட்ட உரிமைகளை உறுப்பு நாடுகள் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளன.

3) ஒரு பொருளுக்கு புவியில் குறியடையாளத்தை வர்த்தக முத்திரையாக பதிக்கும் போது சம்மந்தப்பட்ட புவியியல் பகுதி சம்மந்தப்பட்ட பொருளுக்கு மூல இடமாக இல்லாத போது அந்தப் பொருளுக்கான புவியியல் குறி அடையாளம் சார்ந்த வர்த்தக முத்திரை பதிவை ஒரு உறுப்பு நாடு நிராகரிக்கவோ அல்லது ரத்தோ செய்யலாம். அந்த உறுப்பு நாட்டில் அப்படிப்பட்ட குறியடையாளத்தை எப்படிப்பட்ட ஒரு பொருள்களுக்காவது குறியடையாளமாக உபயோகிக்கும் போது குறியடையாளத்தின் இயற்கை மூலஇடம் அதுதான் என்று நம்பச் செய்துவிடும்.

4) வேறொரு ஆட்சி எல்லைக்குட்பட்ட இடத்தை மூலஇடமாக கொண்டு உள்ள பொருளுக்கு உள்ள உரிமையை (மற்றொருவர் தனது) புவியியல் குறியடையாளமாக தவராக பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு எதிராக 1, 2 மற்றும் 3வது பாராக்களில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை பொறுத்தலாம்.

### பகுதி: 23: ஒய்ன் மற்றும் சாராயத்திற்கான புவியில் குறியடையாளங்களுக்கு உள்ள கூடுதல் பாதுகாப்பு:

1) புவியியல் குறியடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தை மூல இடமாக கொள்ளாத ஒய்ன் அல்லது புவியில் குறியடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தை மூல இடமாக கொள்ளாத சாராயத்திற்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ள புவியியல் குறியடையாளத்தை பயன்படுத்துவதற்கான உரிமையை தங்களுக்கு ஒதுக்கித் தருமாறு கோருபவர்களுக்கு போதுமான சட்ட ஏற்பாடுகளை உறுப்பு நாடுகள் செய்து தர வேண்டும். ஒருவேளை பொருளின் உண்மையான மூல இடத்தை அடையாளப்படுத்தப்பட்டும் அல்லது புவியில் குறியடையாளம் மொழிபெயர்க்கப்பட்ட நிலையில் உபயோகப்படுத்தப்பட்டும் அல்லது 'போன்ற' 'வடிவான', வகையான, ஒத்தது என்ற வடிவில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் மேற்படி ஏற்பாடுகளை செய்து தர வேண்டும்.

2) புவியில் குறியீடுகளை அடையாளப்படுத்துவதாக ஆகப்பட்டிருக்கிற அல்லது அவ்வடையாளத்தை கொண்டிருக்கிற ஒய்ன் வகைகள் புவியில் குறியீடுகளை அடையாளப்படுத்துவதாக ஆகப்பட்டிருக்கிற அல்லது கொண்டிருக்கிற சாராய வகைகள் ஆகியனவற்றிற்கான பதிவை அலுவலகம் சார்பானவர்களால் ரத்து செய்யப்படலாம் அல்லது நிராகரிக்கலாம். இந்த இடத்தை மூலமாக கொண்டிராத ஒய்ன் அல்லது சாராய வகைகளை உறுப்பு நாடுகளின் சட்டங்களின் கீழ் அல்லது இது விசயத்தில் விருப்பமுள்ள நபர் கேட்டுக் கொள்வதன் அடிப்படையில் மேற்கண்டவாறு ரத்து அல்லது நிராகரிக்கச் செய்யலாம்.

3) புவியயில் குறியடையாளத்தை கொண்டுள்ள ஒய்ன்கள் விசயத்தில் ஒவ்வொரு குறிக்கும் பாதுகாப்பு வழங்கத்தக்கது. பகுதி 22இன் 4வது பாராவில் இதற்கான சரத்துகள் உள்ளன. கேள்விக்குரிய புவியில்குறியடையாளத்தைப் பொறுத்தவரை உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தங்களுக்குள்ளான வேறுபாடுகளை எடுத்துரைக்கும் வகையில் செய்ல்முறை வடிவங்களை உருவாக்க வேண்டும். உற்பத்தி நுகர்வாளர்களுக்கு தவறாக வழிகாட்டிவிடக்கூடாது.

4) ஒயின்களுக்கு ஆன புவியியல் குறியடையாளங்களுக்கு உள்ள பாதுகாப்பு முறைகளை எளிதாக்குவதற்கான விசயத்தில் அதற்கான பேச்சுவார்த்தைகளை 'டிரிப்ஸ்' குழுவின் கீழ் நடத்திடலாம். அதன்மூலம் அந்த பேச்சுவார்த்தைகளில் பங்கேற்ற நாடுகளில் ஒய்ன் வகைகளுக்கு புவியியல் குறியடையாளங்கள் பதிவு செய்வதற்கும் அறிக்கை செய்வதற்கும் ஆன பன்முனை ஒப்பந்தத்தை ஏற்படுத்தலாம்

## பகுதி: 24: சர்வதேச பேச்சு வார்த்தைகள்: விதிவிலக்குகள்:

1) பகுதி 23இன் கீழ் தனிப்பட்ட புவியில் குறியடையாளங்களை பாதுகாப்பதற்கான கூடுதல் ஏற்பாடுகளை செய்யும் நோக்கத்திலான பேச்சு வார்த்தைகளின் கீழ் வர உறுப்பு நாடுகள் ஒப்புக் கொள்ள வேண்டும். பேச்சு வார்த்தைகள் நடத்தி அதன் முடிவாக பரஸ்பர அல்லது பன்முனை ஒப்பந்தம் ஏற்படுவதை தடுக்க பாராக்கள் 4 முதல் 8 முடிய உள்ளவற்றின் சரத்துகளை உறுப்பு நாடுகள் பயன்படுத்தக்கூடாது. தனிப்பட்ட புவியியல் குறி அடையாளங்களை பயன்படுத்துவது சம்மந்தமாக நடைபெறும் இந்தப் பேச்சு வார்த்தைகளில் மேற்குறிப்பிட்ட சரத்துகளை தனிப்பட்ட புவியில் குறி அடையாளங்களுக்கு தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து ஆலோசிக்க உறுப்பு நாடுகள் முன்வர வேண்டும்.

2). இந்த பிரிவின் சரத்துகளை அமுலாக்குவதை தனது பரிசீலனையின் கீழ் 'டிரிப்ஸ்' குழு வைத்துக் கொள்ள வேண்டும். உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இப்படிப்பட்ட முதல் பரிசீலனை நடைபெறத்தக்கது. இந்த சரத்துகளின் கீழான பொறுப்புகளோடு இணங்கிப்போவதை பாதிக்கக்கூடிய விசயங்கள் 'டிரிப்ஸ்'குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லத்தக்கது. இது விசயமாக உறுப்பு நாடு ஒன்று மற்றொன்றுடனோ மற்றவைகளுடனோ பேச்சுவார்த்தைகள் நடத்திடலாம். உறுப்பு நாடுகளுடன் பரஸ்பரம் அல்லது பன்முனை ஆலோசனைகளை நடத்தியும் திருப்தியான தீர்வு காண முடியாத நிலையில் மேற்குறிப்பிட்டவாறு 'டிரிப்ஸ்'குழுவானது நடவடிக்கை எடுக்கலாம். அதன் மூலம் இந்தப் பிரிவின் நோக்கங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் நடைமுறையை எளிதாக்குவதற்குமான ஒப்புதலை ஏற்படுத்தலாம்.

3) இந்தப் பிரிவை அமுலாக்கும்போது உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் அமுலாக்கம் துவங்கும்போது அந்த நாட்டில் அமு ல் இருந்த புவியியல் குறியடையாளத்திற்கான பாதுகாப்பை ஒய்ன் வகைகளுக்கும் சாராய வகைகளுக்கும் பயன்படுத்தப்படும் புவியியல் குறியடையாளங்களை சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டின் குடி மக்களோ அல்லது அந்த நாட்டில் தொடர்ந்து வாழும் ஒருவரோ பொருள்கள் அல்லது சேவைகளுக்கு சம்மந்தப்பட்ட ஒய்ன் வகைகளுக்கான குறியடையாளத்தினைப் போன்றே தொடர்ந்து பயன்படுத்துவதை உறுப்பு நாடுகள் தடுக்க வேண்டியதைப் பற்றி இந்தப் பிரிவில் எதுவும் கேட்டுக் கொள்ளப்படவில்லை. அதே நேரத்தில் (அ) 1994 ஏப்ரல் 15 ருந்து குறைந்த பட்சம் 10 ஆண்டுகள், அல்லது (ஆ) நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முந்தைய தேதி வரை நன்நம்பிக்கையின் அடிப்படையில் மேற்படி புவியில் குறியடையாள பயன்பாடு தொடரலாம்.

5) நன்னம்பிக்கையின் அடிப்படையில் ஒரு வர்த்தக முத்திரை பதிவுக்காக விண்ணப்பிக்கப்பட்டிருக்கலாம் அல்லது பதிவு செய்யப்பட்டிருக்கலாம். வர்த்தக முத்திரைக்கான உரிமைகள் தொடர் உபயோகம் மூலம் நன்னம்பிக்கையின் அடிப்படையில் பெறப்பட்டு இருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில்:

அ) சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டில் இந்தச் சரத்துகள் அமுல்படுத்தப்படுவதற்கு முந்தைய நாள் வரையான நடவடிக்கைகள் பாகம் IVஇல் உள்ளது படி; அல்லது

ஆ) சம்மந்தப்பட்ட புவியியல் குறியடையாளத்தின் மூல நாட்டில் பாதுகாக்கப்பட்டிருப்பது போல மேற்குறிப்பிட்டுள்ளபடியான முந்தைய நாள் வரை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்த பிரிவுக்கு உள்ளடக்கியுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது வர்த்தக முத்திரை பதிவுக்கான தகுதிகளை சீர்குழைப்பதாகவோ அல்லது அந்த பதிவின் செல்லுபடித்தன்மையை சீர்குழைப்பதாகவோ இருந்து விடலாகாது.

6) சம்மந்தப்பட்ட மற்றொரு நாட்டு எல்லைக்குட்பட்ட பகுதியில் அப்படிப்பட்ட பொருள்கள் அல்லது சேவைகளுக்கு பொதுமொழியில் பொதுப்பெயரின் அடிப்படையில் அடையாளமானது பொருள்களுக்கும் சேவைகளுக்கும் இணைத்துப் பயன்படுத்துவது தெளிவாக வெளிப்படும் போது ஒரு உறுப்பு நாடு இந்தப்பிரிவின் சரத்துகளை பொறுத்துவது குறித்து இந்தப்பிரிவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. சம்மந்தபப்ட்ட மற்றொரு நாட்டு எல்லைக்குட்பட்ட பகுதியில் 'ஒய்ன்' தயாரிப்புகளுக்கு இணைத்துப் பயன்படுத்தப்படும் புவியியல் குறிஅடையாளங்கள் அந்த உறுப்பு நாட்டின் எல்லைக்குட்பட்ட வகைகளின் பெயர்களோடு சேர்த்து உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் அமுலாகும் தேதியில் அறிந்திருப்பது தெளிவாக வெளிப்படும் போது மேற்கொள்ள வேண்டிய நடிவடிக்கைகள் குறித்து இதில் ஒன்றும் குறிப்பிடவில்லை.

ஒரு வர்த்தக முத்திரையின் உபயோகம் அல்லது பதிவு சம்மந்தமாக இந்த பிரிவின் அடிப்படையில் முன்வைக்கப்படும் வேண்டுகோள் மீதான பதிலை பாதுகாக்கப்பட்ட அந்த குறியின் எதிர்மறையான பயன்பாட்டிற்கு வந்த நாளி ருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் வழங்க கடமைப்பட்டுள்ளன. அதாவது அந்த குறியானது பிரதிவாதியாக உள்ள நாட்டில் மேற்படி வர்த்தக முத்திரை பதிவு செய்யப்பட்டு அந்த வர்த்தக முத்திரை வெளியிடப்பட்ட நாளி ருந்து 5 ஆண்டுகளுக்குள் பதில் அளிக்கவே கடமைப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டு தேதியானது, அந்த நாட்டில் எதிர்மறை பயன்பாடு பொதுவாக அறியப்படுவதற்கு

8) வர்த்தகத்தைப் பொறுத்தவரை ஒரு நபருடைய பெயர் அல்லது வியாபாரத்தில் அவருக்கு முன்பு ஈடுபட்டிருந்தவரின் பெயரை உபயோகப்படுத்துவதற்கு அந்த நபருக்கு உள்ள உரிமையை பாதிக்கச் செய்வதற்கான எந்த வழியும் இந்தப் பரிவின் சரத்துகளில் இல்லை. பொதுமக்களை தவறான திசைக்கு அழைத்துச் செல்லும் விதத்தில் அந்தப் பெயர் பயன்படுத்துவதன் மீது மட்டுமே இப்பிரிவின் சரத்துகளின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்

9) ஒரு புவியியல் குறியடையாளம் அதன் மூல நாட்டில் பாதுகாக்கப்படாமல் இருந்திருந்தாலோ அல்லது முடிவுக்கு கொண்டுவரப்படிருந்தாலோ அல்லது மூல நாட்டில் பயன்படுத்தப்படாத நிலைக்கு சென்றிருந்தாலோ அந்த புவியியல் குறியடையாளத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்கு இந்த ஒப்பந்தத்தில் எந்தவித பொறுப்புகளும் நிர்ணயிக்கப்படவில்லை.

## பிரிவு:4: தொழில்துறை வரைவடிவங்கள்:

### பகுதி:25: பாதுகாப்புக்கான தேவைகள்:

1) சுதந்திரமாக உறுவாக்கப்பட்ட புதிய அல்லது மூல வடிவில் உள்ள தொழில்துறை வரைவடிவத்திற்கு உறுப்பு நாடுகள் பாதுகாப்பு வழங்க கடமைப்பட்டுள்ளன. ஏற்கனவே அறியப்பட்டுள்ள வரைவடிவங்களோடு பெரிய அளவிற்கு வேறுபடாததாகவும், அறியப்பட்டுள்ள வரைவடிவங்களின் சிறப்பம்சங்களது கலவையாகவும், புதியனவற்றிற்கான தன்மையற்றதாகவும், மூலவடிவத்திற்கான தன்மையற்றதாகவும் இருந்தாலும் அவற்றிற்கு உறுப்பு நாடுகள் காப்பு வழங்கக் கூடும். அப்படிப்பட்டநிலையில் தொழில்நுட்பரீதியிலும் இயங்குதன்மை அடிப்படையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மேற்குறிப்பிட்ட வகையிலான வரைவடிவங்களுக்கு உறுப்புநாடுகள் காப்பு வழங்கக் கூடாது.

2) ஜவுளித்துறை வரைவடிவங்களுக்கு பாதுகாப்பு பெறும் விசயத்தில் அதற்கு தேவைப்படும் விசயங்கள் அப்படிப்பட்ட பாதுகாப்பு பெறுவதற்கான வாய்ப்புகளை காரணமற்ற வகையில் சேதப்படுத்தக்கூடாது உறுப்பு நாடு இதை உறுதிப்படுத்தும் விதத்தில் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். குறிப்பாக ஆய்வு அல்லது வெளியீட்டிற்கு தேவைப்படும் விசயங்கள் போன்ற எந்த ஒரு வடிவத்திலும் பாதிப்பு ஏற்படுத்தி விடக்கூடாது. இந்த பொறுப்பை உறுப்பு நாடுகள் தொழில்துறை வரைவடிவ சட்டம் அல்லது பதிப்புரிமை சட்டம் மூலம் சுதந்திரமாக எதிர் கொள்ளலாம்.

### பகுதி:26: பாதுகாப்பு:

1) பாதுகாக்கப்பட்ட தொழில்துறை வரைவடிவத்தின் உரிமையாளரது அனுமதியில்லாமல் மூன்றாவது நபர்கள் அந்த வரைவடிவத்தின் உறுவத்தை அப்படியே நகல் அல்லது நகலை போன்ற வடிவத்தின் மூலம் எடுத்துப் பயன்படுத்துவது, உற்பத்தி செய்வது, விற்பனை செய்வது, அந்த வரைவடிவத்தில் உள்ள பகுதிகளை எடுத்துக் கையாள்வது ஆகிய வர்த்தக நோக்கிலான பயன்பாடுகளை தடுப்பதற்கான உரிமை பாதுகாக்கப்பட்ட அந்த வரைவடிவ உரிமையாளருக்கு உள்ளது.

2) தொழில்துறை வரைவடிவங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் விசயத்தில் உறுப்பு நாடுகளுக்கு மிகவும் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. அதே நேரத்தில் அப்படி தரப்பட்டுள்ள விதிவிலக்குகளானவை பாதுகாக்கப்பட்ட தொழில்துறை வரைவடிவத்தினை சாதாரணநிலையில் உபயோகிப்பதுடன் தேவையற்ற விதத்தில் முரண்படக் கூடாது. பாதுகாக்கப்பட்ட அந்த வரைவடிவத்தின் மூன்றாவது நபர்களின் சட்டபூர்வ உரிமைகளையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

3) இது விசயத்தில் பாதுகாப்பு கிடைப்புக் காலமானது குறைந்த பட்சம் 10 ஆண்டுகளாவது இருக்கலாம்

## பிரிவு 5: காப்புரிமைகள் :

### பகுதி:27: காப்பு பெறத்தக்க மூல விசயம்

1) விசயமானது பாராக்கள் 2 மற்றும் 3இன் சரத்துகளுக்கு உட்பட்டதாக இருக்கும்போது அது எத்தகைய கண்டுபிடிப்பாக இருந்தாலும் காப்பு பெறத்தக்கது. தொழில்நுட்பத்தின் எந்த ஒரு துறை சார்ந்த பொருள்கள் அல்லது தயாரிப்பு முறைகளாக இருந்தாலும் சரி சம்மந்தப்பட்ட கண்டுபிடிப்புகளானவை புதியதாகவும் கண்டுபிடிப்புப் படி நிலைகளுக்கு உள்ளானதாகவும் தொழில்துறை பயன்பாட்டிற்கு உகந்ததாகவும் இருந்தாலும்

சரி காப்பு பெறத்தக்கது. பகுதி 65இன் 4வது பாரா, பகுதி 70இன் 8வது பாரா இந்த பகுதியான 27இன் 3வது பாரா ஆகியனவற்றின் கீழ்வரும் விசயங்களைப் பொறுத்தவரை காப்புரிமைகள் பெற வாய்ப்புகள் உள்ளன. மேற்படி காப்புரிமையின் உரிமைகளை எந்தவிதமான பாரபட்சமும் இன்றி அனுபவிக்கலாம். கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்ட இடத்தில் உள்ளது போன்ற உரிமைகளை அனுபவிக்கலாம். அவை தொழில்நுட்பத்துறையின் அடிப்படையில் ஆனாலும் சரி அல்லது பொருள்களாக இருக்கும் பட்சத்தில் அது உள்ளூரினுடையதாயினும் இறக்குமதி செய்யப்பட்டதாயினும் சரி.

உறுப்பு நாடுகள் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை வழங்குவதி ருந்து விதிவிலக்கு பெறத்தக்கவை. அந்த நாட்டின் பொது ஒழுங்கு அல்லது ஒழுக்க நெறியை பாதுகாப்பிற்கு அவசியமான வர்த்தக ரீதியில் சுரண்டுவதை தடுப்பதற்கான தங்களது தடுப்பு நடைமுறைகளை கையாளலாம். அதே போல மனிதர்கள், விலங்குகள் மற்றும் பயிற்களின் உடல் நலன் பாதுகாக்கவும், சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படுத்துவதை தடுக்கவும் தனக்குள்ள விதிவிலக்குகளை உறுப்பு நாடுகள் பயன்படுத்தலாம். அப்படிப்பட்ட விதிவிலக்குகளை அப்படியே வெறுமனாக பயன்படுத்த முடியாது. அந்த நாட்டினது சட்டத்தின் மூலம்தான் அப்படிப்பட்ட சுரண்டலை தடுக்க முடியும்.

3) உறுப்பு நாடுகளும் காப்புரிமை வழங்குவதி ருந்து விலக்கு பெறத்தக்கவை.

அ) மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு ஆன நோயரிதல், சிக்ச்சையளித்தல் மற்றும் அறுவை சிகிச்சை முறைகளுக்கு காப்பளிக்கும் விசயத்தில் விலக்கு பெறலாம்.

ஆ) நுண் உறுப்பியல் கண்டுபிடிப்புகள் தவிர்த்து பயிர்கள் மற்றும் விலங்குகள் கண்டுபிடிப்பிற்கு உறுப்பு நாடுகள் விலக்கு பெறலாம். உயிரியல் சாராத மற்றும் நுண் உயிரியல் செய்முறைகள் தவிர்த்து பயிற்கள் மற்றும் விலங்குகள் உற்பத்தி செய்வதற்கு அவசியமான உயிரியல் செயல்முறை கண்டுபிடிப்புகளுக்கு உறுப்பு நாடுகள் விலக்கு பெறலாம். அதே நேரத்தில் பயிர் வகைகளுக்கோ அல்லது செயலூக்கம் மிக்க சுய்ஜெனரியஸ் முறை மூலமோ, அல்லது அது போன்ற கலப்பு முறையில் உறுவாக்கபட்டவற்றிற்கோ உறுப்பு நாடுகள் காப்பு வழங்க கடமைப்பட்டுள்ளன. இந்த துணை பாரா(ஆ)வின் சரத்துகள் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் அமுலாகத்துவங்கி நான்கு வருடங்கள் கழித்து பரிசீ க்கத்தக்கது.

## பகுதி :28: உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகள்:

1) ஒரு காப்புரிமை அதன் உரிமையாளருக்கு கிழ்கண்ட சிறப்பு உரிமைகளை உறுதிப்படுத்தலாம்.

அ) காப்புரிமையின் மூலவிசயம் தயாரிப்புப் பொருளைப் பற்றியதாக இருக்கும்போது மூன்றாவது நபர்கள் காப்புரிமையாளரின் அனுமதியில்லாமல் அவரது கண்டுபிடிப்பைக் கொண்டு தயாரிப்பதையோ, உபயோகிப்பதையோ, விற்பனைக்கு முன்வைப்பதையோ, விற்பதையோ அல்லது இந்த நோக்கத்திற்காக அந்த தயாரிப்பை இறக்குமதி செய்வதையோ தடுப்பதற்கான சிறப்புரிமை.

ஆ) காப்புரிமையின் மூலவிசயம் செயல்முறையைப் பற்றியதாக இருக்கும் போது மூன்றாவது நபர்கள் காப்பு உரிமையாளரின் அனுமதி பெறாமல் அந்த செயல்முறையை பயன்படுத்துவதையோ, உபயோகிப்பதையோ, விற்பனைக்கு முன்வைப்பதையோ, விற்பதையோ அல்லது அந்த செயல்முறையை நேரடியாக பெற்றுள்ள பொருளை இந்த செயல்முறைக்காக இறக்குமதி செய்வதையோ தடுப்பதற்கான சிறப்புரிமை.

2) காப்புரிமையின் உரிமையாளர் தனது உரிமைய பங்குபிரித்துத்தர உரிமையுள்ளவர். வாரிசுகளுக்கு மாற்றி எழுதித்தர உரிமையுள்ளவர், காப்புரிமை மட்டுமல்லாது உரிம குத்தகைகளையும் பங்கு பிரித்து தர உரிமையுள்ளவர்.

## பகுதி :29: காப்புரிமை விண்ணப்பங்கள் மீதான நிபந்தனைகள்:

1) காப்புரிமை கோரும் விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்துடன் கண்டுபிடிப்பைப் பற்றிய விவரங்களை இக்கண்டுபிடிப்பு சம்மந்தப்பட்ட துறையில் திறனுள்ள ஒருவரால், புரிந்துகொள்ள தேவைப்படும் அளவிற்கு தெளிவாகவும் முழுமையாகவும் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பம் நிறைவு செய்யப்பட்ட நாளில் கண்டுபிடிப்பாளர் கண்டுபிடிப்பு சம்மந்தமாக தனக்கு தெரிந்துள்ள விசயங்களை தன்னால் இயன்ற அளவு சிறப்பாக தொகுத்துக் கொடுத்திருக்க வேண்டும் அல்லது முன்னுரிமை பிரச்சனை எழுந்துள்ள நிலையில் விண்ணபத்தின் முன்னுரிமைத் தேதியில் தனது கண்டுபிடிப்பு பற்றிய விவரங்களை மேற்சொன்ன அடிப்படையில் தொகுத்துக் கொடுத்திருக்க வேண்டும்.

2) ஒரு விண்ணப்பதாரரிடம் அவரது காப்புரிமை சம்மந்தமாக அந்த விண்ணப்பதாரது வெளிநாட்டு விண்ணப்ப விவரங்கள் அதன் மீதான உரிமை வழங்கல்கள் குறித்த விவரங்களை தருமாறு உறுப்பு நாடுகள் கோரலாம்.

## பகுதி:30: உறுதி செய்யப்பட்ட உரிமைகளுக்கான விதிவிலக்குகள்:

காப்புரிமை உறுதிப்படுத்தியுள்ள சிறப்பு உரிமைகளுக்கு உறுப்பு நாடுகள் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளை நிர்ணயிக்கலாம். அதே நேரத்தில் அப்படிப்பட்ட விதிவிலக்குகளானவை அந்த உரிமையின் நியாயமான பயன்பாட்டுடன் தேவையற்ற விதத்தில் முரண்படக்கூடாது. காப்புரிமையின் உரிமையாளரது சட்டபூர்வ உரிமைகளை தேவையற்ற விதத்தில் பாதிப்படையச் செய்யக்கூடாது. மூன்றாவது நபர்களின் சட்டபூர்வ விருப்பங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

## பகுதி:31: உரிமை வைத்திருப்பவரின் அனுமதியின்றியே பிறவகையில் உபயோகித்தல்:

உறுப்பு நாடு ஒன்றின் சட்டத்தில் காப்புரிமையின் மூலவிசயத்தை அதன் உரிமையை கையில் வைத்துள்ளவரின் அனுமதியின்றியே பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருக்கலாம். அதாலது அரசு தானே உபயோகித்தல் அல்லது அரசாங்கமானது மூன்றாவது நபர்களுக்கு அனுமதியளித்தல் என்ற வகையில் இந்நடவடிக்கைகள் அமைந்திருக்கலாம். அப்படிப்பட்ட நேரத்தில் கீழ்கண்ட சரத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

அ) காப்புரிமையின் தனிப்பட்ட நன்மதிப்பினை கருத்தில் கொண்டே அப்படிப்பட்ட உபயோகத்திற்கு அரசு அனுமதியளிக்களாம்.

இ) அப்படிப்பட்ட உபயோகத்தின் நோக்கம், உபயோகிப்பு கால கட்டம் ஆகியவை எந்த காரணத்திற்காக அனுமதிப்பட்டதோ அதற்கு மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டும். குறை மின் கடத்தி தொழில் நுட்பத்தை பொறுத்தவரை வர்த்தகம் சாராத பொது உபயோகத்திற்கு மட்டுமே அப்படி அனுமதியளிக்கத்தக்கது. அல்லது நீதித்துறை முடிவுகளுக்கு பிந்தைய நடைமுறைகள் அல்லது போட்டி தவிர்ப்புக்கான நிர்வாக நடைமுறைகள் மூலம் மட்டுமே கையாளத்தக்கது;

ஈ) இவ்வகை உபயோகம் தனிச்சிறப்பு சலுகை பெறத்தக்கதல்ல;

உ) இவ்வகை உபயோகம் பங்குபோடத்தக்கதல்ல. ஆனால் இவ்வுபயோகத்தால் அதனுடன் சம்மந்தப்பட்ட நிறுவனம் அல்லது நன்மதிப்பு ஆகியன பங்கு பிரிக்கத்தக்கது;

ஊ) உறுப்பு நாடானது அப்படிப்பட்ட உபயோகத்திற்கு அனுமதியளிப்பதானது அதன் உள்நாட்டு சந்தைக்கு பொருள்களை வினியோகிப்பதற்கு என்ற விசயத்தில் தனக்கிருக்கிற முழு அதிகாரத்தோடு அனுமதி வழங்கலாம்.

எ) அப்படிப்பட்ட உபயோகத்தை நிறுத்தி வைப்பதற்குரிய சூழ்நிலைக்குச் சென்று மீண்டும் மேற்படி நிலைமை சீரடையாது என்று அறியப்படும்போது அப்படிப்பட்ட அனுமதி திரும்பப்பெறத்தக்கது கேட்டுக்கொள்ளப்படுவதன் அடிப்படையில் தக்க அதிகாரியைக் கொண்டு சூழ்நிலைமைகளின் தொடர்ச்சியை பரிசீ க்க வேண்டும்;

ஏ) அனுமதியளிக்கப்பட்டுள்ளதன் ஒவ்வொன்றின் தனித்தனி பொருளாதார மதிப்பை கணக்கில் எடுத்துக்கொண்டு சூழ்நிலைக்கேற்ப தக்க வெகுமதி அளிக்கப்பட வேண்டும்.

ஐ) அப்படிப்பட்ட உபயோகத்திற்கான முடிவின் மீதான சட்டப்பூர்வ மதிப்பு குறித்து சட்டபூர்வ பரிசீலனை செய்யத்தக்கது அல்லது உறுப்பு நாட்டின் தக்க உயர் அதிகாரியைக் கொண்டு சுதந்திரமாக பரிசீலனை செய்யத்தக்கது;

ஓ) துணை பாராக்கள் (ஆ) மற்றும் (ஊ)இன் கீழ் வருகிற கடமைகளை பின்பற்ற உறுப்பு நாடுகள் கடமைப்பட்டிருக்கவில்லை. போட்டித்தடை நடவடிக்கை என்று நீதித்துறை அல்லது நிர்வாகத்துறை முடிவு செய்யப்பட்ட பின்னர் பரிகார நடவடிக்கையாக மட்டும் மேற்படி துணை பயன்படுத்தலாம். முன்னர் அளித்த அனுமதியை விலக்கிக் கொண்ட பிறகும் அதை அனுமதிக்கலாம் என்று சூழ்நிலைகள் உணர்த்தும் போது விசாரணை செய்யும் தக்க அதிகாரிகள் அப்படிப்பட்ட விலக்களிக்க முடியாது என்று விலக்கு கோரும் விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்;

ஔ) ஒரு காப்புரிமை அப்படி பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டு உபயோகிக்கப்படும்போது ('இரண்டாவது காப்புரிமை') அது வேறொரு காப்புரிமையை ('முதலாவது காப்புரிமை') உறிஞ்சிப் பயன்படுத்தாதவாறு நடைபெற வேண்டும். இதை உறுதி செய்வதற்கு கீழ்வரும் கூடுதலான நிபந்தனைகளை பொறுத்த வேண்டும்:

(i) முதலாவதாக காப்புரிமை பெற்றதில் உள்ள கண்டுபிடிப்பின் சிறப்புத்தன்மையை விட இரண்டாவதாக காப்புரிமை பெற்றுள்ளதின் கண்டுபிடிப்புத்தன்மையில் முக்கியமான தொழில்நுட்ப முன்னேற்றம் காணப்பட்டிருக்கத்தக்கது;

(ii) இரண்டாவது காப்புரிமையில் உபயோகிப்படும் தனது கண்டுபிடிப்பின் பகுதிகளுக்கு முதலாவது கண்டுபிடிப்பின் உரிமையாளர் தனது உரிமையையும் பெற வேண்டும் என்று கோரலாம்.

(iii). அப்படி உபயோகிக்கப்படும் முதலாவது காப்புரிமை பங்கு பிரிப்பதென்பது இரண்டாவது காப்புரிமை பங்கு பிரிக்கப்பட்டு விட்ட நிலையில் சாத்தியமில்லை.

## பகுதி :32: ரத்து செய்தல்/பறிமுதல் செய்தல்:

ஒரு காப்புரிமை ரத்து செய்வது பறிமுதல் செய்வது சம்மந்தமான எந்த ஒரு முடிவும் நீதித்துறை பரிசீலனைக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## பகுதி:33: பாதுகாப்பின் காலகட்டம்:

விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் கொண்டு இருபது ஆண்டுகளுக்கு முன்பட்ட தேதியில் காலாவதியாகாத காலகட்ட அளவிற்கு காப்புக் காலம் வழங்கத்தக்கது.

## பகுதி: 34: தயாரிப்பு செயல்முறை காப்புரிமை: நிரூபிப்பதில் உள்ள சிரமம்:

1) தயாரிப்பு செயல்முறை காப்புரிமை மீது சட்ட மீறல் நடந்துள்ளதாக அதன் உரிமையாளர் பகுதி 28 ன் பாரா 1(ஆ)வின் கீழ் விசாரணை கோரும்போது அதன் மீது பொது நீதி விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அப்போது தனது நிலையை நிரூபிக்கும் வகையில் சம்மந்தப்பட்ட வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்பு செயல்முறைக்கும் அதேபோன்ற பொருளை தயாரிப்பதற்கு தான் பயன்படுத்தியுள்ள செயல்முறைக்கும் சம்மந்தமில்லை என்பதை பிரதிவாதி நிரூபிக்கக் கடமைப்பட்டவர். எனவே உறுப்பு நாடுகள் கீழ்வரும் ஏதாவது ஒரு சூழ்நிலையை அதாவது அடையாளங்காணப்பட்ட ஏதாவது ஒரு தயாரிப்பில் காப்புரிமையாளரின் அனுமதி பெறாமல் பயன்படுத்தப்பட்டுள்ளதும் அதை பிரதிவாதி மறுக்கமுடியாததுமான நிலையில் அந்த தயாரிப்பில் காப்புரிமை பெற்றுள்ள தயாரிப்பு செயல்முறை ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக முடிவு செய்யலாம்:

அ) சம்மந்தப்பட்ட பொருளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள காப்புரிமை புதிதாக இருக்கும் நிலையில்;

ஆ) சம்மந்தப்பட்ட தயாரிப்பு செயல்முறையாவது ஒத்தநிலையிலுள்ள பொருளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது உறுதியாக்கப்பட்டுள்ள நிலையில் காப்புரிமையின் உரிமையாளர் அந்த செயல்முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளதை தக்க

முறையில் உறுதிப்படுத்த இயலாத நிலையில் உறுப்பு நாடு அதன் பயன்பாட்டை குறித்து முடிவுக்கு வரலாம்.

2) உறுப்பு நாடுகளுக்கு சம்மந்தப்பட்ட பிரச்சனையை பாரா -1இன் கீழ் நிரூபிக்க வேண்டிய பொறுப்பி ருந்து விடுபட கீழ்க்கண்ட நிலமை இருக்க வேண்டும். சட்ட மீறல் செய்யப்பட்ட நிலையானது ஒன்று துணை பாரா (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ளதை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும் அல்லது துணை பாரா (ஆ)இல் குறிப்பிடப்பட்டுள்ளதை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும்.3) பிரச்சனைக்குள்ளாகியுள்ளதை நிரூபிக்கும் அதே வேளையில் பிரதிவாதிகளின் உற்பத்தி மற்றும் வர்த்தக நலன்களை பாதுகாப்பதற்கான சட்டபூர்வ விருப்பங்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பிரிவு:6: ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளின் திட்ட வரைவடிவங்கள்

### பகுதி:35: ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளின் அறிவுச் சொத்துரிமை சார்ந்த ஒப்பந்தம்

திட்டவரைவடிவங்கள் என்று இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் ஒறுங்கிணைந்த மின்சுற்றுகளின் திட்ட வரைவடிவங்களுக்கு பகுதி 2 முதல் 7 முடிய உள்ள சரத்துகளுக்கு ஏற்ப (பகுதி 6இன் பாரா 3 தவிர) பாதுகாப்பு வழங்க உறுப்பு நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன. ஒறுங்கிணைந்த மின்சுற்றுகள் சார்ந்த அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தத்தின் பகுதி 12, மற்றும் பகுதி 16இன் பாரா 3க்கும் ஏற்ப காப்பு வழங்க ஒப்புக் கொண்டுள்ளன. இவை அடுத்துவரும் சரத்துகளுக்கும் பொறுந்தி நிற்கதக்கவை.

### பகுதி:36: பாதுகாப்பிற்கான வாய்ப்பு:

உரிமையாளரின் ஒப்புத ல்லாம் கீழ்வரும் செயல்களை செய்வது சட்டத்திற்கு புறம்பானது என்று பகுதி -37இன் முதலாவது பாராவின் சரத்துகளுக்கு உட்பட்டு உறுப்பு நாடு கருதலாம்: (அ) பாதுகாக்கப்பட்ட திட்ட வரைவடிவத்தை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் அல்லது வர்த்தக நோக்கத்திற்காக வினியோகித்தல். பாதுகாக்கப்பட்ட திட்டவரை வடிவத்தை தன்னுள் கொண்டுள்ள ஒறுங்கிணைந்த மின்சுற்று அல்லது அதன் ஒரு பகுதியை தன்னுள் கொண்டிருப்பது என்பது போன்ற ஏதாவது ஒன்று பிரச்சனைக்குள்ள திட்டவரை வடிவத்தில் தொடர்ந்து இருந்து வரும் காலகட்டம் வரை அது திட்டவரைவடிவத்தை சட்டத்திற்கு புறபம்பாக மறு உற்பத்தி செய்வதாக கருதப்படும்.

### பகுதி:37: உரிமை வைத்திருப்பவரின் ஒப்புதலை எதிர்பார்க்காத சட்டங்கள்

1) சட்டத்திற்கு புறம்பாக தயாரிக்கப்பட்ட திட்ட வரைவடிவத்தில் ஒறுங்கிணைந்த மின்சுற்று ஒன்றின் வரைவடிவம் அல்லது அந்த ஒறுங்கிணைந்த மின்சுற்று ஒரு பாகமாக உள்ளடங்கி இருந்தாலும் அத்தகு நடவடிக்கை பகுதி-36இன் கீழ் வராதபட்சத்தில் எந்த ஒரு உறுப்பு நாடும் அப்படிப்பட்ட நடிவடிக்கையை சட்ட விரோதமாக கருத வேண்டியதில்லை. அப்படி ஒரு நபர் பயன்படுத்தும்போது அது அப்படி பயன்படுத்தக்கூடாதது என்பது அவருக்கு தெரியாம ந்தாலோ, அப்படி அறிந்துகொள்ளவேண்டியதற்கான நியாயமான காரணங்கள் அவருக்கு தெரிந்திருக்காத பட்சத்திலோ மறு உற்பத்தி செய்யப்பட்ட திட்டவரைவடிவத்தில் சட்டத்திற்கு புறம்பாக ஒறுங்கிணைந்த மின்சுற்று உள்ளடக்கப்பட்டிருந்தாலோ அல்லது அந்த ஒறுங்கிணைந்த மின்சுற்றே ஒரு பாகமாக இணைக்கப்பட்டிருந்தாலோ மேற்கண்டவாறு சட்ட விரோதமானதாக கருத வேண்டியதில்லை.

2) திட்டவரைவடிவத்திற்கான கட்டாய உரிமம் அல்லது அதை அதன் உரிமையாளரின் அனுமதியின்றி அரசாங்கம் பயன்படுத்துவது ஆகியனவற்றிற்கு பகுதி-31இன் துணை பாராக்கள் (அ) முதல் (ஆ)வரை உள்ளதை தக்க திருத்தங்கள் செய்து பயன்படுத்தலாம்.

### பகுதி : 38 : பாதுகாப்பு கால கட்டம்:

1) பாதுகாப்பு வழங்குவதற்கு பதிவு அவசியமாக உள்ள நிலையில் பாதுகாப்பு கால கட்டத்தை உறுப்பு நாடுகள் நிர்ணயிக்கவேண்டும். திட்ட வரைவடிவ பாதுகாப்புக்கான கால கட்டம் அதற்கான பதிவுக்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட நாளி ருந்து 10 ஆண்டுகள் அல்லது அந்த வரைவடிவம் வர்த்தக நோக்கில் உலகின் எந்த பகுதியில் முதன்முதலாக பயன்படுத்தப்பட்ட நாளி ருந்து பத்து வருடங்களுக்கு குறையாத காலகட்டத்திற்கு பாதுகாப்பு காலம் வழங்கலாம்.

2) பாதுகாப்பு வழங்குவதற்கு பதிவு அவசியமாக இல்லாத உறுப்பு நாடுகளில் திட்ட வரைவடிவங்களுக்கு அவ்வரைவடிவங்கள் உலகின் எந்த ஒரு பகுதியிலாவது முதன்முதலாக பயன்படுத்தப்பட்ட நாளி ருந்து 10 வருடங்களுக்கு கால நிர்ணயம் செய்து பாதுகாப்பு வழங்க வேண்டும்.

3) பாராக்கள் 1 மற்றும் 2 ஆகியனவற்றுடன் இணைந்து நிர்காதனவற்றின் விசயத்தில் அந்த திட்ட வரைவடிவு உறுவாக்கப்பட்ட நாள் முதல் 15 ஆண்டு கால கட்டத்திற்கு பிறகு காலாவதியாகுமாறு பாதுகாப்பு காலத்தை உறுப்பு நாடு நிர்ணயிக்கலாம்.

## பிரிவு :7:வெளியிடப்படாத தகவல்களுக்கான பாதுகாப்பு:

### பகுதி:39:

1) நெறிமுறையற்ற போட்டிக்கு எதிராக செயலூக்கம் மிக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்துவது

சம்மந்தமாக பாரிஸ் சிறப்பு மாநாட்டின் (1967) பகுதி 10 க்ஷண்ள்இல் கூறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வெளியிடப்படாத தகவல்களுக்கு உறுப்பு நாடுகள் பாதுகாப்பு வழங்கும்போது இப்பகுதியின் 2வது பாராவுக்கு ஏற்பவும், அரசு மற்றும் அரசு

சார்பான நிறுவனங்களுக்கு சமர்பிக்கப்படும் தகவல்கள் விசயத்தில் இப்பகுதியின் 3வது பாராவுக்கு ஏற்பவும் காப்பளிக்கத்தக்கவர்கள்.

2) தங்கள் சட்டபூர்வ கட்டுப்பாட்டில் வெளியிடப்படாத தகவல்களை வைத்துள்ள இயற்கையான மற்றும் சட்டபூர்வ உரிமையாளர்கள் தங்களது இந்த தகவல்களுக்கு பாதுகாப்பு பெறத்தக்கவர்கள். மேற்படி உரிமையாளர்களின் அனுமதி பெறாமல் நேர்மையான வர்த்தக நடைமுறைகளுக்கு (10) மாறாக தகவல்கள் வெளிவரச் செய்வதையோ, கைக்கொள்ளப்படுவதையோ, பிறரால் உபயோகிக்கப்படுவதையோ தடுத்து அவர்களது உரிமைக்கு பாதுகாப்பு பெறவும் தக்கதாகும்:

அ) ரகசியம் என்பது அதன் அர்த்தத்தில், அதாவது அதன் அமைப்பு அல்லது அதன் துல் ய மற்றும் அதன் பாகங்களின் சேர்கைவடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆன ரகசியம் அதனைப்போன்ற பொதுவான பிறவற்றை போலல்லாத ஆகும். அல்லது கேள்விக்குறிய தகவல் போன்றவற்றுடன் தொடர்ந்து ஈடுபடும் ஒருவரால் உடனடியாக அறிந்து கொள்ள இயலாத தகவல் ஆகியன ரகசியங்கள் ஆகும்;

ஆ) அதனிடம் வியாபார மதிப்பு இருப்பதன் காரணமாக அது ரகசியத்தன்மை உடையதாகிறது; மற்றும்

இ) தகவலை சட்டப்படி தனது காட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ள நபரால் தக்க காரணங்களின் அடிப்படையில் ஏற்படும் சூழ்நிலைகளால் அது ரகசியத்தன்மை உடையதாக காக்கப்பட வேண்டியுள்ளது;

3) மருந்துகள் அல்லது வேளாண் ரசாயணப் பொருள்கள் ஆகியவை புதிய ரசாயணப் பொருள்களை கொண்டு தயாரிக்கப்படும்போது அவற்றிற்கான விற்பனை அனுமதியை தாங்களால் வழங்குவதற்கு கோரப்படும் வெளியிடப்படாத சோதனை விவரங்கள் அல்லது குறிப்புகள் நெறியற்ற வியாபார உபயோகத்திற்கு பயன்படுத்தப்படாமல் பார்த்துக்க வேண்டியது உறுப்பு நாடுகளின் கடமையாகும். மேலும் அப்படிப்பட்ட விவரங்கள் வெளியிடப்படுவதனின்றும் அவை உறுப்பு நாடுகளால் பாதுகாக்கத்தக்கதாகும்.நெறியற்ற வியாபார நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்துவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட சோதனை குறிப்புகள் அல்லது விவரங்கள் ஆகியனவற்றின் பயன்பாட்டி ருந்து பொதுமக்களை பாதுகாத்திட வேண்டியுள்ளது என்ற நிலையில் மட்டும் வெளியிடப்படுவதை தடுக்க வேண்டியதில்லை.

## பிரிவு :8: ஒப்பந்த உரிம நடவடிக்கைகளில் போட்டி தவிர்பு முயற்சிகளை கட்டுப்படுத்துதல்:

### பகுதி: 40:

1) போட்டியை கட்டுப்படுத்திவைப்பதுபோன்ற வகையிலான அறிவுச் சொத்துரிமைகள் சார்ந்த தங்களது சில உரிம வழங்கல் நடைமுறைகள் வர்த்தகத்தின் மீது கடும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு உரிமை மாற்றத்தையும் தொழில் நுட்ப பரவைலையும் தடுக்கக் கூடியதாக உள்ளது என்பதை உறுப்பு நாடுகள் ஒப்புப் கொள்கின்றன.

2) உறுப்பு நாடுகள் தங்கள் சட்டங்களில் உள்ளபடி ஒப்பந்த உரிம வழங்கல் முறைகளை கையாள்வதை தடுக்கவும், குறிப்பிட்ட சிலவற்றில் அறிவுச் சொத்து உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்பதை நிறுவுவதற்கு உறுப்பு நாடுகள் நிர்ணயித்துள்ள சில விதிமுறைகள் சம்மந்தப்பட்ட தயாரிப்பின் சந்தையை கடுமையாக பாதிக்கச் செய்வதை தடுக்கவும் இந்த ஒப்பந்தத்தில் வழிவகைள் ஏதுமில்லை. மேற்குறிப்பிட்ட வகையில் பார்க்கும் போது இப்படிப்பட்ட நடவடிக்கைகளை தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு ஆன நடவடிக்கைகளை எடுக்கும்போது ஒப்பந்தத்தின் பிரசரத்துக்கு முரண்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மானிய உதவி (எழ்ஹய்ற்) திரும்பப் பெறுவதற்கான சிறப்பு விதிமுறைகள் செல்லுபடிக்காலத்திற்கு சவால் விடக்கூடியதாக செயல்படுவது மற்றும் பலவந்தமாக உரிமையின் கீழ் அடக்குவது ஆகிய நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் தங்களது தகுந்த சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு மேற்கொள்வதை தடுப்பதற்கான வகையில் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் செய்யத்தக்கது.

3) கேட்டுக் கொள்வதன் அடிப்படையில் உறுப்பு நாடுகள் ஒன்று மற்றொன்றுடன் ஆலோசனைகளை நடத்தலாம். ஒரு நாட்டின் குடிமகன் அல்லது அந்நாட்டில் தொடர்ந்து குடியிருந்து வரும் ஒருவருடைய அறிவுச் சொத்துரிமை சம்மந்தமாக மேற்கண்டவாறு ஆலோசனை நடத்தலாம். இந்தப் பகுதியின் (பகுதி 40) மூலவிசயத்தின் அடிப்படையிலான தனது சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறுவதாக நடவடிக்கைகள் இருப்பதாக கருதி ஆலோசனையை கோரலாம். இவ்வாலோசனைகள் எந்த வகையிலான சட்டங்களுக்கும் பொறுந்தக்கூடியவகையிலும், அந்த வகை சட்டத்தின் நடவடிக்கையின் மீது தாக்கம் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியதாகவும் ஆலோசனையில் கலந்து கொள்ளும் அடுத்த உறுப்பு நாடு தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் முடிவு எடுக்க தக்கதாகவும் இருக்கத்தக்கது. ஆலோசனைக்கு அழைக்கப்பட்டுள்ள நாடும் தனது பங்கிற்கு மிகவும் அனுதாபமான முடிவுக்கு செல்லத்தக்கது. போதுமான வாய்ப்புகளையும் ஆலோசனையை கேட்டுக் கொள்ளும் நாட்டிற்கு வழங்கலாம்; கேள்விக்குறிய விசயம் சம்மந்தமான ரகசியத்தன்மையற்ற பொதுவாக கிடைக்கிற தகவல்களை வழங்கலாம். இறுதியாக பரஸ்பரம் திருப்திப்படக்கூடிய வகையிலான ஒப்பந்தம் எட்டப்படத்தக்கது. அழைக்கப்பட்ட நாட்டின் நம்பகத்தன்மையை பாதுகாக்கக்கூடிய வகையில் அழைக்கும் நாட்டின் நடவடிக்கைகள் அவ்வொப்பந்தத்தின் போது அமைந்திருக்கத்தக்கது.

4) இந்த பகுதியின் (பகுதி - 40) மூல விசயத்தின் அடிப்படையில் மற்றொரு உறுப்பு நாட்டின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறியதாக கருதும் அந்த உறுப்பு நாட்டின் விசாரணைக்கு உட்பட்டுள்ள ஒரு உறுப்பு நாட்டின் குடிமக்கள் அல்லது அந்நாட்டில் தொடர்ந்து குடியிருந்து வருபவர்களின் விசயத்தில் அவர்களது நாடு ஆனது குற்றஞ்சாட்டும் நாட்டிடம் இப்பகுதியின் (பகுதி 40) 3வது பாராவில் உள்ளபடி ஆலோசனை மேற்கொள்ள கேட்கும் போது அதற்கு வாய்ப்பளிக்கலாம்.

# பாகம் - அறிவுச் சொத்துரிமைகள் அமுலாக்கம்

## அத்தியாயம் - 10

### பிரிவு - 1 பொதுப் பொறுப்புகள்

### பகுதி - 41

1) இந்தப்பகுதி (பகுதி 41) இல் குறிப்பிடப்பட்டுள்ள படியான அமுலாக்க நடைமுறைகளை உறுப்புநாடுகள் தங்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரலாம். அதன் மூலம் இந்த ஒப்பபந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள அறிவுச் சொத்து உரிமைகள் மீதான சட்ட மீறல்களுக்கு எதிராக காரிய சாத்தியமான நடவடிக்கை எடுக்க முடியும். சட்ட மீரல்களை தடுப்பதற்கான வேகமான தீர்வுகள் காண்பதன் மூலம் மேற்கொண்டும் சட்ட மீரல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகளாக அது இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நடைமுறைகள் அமுலாக்குவதன் மூலம் சட்ட பூர்வ வர்த்தகத்திற்கு தடைகள் ஏற்படுவதை தடுக்க முடியும். அவைகளை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடாகவும் அது இருக்கும்.

2) அறிவுச் சொத்துரிமைகள் அமுலாக்க நடைமுறைகள் நேர்மையானதாகவும் சமவாய்ப்பு அளிப்பதாகவும் இருக்கவேண்டும். தேவையற்ற வகையிலான சிக்கல் மிக்கதாகவும் செலவு பிடிப்பதாகவும் இல்லாம ருக்கலாம். அதேபோல ஏற்க இயலாத கால நிர்ணயிப்புகள் மற்றும் எதிர்பாராத கால தாமதங்கள் ஆகியன ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

3) வழக்கின் தகுதிகள் சம்மந்தப்பட்ட முடிவுகள் எழுத்து வடிவத்திலும், தக்க காரண அடிப்படையிலும் அமைந்திருப்பது வரவேற்கத் தக்கது. வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள நபர்களுக்காவது காலதாமதமில்லாமல் அந்த விவரங்கள் போய்ச் சேருவதாக இருக்க வேண்டும். வழக்கின் தகுதிகள் சம்மந்தப்பட்ட முடிவுகள் அது சம்மந்தப்பட்டவர்கள் சட்ட பூர்வமாக அறிந்து கொள்ளத்தக்க காட்சிகளை உள்ளடிக்கிய வடிவில் கிடைக்கத்தக்காக இருக்கலாம்.

4) இறுதியான நிர்வாக முடிவளிக்கக் கூடிய நீதித்துறை அமைப்பைக் கொண்டு பரிசீ க்கத்தக்க வாய்ப்பை வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கலாம். வழக்கின் முக்கியமான பகுதி சம்மந்தமான சரத்துகள் உறுப்பு நாட்டினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். வழக்கின் தகுதிகள் மீதான ஆரம்ப நிலையிலான நீதித்துறை முடிவுகளை எடுக்க உதவக்கூடிய வகையிலாவது இருக்க வேண்டும். அதே நேரத்தில் இது விஷயத்தில் குற்றவியல் வழக்குக்கு விஷயத்தில் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு குறித்த எந்த விதமான பொறுப்பும் நிர்ணயிக்கப்படவில்லை.

பொதுவான சட்ட அமுலாக்க முறைக்கு மாறாக உள்ள அறிவுச் சொத்துரிமைகள் அமுலாக்கத்திற்கான சட்ட முறைகளின் இடத்தில் எந்த ஒரு பொறுப்பையும் இந்த பாகம் (பாகம் - ஐஐஐ ) கொண்டு வந்து நிறுத்தவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதேபோல உறுப்பு நாடுகளுக்கு தங்களது பொதுவான சட்டத்தை அமுலாக்க உள்ள பலத்தையும் பாதித்துவிடக் கூடாது. பொதுவான சட்ட அமுலாக்க முறைகளுக்கும் அறிவுச் சொத்துரிமைகள் அமுலாக்க முறைகளுக்கும் இடையே ஒருங்கிணைந்துள்ள வாய்ப்புகள் மீதும் இந்த பாகத்தின் (பாகம்-ஐஐஐ ) எந்த ஒரு பகுதியும் பொறுப்பு நிர்ணயிக்கவில்லை.

### பிரிவு - 2 பொது மற்றும் நிர்வாக நடைமுறைகளும் அவைகளுக்கான தீர்வுகளும்

### பகுதி - 42 வெளிப்படையான சமவாய்ப்பளிக்கும் நடைமுறைகள்

இந்த ஒப்பந்தத்தின் கீழ் வருகிற அறிவுச் சொத்து உரிமைகள் அமுலாக்கம் மீதான பொது நீதி நடைமுறைகள் சம்மந்தப்பட்ட விவரங்கள் உரிமைதாரருக்கு கிடைத்திட உறுப்பு நாடுகள் முயற்சிகள் மேற்கொள்ளலாம். போதுமான விவரங்களுடன் கூடிய எழுத்து பூர்வமான அறிக்கையை தக்க நேரத்தில் வழங்கிட பிரதிவாதிகளுக்கு வாய்ப்பளிக்கலாம். சம்மந்தப்பட்ட உரிமைகளின் அடிப்படையிலான விவரங்களையும் அவர்கள் அளிக்கலாம். சுதந்திரமான சட்டக் குழுவினை நியமித்துக் கொள்ள வழக்கில் சம்மந்தப்பட்டவர்களுக்கு அனுமதி தரலாம். தனிப்பட்ட வகையிலான உத்தரவுகள் பற்றிய விவரங்களை கோரும்போது வழக்கு நடவடிக்கைகள் தாங்க முடியாத சுமையாகப் போய்விடக்கூடாது. வழக்கு நடவடிக்கையில் சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் அவர்களுக்கு உள்ள உரிமைகளை நிரூபிக்க

வாய்ப்பை வழங்கலாம். நம்பகத்தன்மை வாய்ந்த தகவல்களை அடையாளங்கண்டு பாதுகாக்கக்கூடிய வகையில் வழக்கு நடவடிக்கைகள் அமைந்திருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் ஏற்கனவே உள்ள அமைப்புச் சட்ட வேண்டுகோள்களுக்கு முரண்பட்டதாக மாறிவிடும்.

### பகுதி - 43 சாட்சிகள்

1) தமது உரிமை கோரல்களுக்கு ஆதரவாக இருக்கத்தக்கதாக தன்னிடமுள்ள சாட்சியங்களை ஒருவர் நியாயமான முறையில் சமப்பிக்கும் போது அவை அவரது உரிமைகள் எதிர் தரப்பினரிடம் உபயோகத்தில் உள்ளன என்பதை நிரூபிக்கும் வகையிலான குறிப்பிடத்தக்க சாட்சியங்களாகவும் இருக்கின்றன. இவற்றை பெற்றுள்ள நீதித்துறை அதிகாரிகள் இதே போன்ற சாட்சியை எதிர் தரப்பினரும் சமர்பித்திருக்கும் போது இவற்றில் எதனது ரகசியமான தகவல்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பாதுகாப்பு பெறத்தக்கது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

2) வழக்கு நடைமுறையில் தானாக இணையும் ஒரு நபரைப் பொறுத்தவரை எந்தவிதமான தக்க காரணமும் இல்லாமல் வரும்போது வாய்ப்பு நிராகரிக்கலாம் அல்லது நியாயமான கால கட்டத்திற்குள் தேவையான தகவல்களை தராவிட்டாலோ அவர்களது

வரிசை அமுலாக்க நடைமுறைகள் சம்மந்தப்பட்ட வழக்கு நடைமுறைகளுக்கு பெரிய அளவிற்கு தடை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தாலோ வாய்ப்பு நிராகரிக்கலாம். அதே நேரத்தில் வழக்கில் சம்மந்தப்பட்டவர்களுக்கு அந்த வழக்கின் மேலான குற்றச்சாட்டுகள் அல்லது சாட்சிகளை அளிப்பதற்கான விஷயத்தின் மீது முடிவெடுப்பதற்கு நீதித்துறை அதிகாரிகளுடன் உறுப்பு நாடுகள் இணைந்து செயல்பட வேண்டும். அவர்களிடம் சமர்பிக்கப்படும் புகார்கள் அல்லது வழக்கு நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்காததால் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகும் என்ற வகையிலான அந்த நபரின் குற்றச்சாட்டுகள் ஆகியனவற்றின் அடிப்டையில் சாதகமாகவோ பாதகமாகவோ நீதித்துறை அதிகாரிகள் முடிவு எடுக்கலாம். இதனடிப்படையில் நீதித்துறை அதிகாரிகள் இது குறித்து துவக்க நிலை மற்றும் இறுதி நிலை முடிவுகளுக்கு வருகின்றனர்.

## பகுதி - 44 வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தி வைப்பு

உரிமை மீரல்களை தவிர்க்குமாறு ஒரு நபருக்கு நீதித்துறை அதிகாரிகள் ஆணை பிறப்பிக்க அதிகாரம் படைத்தவர்கள் ஆவார்கள். தங்கள் நீதி எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் வர்த்தகத்தில் அறிவுச் சொத்துரிமை மீறல்கள் இருந்திருக்குமேயானால் அப்படிப்பட்ட முறையில் நுழைவதை சுங்க இலாக்கா அனுமதி பெற்று சரக்குள் உள்ளே வரும் நிலையில் உடனடியாக தடுக்கலாம். அப்படி ஆணையிடும் நபர் அல்லது பாதுகாக்கப்பட்ட மூல விஷயத்தை பெற்றுள்ள நபர்கள் அவ்விவரங்களை கையாளுபவர்கள் என்ற வகையில் அந்த மூல விஷயத்தை அறிந்தவராக இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. அப்படிப்பட்ட நிலையில் சம்மந்தப்பட்ட மூல விஷயம் அறிவுச் சொத்துரிமையை மீறக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் உறுப்பு நாடுகள் அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு இசைந்து நடக்க கடமைப்பட வேண்டியதில்லை.

2) இந்த பகுதி (பகுதி 44) யின் பிற சரத்துகள் மற்றும், குறிப்பாக பாகம் ஐஐஇல் அரசாங்கங்களின் உபயோகத்திற்கு என்று குறிப்படப்பட்டுள்ள சரத்துகள், அல்லது உரிமை வைத்துள்ளவரின் அனுமதியோடு இணைந்து என்ற வகையில் அல்லாத வகையில் அரசாங்கத்தால் மூன்றாம் நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற நிலைபாடுகளுடன் உறுப்பு நாடுகள் உறுதியாக நிற்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட உபயோகத்திற்கு ஈடான தொகை வழங்கும் விஷயத்தில் பகுதி - 31 இன் துணை பாரா (ஏ) வின் கீழான நிர்ணயிப்புகளை உறுப்பு நாடுகள் கட்டுப்படுத்தலாம். ஏனை வழக்குகள் விஷயத்தில் இந்தப்பகுதி (பகுதி - 44) இன் கீழான தீர்வு முறைகளை அமுலாக்கலாம். உறுப்பு நாடுகளின் சட்டத்திற்கு பொருந்தாத வகையில் இந்த தீர்வு முறைகள் இல்லாத பட்சத்தில், உறுதியான தீர்ப்புகள் மூலம் போதுமான ஈட்டுத்தொகை பெறலாம்.

## பகுதி - 45 பாதிப்புகள்

1) உரிமை மீரல் செய்துள்ளவர் தனது செயலால் அவ்வுரிமை வைத்துள்ளவருக்க இழப்பீடு தொகை வழங்க ஆணையிடுவதற்கான அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. மீரலுக்கு உள்ளாகி உள்ளவரின் அறிவுச் சொத்துரிமையின் விஷயத்தில் அப்படிப்பட்ட மீர ல் ஈடுபட்டுள்ளவர் தனக்குத் தெரிந்தே இந்த

உரிமை மீர ல் ஈடுபட்டிருந்தாலும் அல்லது அவருக்கு உரிமை மீரல் நடக்கிறது என்பது தெரிந்திருப்பதற்கான தக்க ஆதாரங்கள் இருக்கும் போதும் தக்க இழப்பீடு வழங்குமாறு நீதித்துறை அதிகாரிகள் கோரலாம்.

2) வழக்கு விஷயத்தில் உரிமை வைத்திருப்பவருக்கு ஏற்படும் செலவுத் தொகையையும் உரிமை மீர ல் ஈடுபடுபவர் வழங்குமாறு ஆணையிடுவதற்கான அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. வழக்கிற்கு பொறுத்தமான வழக்கறிஞரின் கட்டணமும் இதில் அடங்கும். அதே போல உரிமை மீரல் பெயரில் ஈடுபட்டுள்ளவர் செயலால் முன்கூட்டியே ஏற்படுத்தப்பட்டுள்ள பாதிப்புகளுக்கு ஆன இழப்பீட்டு தொகை அல்லது லாப தொகையை சரியான வழக்குகளின் விஷயத்தில் நிர்ணயிக்குமாறு நீதித்துறைக்கு உறுப்பு நாடுகள் அனுமதியளிக்கலாம்.

## பகுதி - 46 பிற தீர்வுகள்

ஒரு பொருளின் தயாரிப்பு நடவடிக்கையில் உரிமை மீறல் இருக்கிறது என்று அறியப்படும் போது அதை தடுப்பதற்கான தக்க நடைமுறைகளை கையாளும் அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. இந்நடவடிக்கைகளை வர்த்தக நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட நிலையி ருந்து எந்த விதமான இழப்பீடுகளும் நிர்ணயிக்காமல் கையாள்வதன் மூலம் உரிமை வைத்திருப்பவருக்கு ஏற்படும் கடும் பாதிப்புகளை தவிர்க்கலாம். அப்படி இல்லாவிட்டால் இது ஏற்கனவே இருந்து வரும் அமைப்புச் சட்டத்தின் கோரல்களுக்கு மாறாக அமைந்துவிடும். சட்ட மீற ல் தயாரிக்கப்பட்டுள்ள பொருளில் விஞ்சியிருக்கிற மூலப் பொருள்கள் மற்றும் செயல்முறைகள் எந்த விதமான இழப்பீடும் ஒதுக்காமல் வர்த்தக நடைமுறைகளுக்கு வெளியில் நின்று செய்து முடிக்கப்படுவதன் மூலம் மேற்கொண்டும் உரிமை மீரல்கள் நடப்பதை மட்டுப்படுத்தும் அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. அப்படிப்பட்ட கேட்டுக் கொள்ளல்களை கணக்கிலெடுத்துக் கொள்ளும் போது உரிமை மீர ன் அபாயத்தையும் அதற்கான தீர்வுகளையும் கணக்கிலெடுத்துக் கொள்கிற அதே நேரத்தில் மூன்றாம் நபர்களின் விருப்பங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். விதிவிலக்கான சிலவற்றைத் தவிர்த்து போ யான வர்த்தக முத்திரைகள் கொண்ட பிற பொருள்கள் விஷயத்தில் சட்டத்திற்கு புறம்பாக பொறுத்தப்பட்டுள்ள அந்த வர்த்தக முத்திரைகளை அகற்றுவது மட்டுமே பொருள்களை வியாபார நடைமுறைகளுக்கு திறந்து விடுவதற்கு போதுமானவை அல்ல.

## பகுதி - 47 தகவல்களின் உரிமை

உரிமை மீரல் செய்யப்பட்ட பொருள்கள் அல்லது சேவைகள் தயாரிப்பு மற்றும் வினியோகத்தில் ஈடுபட்டுள்ள மூன்றாம் நபர்கள் மற்றும் அவர்கள் அப்பொருள்களை வினியோகித்துள்ள வழிகளையும் பற்றி உரிமை மீரல் செய்துள்ளவரானவர் அந்த உரிமையின் சொந்தக்காரருக்கு தெரிவிக்குமாறு ஆணையிடும் அதிகாரத்தை நீதித்துறை அதிகாரிகளுக்கு உறுப்பு நாடுகள்

வழங்கலாம். அப்படி உரிமை வழங்காவிட்டால் உரிமை மீரல்களின் அபாயத்தைப் பற்றி சரியாக கணக்கிட முடியாத நிலைக்குச் சென்றுவிடும்.

## பகுதி - 48

## பிரதிவாதிக்கு நஷ்ட ஈடு நிர்ணயித்தல்

எந்த ஒரு நபரின் வேண்டுகோளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவோ அந்த நபரே அமுலாக்க நடைமுறைகளை தவறாக உபயோகித்திருக்கும் போது அதனால் மற்றொரு நபரின் மேல் தவறாக குற்றம் சுமத்தப்பட்டு அவரது செயல்கள் கட்டுப்படுத்தப்படும் போது அவருக்கு ஏற்படும் பாதிப்புகளை ஈடுகட்டுவதற்கான தக்க இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று அந்த நபருக்கு ஆணையிடும் அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. பிரதிவாதிக்கு ஏற்படும் செலவுகளை வழங்குமாறு விண்ணப்பதாரருக்கு ஆணையிடும் அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. பொறுத்தமான வழக்குறைஞரின் கட்டணமும் இதில் அடங்கும்.

2) அறிவுச் சொத்து உரிமைகள் அமுலாக்கம் அல்லது பாதுகாப்பு சம்மந்தமான சட்ட நிர்வாக நடைமுறைகளைப் பொறுத்தவரை தக்க தீர்வு முறைகளை அமுலாக்கும் பொறுப்பி ருக்கும். அல்லது அந்த சட்ட நிர்வாக நடவடிக்கையின் மீதான நன்னம்பிக்கையின் அடிப்டையில் உத்தேசிக்கப்பட்டுள்ள பொறுப்புகளில் இருந்தும் பொது நிர்வாகங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கு மட்டும் உறுப்பு நாடுகள் விலக்களிக்கலாம்.

## பகுதி - 49 நிர்வாக நடைமுறைகள்

வழக்கின் தகுதிகள் மீதான நிர்வாக நடவடிக்கைகளின் முடிவில் ஏதாவது பொது தீர்வு ஆணையாகியிருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளானவை இந்தப் பிரிவில் (பிரிவு - 2) முன்னரே நிரூபிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஒத்துப்போவனவாக இருக்கத்தக்கவை.

## பகுதி - 3 தற்கா க நடவடிக்கைகள்
## பகுதி - 50

1) நல்ல பலனளிக்கும்படியான உடனடி தற்கா க நடவடிக்கைகளுக்கு ஆணையிடும் அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது.

அ) அறிவுச் சொத்துரிமை மீரலை உள்ள பொருள்கள் வெளியில் தென்படுவதை தடுக்க வேண்டும். பொருள்களின் வர்த்தகத்தில் இப்படிப்பட்ட பொருள்களை தடுக்க வேண்டும். இறக்குமதி செய்யப்பட்டுள்ள இப்படிப்பட்ட பொருள்களை சுங்க இலாகா அலுவலகத்தி ருதே சந்தைக்கு வராமல் தடுக்கலாம்.

ஆ) சம்மந்தப்பட்ட உரிமை மீரலுக்கான தக்க ஆதாரமாக இதை பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.

2) எங்கே தெளிவாக கண்டு உணர இயலாத வகையில் ஒன்றைத் திருத்தி பயன்படுத்தி இருக்கிறார்களோ அங்கே அதன் மீது தற்கா க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. காலதாமதம் செய்வதால் உரிமை வைத்துள்ளவருக்கு ஈடு செய்ய முடியாத பாதிப்பு என்றிருக்கும் போது தற்கா க நடவடிக்கைகள் எடுக்கலாம். மீரல் நடந்துள்ளது பற்றி நேரடியாக காட்டத்தக்க சாட்சிகள் இல்லாதவற்றின் விஷயத்திலும் தற்கா க நடிவடிக்கைள் மேற்கொள்ளவும் நீதித்துறைக்கு அதிகாரம் உள்ளது.

3) உரிமை வைத்திருப்பவர்கள் தனது உரிமையை வேறொருவர் மீறியிருப்பதாக கருதி அதன் மீது நடவடிக்கை கோரி விண்ணப்பிக்கும் போது அப்படிப்பட்ட மீரல்கள் குறித்த விவரங்களை தருமாறு விண்ணப்பதாரரிடம் கோரும் அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. உரிமை மீரல் ஈடுபடுத்தப்பட்ட தயாரிப்பில் அந்த உரிமை மீரல் பயன்படுத்தப்பட்டதற்கான தக்க கோணத்திலான ஒத்த தன்மை உள்ளதா என்று நீதித்துறையினர் ஆராய இது பயன்படும். அதே போல பிரதிவாதியின் நலனை பாதுகாக்கவும் தவறாக உபயோகிக்கப்படுவதை தவிர்க்கவும் போதுமான உறுதி மொழியை வழங்குமாறு விண்ணப்பதாரருக்கு ஆணையிடலாம்.

4) தெளிவாக கண்டு உணர இயலாத வகையில் ஒன்றைதிருத்திப் பயன்படுத்தியிருப்பதன் மீது இறுதியாக கிடைத்திருக்கிற விவரங்களின் கீழ் தற்கா க நடவடிக்கைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டனையை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். உரிமைமீரல் விஷயத்தில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அறிக்கை வழங்கலாம். சட்ட பூர்வமாக கோரப்படுவதன் மீதும் மற்றும் முடிவு எடுக்கும் நோக்கில் பிரதிவாதி கேட்டுக் கொள்வதன் மீதும் ஒரு பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த தற்கா க நடவடிக்கைகள் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டு நியாயமான கால அவகாசம் அளித்த பிறகு இந்த தற்கா க நடவடிக்கைகளை மாற்றியமைக்கலாம். விலக்கிக் கொள்ளலாம் அல்லது உறுதிப்படுத்தலாம்.

5) தற்கா க நடவடிக்கைள் அமுலாக்குவதற்கு, சம்மந்தப்பட்ட பொருளை ஒத்ததாக உள்ள பொருளைப்பற்றிய அவசியமான பிற விவரங்களை வழங்குமாறு விண்ணப்பதாரர் கேட்டுக் கொள்ளலாம்.

6) தற்கா க நடவடிக்கைகள் இப்பகுதியின் (பகுதி - 50) பாராக்கள் 1 மற்றும் 2 ன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படிப்பட்ட நடிவடிக்கைகள் பாரா - 4ஐ பாதித்துவிடக்கூடாது. பிரதிவாதி கேட்டுக் கொள்வதன் அடிப்படையில் நடவடிக்கையை மாற்றி அமைத்துக் கொள்ளலாம். அல்லது அமுலாக்கத்தி ருந்து நிறுத்தி வைக்கலாம். வழக்கின் தகுதியின்

அடிப்படையில் முடிவு எடுப்பதற்கான நடைமுறைகள் தக்க காலத்திற்குள் முடிவடையாவிடில் உறுப்பு நாடுகளின் சட்டங்கள் அனுமதிக்கும் வரையரைகளின் கீழ் நீதித்துறை அமைப்பு முடிவெடுக்கலாம். அப்படி முடிவுக்கு வராத நிலையில் எக்காரணத்தைக் கொண்டும் முடிவெடுப்பதற்கான கால்கெடுவை 20 வேலை நாட்கள் அல்லது 31 நாட்காட்டி நாட்கள் இதில் எது அதிகபட்சமாக உள்ளதோ அதற்கு மேல் நீட்டிக்கக் கூடாது.

7) தற்கா க நடவடிக்கைகள் மாற்றி அமைக்கப்பட்டிருந்தாலோ அல்லது விண்ணப்பதாரரின் ஏதாவது செயல் அல்லது விடுதல் போன்றவற்றால் செய ழந்து விட்டாலோ அறிவுச் சொத்துரிமை மீரல் நடைபெறும் என்ற அச்சுறுத்தல் அல்லது மீரல் என்பது நிரூபிக்கப்படாவிட்டாலோ, பிரதிவாதி கேட்டுக் கொள்வதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஈடுகட்டுவதற்கு போதுமான அளவு இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு விண்ணப்பதாரருக்கு ஆணையிடும் அதிகாரம் நீதித்துறை அதிகாரிகளுக்கு உள்ளது.

8) நிர்வாக நடைமுறைகளின் முடிவாக தற்கா க நடவடிக்கைகள் ஏதாவது ஆணை ஆக வேண்டுமெனில் அந்த நடவடிக்கைகள் இந்தப் பகுதியின் (பகுதி 50) முற்பகுதியில் நிறுவப்பட்டு உள்ளவற்றில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளவற்றிற்கு இணையான நெறிமுறைகளின் கீழ் உறுதிப்படுத்தப்படலாம்.

## பிரிவு - 4 வரம்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கான தனித்தேவைகள்

## பகுதி - 51 பொருள்கள் வெளியிடுவதை சுங்க இலாகா அதிகாரிகள் தற்கா கமாக நிறுத்தி வைத்தல்

போ யான வர்த்தக முத்திரை அல்லது திருட்டு பிரதியெடுத்தல் அடிப்டையிலான பொருள்கள் இறக்குமதியாகின்றன என்கின்ற சந்தேகத்திற்கு சம்பந்தப்பட்ட வர்த்தக முத்திரை அல்லது பதிப்புரிமை உரிமையாளர் வரும்பட்சத்தில் நிர்வாக அல்லது நீதித்துறை சார்ந்த தக்க அதிகாரிகளிடம் அவர் மேற்படி

பொருள்கள் தாராளமாக வெளியிடப்படுவதை சுங்க இலாகாவினர் தற்கா கமாக தடைசெய்து வைக்குமாறு உறுப்பு நாடுகளிடம் விண்ணப்பிக்கும் போது உறுப்பு நாடுகள் அதன் மீது கீழ்கண்டவாறு வடிவமைக்கப்பட்டுள்ள சரத்துகளின் அடிப்படையில் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இந்தப்பிரிவு (பிரிவு - 3) எதிர்கொள்ளக் கூடிய பல்வேறு உள்ளடக்கங்களுக்கு உட்பட்ட பலவகையிலான, அறிவுச் சொத்து நிலைகள் மீரல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொருள்கள் மீது நடவடிக்கை கோரி விண்ணப்பிக்க உறுப்பு நாடுகள் ஏற்பாடுகள் செய்து தரலாம். தங்கள் நாட்டி ருந்து ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ள பொருள்களில் உரிமை மீரல்கள் இருந்து அதனை வெளியிடுவதற்கு சுங்க இலாகாவினால் தற்கா க தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றின் விஷயத்திலும் மேற்கண்ட வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுப்பு நாடுகள் அனுமதி தரலாம்.

## பகுதி - 52 விண்ணப்பம்

எந்த ஒரு உரிமையாளருடைய அறிவுச் சொத்துரிமை உரிமை மீறிப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று விசாரணையின் துவக்கத்தில் தெரிய வரும் போது பகுதி - 51 ன் கீழ் விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமையாளர் சம்மந்தப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யும் நாட்டின் சட்டத்திற்கு ஏற்புடைய வகையில் தக்க சாட்சியங்களை தக்க அதிகாரிகளுக்கு திருப்தியளிக்கும் வகையில் வழங்கிட கடமைப்பட்டவர்கள். சுங்க இலாகா அதிகாரிகள் உடனடியாக அங்கீகரிக்கும் வகையில் அந்தப் பொருளைப் பற்றிய விவரங்களை போதுமான அளவு விரிவுபடுத்தி வழங்க வேண்டும். இந்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்ட விவரங்களை நியாயமான கால அளவிற்குள் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க தக்க விசாரணை அதிகாரிகள் கடமைப்பட்டுள்ளனர். சுங்க இலாகாவினர் எந்த கால கட்டத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதையும் தக்க விசாரணை அதிகாரிகள் முடிவு செய்து சொல்லலாம்.

## பகுதி - 53 உறுதி மொழி அல்லது இணையான உறுதியளிப்பு

பிரதிவாதியையும் தக்க விசாரணை அதிகாரிகளையும் பாதுகாக்கவும் மற்றும் தவறான நோக்கிலான பயன்பாட்டையும் தடுக்கவும் ஏற்ற வகையில் காப்பு உறுதிமொழி அல்லது இணையான உறுதியளிப்பை பழங்குமாறு விண்ணப்பதாரரிடம் தக்க விசாரணை அதிகாரிகள் கேட்டுக் கொள்ளலாம். ஆனால் அப்படி வழங்கப்படும் உறுதிமொழி அல்லது இணையான உறுதியளிப்பானது தேவையற்ற வகையில் இந்த விசாரணைநடவடிக்கைகளுக்கு தடையாக நிர்க்க காரணமாகிவிடக்கூடாது. இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை மீரல் பொருளினுடன் தொடர்ந்து ஈடுபடுத்தி இருக்கக் கூடிய தொழில் துறை வரை வடிவங்கள் காப்புரிமைகள், திட்ட வரை வடிவங்கள் அல்லது தாராள விநியோகத்திற்கு விடப்பட்டுள்ள வெளியிடப்படாத தகவல்கள் ஆகியவற்றை தங்களது முடிவின் அடிப்படையிலும் தற்கா கமாக நிறுத்தி வைக்கலாம். நீதித்துறை அல்லது பிற தனி அதிகாரிகளின் முடிவுகளுக்கு அப்பாற்பட்டும் சுங்க இலாகா அதிகாரிகள் மேற்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். அப்படிப்பட்ட நிலையில் பகுதி 55 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அளவு என்பது காலாவதி ஆகிவிடுகிறது. தக்க நேரத்தில் தக்க அதிகாரிகள் நிர்ணயித்துள்ள மானியம் வழங்கப்படாத நிலையில் கூட இது காலாவதி ஆகிவிடுகிறது. அப்படி ஏதாவது உரிமை மீரல் நடந்திருக்கும் பட்சத்தில் இறக்குமதி ஆகும் பொருள்களின் பால் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் போக, உரிமையினை வைத்திருப்பவருக்கு உரிமை மீரலால் இழப்பு ஏற்படுவதை தடுக்கும் அளவிற்கான தொகையை உரிமை மீரல் நடந்துள்ளதாக கருதப்படும் பொருள்களை அனுப்பும் உரிமையாளர், இறக்குமதியாளர் அல்லது அந்தப் பொருள்களை ஏற்றுக் கொள்பவர் உறுதியளிப்புத் தொகையாக சுங்க இலாகா கணக்கில் செலுத்துவதன் அடிப்படையில் மேற்படி பொருளை சுங்க இலாகாவினர் விடுவிக்கலாம். இப்படிப்பட்ட உறுதியளிப்பு தொகை வழங்கப்படுவதானது உரிமை வைத்திருப்பவருக்கு கிடைக்க வேண்டிய பிற தீர்வுகளை தடுப்பதாக போய்விடலாகாது. அதே நேரத்தில் உரிமை வைத்திருப்பவரானவர் இது சம்மந்தமான மேல் நடவடிக்கைக்கு வேண்டிய தக்க நடைமுறைகளை தக்க கால கட்டத்திற்குள் வழங்காவிடில் மேற்படி உறுதியளிப்புத்

தொகை அதை செலுத்தியவருக்கே திருப்பியளிக்கப்பட்டு விடும் என்பதையும் புரிந்து கொண்டிருக்கத்தக்கது.

### பகுதி - 54 தற்கா க நிறுத்தி வைப்பு அறிக்கை

பகுதி - 51 க்கு ஏற்ப பொருள் வெளியிடப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது என்பதை சம்மந்தப்பட்ட பொருளை இறக்குமதி செய்பவருக்கும் விண்ணப்பதாரருக்கும் உரிய வகையில் தெரிவித்திடத்தக்கது.

### பகுதி - 55 தற்கா க நிறுத்தி வைப்பு காலம்

தற்கா க நிறுத்தி வைப்பு செய்யப்பட்டுள்ள விஷயம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்ட நாளில் இருந்து 10 வேலை நாட்களுக்கு மேல் கால நீட்டிப்பு கிடையாது. அதற்கு மேல் பொருள்கள் விடுவிக்கப்பட்டு விடலாம். பொருள்கள் விடுவிப்பை தற்கா கமாக நிறுத்தி வைப்புகளை தற்கா க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தக்க

அதிகாரம் படைத்த அதிகாரிகள் அல்லது பிரதிவாதியை தவிர வழக்கை தொடங்கி வைத்துள்ளவரின் தகுந்த வாதங்களின் அடிப்படையில் வழக்குஆனது முடிவை நோக்கி சென்று கொண்டுள்ளது என்பதை சுங்க இலாகா அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்காத நிலையிலும் மேற்படி பொருள்கள் விடுவிக்கப்படலாம் பொருத்தமான வழக்குகள் விஷயத்தில் இந்தக் காலக் கெடுவை மேலும் 10 வேலை நாட்களுக்கு நீட்டிக்கலாம். வழக்கு துவங்கிட காரணமான விஷயங்களின் தகுதிகளின் அடிப்படையில் முடிவை எட்டுவதை நோக்கி ஒரு வேளை நடவடிக்கைகள் சென்று கொண்டு இருக்குமானால் பிரதிவாதி கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் முடிவை எட்டும் நோக்கிலான பரிசீலனை என்பதை மேற்கொள்ளலாம். பிரதிவாதி சட்ட பூர்வமான வகையிலும் இதைக் கோரலாம். தக்க காலகட்டத்தில் இது நடக்க வேண்டும். இந்த நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டதாகவோ, திருத்தப்பட்டதாகவோ அல்லது உறுதிப்படுத்தப்பட்டதாகவோ இருக்கலாம். மேற்கண்டவற்றோடு இணைந்து நிற்காத நிலையில் நீதித்துறையின் தற்கா க நடவடிக்கையின் அடிப்படையில் பொருள்கள் விடுவிப்பு மீதான தற்கா க நிறுத்தி வைப்பை தொடரலாம் அல்லது தொடரலாம். பகுதி 50 பாரா 6 ல் உள்ள சரத்துக்களை இதற்கு பொறுத்தலாம்.

### பகுதி - 56

#### பொருள்களின் உரிமையாளர் மற்றம் இறக்குமதியாளருக்கு நஷ்ட ஈடு செய்தல்

பகுதி 55 ன் தொடர்ச்சியாக சிறை வைப்பி ருந்து பொருள்கள் விடுவிக்கப்படும் போதோ அல்லது தவறாக சிறை வைக்கப்பட்டுள்ளதால் ஏற்படும் பாதிப்பை ஈடுகட்டுவதற்கான தக்க இழப்பீட்டுத்தொகையை இறக்குமதியாளர் அல்லது பொருளை பெற்றுக் கொள்பவர்களுக்கு விண்ணப்பதாரர் வழங்க வேண்டும் என்று ஆணையிட தக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளது.

### பகுதி - 57

### தகவல்களை ஆய்வு செய்வதற்கான உரிமை

உரிமை வைத்திருப்பவரின் உரிமையை இன்னொருவர் மீறியிருப்பதை ஆய்வு செய்ததன் அடிப்படையில் அந்த உரிமை மீறல் உறுதிப்பட்டு சம்மந்தப்பட்ட பொருள்களை சுங்க இலாகாவினர் பிடித்து வைத்திருக்கும் போது அதன் மீதான விசாரணைக்கு அதன் உரிமையாளருக்கு போதுமான வாய்ப்பு வழங்கும் அதிகாரத்தை தக்க அதிகாரிகளுக்கு உறுப்பு நாடுகள் தரலாம். இந் நடவடிக்கைகளின் போது ரகசியமான தகவல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாது. அப்படிப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்பவருக்கும் அதே போன்ற சம வாய்ப்பு அளிக்கும் அதிகாரம் தக்க அதிகாரிகளுக்கு உள்ளது. வழக்கின் தகுதிகளின் அடிப்படையில் சாதகமான தீர்ப்பு வரும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட பொருளை அனுப்பி வைத்தவர். இறக்குமதியாளர் மற்றும் பெருளை பெற்றுக் கொள்பவர் மற்றும் கேள்விக்குரிய பொருளின் அளவு ஆகிய விவரங்களை உரிமை வைத்திருப்பவருக்கு தெரிவிக்கும் அதிகாரத்தை தக்க அதிகாரிகளுக்கு உறுப்பு நாடுகள் வழங்கலாம்.

### பகுதி - 58 அதிகார வரப்பிற்கு வெளியிலான நடவடிக்கைகள்:

ஒரு பொருளில் அறிவுச் சொத்து உரிமை மீரல் நிகழ்த்தப்பட்டுள்ள முதல் எண்ணத்தின் அடிப்படையிலான சாட்சிகள் கிடைக்கப் பெறும்பட்சத்தில் அப்பொருள்கள் வெளிவருவதை தக்க அதிகாரிகள் தாங்களாவே (பாதிக்கப்பட்டவருடைய விண்ணப்பம் இன்றியே) தற்கா கமாக நிறுத்தி வைப்பதற்கான அதிகாரத்தை வழங்குமாறு உறுப்பு நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன

அ தக்க அதிகாரிகள் தாங்களாகவே மேற்கொள்ளும் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் ஏதாவது தேவைப்பட்டால் அவர்கள் அவற்றை எந்த நேரத்திலும் சம்மந்தப்பட்ட உரிமையை வைத்திருப்பவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

ஆ இறக்குமதி செய்பவருக்கும் உரிமையாளருக்கும் தற்கா க நிறுத்தம் குறித்த விவரங்கள் உடனுக்குடன் தெரியப்படுத்திடலாம். தற்கா க நிறுத்தம் செய்யப்பட்டுள்ள நடவடிக்கைக்கு எதிராக அந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ள தக்க அதிகாரிகளிடம் இறக்குமதியாளர் முறையீடு செய்யலாம். தற்கா க நிறுத்தி வைப்பு நடவடிக்கையானது பகுதி - 55 ல் வகுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். அவசியமான திருத்தங்கள் செய்யத் தக்கதாகும்

இ) நன்னம்பிக்கையின் அடிப்படையில் துவங்கப்படும் அல்லது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் முடிவில் மேற்கொள்ளப்படும் தக்க தீர்வு நடைமுறைகளின் பொறுப்பி ருந்து பொது அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் மட்டும் உறுப்பு நாடுகள் விலக்களிக்கலாம்.

**பகுதி - 59**

**தீர்வுகள்**

உரிமை வைத்திருப்பவரின் பிற உரிமைகளின் பால் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உள்ள வாய்ப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டு நீதித்துறை அதிகாரிகளால் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று பிரதிவாதி கேட்டுக் கொள்வதற்கு உள்ள உரிமையினையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பகுதி - 46 ன்

கீழ் வகுக்கப்பட்டுள்ள நெறி முறைகளுக்கு ஏற்ப, உரிமை மீரல் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொருள்களை அழிப்பதற்கு அல்லது பாழ்படுத்துவதற்கான ஆணையை வழங்கும் அதிகாரம் தக்க அதிகாரிகளுக்கு உள்ளது. போ யான வர்த்தக முத்திரைகள் உபயோகிக்கப்பட்டுள் பொருள்கள் விஷயத்தில், அப்பொருள்கள் உள்ளது உள்ளபடியேயான வகையில் மறு ஏற்றுமதி செய்யப்படுவதையும் அதிகாரிகள் தடுக்கலாம். அல்லது அவற்றை சுங்க இலாகாவின் மாறுபட்ட நடைமுறைகளின் கீழ் கொண்டு வரலாம். விலக்களிக்கத்தக்க சூழ்நிலைகள் விஷயத்தில் இது பொறுந்தாது.

**பகுதி - 60**

**மிகக் குறைவான அளவிலான இறக்குமதிகள்**

பயணிகளின் சுமைகள் மூலம் வருகிற வர்த்தக உபயோகத்தின் கீழ் வராத மிகக் குறைந்த அளவிலான இறக்குமதிகள் அல்லது மிகக் குறைந்த அளவில் அனுப்பப்படுகிற பொருள்களின் விஷயத்தில் மேற்கண்ட சரத்துகளை ஈடுபடுத்துவதி ருந்து உறுப்பு நாடுகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**பிரிவு - 5**

**குற்றவியல் நடைமுறைகள்**

**பகுதி - 61**

வியாபார நோக்கிலான செயல்பாட்டிற்கு சம்மந்தப்பட்ட பொருளில் தன்னிச்சையாக போ வர்த்தக முத்திரையை பயன்படுத்தியிறுப்பதன் மீதும் திருட்டுத்தனமாக பதிப்பு செய்யப்பட்டுள்ளதன் மீதும் உறுப்பு நாடுகள் குற்றவியல் நடைமுறைகளையும் பிரயோகித்து தண்டனை வழங்கலாம். பாதிப்புக்கு ஈடு செய்யும் அளவிலான அபராதக் கட்டணம் அல்லது சிறை தண்டனையும் கூட வழங்கலாம். வழக்குகள் சரியாக இருக்கும் பட்சத்தில் உரிமை நடந்துள்ள பொருள்களை கைப்பற்றியோ பறிமுதல் செய்தோ அழித்து விடலாம். மேற்படி குற்ற நடவடிக்கையில் மிகப்பெரிய அளவிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலங்கள் மற்றும் அமுலாக்கங்களையும் மேற்கூறியவாறு அழித்து விடலாம். தன்னிச்சையாகவும் வர்த்தக நோக்கிலும் அறிவுச் சொத்து உரிமையை உரிமை மீரல் செய்து பயன்படுத்தி உள்ளதன் மீது குற்றவியல் நடைமுறையின் கீழ் உறுப்பு நாடுகளானவை நடவடிக்கைகள் எடுத்து தண்டனை வழங்கலாம்.

# அறிவுச் சொத்துரிமை கைப்பற்றலும் பராமரித்தலும் அது சம்மந்தப்பட்ட இரு தரப்பு நடைமுறைகளும்

## அத்தியாயம் - 11

### பகுதி - 62

1) அறிவுச் சொத்துரிமையை பராமரித்தல் அல்லது கைப்பற்றுதல் நடவடிக்கைகள் ஆகியவற்றை பாகம் பிரிவுகள் 2 முதல் 6 முடிய உள்ள பகுதிகளுக்கு ஏற்ப மேற்கொள்ளும் போது அவை தக்க நடைமுறைகள் மற்றும் சடங்குகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்று உறுப்பு நாடுகள் கேட்டுக் கொள்ளலாம். அப்படிப்பட்ட நடைமுறைகள் மற்றும் சடங்குகளானவை இந்த ஒப்பந்தத்தின் சரத்துகளுக்கு இசைந்ததாக இருக்கத்தக்கது.

2) கையொப்பத்திலுள்ள அறிவுச் சொத்துரிமையானது பதிவு செய்யப்பட்டதாகவோ அல்லது உரிமை அனுமதி உள்ளதாகவோ இருந்தால் அப்படிப்பட்ட பதிவு அல்லது அனுமதி நடைமுறைகளை உறுதிப்படுத்தும் வகையில் உறுப்பு நாடுகள் நடந்து கொள்ளத்தக்கவர்கள். அவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின் அடிப்படையிலேயே உரிமை மீரல் உறுதி செய்யப்பட்டுள்ள தயாரிப்பை கைப்பற்றுதல் செய்ய வேண்டும். மேலும் தக்க கால அவகாசத்திற்குள் அந்த உரிமையின் அனுமதி வழங்கள் அல்லது பதிவை உடன் வழங்கிட வேண்டும். இதன் மூலம் பாதுபாப்பு கால கட்டத்தின் மேல் உள்ள உத்தரவாதமற்ற சூழ்நிலையை தவிர்த்துக் கொள்ளலாம்.

3) சேவை முத்திரைகளின் விஷயத்தில் பாரிஸ் சிறப்பு மாநாடு (1967) ன் பகுதி 4 ல் அவசியமான திருத்தங்கள் செய்து பயன்படுத்தலாம்.

4)அறிவுச் சொத்துரிமைகள் கைப்பற்றுதல் அல்லது பராமரிப்பதற்கான நடைமுறைகளுக்கு ஏற்ற நடைமுறைகளை உறுப்பு நாட்டு சட்டமும் அனுமதிக்கும் பட்சத்தில் நிர்வாக ரீதியிலான ரத்து செய்தல், இரு தரப்பினர்க்குமான நடைமுறைகளான

எதிர்ப்பு, ரத்து செய்தல், அகற்றி விடுதல் ஆகிய நடவடிக்கைள் மேற் கொள்ளும் போது அந் நடவடிக்கைகள் பகுதி 41 பாராக்கள் 2 மற்றும் 3 இன் பொதுக் கொள்கைகளின் கீழ் மேற் கொள்ளப்படலாம்.

5) பாரா 4ன் கீழ் வரும் நடைமுறைகளின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கும் போது அவைகள் நீதித்துறை அல்லது நீதித்துறை அதிகாரிகளால் மறு பரிசீலனை செய்யத்தக்கது. வெற்றி பெற்றிராத எதிர்ப்பு அல்லது நிர்வாக ரீதியிலான ரத்து செய்தல் ஆகியனவற்றின் மீது அப்படிப்பட்ட பரிசீலனை மேற் கொள்ள வேண்டும்

என்று எந்த பொறுப்பும் நிர்ணயிக்க வேண்டியதில்லை. மதிப்பிழக்கச் செய்வதற்கான நடைமுறைளின் அடிப்படையில் தான் மேற்படி பரிசீலனை செய்யப்படத்தக்கது.

# தாவா தடுப்பும் தீர்வும்

## அத்தியாயம் - 12

### பாகம் - 4 தாவா தடுப்பும் தீர்வும்

### பகுதி - 63 வெளிப்படைத்தன்மை

1. இந்த ஒப்பந்தத்தின் மூல விஷயத்திற்கு உடன்பட்டதாக உள்ள அறிவுச்சொத்துரிமைகளின் கிடைப்பு நிலை, வாய்ப்பு, கைப்பற்றுதல், அமுலாக்கம், முறைகேடான உபயோக தடுப்பு, உறுப்பு நாடுகளின் சட்டங்கள், விதிமுறைகள் நீதித்துறையின் இறுதி முடிவுகள் மற்றும் பொதுவான உபயோகத்திற்கான நிர்வாகச் சட்டங்கள் ஆகியன வெளியீடு செய்யத்தக்கவை. தேசிய மொழியில் மேற்படி வெளியீட்டை பொதுவில் வழங்க முடியாத நிலையில் அந்த வெளியீட்டின் அர்த்தத்தில் மேற்படி விவரங்கள் அரசாங்கங்கள் மற்றும் உரிமை வைத்திருப்பவர்களுக்கு தெரியப்படுத்தக் கூடிய வகையில் இருக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தின் மூல விசயத்தின் அடிப்படையில் ஒரு உறுப்பு நாட்டின் அரசாங்கங்கள் மற்றும் உரிமை வைத்திருப்பவர்களுக்கு தெரியப்படுத்தக் கூடிய வகையில் இருக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தின் மூல விசயத்தின் அடிப்படையில் ஒரு உறுப்பு நாட்டின் அரசாங்கம் அல்லது அரசு முகவான்மைக்கும் அடுத்த ஒரு உறுப்பு நாட்டு அரசாங்கம் அல்லது அரசு முகவான்மைக்கும் இடையில் அமுலாக்கத்தக்க வகையிலான ஒப்பந்தங்களும் வெளியிடத்தக்கவை.

2. இந்த ஒப்பந்தத்தின் அமுலாக்கத்தை 'டிரிப்ஸ்'- குழு பரிசீலனை செய்வதற்கு ஏற்ற வகையில் 'டிரிப்ஸ்'குழுவின் 1 - ல் உள்ள படிக்கான சட்டங்கள் மற்றும் விதி முறைகளை உறுப்பு நாடுகள் அறிவிக்கலாம். இந்த பொறுப்புகளை எதிர் கொள்வதற்கு உறுப்பு நாடுகளுக்கு உள்ள சிரமங்களை 'டிரிப்ஸ்'குழு மட்டுப்படுத்தி உதவிடலாம். உலக அறிவுச் சொத்துரிமை அமைப்புடன் கலந்தாலோசித்து இந்த சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கிய பொதுவான பதிவேடு வெற்றிகரமாக உறுவாக்கப்படும் நிலையில் அப்படிப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் குறித்து 'டிரிப்ஸ்'குழுவிற்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பி ருந்து உறுப்பு நாடுகளை விடுவிக்கலாம். பாரிஸ் சிறப்பு மாநாட்டின் பகுதி 6 ன் சரத்துகளி ருந்து உறுவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் பொறுப்புகளின் தொடர்ச்சியாக அறிக்கை செய்வதற்கு தொடர்புள்ள செயல்பாடுகள் குறித்து 'டிரிப்ஸ்'குழு கவனம் செலுத்தலாம்.

3) மற்றொரு உறுப்பு நாடு எழுத்து பூர்வமாக கேட்டுக் கொள்ளும் போது பாரா 1ல் குறிப்பிட்டுள்ள விவரங்களை வகைபிரித்து வழங்கிட ஒவ்வொரு உறுப்பு நாடும் தயாராக இருந்திடத்தக்கதாகும். அறிவுச் சொத்துரிமையின் இந்தப் பகுதியின் மீதான குறிப்பிடத்தக்க நீதித்துறை முடிவுகள், நிர்வாக விதிமுறைகள் அல்லது பரஸ்பர ஒப்பந்தம் ஆகியன பாதிப்பு ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது என்பதற்கான நம்பகமான காரணங்களை தன்னிடம் வைத்திருக்கும் போது நீதித்துறையின் அப்படிப்பட்ட முடிவுகள் அல்லது நிர்வாக விதி முறைகள் அல்லது பரஸ்பர ஒப்பந்தங்கள் பற்றி போதுமான விரிவுரையோடு தகவல் தரலாம் அல்லது தக்க வகையில் எழுத்து வடிவில் தரலாம் என்று ஒரு உறுப்பு நாடு கேட்டுக் கொள்ளப்படலாம்.

4) குறிப்பிட்ட பொதுத்துறை அல்லது தனியார்துறை நிறுவனங்களின் சட்ட பூர்வ வர்த்தக நலன்களை பாதிக்கக் கூடிய வகையில் அல்லது பொது நலன்களுக்கு முரண்பட்டிருக்கிற வகையில் அல்லது சட்ட அமுலாக்கத்திற்கு தடை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆன ரகசிய தகவல்களை வெளியிடச் சொல் இந்தப் பகுதியின் பாராக்கள் 1,2, மற்றும் 3 இல் எதுவும் கேட்டுக் கொள்ளப்படவில்லை.

### பகுதி - 64 தாவா தீர்வு

1) தாவாக்கள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்தி தீர்வு காண்பதற்கு இந்த ஒப்பந்தத்தில் சிறப்பாக சேர்க்கப்பட்டுள்ளவை தவிர, ஏனைய பகுதிகள் அனைத்தும் பொதுச் சுங்கத் தீர்வை ஒப்பந்தம் - 1994 ன் பகுதிகள் 22 மற்றும் 23 ன் சரத்துகளினின்று பெறப்பட்டவையாகும்.

2) உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததி ருந்து 5 ஆண்டுகாலத்திற்கு பொதுச் சுங்கத்தீர்வை ஒப்பந்தம் - 1994 ன் பகுதி 23 ன் துணை பாராக்கள் 1 (ஆ) மற்றும் 1 (இ)ஆகியனவற்றை இந்த ஒப்பந்தத்தின் கீழ் தாவாக்கள் தீர்வு நடைமுறைகளுக்கு பயன்படுத்த முடியாது.

3) பொதுச் சுங்கத் தீர்வை ஒப்பந்தம் - 1994 ன் பகுதி 23 ன் துணை பாராக்கள் 1 (ஆ) மற்றும் 1(இ) ல் கொடுக்கப்பட்டுள்ளவற்றிற்கு ஒத்த வகையிலான புகார்களுக்கான தீர்வுகளுக்கு இந்த பாராக்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் தகுதி குறித்து இப்பகுதியின் (பகுதி 64) பாரா 2 குறிப்பிடப்பட்ட காலக் கெடுவிற்குள் 'டிரிப்ஸ்'குழு பரிசோதனை மேற்கொண்டு அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டில் அங்கீகாரத்திற்கு வைக்க வேண்டும். அப்படிப்பட்ட பரிந்துறைகளை அங்கீகரிப்தற்கான அமைச்சர்கள் நிலை மாநாட்டின் எந்த ஒரு முடிவுக்கு அல்லது மேற்படி 2வது பாராவில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்திற்கு நீட்டிப்பது என்ற எந்த ஒரு முடிவும் பொதுவான இவைகளின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும். மேற்கொண்டும் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கும் முறையில் என்றில்லாமல், 'டிரிப்ஸ்'குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பரிந்துறைகள் நேரடியாக எல்லா உறுப்பு நாடுகளினாலும் செயல்படுத்தத்தக்கதாகும்.

# அத்தியாயம் - 13

## பாகம் - 4

## மாற்றீட்டு கால கட்டத்திற்கான ஏற்பாடுகள்

### பகுதி 65

### மாற்றீட்டு கால கட்ட ஏற்பாடுகள்

1) உலக வர்த்க அமைப்பின் ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பொதுவான கால கட்டம் காலாவதியாவதற்கான ஒரு ஆண்டு முழுமை அடைவதற்கு முன்பு இப்பகுதியின் (பகுதி - 65) பாராக்கள் 2,3 மற்றும் 4 ன் சரத்துகளை உறுப்பு நாடுகள் பிரயோகிக்க வேண்டியதில்லை.

2) இப்பகுதியின் பாரா 1இல் குறிப்பிட்டுள்ளது போல மேற்குறிப்பிட்ட சரத்துக்களை பிரயோகிப்பதற்கான கால கட்டத்தை பொறுத்தவரை ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நாளி ருந்து மேலும் நான்கு ஆண்டுகள் கால அவகாசமானது வளரும் நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பகுதிகள் 3,4, மற்றும் 5 ன் சரத்துகளை தவிர்த்து ஏனையவற்றிற்கு தான் இது பொறுந்தும்.

3) மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிட்ட பொருளாதார முறையி ருந்து சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறிக்கொண்டிருக்கும் நாடுகளுக்கும் மற்றும் தனது அறிவுச் சொத்துரிமை முறையில் அடிப்படை மாற்றங்கள் செய்துவரும் தடையற்ற நிறுவனப்பொருளாதார அமைப்புகளுக்கும் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் கீழான அறிவுச் சொத்துரிமை மற்றும் விதிமுறைகளை அமுலாக்கும் போது எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும் பாரா-2 ல் எடுத்துறைக்கப்பட்டுள்ள காலதாம வாய்ப்பு பயனளிக்கும்.

4) உற்பத்திக் காப்புரிமை மீதான பாதுகாப்பை தொழில் நுட்பத்துறைக்கும் நீட்டிப்பு செய்வது சம்மந்தமாக இவ்வொப்பந்தத்தில் வளரும் நாடுகளுக்கு எடுத்துறைக்கப்பட்டுள்ளது. அதனை அமுலாக்க அந்நாடுகள் கடமைப்பட்டுள்ளன. இப்பகுதியின் பாரா-2 ல் எடுத்துறைக்கப்பட்டுள்ளபடி இவ்வொப்பந்தத்தில் அந்த உறுப்பு நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அமுலாக்க தேதியில் அந்த நாட்டின் ராஜ்ஜிய எல்லையில் அவ்வளவாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்காத பட்சத்தில் பாகம் - 2 ன் பிரிவு 5 - ன் சரத்துகளில் அப்படிப்பட்ட தொழில் நுட்பத்துறைக்கு நீட்டித்துத் தரப்பட்டுள்ள கூடுதலான 5 ஆண்டுகள் கால அவகாசத்தை எடுத்துக் கொண்டு அவ்வேற்பாடுகளை செய்யலாம்

5) பாராக்கள் 1,2,3, மற்றும் 4 ன் கீழ் மாற்றீட்டுக்கான காலகட்டத்தை உறுப்பு நாடுகள் வகிக்கும் போது அதன் சட்டங்கள், விதிமுறைகள் உறுவாக்குவதும் அவற்றை இக்காலகட்டத்தில் அமுலாக்குவதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும். ஆனால் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளை விட வலு குன்றிய வகையில் இருந்து விடக் கூடாது.

### பகுதி - 66

### மிகவும் பின் தங்கிய உறுப்பு நாடுகள்

1) மிகவும் பின் தங்கிய நாடுகளைப் பொறுத்தவரை அவைகளின் பொருளாதாரம் நிதி நிலை மற்றும் நிர்வாகம் சிக்கல்களையும் அதையொட்டிய தேவைகளையும் அவசியங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

2) மிகவும் பின் தங்கிய நாடுகள் தங்கள் தொழில் நுட்ப பலத்தை நிலைத்த தன்மையோடு அபிவிருத்தி செய்து கொள்வதற்கு உதவியாக வளர்ச்சியடைந்த உறுப்பு நாடுகளின் நிறுவனங்களும் அமைப்புகளும் தங்களது தொழில் நுட்பங்களை மாற்றிக் கொடுப்பதை ஊக்கப்படுத்தும் வகையில் தங்கள் ராஜ்ஜிய எல்லையில் உள்ள அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு வளர்ச்சியடைந்த உறுப்பு நாடுகள் ஊக்கமளிக்க வேண்டும்.

### பகுதி - 67

### தொழில் நுணுக்க ஒத்துழைப்பு

வளரும் நாடுகள் மற்றும் மிகவும் பின் தங்கிய நாடுகளுக்கு சாதகமாக தொழில் நுணுக்க மற்றும் நிதிநிலை ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படும் போது பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த உறுப்பு நாடுகள் அவ்வொத்துழைப்பை நல்கும் போது 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளை எளிதாக அமுலாக்கக் கூடியதாக அதை பார்த்துக் கொள்ள வேண்டும். அறிவுச் சொத்துரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை உறுவாக்குவதற்கான ஒத்துழைப்பாக அது இருக்கலாம். அதேபோல அவ்வுரிமைகளை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதும் இதில் அடங்கும். இவற்றையெல்லாம் அமுலாக்குவதற்கு அலுவலகங்கள்,

முகவான்மைகள் மற்றும் அதில் பணியாற்றுபவர்களுக்கான பயிற்சியளித்தல் ஆகியனவும் இவ்வொத்துழைப்பின் கீழ் வருகின்றன.

# பாகம் - VII நிறுவன ரீதியிலான ஏற்பாடுகள் - இறுதிச் சரத்துகள்

## அத்தியாயம் - 14

**பகுதி - 68** ‘டிரிப்ஸ்’ குழு: இவ்வொப்பந்த்தினை குறிப்பாக கீழ்வரும் பொறுப்புகளை உறுப்பு நாடுகள் எங்கனம் நிறைவேற்றுகின்றன என்பதை ‘டிரிப்ஸ்’குழு கண்காணிக்கலாம். மேலும் அறிவுச் சொத்துரிமைகளின் வர்த்தகம் சார்ந்த அம்சங்களைக் குறித்து ஆலோசனை நடத்துவதற்கு உறுப்பு நாடுகளுக்கு வாய்ப்பு அளிக்கலாம். உறுப்பு நாடுகளால் அப்படி வழங்கப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் பொறுப்புகளை இக்குழு நிர்ணயித்துக் கொடுக்கலாம். குறிப்பாக தாவா தீர்வு நடைமுறைகள் சம்மந்தமாக உறுப்பு நாடுகள் உதவி கோரும் போது அவ்வகை உதவிகளை வழங்கவேண்டும். ‘டிரிப்ஸ்’குழுவானது தனது அலுவல்கள் சம்மந்தமான உறுப்பு நாடுகள் உதவியோரும் போது அவ்வகை உதவிகளை வழங்க வேண்டும். ‘டிரிப்ஸ்’குழுவானது தனது அலுவல்கள் சம்மந்தமான உறுப்பு நாடுகளோடு ஆலோசனை நடத்துவதோடுஅவற்றிடமிருந்து தான் எதிர்பார்க்கும் விஷயங்களை பெறலாம். இக்குழு தனது முதல் கூட்டத்திற்கு பிறகு ஓராண்டுக்குள் உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பினுடன் ஆலோசனை நடத்தி இக்குழுவின் பல்வேறு பிரிவுகளுக்குள்ளே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான தக்க ஏற்பாடுகளை செய்து கொள்ளத்தக்கது.

**பகுதி - 69**

**சர்வதேச ஒத்துழைப்பு**

பொருள்களின் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் அறிவுச் சொத்துரிமைகள் அத்து மீறிப் பயன்படுத்துவதை தவிர்க்கும் நோக்கில் உறுப்பு நாடுகள் தங்களுக்கும் ஒத்துழைப்பு மேற்கொள்ள சம்மதித்துள்ளன. இது விஷயமாக தங்கள் நிர்வாக அமைப்பில் தொடர்பு கொள்ள வேண்டியதற்கான மையங்களை தெரிவிக்கின்றனர். அதே போல உரிமைகள் அத்துமீறிப் பயன்படுத்தப்பட்டுள்ள விஷயங்களை தங்களுக்குள் பரிமாரிக்கொள்ளவும் உறுப்பு நாடுகள் தயாராக உள்ளன. குறிப்பாக காப்புரிமையை கள்ளத்தனமாக பயன்படுத்தியுள்ள பொருள்கள் சம்மந்தமாக உறுப்பு நாடுகளின் சுங்க இலாகாவினரிடையே ஒத்துழைப்பையும் பரஸ்பர தகவல் பரிமாற்றங்களையும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டி உள்ளது.

**பகுதி -70**

நடப்பிலுள்ள மூல விஷயங்களுக்கான பாதுகாப்பு

1) ‘டிரிப்ஸ்’ஒப்பந்தத்தை கேள்விக்குறிய நாட்டில் அமுல்படுத்துவதற்கான தேதிக்கு முன்னர் அந்நாட்டில் நிலவிய சட்டங்களுக்கு பொறுப்புகளை கூட்டும் வகையில் இவ்வொப்பந்தம் வடிவமைக்கப்படவில்லை.

2) இந்த ஒப்பந்தத்திற்கு ஏற்ப இல்லாவிட்டாலும் கேள்விக்குரிய உறுப்பு நாட்டில் ஒப்பந்தம் அமுல்படுத்தப்படுகிற நாள் வரை இருந்துவருகிற எல்லா மூல விஷயங்களுக்கும் இவ்வொப்பந்தம் பொறுப்பை நிர்ணயித்து கொடுத்துள்ளது. மேற் சொன்ன தேதியில் அந்த உறுப்பு நாட்டில் அம் மூலவிஷயங்களுக்கு பாதுகாப்பு அறிக்கப்பட்டுள்ளது. அல்லது இவ்வொப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ் பாதுகாப்பு பெறுவதற்கான திட்டவட்டமான அளவீடுகளுக்கு அல்லது அவற்றை எதிர்கொள்ளத்தக்க வகையில் இருந்துள்ளன. இந்த பாரா (பாரா - 2) மற்றும் 3 மற்றும் 4 பாராக்களுக்கு ஏற்ப உள்ள பாதிப்புரிமை பொறுப்புகள் பெர்னி சிறப்பு மாநாட்டின் (1971) பகுதி 18 - க்கு முழுமையாக பொறுந்தத்தக்க வகையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கத்தக்கது. இசைத்தட்டுக்கள் தயாரிப்பாளர்கள் மற்றும் இசைக்கலைஞர்களுக்கு உள்ள இசைத்தட்டு உரிமைகளைப் பொறுத்தவரை அவைகள் முழுவதும் பெர்னிசிறப்பு மாநாட்டின் (1971) பகுதி - 18 க்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் ‘டிரிப்ஸ்’ஒப்பந்தத்தின் 14 - ன் பாரா 6க்கு பொருந்தக்கூடியவகையில் உறுவாக்கப்பட்டிருக்கத்தக்கது.

3) சம்மந்தப்பட்ட மூல விஷயம் கேள்விக்குரிய உறுப்பு நாட்டில் அரசின் பொதுப் பயன்பாட்டின் கீழ் வந்து விட்ட நிலையில் அதன் மீது காப்பளிக்க வேண்டிய பொறுப்பு எதுவும் நிர்ணயிக்க வேண்டியதில்லை.

4) அத்துமீறி பயன்படுத்தப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்டுள்ள மூலவிஷயத்தில் முன் எழுந்துள்ள குறிப்பிட்ட நோக்கங்கள் பாலான எந்த ஒரு சட்டத்தின் நோக்கங்களானவை ‘டிரிப்ஸ்’ஒப்பந்தத்தின் சட்ட பூர்வ விதிமுறைகளுக்கு உறுதிப்படும் வகையில் இருக்க வேண்டும். சம்மந்தப்பட்ட நாடு உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தை அமுலாக்க தொடங்கிய பின்னர் மேற்குறிப்பிட்ட அறிவுச் சொத்துரிமையை தொடர்ந்து சம்மந்தப்பட்ட தயாரிப்பாளர் பயன்படுத்த வேண்டும் எனில் அந்த அறிவுச் சொத்துரிமை வைத்துள்ளவருக்கு வரையறுக்கப்பட்ட அளவில் ஈடுகட்டும் தொகையை நிர்ணயித்து வழங்க வேண்டும் மேற்கண்ட தயாரிப்பாளரிடம் உறுப்பு நாடு கேட்டுக் கொள்ளலாம்.

5) ஒரு உறுப்பு நாடு உலக வர்த்தக அமைப்பின் ‘டிரிப்ஸ்’ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கு முன்னர் வாங்கப்பட்ட மூலங்கள் அல்லது பிரதிகள் விஷயத்தில் பகுதி - 1 மற்றும் பகுதி 14 ன் 4 வது பாராவின் சரத்துகளை பிரயோகிக்க வேண்டிய பொறுப்பு ஒரு உறுப்பு நாட்டிற்கு இல்லை.

6) பகுதி 31 மற்றும் பகுதி 27 ன் பாரா 1 ஆகியன காப்புரிமைகளை தொழில் நுட்பத்துறையில் எந்த வித பாரபட்சமும் இன்றி பயன்படுத்துவதை குறித்தும் உரிமை வைத்திருப்பவரின் அனுமதி இன்றி பயன்படுத்தக் கூடாததைப்பற்றியும் எடுத்துறைக்கின்றன.

இந்நிலையில் உலக வர்த்தக அமைப்பின் 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் அந்த நாட்டில் அறியப்படுவதற்கு முந்தைய நாளில் மேற்குறிப்பிட்ட உரிமை வைத்திருப்பவரின் உரிமையை அரசாங்கம் வேறொருவருக்கு கொடுத்திருக்கும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட பகுதிகளை உறுப்பு நாடுகள் உபயோகிக்க வேண்டியதில்லை.

7) பதிவு செய்தால் தான் அறிவுச் சொத்து உரிமைகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று வரும் போது கேள்விக்குறிய நாட்டில் ஒப்பந்தம் அமுலுக்கு வரும் நாளில் நிலுவையில் உள்ள பாதுகாப்பு கோரும் விண்ணப்பங்களைப் பொறுத்தவரை இந்த 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் சரத்துகளின் கீழ் வருகிற எந்த ஒரு கூடுதல் பாதுகாப்பு முறையையும் கோரும் வகையில் அந்த விண்ணபத்தில் தக்க திருத்தங்கள் மேற் கொள்ளலாம்.

8) உலக வர்த்தக அமைப்பின் 'டிரிப்ஸ்'ஒப்பந்தம் அமுலுக்கு வரும் நாளில் மருந்துகள் மற்றும் வேளாண் ரசாயனப் பெருள்களுக்கு ஒரு உறுப்பு நாட்டில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தரப்படாத நிலையில் அவ்வொப்பந்தத்தின் பகுதி - 27 ன் சரத்துகளின் கீழான பொறுப்புகளுக்கு தக்க ஏற்பாடுகளை செய்து தரப்படாத நிலையில்

அ) உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் அமுலுக்கு வரும் தேதியி ருந்து பாகம் - 5 ன் கீழ் வழங்கப்பட்டுள்ள சரத்துகளின் கீழ் நிற்க வேண்டியதில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால் அப்படிப்பட்ட கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை கோரி கட்டாயம் விண்ணபிக்க வேண்டும்;

ஆ) இந்த ஒப்பந்தம் அமுலாகும் தேதியில் இந்த விண்ணப்பங்களுக்கு அது விண்ணப்பிக்கப்பட்டுள்ள நாட்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள திட்டவட்டமான அளவீடுகள் மட்டுமல்லாது இவ்வொப்பந்தத்தின் திட்டவட்டமான அளவீடுகளையும் பொறுத்த வேண்டும்; மேலும்

இ) ஒன்றிற்கு காப்புரிமை வழங்கப்பட்டுள்ளபோது அதன் சரத்துக்களுக்கு ஏற்கவும் இவ்வொப்பந்தத்தின் சரத்துகளில் கூறப்பட்டு உள்ளதற்கு ஏற்பவும் காப்புரிமை பாதுகாப்பு வழங்க வேண்டும். இவ்வொப்பந்தத்தின் பகுதி 33 க்கு ஏற்ப விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட நாளில் இருந்து கணக்கிட்டு காப்புரிமை காலத்தை கணக்கிலெடுத்துக்கொள்ளும் போது இவ்வகையா எல்லா விண்ணப்பங்களும் பாதுகாப்பு பெறுவதற்கு இப்பகுதியின் பாரா 8 ன் துணை பாரா ஆ ல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டவட்டமான அளவீடுகளை பின்பற்ற வேண்டும்.

9) இப்பகுதியின் பாரா - 8 ன் துணை பாரா (அ) விற்கு பொருந்தக் கூடிய வகையில் சிறப்பு சந்தை உரிமை மற்றும் தயாரிப்பு காப்புரிமை பெறவேண்டிய விண்ணபத்தின் அம்சத்தின் கீழ் வருகிற தயாரிப்பை பொருத்தவரை, அவ்விண்ணபத்திற்கு மற்றொரு உறுப்பு நாட்டில் தயாரிப்பு காப்புரிமை வழங்கப்படத்தக்கதாகவும் அப்படிப்பட்ட வேறொரு நாட்டில் சந்தை அனுமதி ஈட்டக்கூடிய வகையிலும் இருக்கும் போது அவ்வகை அனுமதிகள் வழங்கலாம். அவைகள் பாகம் - 6 ன் சரத்துகளுக்கு பொறுந்தி நிற்க வேண்டியதில்லை. அந்த உறுப்பு நாட்டில் சந்தை அனுமதி ஈட்டப்பட்டதற்கு பிறகு 5 ஆண்டுகள் அல்லது தயாரிப்பு காப்புரிமை அனுமதிக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட நாள் வரை இதில் எது குறைவான காலகட்டமோ அக்கால கட்டம் வரை இவ்வனுமதிகளை வழங்கலாம்.

## பகுதி - 71

## பரிசீலனையும் திருத்தமும்.

1) பகுதி 65 ன் பாரா 2ல் குறிப்பிடப்பட்டுள்ள படியான காலகட்டத்தில் மாற்றீட்டு காலகட்டம் முடிவுற்ற பின்னால் இவ்வொப்பந்தத்தின் அமுலாக்கம் குறித்து 'டிரிப்ஸ்'குழு பரிசீலனை மேற்கொள்ளலாம். அவ்வொப்பந்தம் அமுலாக்கியதில் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் அமுலாக்கிட தொடங்கிய தேதியில் இருந்து கண்டறியத்தக்க இடைவெளி கொடுத்து அதாவது அமுலான தேதியில் இருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து 'டிரிப்ஸ்'குழு இப்பரிசீலனையை மேற்கொள்ளத்தக்கது. சம்மந்தப்பட்ட துறையில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு அதன் வெளிச்சத்தில் 'டிரிப்ஸ்'தனது பரிசீலனை நடத்தி அதன் அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரம் அளிக்கலாம் அல்லது ஒப்பந்தத்திற்கு தக்க திருத்தங்கள் தரலாம்.

2) அறிவுச் சொத்துரிமைகள் பாதுகாப்பிற்கு ஏற்கனவே பெறப்பட்டுள்ள பாதுகாப்பு முறைகளுக்கு மேலும் கூடுதலாக பாதுகாப்பு வழங்கத்தக்கதாக இருக்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். வேறு பன்முனை ஒப்பந்தங்களுக்கு ஏற்ப மேற்படியான மாற்றங்கள் செய்யப்பட்டு அங்கு ஏற்கப்பட்டிருப்பின் அவற்றை அமைச்சர்கள் நிலை மாநாட்டின் முன்னர் வைக்கலாம். உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தத்தின் பகுதி 10 - ன் பாரா 6-ல் உள்ளதற்கு இணங்க அமுலாக்குவதற்கு ஏற்ப 'டிரிப்ஸ்'குழுவானது மேற்படி திருத்தங்களை பொது ஒப்புதலுக்கான முன்மொழியாக வடிவமைத்து அமைச்சர்கள் நிலை மாநாட்டின் முன் வைக்கலாம்.

## பகுதி - 72

## சலுகைகள் (Reservations)

பிற உறுப்பினர்களின் சம்மதம் இல்லாமல் இவ்வொப்பந்தத்தின் எந்த ஒரு சரத்துகளின் பாலும் சலுகை நுழைந்துவிடக்கூடாது.

பகுதி - 73

## பாதுகாப்பினடிப்படையில் ஆன விதிவிலக்குகள்:

இந்த ஒப்பந்தத்தின் எந்த ஒரு பகுதியும் கீழ்வருமாறு பொருள்கொண்டு விடக்கூடாது:

அ) ஒரு உறுப்பு நாட்டின் அத்தியாவசிய பாதுகாப்பு நலன்களுக்கு விரோதமான எந்த தகவல்களையும் இணைக்க வேண்டும் என்று உறுப்பு நாட்டிடம் கோருதல் அல்லது

ஆ) ஒரு உறுப்பு நாடு தனது அத்தியாவசிய பாதுகாப்பு நலன்களுக்கு அத்தியாவசியமானதாக கருதும் எந்த ஒரு நடவடிக்கையையும் அந்த உறுப்பு நாடு மேற்கொள்வதை தடுத்து நிறுத்துவது.

1. பிளக்கத்தக்க (அணு) மூலப் பொருள் சம்மந்தப்பட்டவை அல்லது அந்த மூலப்பொருள்கள் எதி ருந்து பெறப்பட்டவையோ அவை

2. ஆயுதங்கள், தளவாடங்கள், போரில் ஈடுபடுத்துவதற்கான போக்குவரத்துகள் மற்றும் பிற பொருள்கள் மற்றும் மூலப்பொருள்கள் ஆகியன ராணுவ அமைப்புகள் உறுவாக்குவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் கொண்டு வருவதற்கான போக்குவரத்துகள்;

3. போர்காலகட்டங்களில் சர்வதேச ரீதியில் அவசர காலங்களில் இப்படி எடுத்து வரப்படுவது; அல்லது

இ) சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு பராமரிப்பிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்புகளின் தொடர் நடவடிக்கைகள் மீதான எந்த ஒரு நடைமுறையையும் மேற்கொள்வதி ருந்து பாதுகாப்பது.

பாதுகாப்பு துறை சம்மந்தப்பட்ட விஷயங்களுக்கு மேற்கண்ட வகையில் விலக்கு பெறலாம் என்று எந்த ஒரு நிலையிலும் புரிந்து கொண்டு விடக்கூடாது.

# ‘டிரிப்ஸ்‘ஒப்பந்தத்தை பரிசீ ப்பதற்கான உள் அமைந்த திட்டம்

## அத்தியாயம் - 15

### பகுதி : 7: ‘டிரிப்ஸ்‘ஒப்பந்தம் கீழ்க்கண்டவாறு படித்தறியத்தக்கது:

### பரிசீலனையும் திருத்தமும்:

‘ 1) பகுதி - 65இன் பாரா 2இல் குறிப்பிடப்பட்டுள்ள படியான கால கட்டத்தில் மாற்றீட்டு கால கட்டம் முடிவுற்ற பின்னால் இவ்வொப்பந்தத்தின் அமுலாக்கம் குறித்து ‘டிரிப்ஸ்‘குழு பரிசீலனை மேற்கொள்ளலாம். அவ்வொப்பந்தம் அமுலாக்கியதில் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் அமுலாக்கிட தொடங்கிய தேதியில் இருந்து கண்டு அறியத்தக்க அளவு தக்க இடைவெளி கொடுத்து அதாவது அமுலான தேதியில் இருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து டிரிப்ஸ்க்கு குழு இப்பரிசீ னையை மேற்கொள்ளத்தக்கது. சம்மந்தப்பட்ட துறையில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களை கண்க்கில் எடுத்துக்கொண்டு அதன் வெளிச்சத்தில் ‘டிரிப்ஸ்‘குழு தனது பரிசீலனைகளை நடத்தி அதன் அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரம் அளிக்கலாம் அல்லது ஒப்பந்தத்திற்கு தக்க திருத்தங்கள் தரலாம்.

2) அறிவுச் சொத்துரிமைகள் பாதுகாப்பிற்கு ஏற்கனவே பெறப்பட்டுள்ள பாதுகாப்பு முறைகளுக்கு மேலும் கூடுதலாக பாதுகாளப்பு வழங்கத்தக்கதாக இருக்கும்வகையில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். வேறு பன்முனை ஒப்பந்தங்களுக்கு ஏற்ப மேற்படியான மாநாட்டின் முன்னர் வைக்கலாம். உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தத்தின் பகுதி லஇன் பாரா 6இல் உள்ளதற்கு இணங்க அமுலாக்குவதற்கு ஏற்ப ‘டிரிப்ஸ்‘குழுவானது அமைச்சர்கள் நிலை மாநாட்டின் முன் வைக்கலாம்.‘

மாற்றீட்டு கால கட்டம் காலாவதி ஆன பின்னால் இவ்வொப்பந்தத்தின் அமுலாக்கம் குறித்து பரிசீலனை மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வொப்பந்தம் கோருகிறது. அதாவது 1-1-2000க்குப் பிறகு பரிசீலனை மேற்கொள்ளக் கோருகிறது. அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த பரிசீலனை மேற்கொள்ளலாம். ஒப்பந்த அமுலாக்கம் குறித்து நடைபெறும் முதல் பரிசீலனை 2000ஆம் ஆண்டில் நடைபெறும் போது வளர்முக நாடுகளைப் பொருத்தவரை காலவதி தேதி 1-1-2000இல் முடிகிறது. எனவே, இதை பரிசீ ப்பது மிகச் சிரமமானது அல்லது இந்த பரிசீலனையின் மூலம் ஒப்பந்தத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதும் மிகச் சிக்கலானதாகும். இனி 2002இலும் அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையும் ‘டிரிப்ஸ்‘குழு பரிசீலனை மேற்கொள்ளவுள்ளது. ஒப்பந்தம் அமுலாக்கத்தில் கிடைத்த அனுபவங்கள் அப்போது பரிசீ க்கப்படும். உலக வர்த்தக அமைப்பின் நடைமுறையாக இது இருக்கும் போது அப்படிப்பட்ட திருத்தம் பொதுக் கருத்தின் அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். மேலும் அதிக பட்ச பாதுகாப்பு வழங்குமாறு கோருவதற்கு இந்தப்பகுதி உறுப்பு நாடுகளுக்கு சுலபமான வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது. உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பு போன்ற பிற பன்முனை ஒப்பந்தங்களின் அபிவிருத்தி ஏற்ப இவை அமையத்தக்கதாகும். அதே நேரத்தில் பாதுகாப்புத் தரத்தை குறைக்கவோ அல்லது நீர்த்துப் போகவோ செய்கிற அர்த்தத்திலான திருத்தங்கள் மிகவும் சிக்கலான சூழ்நிலையை ஏற்படுத்தி விடும்.

எனவே 2002இல் அதற்கு பிறகும் ‘டிரிப்ஸ்‘ஒப்பந்தத்தின் மேல் நடத்தப்படவுள்ள பரிசீலனையின் உள்ளமைந்த திட்டமானது அறிவுச் சொத்துரிமைக்கு கூடுதல் பாதுகாப்பை ஏற்படுத்துவதை சாத்தியப்படுத்துவதாக இருக்கத்தக்கது. (உ-ம்: ஒய்ன் மற்றும் சாராயங்களுக்கும் பிறவகை புவியியல் குறியடையாளங்களுக்கும் கூடுதல் பாதுகாப்பு). அதே நேரத்தில் தற்போதுள்ள பாதுகாப்பு அளவை குறைக்க வேண்டும் என்று கோருவது மிகவும் சிரமமானது (உ-ம்: மருந்து உற்பத்தித் துறைக்கு காப்புரிமை பாதுகாப்பு அளிப்பதில் இருந்து விலக்களிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது);

சியாட்டில் நகரில் நடைபெற்ற அமைச்சர்கள் நிலை மாநாட்டிற்காக தயாரிக்கப்பட்ட வளர்ச்சிப் பரிந்துறைகளின் ஒரு பகுதியாக ‘டிரிப்ஸ்‘ஒப்பந்தத்தை மேலும் பலப்படுத்துவதற்கான சில முன்மொழிவுகளை ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சில நாடுகள் முன்வைத்தன. உலக அறிவுச் சொத்துரிமை அமைப்பின் பதிப்புரிமை ஒப்பந்தங்கள் போன்ற அறிவுச் சொத்துரிமைகள் ஒப்பந்தங்கள் மீது ‘டிரிப்ஸ்‘ஒப்பந்தத்தின் கீழ் காப்புரிமை விண்ணப்பங்கள் பூர்த்தி செய்வதற்கு உள்ள இரண்டு (முதலாவதாக தாக்கல் செய்வதற்கு முதலாவதாக கண்டுபிடிக்கப்படுவதற்கு) முறைகளுக்கு இசைவாக வளர்ச்சிப் பரிந்துரைகளை முன் வைத்தன. ஆனால் மாநாட்டில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதே போல வளரும் நாடுகளும் அமுலாக்கத்தில் தங்களுக்கு உள்ள சில சிரமங்களின் காரணமாக சில பிரச்சனைகளை எழுப்பின. ‘டிரிப்ஸ்‘ஒப்பந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக் கொள்வதற்காக மாற்றீட்டுக் கால கட்டத்தை நீட்டித்துக் கொடுக்கக் கோரின. ஒய்ன்கள் மற்றும் சாராயங்களுக்கு வழங்கப்படும் உயர் அளவு பாதுகாப்பை பிறவற்றிற்கும் நீட்டிக்க கோரின. அடுத்த பரிசீலனையின் போது இப்பிரச்சனைகள் மீண்டும் எழுப்பப்படும்.

### பகுதி 27.3 (ஆ)

பகுதி 27.3 (அ) மற்றும் (ஆ) ஆகியன கீழ்கண்டவாறு உள்ளன:

**காப்பளிக்கத்தக்க மூல விசயம்:**

3) உறுப்பு நாடுகளும் காப்புரிமை வழங்குவதி ருந்து விலக்கு பெறத்தக்கன.

அ) மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு நோயறிதல் சிகிச்சையளித்தல் மற்றும் அறுவை சிகிச்சை முறைகளுக்கு காப்புரிமை வழங்குவதி ருந்து விலக்கு பெறலாம்;

ஆ) நுண் உறுப்பியல் கண்டுபிடிப்புகள் தவிர்த்து பயிர்கள் மற்றும் விலங்குகள் கண்டுபிடிப்பிற்கு உறுப்பு நாடுகள் விலக்கு பெறலாம். உயிரியல் சாராத மற்றும் நுண் உயிரியல் செயல் முறைகள் கீழ் அல்லாத பயிர்வகைகளுக்கு காப்புரிமைகள்

வழங்கியோ அல்லது செயல் ஊக்கம் மிக்க சுய் ஜெனரியஸ் முறை மூலமோ, அல்லது அது போன்ற கலவை முறையிலோ உறுவாக்கப்பட்டவற்றிற்கு உறுப்பு நாடுகள் காப்பு வழங்க கடமைப்பட்டுள்ளன. இந்த துணை பாரா (ஆ)வின் சரத்துகள் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் அமுலாக்கத் துவங்கி நான்கு வருடங்களுக்கு பிறகு பரிசீ க்கத்தக்கது.' பகுதி 27இன் பாரா 3இன் சரத்து (ஆ) மீதான பரிசீலனை 1999இல் மேற்கொள்ளப்பட்டது. அமைச்சர்கள் நிலையிலான மூன்றாவது மாநாட்டில் முன்வைப்பதற்கான உள்ளமைந்த திட்டத்தின் ஒரு பகுதியாக இப்பரிசிலனை மேற்கொள்ளப்பட்டது. சியாட்டில் நகரில் நடைபெற்ற அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டிற்கு தயாரிப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட இப்பரிசீலனை பல்வேறு முன்பொழிவுகளை பெற்றது. பயிற்வகைகள் மற்றும் நுண் உறுப்பு இயல் ஆகியவற்றிற்கு அதிகப்பட்ட பாதுகாப்பு அறிப்பதற்கான ஏற்பாடுகளைஇந்தப் பகுதியில் சேர்க்க வேண்டும் என்று அமெரிக்க முன்மொழிந்தது. உயிர் நிலையில் உள்ளவற்றிற்கு காப்புரிமை அளிப்பதி ருந்து விலக்கு அளிக்கத்தக்க வகையில் இப்பகுதியை தளர்த்த வேண்டும் என்று இந்தியாவும் ஒரு அடிப்படையான முன்மொழிவை வைத்தது. ஆனால் இந்த மாநாட்டில் முடிவு செய்வதற்காக பிற விசயங்களைப் போலவே இதுவும் வெற்றி பெறவில்லை. அதே நேரத்தில் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற 'டிரிப்ஸ்'குழுவின் முதலாவது பரிசீலனையில் கலந்து கொண்ட பல உறுப்பு நாடுகள் இப்பகுதியின் மீதான பரிசீலனை தொடர வேண்டும் என்று வாதிட்டனர். எனவே ஏற்கனவே இருக்கும் சரத்துகளின் அடிப்படையிலேயே இந்திய வேளாண் அமைச்சர் பயிர்வகைகள் பாதுகாப்பு மீதான மற்றும் காப்புரிமை சட்டத்தின் மீதான திருத்தங்களை பாராளுமன்றத்தின் முன்னே வைத்துள்ளார்.

அமெரிக்க ஏற்கனவே தனது உள்நாட்டு சட்டத்தில் பயிற்கள் மற்றும் விலங்குகளுக்கு காப்புரிமைகளை வழங்கியுள்ளது. மரபு ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நுண் உறுப்பியல் உள்ளிட்ட உயிரியல் தொழில் நுட்பத்தின் மீதான உத்தரவை ஐரோப்பிய ஒன்றியமும் சமீபத்தில் தெளிவு படுத்தியுள்ளது. இந்த உத்தரவு ஐரோப்பிய ஒன்யிப் பாராளுமன்றத்தில் இன்னும் ஒப்புதல் பெறவில்லை.

சமீபத்தில் நடைபெற்ற உயிரியல் பரவல் சிறப்பு மாநாட்டின் ஒப்பந்தத்திற்கு வைக்கப்பட்ட முதல் குறிப்புகள் மீது நடத்தி முடிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் ஆனவை உறுப்பு நாடுகள் வர்த்தக கட்டுப்பாடு முறைகள் அனுமதிக்கும் அளவுகளுக்குள் நின்று மரபு ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நுண் உறுப்பியல் இறக்குமதிகள் மீதான மிகவும் முன்னேறிய தகவல்கள் பெறுவதற்கான ஒப்பந்தங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கக் கூடும். எனவே வளர்ந்த நாடுகள் சில பகுதி 27.3 (ஆ)இல் கிடைப்பதற்கு அப்பால் உயிருள்ள நிலைகளுக்கு ஆன பாதுகாப்பு தரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்று நிர்பந்திக்கின்றன. மறுபுறம் வளரும் நாடுகளோ இந்த பகுதியின் சரத்துகள் உயிரியல் பரவல் பாரம்பரிய அறிவு போன்றவற்றை பாதித்துவிடக்கூடாது என்று நிர்பந்தம் கொடுத்தன.

## பகுதிகள் 23.4 மற்றும் 24.2

பகுதி 23.4 கீழ்கண்டவாறு படித்தறியத்தக்கது.

ஒய்ன் வகைகள் மற்றும் சாராய வகைகளுக்கு புவியில் குறியடையாளங்களுக்கான கூடுதல் பாதுகாப்பு:

'ஒயின் வகைகளுக்கான புவியில் குறியடையாளங்களுக்கு பாதுகாப்பு முறைகளை எளிதாக்குவதற்கான விசயத்தில் அதற்கான பேச்சுவார்த்தைகளை 'டிரிப்ஸ்' குழுவின் கீழ் நடத்தலாம். அதன் மூலம் அந்த பேச்சுவார்த்தைகளில் பங்கேற்ற நாடுகளில் ஒய்ன் வகைகளுக்கு புவியில் குறியடையாளங்கள் பதிவு செய்வதற்கும் அறிக்கை செய்வதற்குமான பன்முனை செயல்முறையை உறுவாக்கலாம்'.

பகுதி 24.2: கீழ்கண்டவாறு படித்தறியத்தக்கது:

### சர்வதேச பேச்சுவார்த்தைகள் : விதிவிலக்குகள்:

'இந்த பிரிவின் சரத்துகளை அமுலாக்குவதை தனது பரிசீலனையின் கீழ் 'டிரிப்ஸ்' குழு வைத்துக் கொள்ள வேண்டும்.

உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இப்படிப்பட்ட முதல் பரிசீலனை நடைபெறத்தக்கது. இந்த சரத்துகளின் கீழான பொறுப்புகளோடு இணங்கிப்போவதை பாதிக்கக் கூடிய விசயங்கள் 'டிரிப்ஸ்' குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லத்தக்கது. இது விசயமாக உறுப்பு நாடு ஒன்று மற்றொன்டுடனோ மற்ற பலவற்றின் உடனோ பேச்சு வார்த்தைகள் நடத்திடலாம். உறுப்பு நாடுகளுடன் பரஸ்பரம் அல்லது பன்முனை ஆலோசனைகளை நடத்தியும் திருப்தியான தீர்வுகாண முடியாத நிலையில் மேற்குறிப்பிட்டவாறு 'டிரிப்ஸ்'குழுவின் முன் பிரச்சனையை சம்மந்தப்பட்ட நாடு எடுத்துச் செல்லலாம். இதன் மீது 'டிரிப்ஸ்' குழுவானது நடவடிக்கை எடுக்கலாம். அதன் மூலம் இந்தப் பிரிவின் நோக்கங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் நடைமுறையை எளிதாக்குவதற்குமான ஒப்புதலை ஏற்படுத்தலாம்'

பன்முனை பதிவு முறையை ஏற்படுத்துவதன் மூலம் ஒய்ன் வகைகள் மற்றம் சாராய வகைகளுக்கு உள்ள புவியியல் குறியடையாளங்கள் பாதுகாப்பு தர வேண்டும் என்று பகுதி 23.4இன் கீழ் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் முன்மொழியப்பட்டது. ஒய்ன் வகைகள் மற்றும் சாராய வகைகள் தவிர பிற தயாரிப்பு பொருள்களுக்கும் இவ்வகையில் உயர்ந்தப் பட்ச பாதுகாப்பு நல்க வேண்டும் என்று கோரியதன் மூலம் இந்தியா தன்னந்தனியாக நின்று மேற்குறிப்பிட்ட வகையிலான பன்முனை பதிவு முறையின் அடிப்படையில் பாதுகாப்பு தருவதற்கான நடவடிக்கையை தடுக்க முடிந்தது. புவியியல் குறியடையாளங்கள் பாதுகாப்பிற்கான பகுதி 24.2இன் பிரிவின் மீதான பரிசிலனையின் அடிப்படையில் அதிக பட்ச பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை பிந்தைய முன்மொழிவில் முன்வைக்கப்பட்டது. இந்த நோக்கத்திலான பாதுகாப்பு சம்மந்தமாக விவாதிக்கப்பட்டுள்ள விசயங்கள் சிங்கப்பூர் அமைச்சர்கள் நிலை மாநட்டிற்கான 'டிரிப்ஸ்'குழு அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று தெளிவு படுத்தப்பட்டது. 'டிரிப்ஸ்'குழு தற்போது இப்பிரச்சனையை விவாதித்து வருகிறது. இந்தியாவுக்கு ஐரோப்பிய

ஒன்றியம் சுவிச்சர்லாந்து, செக் குடியரசு ஹங்கேரி, துருக்கி போன்ற நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. சமீப காலத்திற்குள்ளாக இதற்கான வாய்ப்பை அதிகப்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஏற்படாது அப்படி இருந்தபோதிலும் இந்திய பாராளுமன்றத்தில் புவியியல் குறியடையாளங்கள் சம்மந்தமாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் அறிக்கை செய்யப்படும் தயாரிப்புகள் மீது அதிக பட்ச பாதுகாப்பு தருவதற்கு வாயப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவானது எதிர்காலத்தில் 'டிரிப்ஸ்'குழுவில் இப்பிரச்சனையை தொடர்ந்து எழுப்ப உள்ளது.

### பகுதி -64 கீழ்கண்டவாறு படித்தறியத்தக்கது: தவா தீர்ப்பு:

1) தவாக்கள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்தி தீர்வு காண்பதற்கு இந்த ஒப்பந்தத்தில் சிறப்பாக சேர்க்கப்பட்டுள்ளவை தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் பொதுச் சுங்கத் தீர்வை ஒப்பந்தம் - 1994இன் பகுதி லலஜஜ மற்றும் லலஜஜஜஇன் சரத்துகளினின்று பெறப்பட்டவையாகும்.

2) உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததி ருந்து 5 ஆண்டுகாலத்திற்கு பொதுச் சுங்கத் தீர்வை ஒப்பந்தம் - 1994இன் பகுதி லலஜஜஜஇன் துணை பாராக்கள் 1(ஆ) மற்றும் 1(இ) ஆகியனவற்றை இந்த ஒப்பந்தத்தின் கீழ் தாவாக்கள் தீர்வு நடைமுறைகளுக்கு பயன்படுத்த முடியாது.

3) பொதுச் சுங்கத் தீர்வை ஒப்பந்தம் - 1994இன் பகுதி லலஜஜஜஇன் துணைபாராக்கள் 1(ஆ) மற்றும் 1(இ)இல் கொடுக்கப்பட்டுள்ளவற்றிற்கு ஒத்த வகையிலான புகார்களுக்கான தீர்வுகளுக்கு இந்தப்பாராக்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் தகுதி குறித்து இப்பகுதியின் (பகுதி 64)பாரா 2 குறிப்பிடப்பட்ட காலக்கெடுவிற்குள் 'டிரிப்ஸ்' குழு பரிசோதனை மேற்கொண்டு தனது பரிந்துரைகளை அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டில் அங்கீகாரத்திற்கு வைக்க வேண்டும். அப்படிப்பட்ட பரிந்துரைகளை அங்கீகரிப்பதற்கான அமைச்சர்கள் நிலை மாநாட்டின் எந்த ஒரு முடிவுக்கு அல்லது மேற்படி 2வது பாராவில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்திற்கு நீட்டிப்பது என்ற எந்த ஒரு முடிவும் பொதுவான இசைவின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும். மேற்கொண்டும் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அங்கீகாரம் அளிக்கும் முறையில் என்றில்லாமல் 'டிரிப்ஸ்'குழுவினால் அங்கீகாரிக்கப்பட்ட பரிந்துரைகள் நேரடியாக எல்லா உறுப்பு நாடுகளினாலும் செயல்படுத்தக்கதாகும்.'

'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதி - 64 ஆனது உலக வர்த்தக அமைப்பில் இவ்வொப்பந்தத்திற்கு உறுவாக்கப்பட்டுள்ள தாவா திர்வு நடைமுறைகளை 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் மீது அமுலாக்குவது பற்றியதாகும். அதே நேரத்தில் உலக வர்த்தக அமைப்பின் தாவா தீர்வு நடைமுறைகள் வரம்பு மீறல் அல்லாத பிற புகார்களையும் உள்ளடக்கியிருக்கிறது. இதனுடைய அர்த்தம் உலக வர்த்தக அமைப்பின் சரத்துகளோடு எந்த விதமான முரண்பாடுகளும் இல்லாத நிலையில் சம்மந்தப்பட்டவர்களுக்கு கிடைக்கக்கூடிய பலன்கள் பலனற்றுப் போகச் செய்கிற அல்லது சேதப்படுத்துகிற பிரச்சனைகளை உலக வர்த்தக அமைப்பின் தாவா தீர்வு நடைமுறைகள் ஏற்றுக் கொள்கின்றன. 1-1-2000 வரை இது நடைமுறைப்படுத்ததக்கதாக இருக்கவில்லை. ஒப்பந்தத்தின் கீழ் இருந்த வரம்பு மீறல்கள் மீதான தாவாக்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டன. அமைச்சர்களால் ஒருமித்த கருத்தின் கீழ் கொண்டுவருவதற்காக 1-1-2000க்கு முன்னர் இந்தச் சரத்து பரிசீ க்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளுக்கு முன்மொழிவுகளை இந்தியா உள்ளிட்ட உறுப்பு நாடுகள் வைத்தன. சியாட்டில் நகரில் நடைபெற்ற அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டிற்கான தயாரிப்புகளின் ஒரு பகுதியாக இது மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பிற விசயங்களைப் போலவே இதன் மீதும் எந்தவித ஒப்பந்தமும் காணப்படவில்லை இதன் தொடர்ச்சியாக இப்போது உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகள் மீறல்கள் அல்லாத பிரச்சனைகளை எழுப்புகின்றனர். சியாட்டில் மாநாட்டில் இதை விளக்கிக் கூறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தோல்வியடைந்துள்ளது. இதனால் பிரச்சனைகள் கிடப்பில் போடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. 1-1-2000க்கு முந்தைய வரம்பு மீறல்கள் அல்லாத பிரச்சனைகளை டிரிப்ஸ்க்கு பொறுத்த இயலாத நிலையை நீட்டிப்பதற்கான பிரச்சனையை சில உறுப்பு நாடுகள் எழுப்பின.

### அமுலாக்கப் பிரச்சனைகள்:

சியாட்டில் அமைச்சர்கள் நிலை மாநாட்டிற்கு தயாரிப்பு பணிகளின் ஒரு பகுதியாக உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தங்கள் அமுலாக்கத்தின் மீது உறுப்பு நாடுகள் முன்மொழிவுகளை செய் அனுமதிக்கப்பட்டனர். ஏற்கனவே இருக்கும் ஒப்பந்தத்தில் உள்ள சமச்சீரற்ற தன்மைகளை அகற்றுவதும் இதனுள் அடங்கும். அதேபோல வளரும் நாடுகளுக்கு சாதகமான செயல்படுத்தக் தக்க தனிவகைப்பட்ட சரத்துகளும் முன்வைக்கப்பட்டன. இந்தியா தன்னோடு கருத்து ஒருமித்த நாடுகளோடு இதுவகைப்பட்ட முன்மொழிவுகளை வைத்தது. 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்திற்கு உட்பட்ட வகையிலான முன்மொழிவுகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியிருந்ததன:

1) டிரிப்ஸ் 'ஒப்பந்தத்தின் வரம்பு மீறல் அல்லாத புகார் செய்வதற்கான காலக்கெடுவை நீட்டிப்பது.

2) 'டிரிப்ஸ்'ஒப்பந்தத்தின் பகுதிகள் 7 மற்றும் 8 ஆகியனவற்றை செயல்படுத்துவதற்கு ஏற்ப தொழில் நுட்ப பரிமாற்றங்களை நேர்மையாகவும் பரஸ்பரம் சாதகமானதாகவும் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு பரிமாறிக்கொள்ள வழியேற்படுத்துவது. ஒரு கண்டுபிடிப்பில் உபயோகிக்கப்பட்டுள்ள உயிரியல் மூலப்பொருள்களின் மூல இடத்தினைப்பற்றிய விவரங்களை வெளிப்படுத்துவதற்கான நடைமுறையை ஏற்படுத்துவது. மூல இடத்தின் நாட்டின் ஒப்புதலை ஈட்டுவது அதற்கான நிர்வாக ஏற்பாடுகளை தேசங்களின் மட்டத்தில் ஏற்படுத்தி மேற்படி விவரங்களை வர்த்தக ரீதியில் சுரண்டல் இல்லாத வகையில் பயன்படுத்திக் கொள்வது. நம்பிக்கையை கட்டியமைப்பதற்கான நடிவடிக்கைகளின் ஒரு பகுதியாக உலக வர்த்தக அமைப்பின் பொதுக்குழுவானது 4வது அமைச்சர்கள் நிலை மாநாட்டிற்கு முன்பாக அமுலாக்க பிரச்சனைகளை 'தீர்ப்பதற்கான ஒரு முடிவை எடுத்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை' 'டிரிப்ஸ்'ஒப்பந்த அமுலாக்கத்தின் பாலான குறைதீர்ப்பு நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து வ யுறுத்த உள்ளது.